850

# MATHISUTHANA

## (THE HONEST, BRAVE & LOYAL)

BY

A. R. MATHAVARAYA MUDALIAR.

Author of Jagathala Jagajjothi. Kanagarathnam, Rajamanikkam, etc., etc.

Published by

N. MUNUSAWMY MUDALIAR.

6 Venkatesa Maistry Street

SOWCARPET, MADRAS.

PRINTED AT

DESAMITRAN POWER PRESS, MADRAS.

1914.

[Registered.] [Price 10 As.

223548

உ

ஓம் : கணேசாயநம :

# மதிசூதனன்.

இஃது

ஜெகதல ஜெகஜ்ஜோதி, கனகரத்தினம்,

இராஜமாணிக்கம் முதலிய பல நாவல்கள் எழுதிய

அ. ரா. மாதவராய முதலியாரவர்களால்,

எழுதப்பட்டு.

OFFICE OF THE REGISTRAR OF
25 JUL 1915
MADRAS
850
2-19

என். முனுசாமி முதலியாரவர்களால்,

சென்னை

சுதேசமித்திரன் பவர் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1914.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா 10.

D

0313x
N14

-600 008.
223568

வொழுக்கங்களும் நமது நாட்டு[illegible]மர்தர்க்கு அமைந்திருக்க வேண்டிய வண்ணமாய் செவ்[illegible]னே விளக்கிக் காட்டப்பட் டிருக்கிறது. அதோடு இதில் எவ்விதமான நடவடிக்கைகளும் அவைகளா லுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்[illegible]ட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்கு சகலவித நற்குணங்களையும் போதிக்கக் கூடியதென்பது [illegible]ண்ணம. ஆண்பாலர் பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சக[illegible] புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரங்களையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

இதுகாறும் அநேகமான இனிய நாவல்களை யெழுதிய ஸ்ரீ, ஆரணி-குப்புசாமி முதலியாரே யிதை இனிய நடையில் எழுதியிருக்கிறார். [illegible]துவரையில் பல நாவல்களை யெழுதியிருந்தாலும் இந்த நாவலை விசேஷ சிரத்தையோடு பொது நன்மையைக் கருதியே யெழுதியிருக்கிறாரென்பது இதை வாசிப்போர்க்கு எளிதில் விளங்கும். இது நமது நாட்டு ஸ்திரீகள் ஆடவர் ஒவ்வொருவரும் அகத்தியம் வாசிக்கவேண்டிய நூலென் உறுதியாய்க் கூறுவோம் இப்புத்தக[illegible]ம் சுமார் 560-ப[illegible]க்கங்கள் கொண்டது. உயர்ந்த கடிதத்தில் பிழையின்றி அச்சியற்றப்பட்டு மேலான பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

புத்தகம் 1-க்கு, விலை 1-8-[illegible] தபால் சார்ஜ் பிரதி.

விலாசம்:—

[illegible]ண்டு கம்பெனி,

சௌகார்பேட்டை,

மதராஸ். இ

22354[illegible]

இந்த புத்தகங்கள் எல்லா வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

இக்கதை மதன்பூஷணி, குணசுந்தரன் முதலிய வைகளை யெழுதிய ஸ்ரீமான் ஆறணி குப்புசாமி முதலியாரால் இனிய நடையில் எழுதப்பட்டு உயர்ந்த கடிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 10 தபாற்கூலி பிரத்தியேகம்.

புதிய நாவல் புதிய நாவல்

அத்யற்புதமான ஆச்சரியம் படிக்கப்படிக்க ஆனந்தம்

கனகபூஷணி

என்னும் ஓர் செந்தமிழ் நாவல்

புத்தகம் 1-க்கு விலை ரூபா 1-8-0.

எமது நேயர்களே ?

இது ஒரு அருமையான தமிழ் நாவல்.

இந்த நாவலில் முதலிலிருந்து கடைசி வரையில் மிக்க ஆச்சரியமும், படிப்போரும் கேட்போரும் பிரமிக்கத்தக்க அதிசயமான விஷயங்களும் நிறைந்திருக்கின்றன. ஆனால் இதில் அடங்கி யிருக்கும் நல்ல விஷயம் இதுமட்டுமேயல்ல, கற்பு என்பதன் இலக்கணம் இக்கதாநாயகியிடந்தான் பூரணமா யமைந்திருக்கிறதென்பது இதை வாசிப்போர்க்குப் பிரத்யக்ஷமாய் விளங்கும். இக்கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகள் நினைத்து படிப்போர் கண்களில் நீர் வடியச்செய்யும், இக் கதையில் சோகரசமொன்றே யன்றி ஏனைய ரசங்களும் பொருந்தி யிருக்கும். அப்படிப்பட்ட பயங்கரமும் பிராணபயத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும் அவள் தன் கற்புக்கு வழுவு நேரிடாது காப்பாற்றிக் கொள்வது மிக்க அதிசயமா யிருக்கும். இதில் இலௌகிகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசார

உண்மையான கற்பின் தன்மை நன்கு விளங்கும். இஃது கற்புடைய ஸ்திரீகளுக்கெல்லாம் அரிய சாஸ்தி[illegible]லை யாகும். இதில் இன்னும் அநேக நற்போதனைகள் அடங்கியிருக்கின்றன. சொல்ப காபிகளே கைவசமிருப்பதால் சீக்கிரம் வாங்கி வாசியுங்கள்.

விலை புத்தகம் 1-க்கு அணா 10. தபால் செலவு வேறு.

—∘∘⁂∘∘—

## சுவர்ணம்பாள்.

### ஓர் அற்புதமான துப்பறியும் நாவல்

பேராசையானது மிக்க பாபச் செயல்களையும் செய்யத் தூண்டக்கூடிய கொடிய குணமென்பதும் முடிவில் அதனால் அவமானமும் இராஜ தண்டனையும் கிடைக்குமென்பதும் இக்கதையால் நன்குவிளங்கும். இதில் கொலைக்குக் காரணமாகிய மனிதன் எவ்வளவோ தந்திரமாய்க் கொலை செய்திருந்தாலும் கடைசியில் சிக்கிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும்.

துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற் குறியின் அடையாளத்தைக் கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும், சாமர்த்தியமும், தைரியமும் நன்றாய் விளங்கும்.

சுவர்ணம்பாள் தனக்கு நேரிடும் ஆபத்துகளுக்கு அஞ்சாமல் தன் தந்தையின்மேல் வந்த அபாண்டத்தை நீக்க முயல்வது அவளுடைய பிதுர்வாஞ்சையை நன்றாய்த் தெரிவிக்கிறது.

இக்கதையால் வெளித்தோற்றினால் மட்டுமே யொன்றை நம்புவது குற்றமென்று நன்றாய் விளங்கும். இதில் இன்னும் பல நீதிகள் அடங்கியுள்ளன. இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரையில் வாசிப்பதற்கு இனிமையாயிருக்குமென்பது இதைப் படிப்பவர்களுக்கு நன்றாய் விளங்கும்,

வதும் அங்கு கள்வர்களால் முன்னதாகக்கொண்டு வா[illegible]டிருந்த கணேசனை இன்னானென்றுணராமல் அவனை விவாகம் செசெய்துக்கொள்ள சம்மதியாமல் சோபனவீட்டி விருந்து வெளிப்போந்து வழியில் கண்ட ஓர் சிநேகிதனிடம் தன் குறைகளைச் சொல்வதும் வாசிக்கத்தக்கதே யாகும். கணேசனும் கனகரத்தினமும் வீட்டைவிட்டு வெளிச் சென்ற பின் அவர்களுடைய தாய் தந்தையர்கள் மையிட்டு அவர்கள் சென்ற விடத்தை யறியவிரும்புவது வாசிக்கவாசிக்க இன்பமுண்டாக்கும்.

நிற்க, முருகேசன் சொல்லியபடி தன்னைக்கொல்லும் நிமித்தம் ஆயுதத்துடன் வந்திருக்கும் ஓர் வாலிபனிடம் தன் மனவருத்தத்தைக் கூறியபோது இருவரும் அடையும் மனோவியாகூலம் மெச்சத்தக்கதாகும். பிறகு கதாநாயகன் தன் கஷ்டகாலத்தையுன்னி சனீஸ்வரபகவானைத் துதிப்பது வேடிக்கையாக இருக்கும்.

முருகேசன் தீபாந்தரசிட்சை யடைவதும், ஆங்கு அவன்செய்யும் வேடிக்கைகளும் பிறகுசூதாகத் தப்பித்துக்கொண்டு கணேசன் மீது ஓர் குற்றம் சாட்டினதால் கணேசனைத் தூக்கிவிடும்படி ஜூரிகள் தீர்மானங் கொடுப்பதை வாசிக்கும்போது மனம் பதைபதைத்து கண்ணீர்ததும்பு மென்பதற் கையமில்லை. இஃதுணர்ந்த கனகரத்தினம் தன்னுயகனைக் காப்பாற்ற நினைப்பதும் அதை முருகேசன் கெடுப்பதும் பிறகு கணேசன் தூக்கி விடப்படுவதும், இதனை யறிந்த கனகரத்தினமும் அவளுடைய சுற்றத்தினரும் அடையும் துக்கத்தை வாசிக்கும்போது சொல்லொணாத சோகத்தைதரும். பிறகு கனகரத்தினம் கற்பின் உறுதியால் தெய்வாதீனமாக உயிர் நீப்பது அதிக ஆச்சரியத்தையே தருவதுமன்றி

## மதனபூஷணம்

அல்லது

# இறந்தவள் பிழைத்தது.

இது ஒரு அற்புதமான துப்பறியும் நாவல். லீலா குணசுந்தரன் சகோதர வாஞ்சை முதலிய பல நாவல்கள் இயற்றிய ம-ா-ா-ஸ்ரீ, ஆரணி குப்புசாமி முதலியாரால் இனிய செந்தமிழ் நடையில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்கு அளவுமீறிய சுயாதீனமளிப்பதால் உண்டாகும் தீமைகள் இதில் நன்றாய் விளக்கப்பட்டிருக்கிறதுமன்றி, இன்னும் பல நீதிகளும் இதில் விளங்குகின்றன. குற்றவாளி எவ்வளவோ தந்திரமாயும் முன்யோசனையோடும் குற்றத்தைச் செய்திருக்க, துப்பறிவர் அதைக் கண்டுபிடித்தல் வாசிப்பவர்களுக்கு அதிக ஆச்சரியத்தையும் பிரமையையும் உண்டாக்கும் இக்கதையை வாசிக்க ஆரம்பித்துவிட்டால் முடியுந்தனிலும் வேறு எந்த கைத்தொழில் செய்வதற்கும் மனம் செல்லாது. இதை வாசிப்பவர்கள் துயரம் எப்படிப்பட்டதாயினும் நீங்கி மனதிற்கு சந்தோஷத்தைத்தரும். இத்தகைய கதைகளை வாசிப்பதால் அறிவு விசாலப்படும். வாசிப்பவர்களுக்கு இதன் குணம் நன்கு விளங்கும்.

இதன் விலை ரூபா 1–0–0 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

---

## சம்பந்தமூர்த்தி அல்லது சகோதர வாஞ்சை.

என்ற பெயருடைய ஒரு தமிழ் நாவல் புதிதாய் அச்சிட்டு விலைக்குத் தயாராயிருக்கிறது. விலை அணா 4.

இதில் சகோதர வாஞ்சையைப்பற்றி தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. கதா நாயகனாகிய சம்பந்தமூர்த்தி யென்னும் மூத்த சகோதரன் தன் தாயிடம் வைத்திருக்கும் அன்பும், தன்மேல் அபாண்டம் சுமத்

திய தன் தம்பிமேல் காட்டும் விசுவாசமும், முடிவில் தன் தாயின் மனதைத் திருப்தி செய்வதற்காக அதே தம்பியைக் காப்பாற்ற அவன் செய்த கொலைக் குற்றத்தைத் தன்மேல் சுமத்திக்கொள்வதும் வியப்புண்டாக்கும் முடிவில் உண்மை வெளிக்குவந்து தமையன் விடுதலை யடைவதும் அவன் காதலித்த கன்னிகையை மணம் புரிவதும் சந்தோஷத்தை யுண்டாக்கும். ஆரணி குப்புசாமி முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 4. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

## குணசுந்தரன் என்னும் ஓர் ஆச்சரியமான கதை.

இது வாசிப்பவர் மனதைக் கரையச்செய்யும் ஒரு துப்பறியும் இனியகதை, ஆரணி-குப்புசாமி முதலியாரால் தெளிவான நடையில் பிழையின்றி எழுதப்பட்டிருக்கிறது. கீழ் மக்கள் நட்பில் தீமையே யுண்டாகும் என்பது இதனால் நிரூபிக்கப்படுகிறது. கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்கு அதிக ஆச்சரியமாயிருக்கும். நிரபராதியான குணசுந்திரன் நன்மைசெய்யப் போய் பிராணபத்தில் சிக்கிக்கொண்டு துயரப்படுதல் மிக்க சோகத்தைத்தரும். அவன் அவ்வளவு தந்திரமாய்ச் செய்தும் துப்பறியும் உத்தியோகஸ்தன் உண்மைக் குற்றவாளியைக்கண்டு பிடித்தல் மிக்க ஆச்சரியமாயிருக்கும். கடைசியில் கதாநாயகன் பிராணபத்து நீங்கி விடுதலையடைவதும் மெய்யான குற்றவாளி அகப்பட்டுக்கொண்டு விழிப்பதும் ஆனந்தத்தைத் தரும். இத்தகைய கதையை வாசிப்பவர்களுக்கு முன் யோசனை ம் கூர்மையான புத்தியும் ஒருவரைக் கண்டவுடனே

அவர்கள் குணாதிசயங்களை அறிந்து கொள்ளும் அனுபவமும் உண்டாகுமென்பது உண்மை.

இது உயர்ந்த கடிதத்தில் அச்சடிக்கப்பட்டு நாணயமாக பையிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 8 தபால் சார்ஜ் பிரத்தியேகம்.


வாசிக்கத்தக்கது! புகழ்பெற்றது!
வினோதமானது!! பூவையர் மகிழ்வது!!

## கனகரத்தினம்

அல்லது

## கற்பைக்காத்தும் காதலனையிழந்த கன்னி.

(இஃதோர் சோபகரமான நாவல்)

நண்பர்களே! இதற்கொப்பான நாவல் இதுவரையில் வெளிவந்திராதென்பது திண்ணம். இதில் சோக ரசம் இத்தன்மைத்தென நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. இதற்கு இணையான சோபகரத்தையுடைய தமிழ் நாவல் வேறே கிடைக்காதென்பதை வாசிப்பவர்களே உணர்வார்கள்.

நம் நாட்டுப் பெண்களுக்குப் பருவம் வந்தபின் அவரவர்கள் கோறிய ஆடவனை வதுவை முடித்துவைக்காமையால் விளையும் கெடுதிகளையும் மோசங்களையும் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றது. அதுவுமன்றி துஷ்டசாவகாசத்தால் ஒருவருக்கு உண்டாகும் ஆபத்துக்கள் வெளிப்படையாக விளங்கும். இதில் கதாநாயகனாகிய கணேசன் என்னும் வாலிபன் தன்னுடன் வாசித்திருந்த கனகரத்தினம் என்னும் கல்வி நிறைந்துள்ள ஓர் பெண்ணின் மீது இச்சைவைத்து அவள் வீட்டுவழியாகப் போனபோது, மெத்தைமீதுலாவிக்கொண்டிருந்த கதாநாயகி ஓர் அன்பானகடிதம்

எழுதுவதும், இதை மறைவிலிருந்து இமைகொட்டாமல்பார்த்துக்கொண்டிருந்த வஞ்சகநெஞ்சனாகிய முருகேசன் என்னும் ஓர் துஷ்டன் அக்கடிதத்தை யெடுத்துக்கொண்டுஓர்பொய்க்கடிதத்தை நம் கதாநாயகனிடம் கொடுத்து விடுவதும், அதனால் கணேசன் திகிலடைந்து இராக்காலத்தில் ஒருவரிடமும் சொல்லாமல் உயிர் பிழைக்கயெண்ணி காட்டுக்குப்போய் அலைந்து அவதிப்படுவது மிக சோபகரமாயிருக்கும். பின்னர் கதாநாயகி கணேசனுடைய நிலைமையையுணராமல் அன்றிரவு குறிப்பிட்டிருந்த இடத்திற்கு வந்ததும் இவள் வரவை அதிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் கணேசனைப்போல் பொய்வேடம் பூண்டிருந்த முருகேசன் அவளை யழைத்துக்கொண்டு வழிப்பிரயாணம் செய்வதும் அவள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் கபடத்தனமாகப் பதில் சொல்வதும் படிக்கப்படிக்க மேலும் மேலும் படிக்கவேண்டு மென்கிற விருப்பத்தையே தரும். பொழுது விடிந்தபின் கனகரத்தினம் முருகேசன் செய்த சூதையறிந்து அவனைத்தூஷித்து புத்திமதி கூறுவதும், அவன் தான் கொண்ட எண்ணத்தை வெளியிடும் விபரீதமும் வாசிப்பவர்கட்கு விடா நகைப்பையே தரும். யாரு மற்றவர்கட்குத் தெய்வம் துணையென்பதுபோல அச்சமயம் திடீரென்று ஆங்கோர் கிழத்தனவான் தோன்றி, அவளுக்கு இதஞ்சொல்லி தன் வீட்டிற் கழைத்துச்சென்றபின்னர் அவ்வீட்டில் கனகரத்தினத்தை ஓர் முழுமுடனுக்கு கல்யாணம் செய்ய ஏற்பாடாவதும், அவளதற்குச் சம்மதியாமல் வேறோர் கன்னிகையை ஏற்பாடு செய்துவிட்டுத்தான் தப்பித்துக்கொள்வதும் மிகவும் சாமர்த்தியமாக விருக்கும். பிறகு கனகரத்தினம் கள்வர் கையிலகப்படு

பாஷையிலே எழுதியிருக்கின்றேன் இதை வாசிப்ப
தால் நம்நாட்டு ஸ்திரீகளுக்கு ஓர் நற்புத்தி மேம்படு
மென்பதே என்னுடைய நோக்கம். அதுவுமன்றி, எத்
தகைய மனோதுக்கம் நேரிட்டபோதிலும் அவற்றை
மறக்கச் செய்து ஆனந்த சாகரத்தில் மூழ்த்துவிக்கும்
பொருட்டு சில விநோதமான விகடங்களையும் குருசிஷிய
தர்க்கபாவனையாக எழுதியுள்ளேன். இவற்றை குற்ற
மெனக் கருதுவோர் மன்னிப்பாராக.

இக்கதையானது வேறு பாஷைகளிலிருந்து
மொழி பெயர்க்கப் பட்டாவது வேறு புத்தகத்தி
லிருந்து கடன்வாங்கப் பட்டாவது எழுதப்படாமல்,
என் சிற்றறிவிற் கெட்டிய யுக்தி கல்விகேள்வி அனுப
வங்களை யனுசரித்து கற்பனையாக எழுதப்பட்டதாகை
யால் சில பிழைகளிருக்கக்கூடும்.

கற்றுணர்ந்த பெரியோர் அக்குற்றங்களை யெல்லாம்
குணமாகக் கொண்டு என்னை ஆதரிப்பார்களென்று
எல்லாம் வல்ல பரம்பொருளை சதா தியானிக்கின்றேன்.

இச்சிறிய புத்தகத்தை யானெழுதியபின் திரவிய
செலவிட்டு பலருக்கும் பயன்பட அச்சிடத் துணிந்த
ட-ா-ா-ஸ்ரீ என். முனிசாமி முதலியார் அவர்களுக்கு
யான் என்றும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டவனா
யிருக்கின்றேன்.

Author.

# PREFACE.

## முகவுரை.

நண்பர்களே! இதற்கு முன் என்னால் எழுதப்பட்ட ஜெகதலஜெகஜ்ஜோதி யென்னும் சிறிய நாவலை வாசித்த அறிஞோர் அப்புத்தகத்தின் முகவுரையில் பிரசித்துள்ளபடி, பலஞானியர்களுடைய பாடல்களை மேற்கோள்களாக உபயோகித்தும், நாம் பேசுவது போன்ற பாஷைகளையும் ஏராளமாக உபயோகித்தும் மனதிற்கு இனிமையான இன்னொரு நாவலை, எழுதும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் இச்சிறு நாவலை எழுதலானேன்.

நிற்க எனது விடுமுறை நாட்களில் யான் சென்னைக்கடுத்த ஓர் குக்கிராமத்திற்குச் சென்று அவ்வூரதிசயங்களை கவனித்து வருகையில், ஓர் தாமரைத் தடாகத்தினிடம் சேர்ந்தேன். அப்போது அவ்வூரில் கொண்டவர்களுக் கடங்காப் பிடாரிகளாகிய ஓர் ஸ்திரீகளின் கூட்டத்தைக் கண்டேன். இவர்களைக் கண்டதும் யான் வியப்புற்று அவர்களுடைய நடக்கைகளை கவனிக்கலாயினேன். அவர்கள் பேசின விஷயங்களெல்லாம் எனக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் தந்தமையால் அவற்றை எல்லோருக்கும் அறிவிக்க வெண்ணி பஜாரிகளின் சரித்திரம் என்று ஒரு அத்தியாயமும் இப்புத்தகத்தில் சேர்த்துள்ளேன். அவர்கள் பேசின வார்த்தைகளை இலக்கணநடையில் எழுதினால் நன்கு விளங்காதெனக் கருதி அவர்கள் பேசின சுய

223548
சென்னை-60

ஓம்: கணேசாயநம:

# மதிசூதனன்.

மண்ணுலகத்தினிற் பிறவிமாசற
வெண்ணியபொருளெலாமெளிதின் முற்றுறக்
கண்ணுதலுடையதோர்களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## முதல் அத்தியாயம்.

### கிரீடம் களவுபோனது; திருடன் சன்னியாசியானது.

ஒ! கடவுளே நானென் செய்வேன், இப்பிரபஞ்சத்தின் கண்ணவதரித்துள்ள எண்பத்து நான்கு இலட்சம் ஜீவராசிகட்கும் அவ்வவற்றின் பூர்வகன்மத்துக்கேற்றபடி சகல சுக துக்கங்களையுந் தந்து இரட்சிக்கும்படியான பரமதயாநிதியே, என்னுடைய மனக்குறைகளை நின்னிடமன்றி யான் வேறியாரிடம் புகல்வேன். எனக்கோ தாய்தந்தையர்களில்லை.

* "அப்பநீயம்மைநீ யையனுநீ யன்புடைய மாமனுமாமியுநீ, யொப்புடைய மாதருமொண்பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமுமோரூருநீ, துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ, யிப்பொன்நீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவன்நீ"—என

---

* அப்பர் சுவாமிகள்.

நினைத்து நின்னிடம் சரணமடைந்தேன். நீயும் கைவிடு தல் நீதியோ அனுதிரட்சகனே, என் கன்மத்தை யென் சொல்வேன். நான் சுமார் இருபது வருடகாலமாக, எல்லா தேசத்தரசர்களையும் அடக்கி அவர்களிடமிரு ந்து தீர்வை செலுத்தப்பெற்று ஏகச்சக்கிராதிபதியாய் மனுநீதி தவருமல் இந்த மாளவதேசத்தை யரசாட்சி செய்து வரும் மிருத்திக மகாராஜனிடம் சேனைத்தலைவ னுக யாதொரு துக்கமுமின்றி வாழ்ந்து வருகையில் நேற்றையதினம் அரண்மனையில் ஓர் பெரிய சபைகூடிப் பற்பல அரிய விஷயங்களையும் இராஜகாரியங்களையும் பேசிக்கொண்டும் பண்டு பலகாராதிகள் புசித்துக் கொண்டு மிருந்தபோது அந்தோ! என் மதியீனத்தால் பூர்வகன்மத்துக்குத் தக்கபடி, சற்றேனும் யோசியாமல் ஏகச் சக்கரவர்த்தியான என் அரசனுடைய, இரத்தி னங்களிழைத்த கிரீடத்தைக் களவாடிக்கொண்டு இந்த ஆலமரப் பொந்தில் ஒளித்துவைத்துவிட்டு இப்போது பார்க்கையில் என்னையும் ஏமாற்றி யாரோ அபகரித்துக் கொண்டு போய்விட்டனரே, யான்வைத்த இடத்தில் தேடியுங்காணேமே, கைக்கெட்டினது வாய்க்கெட்டக் கூடாதா? ஆதெய்வமே, நான் அந்தகிரீடத்தை யெடுத் துக்கொண்டு வெளிதேயஞ் சென்று ஆனந்தமாகக் கண்மறைவாய் சீவிக்கலாமென்றிருந்தேனே. என் எண்ணம் வீணுய் விட்டதுவே. திருடியும் பயனில்லா மற் போய்விட்டதே. இனிமேல் யானும் என் வெண்டு பிள்ளைகளும் பிழைப்பதெங்ஙனம்? அரசனிடம் போக வோ எனக்கு பயமாயிருக்கிறது, நானென் செய்வேன். இனி வேறெந்த ஊருக்காவது ஓடிப்போய் விடலா மென்றால் கையில் வேண்டிய டணமுமில்லை. கிரீடம்

சுமார் இரண்டு லட்சம் ரூபாய் பெறும். அதிலுள்ள ஒவ்வொரு மாணிக்க, இரத்தின, வைடூரிய முதலியன வற்றை விற்று ஜீவிக்கலாமென்றல்லவோ எண்ணினேன். எல்லாம் கனவாய் விட்டதே, இதைப்பற்றி யான் யாரிடங் கூறுவேன். இன்னும் தாமதித்தால் அரசனிடமிருந்து என்னைப் பிடித்துக்கொண்டுபோக சேவகர்கள் வந்தாலும் வருவார்கள். நான் இந்தக் காட்டில் ஆலமரத்தின்கீழ் இவ்வாறு எனக்குள்ளே சிந்தித்துக் கொண்டிருந்தால் எனக்குத் தான் ஆபத்து வரும். ஆகையால் எங்கேயாவது ஓடிப்போய் விடுவதே உத்தமம். ஓடிப்போகலாமென்றால் என் பெண்டு பிள்ளைகளை யாவர் காப்பாற்றுவர். இதற்கென் செய்யலாம். நான் என் வீட்டிற்குப் போய் என் மனைவி மக்களிடம் இதைப்பற்றி யோசிப்பேன், என்று பேசிக்கொண்டே தன் வீட்டை நோக்கித் தானிருந்த காட்டைவிட்டு வெளிப்பட்டான் மதிசூதனனென்னும் சேனாதிபதி,

வீடு சேர்ந்ததும் தன்னருமை மனைவியைச் சேர்த்தணைத்து முத்தமிட்டு பெண்ணே! இன்றையதினம் யான் உன்னைவிட்டுப் பிரியும்படியான காலம் வந்தது அந்தோ, என் தலைவிதி.........

மனைவி.—நாதா அதென்ன அப்படிச் சொல்கிறீர், இது ஒரு அற்புதமா, நான் தங்களை விவாகஞ் செய்தது முதல் இதுவரையில் நீர் எத்தனையோ முறை சண்டைக்குப் போயிருப்பீரல்லவா ? அப்போதெல்லாம் என்னை மூன்றுமாத காலமும் ஆறுமாத காலமும் விட்டுப் பிரிந்திருக்கவில்லையா ? அப்படி

யிருக்கையில் நீர் இப்போது விசனப்படுவது என்?

மதிசூதனன்.—பெண்ணே இப்போது நான் சண்டைக்குப் போவதற்காகப் பிரியவில்லை. நேற்றைய தினம் இராஜ சபையில் ஓர் பெரிய விருந்து செய்தார்கள். அப்போது நானுமங்கிருந்தேன். அங்கு சிம்மாதனத்தின் மீது நம் சக்கரவர்த்தியின் கிரீடம் வைத்திருந்தது அதை யாருக்குந் தெரியாமல் எடுத்துக் கொண்டுபோய் நம் ஊருக்கருகிலுள்ள காட்டில் ஓர் அடர்ந்த ஆலமரப் பொந்தில் ஒளித்துவைத்து இன்றைக்குப் போய் பார்க்கையில் காணோம். ஆகையால் இனிமேல் நானிவ்வூரி லிருந்தால் அரசன் என்னைத் தண்டித்து விடுவான். இனி நான் உயிர் பிழைக்க ஓடிப் போவ தத்தியாவசியம்.

மனைவி.—நாதா நீர் சொல்வது சரியே, கற்புடைய ஸ்திரீகள் தன் புருடனை ஓர் நிமிஷமேனும் பிரிந்திருக்கக் கூடாதென்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவாயினும் தன் கணவனுக்கோ ராபத்து வந்தபோது அவனுக்கு ஓர் மந்திரியைப் போலிருந்து அவனை யந்த ஆபத்திலிருந்து தப்புவிக்கு முபாயஞ் செய்பவளே பெண் என்றும் கூறுகின்றன. ஆகையால் நான் இச்சமயம் தங்களைக் காப்பாற்ற வேண்டுமல்லவா, நீர் உம்முயிர் பிழைத்து வாழ என்னை விட்டுப் பிரிந்திருக்கலாம். நீர் எந்தெந்த ஊர்களுக்குப் போகிறீர்களோ, அங்கு நீர் வசிக்கும் நிலைமையும் தங்கள் க்ஷேமத்தையுந் தவறாமல் அடிக்கடித் தெரிவியுங்கள்.

மதிசூ-ன்.—ஆ, இன்றல்லவோ உன் பதிவிரதா தருமத்தைக் கண்டேன். கணவனுடைய சொல்லுக்குச் சற்றேனும் ஏறுமாறு சொல்லாமல் என்னைப்போக உத்தரவு கொடுத்ததுமன்றி என் க்ஷேமத்தை யடிக்கடி தெரிவிக்கும்படியாகவுங் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறாயே,

* "கணவனுக்கினியளாய் மிருதுபாஷியாய் மிக்ககமலை
நிகர்ரூபவதியாய்
காய்சினமிலாளுமாய் நோய்பழியிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்புமென வருமினிய
மார்க்கவதியாய்
மாமிமாதற் கிதஞ்செய்பவளுமாய் வாசல் வருவிருந்
தோம்புபவளாய்
இணையில் மகிழ்நன் சொல்வழி நிற்பவளுமாய் வந்தி
யெனப் பெயரிலாதவளுமாய்
இரதியெனவே லீலைபுரிபவளுமாய் பிறர் தம்மில்
வழிச் செலாதவளுமாய்
அணியிழை யொருத்தி யுண்டாயினவள்
கற்புடையளாகும்"………

என்றபடி கற்புடைய ஸ்திரீகளுக்கு வேண்டிய இலட்சணங்களெல்லாம் உன்னிடம் பொருந்தி யிருக்கின்றன வென்று ஆனந்தத்தினால் தழுவி முத்தமிட்டுப் பின் தன்னருமைப் புதல்வனைப் பார்த்து மீனவா நான் இப்போதே உன்னையும் உன் தாயாரையும் விட்டுப் பிரியவேண்டியவனா யிருக்கின்றேன். மறுபடியும் உங்களை யென்றைக்குக் காண்பேனோ வறியேன். இது விஷயம் உன் தாயாரைக்கேட்டு விபரமாய்த் தெரிந்து

* அரப்பளீசுரசதகம்.

கொள். நான் வெளிதேசங்களுக்குச் சென்று உன் விலாசத்திற்குக் கடிதம் போடுவேன். அதை நீயொருவருக்குங் காண்பியாமல் விரகசியமாகப் படித்து உன் தாயாருக்குச் சங்கதியைச் சொல்லி, உன் தாயார் எனக்குப் பதில் கடிதமெழுதச் சொன்னால் நீ உடனே யெழுதி அதனடியில் கையெழுத்து மாத்திரம் போட வேண்டாம். என்னைப்பற்றி இராஜ சபை யாராகிலும், அன்னியராகிலும் விசாரித்தால் உனக்கு என்னிருப்பிடந் தெரியாதென்றும் நான் சச்சரவிட்டு உன் தாயார் மீது கோபம் கொண்டு போய்விட்டதாகவும் சொல்லிவிடு.

மீனவன்:—தந்தையே, நீர் சொன்னபடியே செய்கின்றேன். இதோ உம் கைச்செலவுக்கு இந்தப் பைப் பணத்தை யெடுத்துக்கொண்டு போங்கள் என்றான். உடனே மதிசூதனன் என்னும் சேனாதிபதி தன் மனைவியினிடமும் பிள்ளையினிடமும் பிரியா விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் தன்னூரை விட்டுத்தாண்டி ஓர் காட்டில் நுழைந்து நடந்து வெகுதூரஞ் சென்றான். வெய்யல் அதிகமாகவே நடக்கச் சக்தியற்று பசி யதிகரித்ததால் அக்காட்டை விட்டு வெளியேவந்து பார்க்கையில் ஓர் பெரிய சாலை தோன்றிற்று. உடனே அந்தச் சாலைமார்க்க மாய்போய்க் கடைவீதியை யடைந்து தனக்கு வேண்டிய உணவாதிகளைப் புசித்துப் பசிதீர்ந்து "நான் இந்த சேனாதிபதியுடையோ டிருப்பேனாகில்என்னை இன்னானென்று கண்டுபிடித்து விடுவார்கள். ஆகையால், யான் என் உடையைமாற்றி வேறு வேடம்பூண்டு சென்

ருல் நலமாயிருக்கும்" என்று தனக்குள்ளே யோசித்துக்கொண்டு ஜவுளிக்கடைக்குச் சென்று சலவை மல்துணிவாங்கி அதை தைபற்காரனிடங் கொடுத்து ஒரு நெடு அங்கிதைத்து அதற்குக் காவி தோய்த்து உலர்த்தித் தரித்துக்கொண்டு தனக்கு முன்னிருந்த தாடியுடன் ஒரு சன்னியாசி போல் விளங்கினன். பிறகு அந்த சாலைமார்க்க மாகவே நடந்துசென்று சாயங்காலம் சுமார் 7 மணிக்கு ஜலந்த புரியைச்சேர்ந்து அவ்வூரி லுள்ள அருளானந்தர் மடத்துக்குட்சென்று அங் கிருந்த சாமியார்களுடன் நேசம்பூண்டு அம்மட த்திலேயே அன்று தங்கிவிட்டான். அப்பால் அங் கிருந்த எல்லா அடியார்களும் மதிசூதனனும் தங் கள் மாலைக்கடன்களை முடித்துக்கொண்டு விபூதி தரித்து தேவாரம், திருவாசகம் முதலிய அருமை யான சிவநாம சங்கீர்த்தனங்கள் பாராயணஞ் செய்துவிட்டுப் பின்னர் சமையலறைக்குட்சென்று மனங்களிக்க உணவருந்தியபின் சற்றுநேர முலா விப் படுக்கைக்குச் சென்றனர். மதிசூதனனும் அந்த சன்னியாசிகளின் பக்கத்திலேயே படுத்துக் கொண்டான். அப்போது ஒரு சன்னியாசி மதிசூதனனைப் பார்த்து அப்பா, நீயார் உன்விருத் தாந்த மென்ன எத்தனை வருடகாலமா யிந்தவேட த்துடனிருக்கிறாய் என வினவினன்.

மதிசூத:—ஐயா, நான் துறவறம் பூண்டு சுமார் பதி னைந்து வருடகாலமாகிறது. நான் ஒரு பெரிய குடும்பத்திற் சேர்ந்தவன், என்னுடன் பிறந்தார் நால்வருளர். எங்களுக்கெல்லாம் விவாக மான

பின்னர் எங்கள் தாய் தந்தையர்கள் காலஞ்சென்றனர். எங்களுக்குச் சுமார் மூப்பதினாயிரம் ரூபாய் ஸ்திதியிருந்தது. அதைப் பாகிப்பதில் எனக்கும் என் தம்பிமார்களுக்கும் ஒரு பெரிய கலகம் விளைந்து மனவருத்தம் நேரிட்டது. பின் என் தம்பிமார்களிலொருவன் என் பெண்சாதியைத் தன் வசப்படுத்திக்கொண்டு என்னை மருந்து வைத்துக்கொல்ல யெத்தனித்ததின் பேரில் யானதையறிந்து மிக்க விசனப்பட்டு சம்சாரமாகிய சாகரத்தைவிட்டு வெளிப்போந்து அன்றுமுதல் தேசசஞ்சாரஞ்செய்து, எம்பெருமான் வீற்றிருக்குந் திருக்கோயில்களுக்குச் சென்று அன்புடன் பூசித்து வணங்கி பின்னர் தரிசனார்த்தமாக யிவ்வூருக்கு வந்தேன். என்பெயர் * கணபதி சாமி என்றான். இதைக்கேட்ட சண்முக சாமியார் ஆ! ஆ! என்ன பிரபஞ்சம், மாயா விலாசத்தால் மூடப்பட்டு நமக்கன்னியமாயுள்ள பெண்டுபிள்ளைகள் முதலிய பதார்த்தங்களை யெல்லாம் நம்மைச் சார்ந்தனவென் றெண்ணி இவ்வெம்மாயக் காட்டிலலைந்து திரிந்து அவதிப்படுதல், அந்தோ, என்ன மதியீனம்? நோக்குங்கால் நம் பெண்டு பிள்ளைகள், நம் தாய் தந்தையர் என்று பந்தத்தையே மேற்கொண்டு குடும்பச்சேற்றி லுழன்றலைகின்றார்களே யிவர்கள் சற்றேனும் யோசித்துத் தங்கள் நிலைமையைக் கவனியார்களோ. ஒருவனுக்கு அந்தியகாலம் வந்து நமவாதனைப்பட்டு உயிரிழக்க

---

* மதிசூதனன் போலிப் பெயர்.

போகின்றபோது இப்பெண்டு பிள்ளைகளெல்லாம் அவனைக் காப்பாற்றுவர்களா ?

* "தந்தையார் தாயாருடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தமாரே
வந்தவாறெங்கனே போமாறேதோ
மாயமாமீதற்கேது மகிழவேண்டாம்......"

என்ற மகாவாக்கியத்தை கவனிக்கக்கூடாதோ ? ஒருவன் காலைதொடங்கி மாலைவரையில் அன்ன ஆகாரமின்றி அதிக கஷ்டப்பட்டுழைத்து தன் மனைவி மக்களைக்காப்பாற்ற வேண்டியதென்ன. அவனுடைய ஊழ்வினைப் பயனையல்லவா ? அப்படி ஆயுளுள்ளவரையிலுழைத்துத் தங்களைக் காப்பாற்றி வந்த புருஷனைச் சற்றேனும் மதியாமற்படிக்குத் தங்களிஷ்டம்போலத் திரியும் பாதகர்களான கற்பிழந்த பேதை ஸ்திரீகளுடைய பாப கன்மத்தை யானென்ன சொல்வேன்.

*"தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்பதை யறியாமல் தன்கணவனைத் துரும்புக்குச் சமானமாக வெண்ணி சற்றேனு மதிப்பின்றி எதிர்த்துப் பேசு மனையாட்டியை அப்பாபத்தினின்றும், நீக்குதல் முடியுமா ? (முடியாது) கற்புடைய ஸ்திரீகளுடைய இலட்சணமென்னவென்றால் 'தன் புருஷனுண்ட பின் தானுண்ணலும், அவன் நித்திரைசெய்த பிறகுதான் நித்திரைசெய்தலும் அவன் நித்திரையிலிருந்து எழுந்திருப்பதற்கு முன் தானெழுந்து குடும்ப விஷயங்களைக் கவனிப்பதும், தன் கணவன் விகார ரூபமுடைய மந்தனுயிருந்தா

* திருவள்ளுவ நாயனுர், திருக்குறள்.

னும் அவனையன்றி மற்ற அன்னியர் முகத்தைப் பார்க்கச் சகியாமலிருத்தலும், தன் நாயகன் பார்த்துக் களிக்கத் தன்னை யலங்கரித்துக் கொள்ளுதலும், தன் நாயகன் தன்னைவிட்டு நீங்கிய காலத்து அவன்மீதே சதா சிந்தையைச் செலுத்தி அவனுக்கு வழியில் யாதொரு துன்பமும் நேரிடாமலிருக்கும்படிக் கடவுளை வணங்கலும், தன் கணவனுக்குக் கோபம் வந்து அடித்தாலும் வைதாலும் எதிர் நின்று பேசாமலிருத்தலும் தன் வீட்டைவிட்டு அரைக்கணமேனும் வெளிச்செல்லாதிருத்தலும், துர்நடத்தையுள்ள பெண்டிருடன் கூடாதிருத்தலும், தன் கணவனுடைய ஆயுள் நாள் விருத்தியாகும்பொருட்டு மஞ்சட் பூசுதலும் அவன் திருநாமம் சொல்லாதிருத்தலும், ஓர் காரியத்தை செய்யும்போது இருவரும் ஒரு மனப்பட்டுச் செய்தலும், தங்கள் வரும்படிக்கேற்ற தருமசிந்தனையுடையவர்களுமாயிருத்தலும், எப்போதும் பாபகாரியத்தை நீக்கிப் புண்ணிய காரியத்தையே விரும்புதலும் அல்லவா? இத்தகைய கற்புடைய ஸ்திரீயுடன் வாழ்தலல்லவோ இல்லறம் இதையல்லவோ "இல்லறமல்லது நல்லறமன்று" என்று மூதாட்டியும் கூறியிருக்கிறனள். அதுவுமன்றி மேற்கூறிய லட்சணங்களெல்லா முடைய ஓர் கற்புடைய ஸ்திரீயைக் கண்டாலல்லவோ தேவர்கள் எல்லாம் கை கூப்பி வணங்குவார்களென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. தன் கணவனுக்கு அழிவைத்தானே தேடத் துணிந்த மனைவி இயமனுக்கொப்பானவள். ஆகையால் ஐயா, கணபதிசாமிகளே நீர் துறவறம்பூண்டது நியாயமே என்றார். இதைக்கேட்ட கணபதிசாமி சற்று நேரம் துக்கசாகரத்தில் மூழ்கியிருப்பவர்போல மௌ

னமாயிருந்து "ஐயா நீர் யாரோ யானறியேன் உம் சரித்திரத்தைச் சற்று சொல்லும்.

சண்முக சாமி:—ஐயா நானொரு வர்த்தகன், அதிக செல்வாக்குட னிருந்து வியாபாரஞ்செய்து வருகையில் எனக்கு விவாகமாகி அநேக வருடங்களாகியும் குழந்தைக ளின்மையால் மறு விவாகஞ் செய்துக் கொண்டேன். கொஞ்சகாலம் சென்ற பிறகு என் தாய்தந்தையர்கள் விண்ணுலகமடைந்தனர். அவர்கட்குப் பின் யான் பத்துவருட காலம் குடும்பத்திலேயே என்னிரண்டு மனைவிகளுடன் ஆனந்தமாக வாழ்ந்தேன். அப்பாலென்னிரண்டு மனைவிமார்களும் ஒருவர் பின்னொருவராக உயிர் நீத்தனர். யான் அதிக துக்கசாகரத்தில் மூழ்கி யொருவரிடமுஞ் சொல்லாமல் கைச் சிலவுக்குக் கொஞ்சம் பணமெடுத்துக் கொண்டு யாத்திரை செய்யப் புறப்பட்டு சுமார் 6 வருட காலம் யாத்திரை செய்து இங்குவந்துசேர்ந்தேன்.

கணபதிசாமி:—சாமிகளே, உம்பக்கத்திற் படுத்துறங்குகின்றனரே அவர்யார் அவர் சரிதையென்ன ?

சண்முகசாமி.—அவரா, அவர் மௌனசாமியார். அவர் இம்மடத்திற்கு வந்து ஒருவருட காலமாகிறதாம். ஒருவரிடமும் பேசினதே கிடையாதாம். அவர் சங்கதி இங்கு யாருக்குந் தெரியாது.

கண-சாமி.—அப்படியா, அவருக்குப் பக்கத்திலிருக்கும் சாமியார் யாரோ அவர் உங்களுக்குத் தெரியுமா ?

சண்முகசாமி.—தெரியும் தெரியும். அவருடைய ஊர் எங்களுடைய ஊருக்கு பத்துமைல் வடக்கேயுள்ளது. அவருடைய தாயாரிறந்துவிட்டாள். மாற்ருந்தாய் செய்யுஞ் தொந்திரவைப் பொறுக்கமுடியாமல் சன்னியாசி வேடம்பூண்டு சாஸ்திரப்பயிற்சியிலும் கொஞ்சம் கைதேர்ந்து, பகவானைத் தியானித்தபடியே காலங்கழித்து வருகின்ருர். அவருடைய பந்துக்கள் இங்கு வந்து அவரை முன்னொருகால் அழைத்துக் கொண்டுபோய் மறுபடியும் குடும்பஸ்தனுக்கவெண்ணி விவாகத்திற்குரிய ஏற்பாடுகளெல்லாம் செய்தார்களாம். அதற்குச் சம்மதியாமல் மறுபடியும் ஒரு வரிடமுஞ் சொல்லாமல் துறவறம்பூண்டு வந்துவிட்டார். அவருடைய பந்துக்கள் அப்புறம் அவரைத் தேடி வரவில்லை.

கண-சாமி—ஒருதரம் துறவியாக வெளிவந்து விட்டவனை மறுபடியும் குடும்பத்தில் சேர்த்தால் நிற்பானு? காலாறத்திரிந்த பாட்டைக் கட்டிப்போட்டால் நிற்குமா, அன்றியும் பந்துக்களுடன் பழயபடியே வாழ்வானு, சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டுமா! அவாளவாள் பூர்வஜன்யப் புண்ணியந்தான் அவர்களைக் குடும்பச் சேற்றிலிருந்து வெளிவிடுவது. நம்முடைய மடாதிபதியின் வேலைக்காரனைப்போல் திரிகிருரே அந்த சாமியார் யார்?

ச—சாமி:—அவனு? சுத்த மடையன், படிப்பே கிடையாது, சுய புத்தியேயில்லை, சொல் புத்தியையுங் கேட்கமாட்டான், முறஞ்சோறு தின்பான். மரி

யாதையாய்ப் பேசத்தெரியாது, மாட்டைப்போ லுழைப்பான், அவன் வீட்டில் அவனுக்குச் சாப் பாட்டுக்குக் கஷ்டம். ஆகையால் சன்னியாசி யாய் வந்துவிட்டான்; இம்மடத்தைச் சுத்திசெய் தல், இங்குள்ள படங்களைத் துடைத்தல், அடி யார்களுக்கு ஸ்நாநஞ்செய்வித்தல் அவர்களுடைய வேட்டியைத் துவைத்தல், இன்னும் இப்படிப் பட்ட தொழில்களைக் கவனித்து வருகிறான்.

கண-சாமி:—சாமி, இம் மடாதிபதி யிருக்கின்றாரே அவர் யார்? அதிக வாசித்தவர்போல் தோன்று கிறது. எல்லோருக்கும் நல்ல உபசரணை செய் கிறார், எத்தனை வருடகாலமாக அவர் இம்மடத்தி லிருக்கிறார்?

சண்-சாமி.—ஆ, ஆ, அவருடைய சரித்திரத்தைப் பேசினால் நமக்கும் புண்யமுண்டு. அவருடைய பேரைச் சொன்னாலும், அவரைத் தரிசித்தாலும், அவரை நேசித்தாலும் மகா பாக்கியம் பெறுவன்

* "நல்லாரைக்காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற்கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்களுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று" அல்லவா?

இம்மடாதிபதியின் பெயர் அருளானந்தர். இவர் ஆங்கில பாஷையில் கைதேர்ந்து வக்கீல் உத்தியோகம் பார்த்து வந்தவர், எல்லா சாஸ்திரங்களையும் ஆங்கிலத் திலும் தமிழிலும், கூடிய வரையில் சமஸ்கிருதத்தி

* ஔவையார்.

லும் நன்கு ஆராய்ந்தவர். அநேக ஜமீன்தாரர்களும் வித்வான்களும் இவரிடம் தற்காலம் பாடங்கேட்டுச் செல்கின்றனர். இவர் குடும்பத்தி லிருக்கிறபோதே பக்தி மார்க்கத்தையே இவர் மனம் நாடிநின்றது. அப்படி யிருக்கையிலோர் நாள் இவரிருந்த ஊரு க்கு ஓர் ஞானி சென்றூராம். அவரைக் காண அவ்வூரிலுள்ளோ ரெல்லாம் தங்கள் தங்களா லியன்ற மட்டும் பால்பழம் முதலியனவற்றை யெடுத் துக் கொண்டு சென்றனராம். இவரும் சென்று அவர் பாதத்தில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து நமஸ் காரஞ் செய்து, கைகட்டி, வாய்பொத்தி, தன்னிரு கைகளையும் சிரமேற் கூப்பிய வண்ணமாய் ஒருபுறம் ஒதுங்கி நின்றூராம். அப்பால் எல்லோரும் சென்றபி அந்த ஞானி இவரைக் கூப்பிட்டு ஏதோ சில கேள்வி கள் கேட்டுப் பின்னர் உபதேசம் செய்தாராம். அதைப் பெற்றுக்கொண்டு அவரை வணங்கிப் பின் வீட்டிற்குப் போய் உண்டு, இரவில் எல்லோரும் நித்திரையிலிருக் கையில் அர்த்த ராத்திரியிலொருவருக்குந் தெரியாமல் கதவைத் திறந்துகொண்டு ஊரைவிட்டுப் புறப்பட்டு இம்மடத்திற்கு வந்து சேர்ந்தார். அப்போது இம் மடத்திற் கதிபதியா யிருந்தவர் இவரை மிகவும் உப சரித்துத் தன் பக்கத்திலிருத்தி அநேக மேலான விஷ யங்களைக் கற்றுக்கொடுத்தாராம். பின்னர் அந்த மடாதி பதி பரிபூரண திசையடைந்தபின் இம்மடத்திலுள் ளோர்யாவரு மொன்றுகூடி இவரையேமடாதிபதியாக நியமித்தார்களாம். அன்றுமுதல் இவரே இம்மடத்தலை வராகி நன்னெறிபூண்டு சாஸ்திரங்களை யடியார்களுக்கு முபதேசித்து வருகிறூர்.

கண-சாமி:—சாமிகளே, இப்போது சுமார் 11 மணியாகிறது, நாம் நித்திரை செய்வோம் என்று சொல்லி இருவரும் நித்திரைசெய்ய வாரம்பித்தார்கள்.

அப்பால் மறுநாட்காலை சுமார் 4 மணிக்கு அம்மடத்திலுள்ள அடியார்களெல்லாம் விழித்துக்கொண்டு காலைக்கடன்களை முடித்து, விபூதிதரித்து உருத்திராக்கமணிந்து மடாதிபதியானவர் வீற்றிருக்கும் அறைக்குட்சென்றனர். மடாதிபதி! யிவர்களை யுட்காரும்படி யுத்தரவளித்து அவர்களைப்பார்த்து ' துறவறம் பூண்டு நன்னெறியிலேயே நிற்கவெண்ணி சாது சங்கத்தை விரும்பிக் காலங்கழித்துவரும் தருமசீலர்களே! இப்பிரபஞ்சத்தின் கண் ணவதரித்துள்ள ஒவ்வொருவரும் என்றைக்கிருந்தாலும் மண்ணுக்கிரையல்லவா? 'வாழ்வாவது மாயம், நாளை மண்ணாவது திண்ணம்' என்றன்றோ ஆன்றோர் கூறியுள்ளார். ஆகையால் நாம் நம் வாழ்நாட்களில் செய்யவேண்டியவைகளென்னவென்றால், சூரியோதயத்திற் கைந்து நாழிகைக்கு முன்னதாக வெழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு எம்பெருமானைப்பற்றி தியானித்தபடியே சற்றுநேரம் மனோவாக்கு காயங்களை யொன்றுபடச் செய்து, பின் தம் தம் காரியங்களைச் செய்யத் துணியவேண்டும். ஒருவன் எவ்வளவு பணக்காரனாயிருந்தபோதிலும் எவ்வளவு [illegible]யுடையவனாயிருந்தபோதிலும், இன்னும் அநேகவிதமான செல்வ வளப்பங்களை யுடையவனாயிருந்த போதிலும் அவனிறக்கும்பொழுது அவனுக்குற்ற வழித்துணையாக எவையாவது வருகின்றனவா? இல்லையே,

* "மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந் தன்வாசன் மட்டே
யினமானசுற்றமயான மட்டே வழிக்கேதுணை
தினையாமள வெள்ளளவாகினு முன்பு செய்த தவந்
தனையாளவென் றும்பர லோகஞ்சித்திக்கும் சத்தியமே"

என்றபடி நம்மைச்சார்ந்த மனைவிமக்கள் நமக்கு உதவ மாட்டார்கள். நாம் செய்யும் புண்யந்தான் நம்மைக் காக்கும், ஆகையால் எல்லோரும் கூடியவரையில் பாவ காரியங்களை நீக்கிப் புண்யகாரியங்களைச் செய்ய முயல வேண்டும். புண்ணியக் காரியங்கள் யாவையெனில் இப் பிரபஞ்சத்தின் கண்ணுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் யாதொரு கெடுதியும் செய்யாமலிருத்தலேயாகும். பாவத்தில் முக்கியமாக ஐந்துவிதமுண்டென்பர். அவற்றை தான் பஞ்சமா பாதகமென்பர் அவையாவன பொய், கொலை, கள், களவு, காமமாம், இப்போது நாம் இவைகளை ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

பொய்:—ஒருவனுக்கு என்ன ஆபத்து வந்தபோதிலும் உயிர்ச்சேத மாவதாயிருந்தாலும் ஒரு வார்த்தை கூடப் பொய் சொல்லவேகூடாது. முன்காலத்தில் பெண்டு பிள்ளையை யிழந்து, இராஜ்ஜியத்தையு மேனைய செல்வங்களையுந் துறந்து, தானுமோர் புலையனுக்கடிமையாகி யிருந்து தன் மனைவியாகிய சந்திரமதியை தன் தலைவனுடைய கட்டளையின் படி வெட்டத் துணிந்திருக்கும் அரிச்சந்திரன் முன், விஸ்வாமித்திர முனிவர் தோன்றி "அப்பா! நன்று, நன்று, நீயென்ன காரியஞ்செய்யத் துணிந்தாய், ஏன் அனியாயமாய் கெட்டுப்போகின்றாய்.

* பட்டினத்தார் பாடல்.

இப்போதே நீ எனக்கு உன் இராஜ்ஜியத்தைத் தத்தஞ்செய்து கொடுக்கவில்லையென்று ஒரு சிறிய பொய் சொல்லிவிட்டால், நான் உன் இராஜ்ஜியத்தைக் கொடுத்து விடுகிறேன். நீ முன்போல சுகமாக வாழலாம்" என்றதைக்கேட்ட அரிச்சந்திரன் மனம் நடுங்கி விஸ்வாமித்திரரைப் பார்த்து,

"பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனி நமக்குளதென நினைக்கும்
கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலேம்."

என்றுசொல்ல, இந்த உறுதிமொழியைக் கேட்டதேவர்களெல்லோரும் அரன், அயன், மால் முற்பட ஆனந்தங்கொள்ள விஸ்வாமித்திரர் வெட்கத்தால் தலைகுனிந்து பதிலுரைக்க முடியாமற் போய்விட்டார். ஆகையால் நமக்கு என்ன துன்பங்கள் நேரிட்டபோதிலும் சத்தியம் தவறி நடத்தல்கூடாது.

கோலை:—எல்லா உயிர்களையுந் தன்னுயிரைப்போலெண்ணி ஜீவகாருண்யத்தை யனுசரிக்காமல் உயிர்களைக்கொன்று தின்றுவாழ்தல் மகா பாதகமாகும்.

* "கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா உயிருந்தொழும்"

ஆகையால் ஒருயிரையும் கொல்லலாகாது, கொன்றதையுந் தின்னலாகாது. இந்த ஜென்மத்தில் உயிர்களைக்கொன்று தின்று காலங்கழிப்பவர்கள் மறு ஜன்மத்தில் யமலோகத்தில் ஆற்றொணா துன்பத்தை யடைவார்கள். இது உண்மையென்பது அடியிற்கண்ட பாவினால் நன்குவிளங்கும்.

* திருக்குறள்.

*" எவ்வுயிரும் பராபரன் சந்நிதிபதாகு, மிலங்கு முயிருடலினைத்து மீசன்கோயில், எவ்வுயிரு மெம்முயிர் போலென்று நோக்கி, யிரங்காது கொன்றருந்து மிழிவினைரை, வவ்வியமன் றாதருந்தண்டஞ்செய்து, வல்லிரும்பை யுருக்கி யவர்வாயில் வார்த்து, வெவ்விய தீயெழுநரகில் வீழ்த்திமாறு, வேதனை செய்திடுவரென விளம்பு நூலே."

அதுவுமன்றி ஒருவன் என்ன புண்யமான காரியங்கள் செய்தபோதிலும் புலாலுண்பதை மாத்திரம் கைவிடானாகில் அவனுக்குச் சுவர்க்கம் கிட்டாதென்று சுருதியுங் கூறுநின்றது.

" கங்கையிற் பணிந்திட்டாலும் கடவுளைப்பூசித்தாலு
மங்குல்போல் கோடிதானம் வள்ளலாய் வழங்கினாலுஞ்
சங்கையிலாத ஞானத் தத்துவமுணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்புசிப்போன் போய்நரகடைவன் "

என்றபடி நரகத்தையே யடைவன், ஒருயிரைக்கொல்லுதலும் அப்படிக் கொல்லப்பட்ட உயிரைத் தின்னுதலும் பாதகமேயாகும்.

கள்:—இது தீய பானஞ்செய்தலைக்குறித்து நின்றது. கள், சாராயம் முதலியனவற்றைக் குடிப்பதால் தேகத்திற்குக் கெடுதி சம்பவித்தலாலும், புத்தி மயங்கி அநேக கொடிய காரியங்கட்குக் காரணமாய் நிற்றலாலும் மாபாதக மாகும்.

களவு:—பிறர் பொருளை யபகரித்தல் மாபாதகமாகும். தன்னுடையதல்லாத ஒரு பொருளின்மீது யாரும் ஆசைகொள்ள லாகாது. பிறருடைய சொத்து தனக்குக் கிடைக்குமானல் அதற் குரியவனை விசாரித்து அவனிடங் கொடுத்துவிடல் வேண்டும்.

காமம்.—என்றால் இச்சை. இது பெண்களின் மீது ஒருவன் வைத்துள்ள ஆசையைக் குறிக்கின்றது. முக்கியமாகப் பிறன்மனை வாழ்க்கை விரும்புதலைச் சுட்டி நிற்கின்றது.

"தன் மனையாளைத் தன் மனையிருத்திப்
பிறன்மனைக் கேகும் பேதையும்பதரே"

என்றபடி ஒருவன் தனக்கென்றுவாய்த்த மனைவியுடன் சுகித்து வாழாமற்படிக்கு அன்னியனுடைய மனைவியை யிச்சித்தல் மாபாதகம். தன் மனைவியன்றி யேனைய ஸ்திரீகளை யெல்லாம் தாய்தமக்கையர்களாகப் பாவிக்க வேண்டுமென நீதி நூல்கள் போதிக்கின்றன. முன் காலத்தில் அநேகர் பெண்ணிச்சையால் துன்பப்பட்டிருக்கின்றனர். உயிரிழந்துமிருக்கின்றனர். பத்துத் தலையுடனும் இருபது கையுடனும் இலங்கா தேசத்தை யரசாட்சி செய்துவந்த இராவணன் என் உயிரிழந்தான்? சீதையின் மீதுவைத்த இச்சையாலல்லவா? துரௌபதையின் மீதுவைத்த இச்சையினாலல்லவா, கீசகன் உயிரழந்தான், தேவேந்திரன் உடம்பெல்லாங் கண்களாகப் பெற்றதேன்? கௌதமரின் மனைவியாகிய அகலிகையின் மீதுவைத்த இச்சையாலல்லவா? இது நிற்க இக்காலத்தில் நடக்கும் உயிர்ச்சேதங்களிலும் அநேகம் ஸ்திரீகளின் விஷயமாகத்தானே யிருக்கின்றதே யொழியவேறில்லை.

* "காமமே கொலைகட்கெல்லாங் காரணங்கண்ணோடாத
காமமே களவுக்கெல்லாங் காரணங் கூற்றமஞ்சுங்
காமமே கள்ளுண்டற்குங் காரணமாதலாலே
காமமே நரகபூமி காணிபாக்கொடுப்பது..."

---

* திருவிளையாடற் புராணம்.

எல்லாவித பாவங்கட்கும் பீடமா யிருக்கின்ற காமத்தை நீக்கி வாழ்வதே மிகவும் நலம். கள்ளை ஒருவன், உண்டால் தான் மயக்கமடைவான். ஆனல் ஸ்திரீகளை ஒருவன் நினைத்தாலும், கேட்டாலும், பார்த்தாலும் மயங்கிவிடுவா னாகையால் கள்ளுண்பதை விட காமமே பெரிய பாதகமாகும்.

* "எத்திறத்தோ ரெவ்வணமா மிடையூற்றைக்
கடந்தெளிதி னேற வல்லோ
ரத்திறத்தோ ரேபுருட ரவர்களே
தொழற்குரியோ ரவரே சான்றோர்..."

என்றபடி அடியார்களே! நாமெல்லோரும் சிற்றின்பவழியில் மனதைச் செலுத்தாமற்படிக்கு வாழ்தல் வேண்டும். இதைப்பற்றி யான் இன்னுமதிகம் சொல்லவேண்டுவ தனவசியம்.

† "ஓதியுணர்ந்தும் பிறற்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையாரில்"

ஆகையால் இதுவரையில் யான் சொல்லி வந்தனவற்றைச் செவிசாய்த்துக் கேட்டுக் கொண்டிருந்த நீங்கள் யான் சொன்னபடியே நடவுங்கள். பிறரையும் அவ்வழியிலேயே நிற்கும்படி போதியுங்கள். இதைவிட மேலான புண்யமென்ன இருக்கிறது. அடியார்களே! இப்போது காலை 7 மணியாகிறது, எல்லோரும் சென்று காப்பி, பலகாரம் சாப்பிடுங்கள். என்றதும் உடனே அடியார்களி லொருவராயிருந்த கணபதி சாமியாராகிய நம் கதாநாயகன் மடாதிபதியைப் பார்த்து "சுவாமிகளே அடியேனுக்கொரு சந்தேக முளது. அஃ

* ஞானவாசிட்டம்.
† திருக்குறள்.

தென்னவெனில் நீவிர் யெக்காலத்தும் என்ன ஆபத்து வந்தபோதிலும் பொய் சொல்லக்கூடாதென்றீர். அது எல்லா வேளைகளிலும் சாத்தியமாகுமா?

மடாதிபதி.— ஆம், ஆம், நீர்கேட்பது வாஸ்தவந்தான். "பொற்றொடி மணஞ்செய்போதும் புலவிதை யொழிக்கும்போதும் நற்குல மழியும்போதும், நல்லவர் தம்மைக்கொல்ல, அற்பர்கள் முயலும் போது மருஞ்சமர் விளையும்போதும் முற்புகலைந் திடத்தில் மொழியலாம் நூறுபொய்யே" என்று மேற் கூறிய வைந்திடங்களில் நூறு பொய்சொல் லலா மென்பாருமுளர். ஆயினும் எக்காலத்தி லும் பொய் சொல்லாமலிருத்தலே உத்தம மாகு மென்றார்.

அப்போது அடியார்களி லொருவர் "ஓம் நமப் பார்வதி பதியே" எனறார். உடனே அடியார்களெல் லாம் ஒரே குரலாக "அரகர மகா தேவா, என்று வாழ்த்திவிட்டு வெளி வந்து சமயலறையுட் பிரவே சித்து காலை போசன முடித்து எல்லோரும் பற் பல வருமையான விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண் டிருந்தனர்.

## இரண்டாம் அத்தியாயம்.

### திருடனைத் தேடவாரம்பித்தது, திருடனும் கூடக் குலாவுகிறான்.

மாளவதேயத்தில் மிருத்திக ராஜனுடைய அரண்மனையில் எல்லாவித வேடிக்கைகளும், பல காராதிகள் உண்ணுதலும், அற்புத விஷயங்களைப் பேசுதலும் முடிந்த பின்னர், மறுநாட் காலை அரசன் சிம்மாதனத்திலுட்கார்ந்து கிரீடத்தை யெடுத்துக் கொண்டு வரும்படி பிரதமமந்திரிக்கு உத்திரவளித்தான். உடனே மந்திரி சென்று கஜாணாவைத்திறந்து பார்க்கையில் வழக்கம்போல் கிரீடம் காணாமையால் திடுக்கிட்டு எங்கெங்குதேடியும் பயனற்று, மெய் சோர்ந்து, நாவலைந்து, வாய்கிட்டி அரசனுக்குற்றதைச் சொல்ல வெண்ணி மதிமயங்கி அரசனெதிரே நின்று, ஈனசுரத்துடனே “அரசே! தங்களுடைய நவரத்தின சகிதமான கிரீடத்தை யெங்கெங்கு தேடியுங் காணோம். யாரோ களவாடிக்கொண்டு போய்விட்டனர் போலும்.........

அரசன்—உடனே திகிலடைந்து பிரஞ்ஞையற்றவனாய் மந்திரி நீ யென்ன பரிகாசமா செய்கிறாய். என் மூதாதையர் மூலமாக யான் பெற்ற நவரத்ன சகிதமான கிரீடத்தை யிழந்துவிட்டு யானென்ன செய்கிறது. நான் அதை நேற்று உன்னிடம் கொடுத்தபோது நீயெங்கேவைத்தாய் அரண்மனை முழுதும் தேடிப் பார்த்தனையா, நீ வைத்தவிடம்

யாருக்குத் தெரியும், உனக்கு யார்மீது சந்தேகம்? சீக்கிரம் சொல் என் மனம் துடிக்கின்றது.

மந்திரி.—அரசே நீர் அதைக் கொடுத்ததும் நான் பத்திரமாக எடுத்துக் கொண்டுபோய் இரும்புப் பெட்டியில் வழக்கம் போல் வைக்காமல் அலங்கார மேஜையின் மீது வைத்தேன். அப்போது, நம் சேனைத்தலைவனாகிய மதிசூதனனங்கிருந்தான், வேறு யாருமில்லை. அவன்தான் அபகரித்திருக்க வேண்டும், வேறே யார் மீதும் எனக்குக் கிஞ்சிற்றேனுஞ் சந்தேகங் கிடையாது.

அரசன்.—சரி, விசாரிப்போம், அடா காவலர்களே நீங்கள் உடனே சென்று நமது சேனைத் தலைவனாகிய மதிசூதனனையழைத்து வாருங்கள் என்றதும் காவலர்களில் சிலர் சென்று அரண்மனை யெங்குந் தேடினார்கள். சேனைத்தலைவனைக் காணாமல் பிறகு அவனுடைய வீட்டிற்குப் போய் விசாரித்தார்கள். அப்போது அவனுடைய மனைவியும் மைந்தனு மழுத குரலோடு "ஐயா காவலர்களே சேனாபதியானவர் எங்கள் மீது குடும்ப விஷயமாகக் கோபஞ் செய்துக்கொண்டுபோய் விட்டார், எங்கு சென்றனரோ யாமறியோம். இது சங்கதி அரசனுக்குச் சொல்லுங்கள்" என்றதும் காவலர்களெல்லாம் புறப்பட்டு அரண்மனையை நோக்கிச் சென்றார்கள். அப்போது,

வேலன்.—அடேபாத்தியா இந்த பொம்னாட்டியென்ன பொய் சொல்ரா. அவன் சண்டே போட்டுட்டு போலேடா கிரீடத்தே திருடிக்குனு தாண்டா பூட்டா..............................................

இராமன்.—இருக்கும், இருக்கும், இத்தினி நாள் மாதரம் அவுங்கூட்ளே சண்டே யில்லியா, அப்பயேன் கோச்சிகினு பூட்க்கூடாது.

முருகன்.—சேனுதிபதி தாண்டா கிரீடத்தே திருட்ணவன், நல்லாத் தெரியுது.

எல்லன்.—அதெல்லா நமக்கெண்டா ராஜாவண்டே போயி உள்ள சமாச்சாரத்தே சொல்லூட்டா அதுக்குமேலே அவங்கிஷ்டம், நம்புளுக்கென்ன.

வீரன்.—வாங்கடா சீக்ரம் போலாம் என்று அரசனிடம் வந்து பணிந்துநின்று "மகாராஜாவே, சேனுதிபதி நேற்றைய தினம் வீட்டில் குடும்ப விவகாரத்தைப் பற்றி சண்டையிட்டு எங்கோயோ பேய்விட்டன ரென்று அவர் மனைவியு மைந்தனும் அழுதுக் கொண்டிருக்கின்றூர்கள்."

அரசன்.—அப்படியா சமாச்சாரம், இதற்கு வேறே சாட்சியேயில்லை, உள்ளங்கை நெல்லிக்கனி போல் உண்மை விளங்கிவிட்டது, அவன் தான் கிரீடத்தைத் திருடினவன். ஆகையால் மந்திரி நீ உடனே புறப்பட்டு ஒவ்வொரு தேசங்கட்குஞ் சென்று அவனைத் தேடிப் பிடித்துக் கொண்டுவா. அவனகப்படாத விஷயத்தில் அந்தந்த தேசங்களி லுள்ள பெரியோர்களைக் கொண்டு ஒரு சங்கங் கூட்டி இதைப்பற்றி ஓர் பிரசங்கஞ் செய்துவிட்டு வா. உடனே ஒரு வேகமான குதிரையின் மீதேறிக்கொண்டு கைச்செலவுக்கு வேண்டிய பணத் துடன் புறப்பட்டுப் போ. காவலர்களே! நீங்களும் உங்களாலியன்ற மட்டும் திரிந்துத் தேடிப்பிடித்

துக்கொண்டு வாருங்கள் என்றான். உடனே காவலர்களெல்லோரும் சேனபதியைப் பிடிக்க வாயுவேக மனோ வேகமாகச் சென்றார்கள். மந்திரியாகிய சிவசன்மனும் தனக்கு வேண்டிய பொருள்களை யெடுத்துக்கொண்டு ஒரு வேகமான குதிரைமீதேறிப் புறப்பட்டு ஒவ்வொரு தேசமாக தேடித்தேடித் திரிந்தலைந்து அங்கங்கு கிரீடம் களவுபோனதைப் பற்றி பிரசித்தப் படுத்திவிட்டு அன்று சாயங்காலம் ஐந்துமணிக்கு ஜலந்தபுரியை யடைந்து அருளானந்தர் சன்னியாசி மடத்தண்டை வந்து இறங்கினன். இவனைக் கண்டதும் அங்கிருந்த அடியார்களெல்லாம் வணங்கி உள்ளழைத்துக்கொண்டு போய்ப் பலகாரமுதலியன கொடுத்துப் பின்னர் தங்களுடைய மடாதிபதியின் முன்னர் அழைத்துக்கொண்டுபோய் விட்டனர். இவனைப் பார்த்ததும் நம் சேனைத்தலைவனுகிய கணபதி சாமியார் அடைந்த திகிலுக்கு கணக்கே கிடையாது. கீரியைக் கண்ட பாம்பைப்போல நடுங்கினர். ஆகிலும் மந்திரிக்கு இந்த சன்னியாசி வேடம் பூண்டிருக்கும் கணபதி சாமிதான் சேனதிபதியென்று தெரியவில்லை.

மந்திரி சிவசன்மா வரவைக்கண்ட மடாதிபதி அவரை ஓர் ஆசனத்திலிருத்தி "சுவாமிகளே, நீவிர் யாவர், யாது காரணம்பற்றி அடியேங்களை நாடிவந்தீர சற்றே தெரிவியும்" என்றார்.

மந்திரி.—தீனதயாளுவும் பரமகர்த்தாவுமாகிய எல்லாம் வல்ல பெருமானுடைய பாதாரவிந்தங்களையே! பெரிய துணையென நம்பி இல்லந்துறந்து, அடி

யார் கூட்டத்தையே பந்துக்களின் தொகையென வெண்ணி ஆனந்தத்தையே சுவானுபூதியாகக் கொண்ட மகாபெருமைபொருந்திய மடாதிபதியே யானே மாளவ தேயத்தை யரசுபுரியும் ஏக சக்கிர வர்த்தி யாகிய மிருத்திகமகா ராஜனுடைய தலைமை மந்திரி, என் பெயர் 'சிவசன்மன். நேற்றைய தினம் எம் அரசனதரண்மனையில் ஓர் பெரிய சபை கூடிற்று. அப்போது எம் அரசனுடைய நவரத்னமிழைத்த பரம்பரையாகக் கையாண்டு வந்த கிரீடத்தை யாரோ களவாடிப் போந்தனர். நான் அக்கிரீடத்தையும் அதைத் திருடினவனை யுந் தேடி வந்தேன். அரசசபையிலுள்ளோ ரெல்லாம் எங்கள் தலைமைச் சேனாதிபதியாகிய மதிசூதனன்தான் கிரீடத்தைத் திருடினவனென்று தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். யான் அன்ன வனை யெங்கெங்கு தேடியுங் காணாமையால் நும் போன்ற மூதறிஞோர்களது அக்கிராசன முன் னிலையில் ஓர் சபைகூட்டி இதைப்பற்றிப் பிரசுரஞ் செய்துவிட்டுப் போகலா மென்று வந்தேன்.

மடாதிபதி.—மந்திரீ! நீர் சொன்னவாறே செய்யலாம் என்று விடை பகர்ந்துவிட்டுத் தன் ஆட்களைப் பார்த்து "அடே இவ்வூரிலுள்ளவர்களிட மெல் லாஞ் சென்று இம்மடத்தில் இன்று ஓர் சபை கூடப்போகிற படியால் அதற்காக எல்லோரையு மழைத்துக் கொண்டு வாருங்கள்" என, அவர் களும், அவ்வாறே செய்தனர். சற்றுநேரத்திற் கெல்லாம் மடத்தில் அவ்வூரிலுள்ள ஜனங்களெல் லாரும் வந்து கூடிவிட்டனர். அப்போது அங்கு

வந்துள்ள ஜனங்களைப் பார்த்து மடாதிபதியான வர் "ஜனங்களே, இப்போது என்வலதுகைப் பக்கத்தில் நிற்கிறவர் பாளவதேயத்தரசனும் ஏகசக்கிரவர்த்தியுமாகிய மிருத்திக் மகாராஜனுடைய முதல் மந்திரி. நேற்றையதினம் அரண்மனையில் ஒரு பெரிய சபை கூடியபோது அரசனுடைய நவரத்ன சகிதமான கிரீடத்தை யாரோ களவாடிப் போந்தனராம். அந்த அரசனிடத்தில் தலைமைச் சேனாதிபதியாயிருந்த மதிசூதனன்மீது சந்தேகங் கொண்டு அன்னவனைத் தேடிப்பார்க்கையில் ஆள் அகப்பட வில்லையாம். ஆகையால் ஜனங்களே! உங்களுக்கந்த சேனாதிபதி யகப்பட்டாலும் அவ ரிருப்பிடந் தெரிந்தாலும் கிரீடத்தைப்பற்றி யாது சங்கதி தெரிந்தாலும் உடனே அடியேனுக்குத் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். சேனாதிபதியான மதிசூதனனுடைய அங்கவடையாளங்களெல்லா மடங்கிய நோட்டீஸ் இதோ இருக்கின்றது' என்று சொல்லிக்கொண்டே மந்திரி கையிலிருந்த காகிதக்கட்டை வாங்கி யவிழ்த்து அங்கிருந்தவர்களுக் கெல்லாம் ஒவ்வொன்று கொடுத்து இந்த அடையாளமுடையவனைக் கண்டால் கவனியுங்கள் என்றார். உடனே எல்லாரும் அப்படியே செய்கிறோம் அப்படியே செய்கிறோம் என்று கைகூப்பி ஆரவாரித்தனர். பின்னர் மடாதிபதி தன் மடத்திலுள்ள அடியார்களைப் பார்த்து "நீர் யாராவது இதுவிஷயத்தைப் பற்றி யாதேனும் பேசவிரும்புகிறீர்களா சொல்லுங்கள்" என்றார். அப்போது,

கணபதி சாமியார்.—சுவாமிகளே நான் கொஞ்சம் பேச விரும்புகிறேன் எனக்கு உத்தரவு கொடுக்க வேணும்.

மடா-தி.—அப்படியே செய்யலாம் யாதொரு தடையுமில்லை என்றார். உடனே கணபதிசாமியார் ஜனங்களைப்பார்த்து "ஐயா இன்று மாலை சாதுக்கள் வசிக்கும் மடத்தில் யாது காரியமா நீங்களெல்லோரும் ஒரு கூட்டம் கூடி யிருக்கின்றீரென்பதைப்பற்றி மடாதிபதியானவர் முன்னரே சொல்லிவிட்டாராகையால் யான் அதைப்பற்றி இனிமேல் பேசவேண்டியதில்லை. இப்பவும் மாளவதேயத்தரசனும் ஏகச்சக்கிரவர்த்தியுமாகிய மிருத்திக மகாராஜன், மகாயோக்கியன், சத்தியவான், மனுநீதிதவறாமல் அரசாட்சி செய்பவனென்பதைப்பற்றி நீங்களறிந்திருப்பீர்கள். எண்சாணுடம்புக்குச் சிரசேபிரதானம். சிரசில்லாதவன்முண்டம். அரசர்களுக்கு சிரசிற்கு அணிகலம் கிரீடமே. ஆகையால் அக்கிரீடத்தைத் திருடினவன் எவனாயிருந்தாலும் அதனுடைய பலனை யனுபவித்திருப்பானானால் தவறாமல் ரௌரவாதி நரகிற்கிடந்தலைவானென்பது சத்தியம். அதுவுமன்றி அந்த அரசனிடம் தலைமை சேனாதிபத்யம் பூண்டுவந்த மதிசூதனன் மீது சந்தேகப் பட்டிருக்கின்றார்களாம். ஒருவேளை அவனே அந்தக் கிரீடத்தைத் திருடியிருந்தாலும் அதை விற்று அதனால் ஜீவனஞ்செய்துகொண்டிருப்பானென்று நான் நினைக்கவில்லை. ஏனெனில் அவனோ அரசன் மீது பிரீதியுடையவன். அரசன் மகுடமின்றி யிருக்க மனஞ்

சகிப்பானு. அவனே அம்மகுடத்தைக் களவாடி யிருந்தால் அது மறுபடியும் அரசனிடமே சேர்ந்துவிடுமென்று நான் நினைக்கிறேன். யோசனை யின்றி களவாடியபிறகு, அவன் அதைத் தொலைத் திருந்தால் அவன்தான் என்ன செய்வான் பாவம். ஜனங்களே இப்போது எல்லோரிடமும் அந்த சேனாதிபதியினுடைய அங்க அடையாள மடங்கிய ஒரு விளம்பரம் இருக்கிறது. அதனுகவியா லவனைக் கண்டுபிடிக்க முயலுங்கள். அவனை நீங்கள்முன் பின்பார்த்திராததால் அவன் நேரேயிருந்தாலும் உங்களுக்குக் கண்டுபிடிப்பது கஷ்டமேயாயினும் அதையரியப்படாதீர்கள். கண்டுபிடிக்கக் கூடுமான முயற்சிசெய்யுங்கள்.

* தெய்வத்தாலாகா தெனினுமுயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்.

ஆகையால் இப்போதே தேட வாரம்பியுங்கள். என்று கணபதி சாமியாரும் கொள்ளையடித்தவன் கூவியழுததுபோலத் தானும் கொஞ்சமினிமையான பிரசங்கஞ் செய்து முடித்தார். பின்னர் மடாதிபதியினிட முத்தரவு பெற்றுக்கொண்டு எல்லோரும் தங்கள் தங்களிருப்பிடம் போய்விட்டனர். சபையுங் கலைந்துவிட்டது. மந்திரி மடாதிபதியைப் பார்த்து "சுவாமிகளே, நான் சேனாதிபதியைத் தேடிப்பிடிக்க இன்னும் ஊரெல்லாந் திரியவேண்டி யிருப்பதால் போக விடை கொடும்" என்று சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டு குதிரை மீதேறிப் பிரயாணப் படுஞ் சமயத்தில், கணபதி சாமியார் மந்திரியிடஞ்சென்று

* திருக்குறள்

"ஐயா வேளைக்கன்ன ஆகாரமில்லாமல் இப்படியலைந்து என் வீணாகத் திரிகிறீர். அந்தோ பாவம், நீர் வீட்டை விட்டு எத்தனை நாளாகிறதோ முகமும் வாடியிருக்கிறதே "முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டது போல வீண் பிரயத்தனப் படுகின்றீர்,

"அடுத்து முயன்றாலு மாகுநாளன்றி
யெடுத்த கருமங்களாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா"

நீர் உம் வீட்டிற்குப்போம், வேளைவந்தால் கிரீடம் தானாய் வந்துசேரும் 'மனம்போல மாங்கல்யம் என்றபடி உம்மரசன் நற்குணமுடையவனாகையால் கிரீடம் தீவிரமாகக் கிடைத்துவிடும் இதைப்பற்றி நீரலைந்து திரிந்துழல்வானேன்,

"எண்ணி யொருகருமம் யார்க்குஞ் செய்யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணிலான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்காலமாகு மவற்கு"

ஆகையால் நீர் இன்னும் சிற்சில ஊர்களில் தேடிவிட்டு பின்னர் வீடுபோய்ச் சேரும்" என்றார்.

மந்திரி:—சுவாமிகளே! அடியேன் அப்படியே செய்கின்றேன் நீர் சொல்வதெல்லாம் நியாயமே. எம்மரசன்மீது கிருபைவைத்து கிரீடத்தைப்பற்றியும் சேனாதிபதியைப்பற்றியும் சற்று நீங்களும் கவனித்து பிரயாசைப் படும்படியாக வேண்டிக் கொள்கிறேன்.

கணபதி சாமி:—ஆ, அதற்கென்ன சந்தேகம், அப்படியே திருடனைப்பிடிக்க என்னால் கூடியவரையில்

முயல்கின்றேன், நீர்போய் வீடுசேரும் என்று சொல்லிமந்திரியையனுப்பிவிட்டுகணபதிசாமியார் அடியார் கூட்டத்தில் கலந்துகொண்டார். மந்திரியாகிய சிவசன்மன் இன்னும் அநேக தேசங்களிலெல்லாம் சென்று தேடியும் யாதொரு பயனுமில்லாமையால் விசனப்பட்டு "ஐயோ என்செய்வேன். நானெங்கெங்கு தேடியும் யாதொரு தகவலும் கிடைக்கவில்லையே கணபதி சாமியார் சொன்னது போல் நம்மாலாவ தொன்றுமில்லை, வேளைவந்தால் எல்லாங் கைகூடும் நாம் வீட்டிற்குப் போய்விடுவோம்" என்று தீர்மானித்துக் கொண்டு மிருத்திகாராசனுடைய அரண்மனைக்கு வந்து அரசனைக்கண்டு வணங்கி "அரசே நான் வேளைக் கன்னகாரமில்லாபடிக் கெங்கெங்கு தேடியும் கிரீடத்தைப் பற்றியும் மதிசூதனனைப் பற்றியும் யாதொரு உளவுந் தெரியவில்லை. ஆனால் யான் இதுபற்றி அநேக பெரிய ஊர்களிலெல்லாம் சங்கங்கள் கூட்டி பிரசுரஞ் செய்துவந்திருக்கிறேன். இன்னும் கூடிய சீக்கிரத்தில் கிரீடம் கிடைத்தாலுங் கிடைக்கும்" என்று சொல்லிக் கொண்டே யிருக்கையில் முன் கிரீடத்தைப்பற்றித் தேடிச்சென்ற காவலர்களும் வந்து அரசன் முன் பணிந்து "அரசே எங்கள் பிரயத்தனங்களெல்லாம் ஆற்றிற் கரைத்த புளியாகவும் விழலுக் கிறைத்தநீரைப்போலவும் பாழாய்விட்டன. "என்றார்கள். இதைக்கேட்ட அரசன் மிகத்துக்க சாகரத்தில் முழ்கினவனுப் திடுக்கிட்டு விசனத்தால் தலைகுனிந்து சற்றுநேரம் மௌனமாயிருந்து பின்

னர் " ஆ ஆ எல்லாம் பூர்வவினையின்படியே முடியும்.

ஆவாரையாரே யழிப்ப ரதுவன்றிச்
சாவாரை யாரேதவிப்ப—ரோவாம
லையம் புகுவாரை யாரேவிலக்குவர்
மெய்யம்புவி யதன்மேல்.

என்றபடி எல்லாம் வல்ல பெருமானது திருவுளச் செயலின்படியே நடக்கும். இதுபற்றி விசனிப்பதாலாவதொன்றுமில்லை" என்று சற்று மனந்தேறினவனுப் தன்னறைக்குட்சென்று கட்டிலின்மீது சயனித்துக்கொண்டான்.

இராஜசபையோ இப்போது ஆனந்தமின்றி துக்கம் மூழ்கி பகலிலேற்றிய விளக்கேபோல் ஒளி குறைந்து நின்றது.

இது நிற்க நாம் கணபதிசாமியாரைக் கவனிக்க வேண்டியதவசிய மல்லவா? ஆகையால் சற்று கவனிப்போம். மந்திரி சென்ற பின் அன்று இரவு அடியார்களுடன் கணபதி சாமியார் போசன முடித்துப்பின் சயனித்துக் கொள்ளுஞ் சமயத்தில் தன் மனைவி மைந்தனைப் பற்றி நினைத்துக் கொண்டார். உடனே அவர் தன்ஜோப்பியிலிருந்து ஒரு காகிதமும் பென்சலுமெடுத்துத் தன் பிள்ளையாகிய மீனவனுக்கடியில் வருமாறொரு கடிதமெழுதலானர்.

அருளுனந்தர்படம்
ஜலந்தபுரி

சிரஞ்சீவி மீனவனுக்கு எல்லாம் வல்ல பெருமானுகிய சிவ சுப்பிரமணியர் கிருபையால் அட்ட அயிஸ்வரியங்களும் மற்றுமுள்ள எல்லா போக பாக்கியங்களும்

மேன்மேலும் பெருகுகவும். இப்பவும் யான் இவ்விடத்தில் அருளானந்தர் மடத்தில், ஜீவகாருண்யத்தை முன்னிட்டு சன்னியாசி வேடம் பூண்டு எம்பெருமானைக் காணமுயலும் மெய்யடியானைப்போலப்பாவிக்கப்பட்டு சன்னியாசி கோலத்துடன் சுகமாகவேயிருக்கின்றேன். அவ்விடம் நீ உன் தாயாரைப் பத்திரமாப்பாது காக்கவும், 'அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்' என்ற அமுத வாக்கினைப்பழித்து உன்தாய் சொல்லை மீறி நடந்து கொள்ளாதே.

" மகன்றந்தைக் காற்று முதவியிவன்றந்தை
என்னோற்றான் சொலெனுஞ்சொல் " (திருக்குறள்)

என்றபடி நீ சற்சாவகாசம் செய்து நல்லவனெனப் பெபரெடு.

இது நிற்க நேற்றையதினம் இம்மடத்திற்கு மந்திரி சிவசன்மா வந்திருந்து ஒரு பெரிய சபைகூட்டி கிரீடத்தைப் பற்றியும் சேனாதிபதியைப் பற்றியும் யாருக்காவது ஏதாவது சங்கதி தெரிந்தால் மாளவதேயத்தரசனிடம் தெரிவிக்கும்படி இதனுள்ளடக்கஞ் செய்திருக்கும் என்னடையாளத்தை யச்சிட்ட காயிதத்தையும் கொடுத்து பிரசுரஞ் செய்து போய்விட்டார். என்னை இன்னானென அறியாமலேயே உறவாடினார். யானும் தைரியமாகவே பேசினேன். இது சங்கதி உன் தாயாருக்குச் சொல்லி அரண்மனையில் நடக்குங் காரியத்தை யெல்லாம் விபரமாக உடனே பதில் எழுது. உன் கையெழுத்து மாத்திரம் எனக்கு எழுதும் கடிதத்திற்குப் போடவேண்டாம். உன் கடி

த்தை யெதிர் பார்த்தபடியே யிந்த மடத்தில் யானிருப்பேனுகையால் உடனேபதில்போடவும்

இப்படிக்கு உன் அன்புள்ள தந்தை
காரியவாதி கணபதி சாமியார்.

இக்கடிதம் எழுதி முடிந்ததும் ஒருதரம் வாசித்துப் பார்த்து உடனே ஜேபியில் போட்டுக்கொண்டு நித்திரைசெய்து மறுநாட் காலை யெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பலகார முதலியன உண்டபின்தபாலாபீசுக்குச் சென்று அக்கடிதத்தைப் போட்டுவிட்டான்.

## மூன்றும் அத்தியாயம்.

### கடிதம் பதில் வந்தது, திருடன் இன்னனென வெளியாயிற்று திருடன் துலுக்கனுய்விட்டான்.

இப்போது காலை 8-மணி யிருக்கலாம். மாளவ தேசத்தில் சேனுதிபதியின் குமாரனுகிய மீனவனென்பவன் வீட்டில் தெருத்திண்ணையி லுட்கார்ந்துகொண்டு தனது தகப்பனுர் எப்படி யிருக்கின்ருரோ, எங்கிருக்கின்ருரோ வென்று பரிதபிக்கின்ருன். அப்போது தபாற்காரன் மீனவனுக் கோர் கடிதத்தைக் கொடுத்தான். அதை அவனதிக ஆவலுடன் வாங்கி வாசித்துப் பார்த்துத்தன் தாயிடஞ்சென்று அம்மையே! என்தகப்பனுரிடமிருந்து இன்று ஒரு கடிதம் வந்தது. இதோ வாசிக்கிறேன் என்று தன்தாயாருக்கு வாசித்துக்காண்

பித்துவிட்டு, தாயே தகப்பனாரைக் கண்டுபிடிக்கும்பொருட்டாக நம்மரசன்பிரசுரஞ்செய்த அடையாள நோட்டீஸ் இதுதான் என்றான். உடனே தாயானவள் அதைப் பார்த்து துக்க சாகரத்தில் அழ்ந்தனள். மீனவன் தாயைப் பலவிதத்திலுந் தேற்றிவிட்டு அங்கிருந்த ஓர் மேசையினருகி லிட்கார்ந்து தன் தந்தைக்கு அடியில் வருமாறு பதிலெழுதலானான்.

மாளவதேசம்.

எனதன்பும் பிரியமுள்ள தந்தையே,

நீவிர் அடியேன்மீது மென்தாய்மீதுங் கிருபைகூர்ந் தெழுதிய லிகித மின்றையதினங் கிடைத்து என் தாயாருக்கு வாசித்துக்காண்பித்து இருவரும் சற்று துயர் நீங்கினவர்களானோம். இவ்விடம் அரண்மனையிலுள்ளோரெல்லாம் துக்கசாகரத்திலாழ்ந்து சந்திரனைக் காணாத குமுதம் போலவும், சூரியனைக்காணாத தாமரை போலவும், தாயைக்காணாத சேயைப்போலவும் அவதிப்படுகின்றனர். நீரும்மா லியன்றவரையில் அகப்பட்டுக்கொள்ளாம லிருக்கப் பிரயத்தனப்படுவீரென நம்புகிறேன். நீர் கடிதத்திலெழுதியுள்ள கட்டளையைச் சிரமேற்கொண்டு என் தாயாருக்கெல்லா விதத்திலுங் கீழ்ப்படிந்தே நடந்துவருகிறேன். இது கடிதங்கண்டதும் உடனே பதில்போடவும்.

இப்படிக்கு,

---

மேற்சொல்லிய கடிதம் அருளானந்தர் சுவாமி மடத்திலுள்ள கணபதிசாமியாருக்கு மறுநாட்காலை கிடைத்தது. அதை அவர் வாசித்துப்பார்த்து ஒருவருக்குங் காட்டாமல் ஜேப்பியில் போட்டுக்கொண்டார். அப்

போது அம்மிடத்திலுள்ள அடியார்களெல்லா மொன்று கூடி "ஐபா பால் சுவாமிகளே! இம்படத்தில் வந்துள்ள கணபதி சுவாமிகட்கு இன்றையதின மொரு கடிதம் வந்தது. அதையவர் வாசித்துக்கொண்டேயிருக்கையில் யானவரிடம் போனேன். உடனே அவரதை மடித்து ஜேபியில் போட்டுக்கொண்டார். அதில் என்ன இரகசிய மெழுதியிருக்கிறதோ தெரியவில்லை. ஆதலால் அதை யெப்படியாவது வாசிக்கவேண்டுமென்கிற அவா எனக்கிருக்கிறது.

ஜெயசாமி:—அப்படியா சரி! அதற்கென்ன இரவு கணபதி நித்திரை செய்யும்போது ஜேப்பியில் கையைப் போட்டுத் தெரியாமல் அக்கடிதத்தை யெடுத்துக்கொள்ளலாம் என்று பேசிவிட்டு அன்றிரவு எல்லோரும் நித்திரை போய்விட்டார்கள். அப்பால் இராத்திரி சுமார் ஒருமணிக்கு பால் சாமியாரெழுந்து கணபதிசாமி ஜேப்பியில் சந்தடிசெய்யாமல் கைபைப்போட் டதனுள்ளிருந்த கடிதத்தையெடுத்துத் தன் மடியில் வைத்துக்கொண்டு நித்திரை போய்விட்டார். பால் சாமியார் காயிதத்தை யெடுக்கும்போது கணபதி சாமியார் நித்திரை செய்துக்கொண் டிருக்கவில்லை. ஆனால் நித்திரை செய்பவரைப்போலக் கண்மூடிக்கொண்டே சும்மாவிருந்தார். ஏனெனில் அவர் அந்த இராத்திரியில் சந்தடிசெய்தால் அம்மடத்திலுள்ள எல்லோரு மொன்றுகூடி இவருடைய ஜேப்பியில் கிடைத்த காபிதத்தை வாசித்துப் பார்த்துவிட்டால் விபரீதமாக முடிவதுமன்றி தப்பித்துக் கொண்டோடிப்போய் விடுவதற்குங் கஷ்டமாய்

விடு மென்றெண்ணி நித்திரை செய்வதுபோல் சும்மாயிருந்தார். அப்பால் சுமார் அதிகாலை மூன்றரைமணி யிருக்கும். கணபதிசாமியார் தனக்குள்ளே அடியில்வருமாறு யோசிக்கலானர் "நம் ஜேப்பியிலிருந்த கடிதம் வெளியாய் விட்டது. பொழுது விடிந்ததும் நாம்தான் கிரீடத்தைத்திருடினவனெனத் தீர்மானித்து விடுவார்களாகையா லிப்போதே தப்பித்துக்கொண் டோடிப்போய் விடுவதுதா னுத்தமம்" என்று தீர்மானித்துக் கொண்டு ஒருவரிடமும் சொல்லாமல் அப்போதே பிரயாணப்பட்டு காலை 6 மணி சுமாருக்கு ஒரு நெருங்கிய காட்டைச்சேர்ந்து அங்குள்ள தடாகத்தில் தந்தசுத்தி செய்துக்கொண்டு ஒரு அடர்ந்த குளிர்ச்சியுள்ள மரத்தின் நிழலில் படுத்துறங்க வாரம்பித்தார். ஆனல் தூக்கமும் வரவில்லை. வீணாய்ப் புரண்டுக்கொண்டே யிருந்தார். அப்போது அதிக குளிர்ச்சியான மந்தமாருதம் வீசிற்று, பட்சிகளினிமையான கீதங்கள் பாடின. இவைகளைக் கண்டதும் சேனாதிபதி துக்கமெல்லா மறந்து, "ஏ ஜெகதீசா! நின்பெருமையை யென்ன வென்று சொல்லுவேன்! எத்தனை கோடிரூபாய் கொடுத்தாலும் இப்போது வீசின மந்தமாருதங் கொடுத்த ஆனந்தத்தை யெனக்கு யார் கொடுத்து என் மனோதுக்கத்தை யாற்றுவார்கள். இந்தக் காட்டிலுள்ள மரங்களையுஞ் செடிகளையும் யாராவது பயிரிட்டார்களா, இவைகளில் இந்தப் பட்சிகளை யாராவது குடியிருத்தினர்களா, என் னுயகனே! இவையெல்லா முன் திருவுளச் செயலா

லல்லவா? எப்படிப்பட்ட பாவியாயிருந்தாலும் இந்தக் கானில் சற்றுதங்கி இளைப்பாறினல் அவனுக்கு ஆனந்தமேதான் கிடைக்குமென்பது என்னளவில் சத்தியம்" என்று இவ்வாறு தனக்குத்தானே பேசிக்கொண் டிருக்கையில், பக்கத்திலுள்ள புதரில் சளசளவென்ற சப்தங்கேட்டது. அப்போது கணபதிசாமியார் ஆ! ஆ!! என்னமோ சப்தம் கேட்கின்றதே, துஷ்ட மிருகங்கள் வந்தனவோ, அல்லது பாம்புகளின் சப்தமோ தெரியவில்லையே யென்று பயந்து படுக்கையைவிட் டெழுந் துட்கார்ந்தபடியே அங்கிருந்து சப்தம் உண்டான விடத்தை நோக்கிப் பார்க்கையில் ஒரு வாலிபன் அப்புதாண்டையில் நின்று கொண் டிருந்தான். அவனுக்குச் சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவன் கையி லொருபெட்டி யிருந்தது. அதைத் தன் வஸ்திரத்தினல் மூடி வைத்திருந்தான்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்"

என்பதுபோல் அவன் அதிக வருத்தப்பட்டு காட்டிற்குள் வந்தவனக அவன் முகம் விளக்கியது. சற்றுநேரத்திற்கெல்லா மச்சிறுவன் கண்ணீர்விட் டழுதபடியே அப்பெட்டியைத் தன் கையிலெடுத்துக்கொண்டு "பரமதயாநிதியே, ஜீவகசிந்தாமணியே, ஆபத்பாந்தவனே, அனதை ரட்சகனே, நீயும் என்னைக் கைவிட்டு விட்டனேயோ 'யாருமிலார்க்கு தெய்வந்துணை' என்ற வாக்கியமும் என்னளவில் பொய்யாய்விட்டதே. யான் பிறந்து என் தாயா ரிறந்தது முதல் என்னுடைய மாற்றுந்

தாயாலு மென்தந்தையாலும் அனுபவிக்கொணாத துயரங்களை யெல்லா மனுபவித்தேனே. அவற்றை யெல்லாம் நீக்கி இனி எங்கேயாவது தனியேபோய் உயிர் பிழைக்கலா மென்றெண்ணி வீட்டைவிட்டு வெளிப்போந்து காட்டி லலைந்துதிரிந்து கனிவர்க்கங்களைத்தின்று கானகவாசியே போல் ஆனந்தமாகக் காலங்கழித்து வருகையில் என் தலைவிதியோ! அந்தோ! நானென் சொல்வேன். மாளவதேசத்தை யடுத்த காட்டின் வழியாக வந்தபோது வெய்யலுக்குப் பயந்து சற்று படுத்திருந்து இளைப்பாறிப் போகலாமென்று அங்குஅடர்ந்த ஓர் பெரிய ஆலவிருட்சத்தின் கீழ்ப் படுத்துக்கொண்டே பார்க்கையில், ஒரு பொந்தில் இந்தப்பெட்டி யெனக்குப் புலப்பட, இதில் ஏதோ பணமிருக்கும், நம்முடைய கஷ்டங்களை யெல்லாம் தொலைத்து நம்மை ரட்சிக்க பகவான் கொடுத்தாற்போலும், இனி நமக்கு யாதொரு குறைவுமில்லை என்று ஆனந்தத்துடனே யெழுந்து இந்தப் பெட்டியை யெடுத்துப் பார்க்கையில் அதிலிருக்கும் வஸ்துவை யானென்னென்று சொல்வேன்! தேகம் நடுக்குகிறதே, சொல்ல நாவெழவில்லையே, இந்தப் பெட்டியை யங்கேயே வைத்துவிடாமற் போய்விட்டேனே, இதை இப்போது எந்தக் குளங்குட்டையிலாவது அடர்ந்த மரப்பொந்திலாவது போட்டுவிடலா மென்றாலும் மனம் வரவில்லையே. 'மடியில் கனமிருந்தால் வழியில் பயம்' என்பதுபோல இந்தப் பெட்டியைக் கையி லெடுத்துக்கொண்டு வீடுகள் தோறுஞ் சென்று பிச்சையெடுத்து வயிறு வளர்க்கவும் பயமாயிருக்கிறதே. இந்தப் பெட்டியிலுள்ள வஸ்து ஒரு பெரிய இராஜாவினுடையதாக விருக்கலாம். இது நம்

கையிலிருப்பதை யாராவது கண்டுபிடித்து விடுவார்களானல் என் உயிருக்கே ஆபத்தான இராஜதண்டனை நேரிடும். இந்த உயிர்க்கொல்லி எனக்கேன்? ஆகையால் நானென்ன செய்வேன்! இதை எங்கே ஒளித்து வைப்பேன்" என்று துக்கப்பட்டான். இவற்றையெல்லா மொன்றேனும் விடாமல் மறைவாகக் கேட்டுக்கொண்டிருந்த கணபதி சாமியார் உடனே எழுந்து திடீரென ஓடிவந்து அந்தச் சிறுவனெதிரில் நின்ருர். அப்போது அச்சிறுவனடைந்த பயத்தையும் நடுக்கத்தையும் என்னல் சொல்லத்தரமோ. ஆனலும் சிறுவன் ஒருவாறு தேறி கைகூப்பி அவரை வணங்கி யொதுங்கி யொருபுறம் நின்ருன். உடனே அச்சிறுவனைப்பார்த்து,

கண-சாமி.—அப்பா அந்தப் பெட்டியிலென்ன விருக்கிறது திறந்துகாண்பி பார்ப்போம். பயப்படாதே. நான் உன்னை ஒன்றும் செய்யேனென்ருர். அப்போது சிறுவன் கைகால் நடுங்கி பின் சென்ருன்.

கண-சாமி.—அப்பா நானோர் சன்னியாசி, உன்னைக் காப்பாற்றுவேனே யொழிய உன்னைக் கைவிடமாட்டேன். சீக்கிரம்பெட்டியைத் திறந்துகாண்பி பார்ப்போம் என்ருர். உடனே அச்சிறுவன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த நவரத்ன சகிதமான ஓர் கிரீடத்தை அதன் மீதில் சுற்றப்பட்டிருந்த பட்டுத்துணியை நீக்கிக் காண்பித்தான். அதைப்பார்த்த உடனே கணபதி சாமியார் "ஆ ஆ! நான் முன்பு ஆலமரப்பொந்திலொளித்து வைத்த கிரீடமிதுதான். இதைத் தெரியாமலிச் சிறுவன் கொண்டு வந்துவிட்டான் போலும். இப்போது மிகவும் பயப்படுகிருன் என்று தனக்

குள்ளே நினைத்து அச்சிறுவனைப்பார்த்து "அப்பா நீ பயப்படாதே, இதைமுன்போலவேபட்டுத்துணியில்மடித்துப் பெட்டியில் வைத்துவிடு இது என்ன தெரியுமா? இதுதான் ஏகச் சக்கரவர்த்தியான மாளவதேயத் தாசனுடைய கிரீடம். இதையாரோ களவாடிப் போந்தனரென்றும் அவர்களகப்பட்டால் அவர்களுக்குச் சிரச்சேதம் நேரிடுமென்றும் நேற்றையதினம் அருளானந்தர் மடத்தில் ஒரு பெரிய சபைகூடிப் பேசினார்கள். ஆகையால் இதைப்பற்றி இனிமேல் நீ கனவிலும் நினையாதே. இதை யிங்கேயே போட்டுவிட்டு நீ முன்போல் ஊர்களுக்குட்சென்று ஜீவனம்செய். ஆனால்,

"பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரன் முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லிநாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலா மகலவோட்டி மானமென் பதனைவீட்டி
யில்லெலா மிரத்தலந்தோ இழிவிழி வெந்தனுான்றும்"

எனக்கூறியிருத்தலால் நீ இந்த பிராயத்திலேயேபிச்சையேற்கும் தொழிவிற் பழகுதல் நீதியல்ல. ஏற்பதிகழ்ச்சியென்றதைக் கவனித்து இனிமேல் பிச்சையெடுத்துச் சீவனம்செய்யாதே. இதோ இதை வாங்கிக்கொள். என்று நூறு ரூபாயை அவன் கையில்கொடுத்து அப்பா நீ யிந்தப்பணத்தை முதலாக வைத்துக்கொண்டு ஏதோ சிறிய வியாபாரஞ் செய்து ஜீவனம் செய்துக்கொள் இனிமேல் பிச்சையெடுக்காதே. இவ்விடமிருந்தாலுனக்கினி யாபத்துவரும், இக்கானகத்தைவிட்டுச் சீக்கிரம் வெளிப்போந்து ஊரைநாடிப் பிழைக்கும் வழியைத் தேடு என்றார். சிறுவனும் நம்மைப் பிடித்தசனி தொலைந்தது இன்றோடு என்று நினைத்து, சந்தோஷத்துடன்

ரூபாயை யெடுத்துக்கொண்டு போய்விட்டான். அவன் போன சற்றுநேரம் பொறுத்து கணபதிசாமியார் அந்த புதருக்குள்ளொரு பெரிய பள்ளந்தோண்டி அதனுள் ளந்தப்பெட்டியைப்படக்கஞ் செய்துவிட்டு அதன்பேரில் சில அடையாளம் வைத்து, இனி நமக்குப் பயமில்லை கைவிட்டுப் போனபொருள் வந்துசேர்ந்தது என்று சந்தோஷித்து சற்று நித்திரைசெய்தார்.

அப்பால் நித்திரை தெளிந்தபின்னெழுந்து "அருளானந்தர் "மடத்திலிதுவரையி லென்ன நடந்ததோ என் ஜெப்பியிலிருந் தெடுத்த கடிதத்தை வாசித்துப் பார்த்தால் நான்தான் கிரீடத்தைத் திருடினவனென்று நன்கு விளங்கியிருக்கும். ஆகையாலென்னைக் கண்டு பிடிக்க இனிமேல் எல்லோரும் புறப்பட்டிருப்பார்கள். இனி நான் மாறுவேடந்தரிக்க வேண்டியது அத்தியா வசியம்" என்று உடனே யெழுந்து ஊரைநாடிச்சென்று அங்கு ஓர் அம்பட்டனிடம் தாடி மீசை, நீங்கலாக நன் ருய் மொட்டையடித்துக்கொண்டு கடைத்தெருவிற்குப் போய் மகம்மதிய உடைகளை வாங்கித் தரித்துக் கொண்டு மகம்மதியனைப்போலவெளிப்பட்டார். இப்போ தவருடைய திருநாமம் நஜீப் உசேன்சாயப் யெனக் கொள்வோம்.

இது நிற்க, அருளானந்தர் மடத்தில், பொழுது விடிந்ததும்பால்சாமியார் தானெடுத்த கடிதத்தை வாசி த்துப்பார்த்து, மற்ற அடியார்களுக்குக் காட்டி 'அடே இவன்தான் கிரீடத்தைக் களவாடிய கள்ளப்பயல், சரி சரி, இது சங்கதி நம்மடாதிபதிக்கு உடனே தெரிவிப் போம்" என்று சென்று மடாதிபதியை வணங்கி இந் தக்கடிதத்தைக் காண்பித்தனர். அவர் அதை வாசித்

துப்பார்த்து அந்தக்கணபதிசாமி யெங்கே கூப்பிடு சீக்கிரம்.

பால்சாமி:—அவர் கைகால் சுத்திசெய்துகொண்டு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வருவார்.

மடாதிபதி:—சரி; இதுசங்கதி மாளவதேசத் தாசனுக்குத் தெரிவிக்க வேண்டியதாகையால் உடனே அரசனுக்கு ஒரு கடிதம் எழுதுங்கள் என்றதும் பால்சாமியார் அடியிற்கண்ட கடிதத்தை யெழுதலானார்.

ஜலந்தபுரி,

அருளானந்தர் மடம்.

இராஜாதி ராஜனாகியும் ஏகச்சக்கரவர்த்தியாயும் மனுநீதிதவறாமல் செங்கோல் செலுத்தி இந்நாட்டிற்கு நடுநாயக மணியேபோல் பெருமையும் புகழும் உலகெங்கும் பிரகாசியா நின்ற மாளவமன்னாவர்கட்கு மடாதிபதியாகிய அருளானந்த சுவாமியார் மிகவும் பக்திவினயத்துடன் தெரிவிப்பது யாதெனில்:— இரண்டு மூன்று நாட்களுக்கு முன் தங்கள் முதல் மந்திரியாகிய சிவசன்மர் இவ்விடம் வந்திருந்து தங்கள் கிரீடம் களவு போனதைப் பற்றிப் பிரசுரஞ்செய்து இந்தக் கிரீடத்தைப் பற்றிய விஷயமெங்களுக்கு இனிமேலேதாவது தெரியவருமானால் உடனே தெரிவிக்கும்படிச் சொல்லிவிட்டுப் போனார். இப்போது எம்மடத்தி லொருவர் மீது சந்தேகப்பட்டிருக்கிறோம். அதற்குத் தகுந்த சாட்சியுமிருக்கின்ற தாகையாலிந்தக் கடிதங்கண்டதும்

தங்கள் மந்திரியை யனுப்பும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

அருளானந்தசுவாமி.

இந்தக் கடிதத்தை பால்சாமியா ரெழுதிய பின் மடாதிபதிக் கொருதரம் வாசித்துக் காண்பித்துவிட்டுத் தபாலில் போட்டுவிட்டார். அப்பால் அநேக நேரம் வரையில் பார்த்தும் கணபதி சாமியார் மடத்திற்குக் காலை போஜனத்திற்கு வாராமையால் "அவனெங்கேயோ ஓடிப் போய்விட்டான் திருட்டுப் பயல், பலநாள் திருட னொருநாளி லகப்பட்டுக் கொள்வான்" என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

## நான்காம் அத்தியாயம்.

### செத்தவன் திருடனைது அதற்குத் திருடனே சாட்சி சொல்கிறன் எல்லோரும் நம்பிவிட்டார்கள்.

மாளவதேயத்தில் மறுநாட் காலை அரசசபை கூடியபோது மடாதிபதி யெழுதிய கடிதத்தை யோர் சேவகன் கொண்டுவந்து மந்திரிவசம் கொடுத்தான். அதை மந்திரி வாசித்துப் பார்த்துவிட்டு அரசனுக்குச் சொன்னன். அது கேட்டது மரசன் ஆனந்த மேற்கொண்டு தாயைக்கண்ட சேயைப் போலவும், அருந்துணைவிழந்தோன் அமிர்த மெதிர்கண்டாற் போலும் நெடுநாள் தரித்திரத்தினல் தீராத்துன்பத்தை யடைந்து

வந்தவன் பணப்புதையலைக் கண்டதுபோலவும் மெய்ம் மறந்து முகத்தில் மிகுந்த வஜீகரம் தோன்ற ஆனந்த மாக மந்திரியைப் பார்த்து "நீ உடனே அதிக வேக மான புரவியின் மீதேறிப் புறப்பட்டுச்சென்று மடாதி பதியைக் கண்டு அவர் காண்பிக்கும் திருடனைப் பிடித் துக்கொண்டு சீக்கிரம் வா, அவன் எவ்வளவு சாமர்த் தியமுள்ளவனோ அவனைப் பார்ப்போம், நீ காலதாமதஞ் செய்யாமலுடனே புறப்படு" என்ற உடனே மந்திரி தனக்கு வேண்டிய சாமான்களை யெல்லா மெடுத்துக் கொண்டு ஓரழகிய குதிரையின் மீதேறி நேராக ஜலந்த புரிக்குச் சென்று அருளானந்தர் மடத்தை யடைந்து குதிரையை விட்டிறங்கி மடாதிபதியிருப்பிடஞ்சென்று அவரை வணங்கி ஐயா சுவாமிகளே நீங்களெழுதிய கடி தங்கிடைத்து அரசனேவற்படியே யானிங்கு வந்தேன். கிரீடமெங்கிருக்கிறது அதைத் திருடிய தீரன் யார் உடனே காண்பியுங்கள் என்றான். அப்போது,

மடாதிபதி.—ஆ மந்திரி உம்மரசனுடைய கிரீடத்தைக் களவாடினவன் அன்று உம்முடன் உறவாடினது மன்றி சபையோர்களுக் கெல்லாம் பிரசங்கம் செய்த கணபதி சுவாமிதான். அவன் மீது எங்க ளுக்குச் சந்தேகம் தோன்றவே அது சங்கதி யறிந்து எங்கேயோ போய்விட்டான். நீர் உட னே சென்று அவனை யெங்கேயாவது கண்டு பிடித்து அரசனிடம் கொண்டுபோய் விடும்.

மந்திரி.—சுவாமிகளே! பழிவோரிடமிருக்கப் பாவமோ ரிடம் தோன்றினதுபோல யாரோ வொரு சன்னி யாசி எங்களுடைய அரசனது கிரீடத்தைக் கள வாடிப் போயிருக்க, எங்களரசனிட மனேக கால

மாய் தலைமை சேனாதிபத்யம் பூண்டு வந்த மதி சூதனர் யாதோ குடும்ப விஷயமாக மனவருத்தப் பட்டு வீட்டைவிட்டு யெங்கேயோ போய்விட் டால் அவர் தான் கிரீடத்தைத் திருடினவரென் றுலகமெலாம் வழங்கி வருகின்றதே. ஆ, இதென்ன மகாபாவம் யாதொன்றையும் இரு கண்களாலும் பார்த்து தீர விசாரித்து வெளி யில் சொல்லவேண்டும். மடாதிபதிகளே சன்னி யாசியாக வேடம்பூண்டு மண்ணாசை, பெண் ணாசை, பொன்னாசை யென்கிற மூவாசை களையும் வெறுத்தவன் போல வெளிக்குப் பாசாங்கு செய்து கொண்டு இப்படிப்பட்ட கேவலமான திருட்டுத்தொழிலைச் செய்துவருகி றீர்களே, இது என்னகன்மம்? ஒரு சன்னியாசி யிம்மாதிரி செய்துவிடுவதால் உலகத்தார், எல்லா சன்னியாசிகளையும் நம்ப விடமில்லாமற் போய் விடுகின்றதல்லவா? இதனால் உண்மையாக ஞான மார்க்கத்தை முன்னிட்டு துறவறம் பூண்டுள்ள சன்னியாசிகட்கும் மரியாதை யில்லாமற் போய் விடுகிறதே, ஈதென்ன வநியாயம்!

மடாதிபதி:—ஆம், ஆம், அதற்கென்ன செய்யலாம். அவனவன் பூர்வகன்மத்துக்கேற்றபடி அவனவன் நடக்கிறான். அதைத்தடுக்க யாரால்முடியும். அவன் திருடனென்றெனக்கு முன்னமேதெரிந்திருந்தால் இவ்விடம் சேர்த்திருக்கமாட்டேன். இப்போது நெடுநேரமாகிறது. வீண் வார்த்தையாடுவதிற் பய னில்லை. நீர் சென்று அந்த சன்னியாசியைப்பிடிக்க வேண்டியதா யிருக்கிறபடியால் உடனேபோங்கள்

என்றார். அப்பால் மந்திரி சிவசன்பன் படாதிபதியிடம் பிரியா விடைபெற்றுக்கொண்டு சன்னியாசியைத் தேடப்புறப்பட்டார்.

நண்பர்களே! கணபதி சுவாமியாரைப்பற்றி சற்று கவனிப்போம், அவன் மகம்மதியரைப்போல் வேடந்தரித்துத் தன் திருநாமத்தை மாற்றிக்கொண்டு நெடுந்தூரம் நடந்துசென்று ரோமி நாட்டையடைந்ததும் பசியதிகரித்தபடியால் அங்குள்ள ஓர் மஹம்மதிய ஓட்டலில் போஜன முடித்துவிட்டு சற்றுநேரமிளைப்பாறி நித்திரைசெய்து மாலை சுமார் நாலுமணிக்கு ஓட்டலைவிட்டுப் புறப்பட்டு அந்த ஊரைச் சுற்றிப்பார்த்துக் கொண்டே சமுத்திரக்கரைக்கு வந்துசேர்ந்தான். அங்கு வடக்குமூலையில் வெளியூர்களிலிருந்து கப்பல்களெல்லாம் வந்து தங்கியிருந்தன. அவற்றிலிருந்து சாமான்களெல்லாம கிரேன் (Crane) என்னும் ஓர் இயந்திரத்தின் மூலமாக இறக்கப்பட்டு வண்டிகளிலேற்றி மாடுகளாலும் வலிவுள்ள மனிதர்களாலும் இழுத்துக்கொண்டு போகப்படுகின்றன. இங்குசற்று நஜீப் உசேன் கவனித்துவிட்டுப் பின் கடற்கரை ஓரமாக நடந்து மேற்குப் பக்கமாக வந்தார். அப்போது சில வாலிபர்கள் மல்யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். சிலர் ப்லிங்குடுகுடு வென்று ஆடிக் கொண்டிருந்தனர். சிலர் ஆட்டீன்ஜெக், டைமட் மணீலா, ஸ்பேட், துருப்பு, என்று சொல்லிக் காயிதமாடிக் கொண்டிருந்தனர். சிலர் கும்பலாக உட்கார்ந்து கொண்டு ஆனந்தடயிரவி முதலிய ராகங்களுடன் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தனர். அவர்களில் அநேகர் தாளம் போட்டுக்கொண்டும் தலையை யசைத்துக் கொண்டும் வேடிக்கை பார்த்தும்

நின்றூர்கள். சிலஸ்திரீகளும் புருடர்களும் கைகோர்த்துலாவிக் கொண்டிருந்தார்கள். இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டே போகையில் சமுத்திரக்கரையின் ஓர் பக்கத்தில் திரளான ஜனங்கள் கூடிப்பெருத்த சத்தமிட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். நஜீப் உசேன் சாயபு அவ்விடம் சென்று பார்க்கையில் அங்கே சிலர் பெரிய பெரிய கூடைகளை வைத்துக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் மீன் பிடிக்கப் படகோட்டி கொண்டு போயிருந்த செம்படவர்கள் கரைக்குவந்து அவர்கள் பிடித்துவந்த மீன்களை அங்கு காத்துக்கொண்டிருந்த ஸ்திரீகளிடம் கொடுக்க அதை அவர்கள் பெரிய கூடைகளி லெடுத்துக்கொண்டு விற்பனை செய்யும்பொருட்டுப் போய்விட்டார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நஜீப் உசேன் ஓரிடத்தில் சற்று உட்கார்ந்து இளைப்பாறி பொழுது தாழ்ந்ததும் அங்கிருந்த ஜனங்களெல்லாம் தங்கள் தங்கள் வீட்டிற்குப்போகப் புறப்பட்டபடியால் நஜீப் உசேனும் போகப்புறப்பட்டார். இப்படி இவர்கள் வீட்டை நோக்கிப் போய்க்கொண் டிருக்கையில் குறுக்கே ஒரு இருப்புப்பாதையை (Railway line) தாண்ட நேரிட்டது. அந்த சமயத்திலொரு கூட்ஸ் வண்டி (Goods train) வந்துகொண்டிருடிருந்தது. அது வருவதற்குள் அநேகர் இருப்புப்பாதையைத் தாண்டி விட்டனர். அந்தோ! விதிவசத்தாலொருவர் மாத்திரம் தாண்டிப்போக எத்தனிக்குந் தறுவாயில் காலிடறிக் குறுக்கே விழுந்துவிட்டார். மறுபடியு மெழுந்துக் கொள்வதற்குள் வண்டியவர்மீதேறி இடுப்பிலுங்காலிலு மதிகக் காயம்பட்டது. தலை உருவில்லாமல் மாவைப்

போலக் குழம்பிப் பொடிப்பொடியாய் விடவே அவர் உயிர் நீத்து நமனுல கடைந்தார். இதைப் பார்த்ததும் அங்கிருந்த எல்லோரும் பயந்து ஓடவாரம்பித்து விட்டார்கள். அப்போது இரவு 8-மணியிருக்கலாம். கொஞ்சம் நிலவு மிருந்தது. இப்படி அனியாயமாக உயிர் துறந்தவனைக் கண்டு எல்லோரும் பயந்தோடிப்போய் விட்டதும் நம் கதாகாயகனாகிய நஜீப் உசேன் தான்கக்கத்தில் மறைத்து வைத்திருந்த சன்னியாசி உடையை அந்த சவத்திற்குச் சாத்திவிட்டு தன் ஜேபிபிலிருந்த காகிதம் பென்சலை யெடுத்தொரு கடிதமெழுதி, அத்துடன் பத்து ரூபாயையும் அந்தப் பிணத்தின் ஜேபியில் போட்டுவிட்டுப் போய்விட்டார்.

மறு நாட்காலை சுமார் 6-மணியிருக்கும். இருப்புப் பாதையி லகப்பட்டு யாரோ பிறந்து விட்டானென்ற சங்கதி ஊர் முழுவதும் பரவிவிட்டது. உடனே போலீஸ் உத்தியோகஸ்தர்களெல்லாம் அவ்விடத்திற்குச்சென்று பார்க்கையில் யாரோ ஒரு பனிதன் சன்னியாசிக்கோலத்துடனிறந்து கிடந்தான். அவன் தலை பொடிப்பொடியாய் விட்டதால் இன்னானெனக் கண்டு பிடிக்க முடியவில்லை. உடனே போலீஸ் உத்தியோகஸ்தர்கள் ஒரு வண்டியை வாடகைக்குப் பேசி அதில் அந்தப் பிணத்தை யேற்றிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார்கள். அநேக ஜனங்கள் வேடிக்கைபார்க்கவும் இறந்தவ னின்னா னென்றறிந்து கொள்ளவும் அவ்விடத்தைச் சுற்றியிருந்தார்கள். போலீஸ் சேவகர்கள் இந்த குப்பலைத் தூரத்த முயன்றும் பயன் படவில்லை. வண்டி போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்ததும் வண்டியிலிருந்து பிணத்தை யிறக்கப்

போகுஞ்சமயத்தில் யாரோ ஒருவர் குதிரை மீதேறிக் கொண்டு அவ்விடத்திற்கு அதிகவேகமாகக் கும்பலில் நுழைந்துவந்து "ஐயா போலீஸ் உத்யோகஸ்தர் களே! பிணத்தைஸ்டேஷனுக்குள் கொண்டுபோக வேண்டாம். இவ்விடத்திலேயே வையும். பிறகு யெடுத்துக்கொண்டுபோகலாம். நான் அதை நன்றாகப் பார்த்து எனக்குள்ள சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது" என்றார். உடனே சேவகர்களெல்லாம் இவர் பிணத்திற்குடைய வர்போலிருக்கிறதென்றெண்ணி வண்டியிலிருந்த பிணத்தைக் கீழே வைத்தார்கள். அப்போது தலைமைப் போலீஸ் இன்ஸ்பெக்டர் குதிரை மீதுள்ளவரைப் பார்த்து "ஐயா நீர்யார்? இந்தப் பிணத்திற்கும் உமக்கும் என்ன சம்பந்தம், நீர் இங்கு ஏன் வந்தீர்"? என்று கேட்டார். இது கேட்டதும் குதிரைமீதிருந்தவர் குதிரையை விட்டுக் கீழேயிறங்கி இன்ஸ்பெக்டரைப் பார்த்து" ஐயா நான் மாளவதேயத்தை யரசாட்சி செய்துவரும் மிருத்திசு ராசனுடைய முதல் மந்திரியாகிய சிவசன்மன். சுமார் பத்து நாளைக்கு முன் எம் அரசனுடைய கிரீடம் களவுபோய்விட்டது. அந்தத் திருடிக்கொண்டு போனவனைக் கண்டுபிடிக்க எவ்வளவோ பிரயாசைப் பட்டும் பயன்படாமல் அதிக திரவிய நஷ்டமும் நேரிட்டது. அதுவன்றி, நாலு நாளைக்கு முன் ஜலந்தபுரி அருளானந்தர் மடத்திலிருந்து இக்கடிதம் வந்தது என்று முன் மடாதிபதி யெழுதிய கடிதத்தைக் காண்பித்தான், அதை இன்ஸ்பெக்டர் வாசித்துப் பார்த்து மந்திரியிடம் கொடுத்துவிட்டு "இப்போது நீர் என்ன செய்ய வேண்டுமென்கிறீர்? உடனே சொல்லும்" என்றார்.

மந்திரி:—கிரீடத்தைத் திருடிவிட்டு அருளானந்தர் மடத்திலிருந்து ஓடி வந்த சாமியார் இவர்தானு வென்று கண்டுபிடிக்கவேண்டும்.

போலீஸ் இன்—ர்:—அது அசாத்தியமான காரிய மல்லவா? இவன்தான் கிரீடத்தைத் திருடினவ னென்றெப்படி கண்டு பிடிக்க முடியும். இவன் முகமும் தெரியவில்லை. நமக்கு வேறென்ன அடை யாளம் கிடைக்கும்— — — —என்று சொல்லிக் கொண்டேயிருக்கையில் அங்கிருந்த திரளான ஜனக்கூட்டத்தினின்று ஒரு சாயபு இன்ஸ்பெக் டரையும் மந்திரியையும் சலாம்செய்து வணங்கி, "ஐயா! என்ன யோசிக்கிறீர்கள் என்றார்?"

மந்திரி.—ஒன்றுமில்லை, சாயபு, அவர்களே மாளவ தேசத் தாசனுடைய கிரீடத்தைத் திருடினவ னொரு சன்னியாசி என்று கேள்விப்பட்டோம்.

சாயபு.—அம்மாதிரி உங்களுக்கு யார் சொன்னது?

மந்திரி.—ஜலந்தபுரி அருளானந்தர் மடத்திலிருந்து இந்தக் கடிதம் வந்தது, இதை வாசித்துப்பாரும் என்ற உடனே, சாயபு அந்தக் கடிதத்தை அதிக ஆவலுடனே வாங்கி வாசித்துப் பார்த்து "அ, அ, என் ஜேபியிலிருந்த கடிதத்தை யெடுத்து வாசித்தவுடனே நான்தான் கிரீடத்தைத் திருடின வனென்று தெரிந்து கொண்டு இது சங்கதி மாளவதேயத் தாசனுக்குத் தெரிவித்து என்னைப் பிடித்துக் கொடுத்துவிடலா மென்று மடாதிபதி யோசித்தார்போலும். என் நல்லகாலம் கடவுள் திருவருளால் யானங்கே நிற்காமல் உடனே

இவ்வூர் வந்து மாறுவேடம் பூண்டுகொண்டேன். அம்மடத்திலேயே யிருந்திருப்பேனுகில் கட்டாய மெனக் காபத்து வந்திருக்கும்" என்று தனக் குள்ளே யோசித்துக்கொண்டு மந்திரியிட மக்கடி தத்தைக் கொடுத்து விட்டு "சரி கடிதத்தை வாசித்து சங்கதி தெரிந்துக்கொண்டேன். இந்த சன்னியாசியே நேத்து கடைவீதியிலே கண்டேன் அப்போ இவர் என்னே கும்பிட்டு "ஐயா நான் சன்னியாசி யில்லா, ஒரு பலத்த குடும்பி, ஒரு தப்புகாரியம் செஞ்சிபோட்டு அதுக்குப் பயந்து இந்தமாதிரி திரியிறேன். இப்போ நானு ஜலந்தபுரி யிலே அருளானந்தர் மடத்திலேயிருந்து வர்ரேன். எனக்கு சாப்பாட்டுக்கு கஷ்டமா யிருக்குது. இந்த மாதிரி கஷ்டபொழைப்பு பொழிக்கிரத்தே விடோ எங்கனு கணத்மேலே குட்டையிலே வூந்து செத்துபூட்டா நெல்லதுண்ணு பாக்குரேண்ணுன். நானு இவனே பாத்து அடே சீ! அந்தமாதிரி செத்துபோவாதே, அது ரொம்ப பாவம், இந்தா பத்துரூபா; இத்தே வெச்சிக்கினு எப்பிடினு பொழச்சிபோண்ணேன். அப்பாலே யிந்த சன்னி யாசியெங்கே போனுனோதெரியாது. இப்போதான் பார்த்தேன். அவனே என்னமோ யிவன் மூஞ்சி கூட தெரியிலே" என்ருன். அது கேட்டதும் இன்ஸ்பெக்டரை நோக்கி,

மந்திரி:—ஐயா சாாயபு சொல்வதை கவனித்தால் இந்த சாமியார்தான் கிரீடத்தைத் திருடினவனு யிருக் கலாமெனத் தோற்றுகிறது. இவனுக்கு நேற்று பத்துரூபாய் கொடுத்ததாக இச்சாயபு சொல்

கிறார். அதை யிவன் என்ன செய்தானோ தெரிய வில்லை, ஒருவேளை ஜேபியில் வைத்திருப்பான். ஆகையால் சோதனை செய்துபாருங்கள் என்றதும் சேவகர்கள் பிணத்தின் ஜேபியில் கையைப் போட்டு, ஜேபியெல்லாம் தேடிப் பத்துரூபாயும் ஒரு கடிதமும் கிடைக்க அதை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்தார்கள். இன்ஸ்பெக்டர் மந்திரியைப் பார்த்து "சாயபு கொடுத்ததாகச் சொன்ன பத்துரூபாய் இதோ இருக்கிறது" என்று காட்டிக்கொண்டே அத்துடனிருந்த கடிதத்தைப் படிக்கலானார். அதில் அடியில்வருமாறு எழுதியிருந்தது.

"அந்தோ யானென்செய்வேன். யான் மதியீனத்தினால் மாளவதேசத் தரசனுடைய கிரீடத்தை சபை கூடியிருந்த அன்று ஒருவரு மறியாமல் திருடிவிட்டு அதற்குப் பயந்து வீடுவாசலைவிட்டு சன்னியாசி வேடம் பூண்டு காட்டி லலைந்து திரிந்து அன்ன ஆகாரமின்றி கனிவர்க்கங்களைத் தின்று காலத்தைக் கழித்து வருகையில், கிரீடம் களவு போனதைப்பற்றி மாளவதேசத்தில் நடக்கும் ஏற்பாடுகளை யோசிக்கும்போது, நான்தான் கிரீடத்தைத் திருடினவனென்று தெரிந்தால் அவமானமும் உயிர்ச்சேதமு முண்டாவது திண்ணம். கிரீடமாவது என்னிடமிருந்தால் அதை மாளவதேசத் தரசனிடம் கொடுத்து எப்படியாவது தப்பித்துச் கொள்வேன். அதை நான் திருடினேனே தவிரயான் அதன் பலனை யனுபவிக்கவில்லை. என்னையும் ஏமாற்றியாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டனர். நான் இன்னும் எத்தனைநாள் மாளவதேசத்தரசதண்டனைக்குப் பயந்து

இந்த வேடம் பூண்டு அன்ன ஆகாரமில்லாமல் வீட்டை விட்டு அலைந்து திரிவேன். இதைவிடச் சாவதே நல மென்று தீர்மானித்து ரயில் வண்டி வரும்போது குறுக்கே படுத்துக்கொண்டேன்"

இந்தக் கடிதத்தை இன்ஸ்பெக்டர், மந்திரி, சாயபு ஆகிய மூவரும் நன்றாகவாசித்துப்பார்த்துவிட்டு "சரி, சரி இனி என்ன சந்தேகம். இந்த சன்னியாசிதான் கிரீடத்தைத் திருடியவன், திருடிய பின்னர் கிரீடத்தை இழந்து விட்டிருப்பான். ஆகையாலினிமேல் கிரீடத்தைத் திருடினவனைத் தேடவேண்டியதில்லை. கிரீடத்தைத்தான் தேடவேண்டியதாயிருக்கிறது என்று தீர்மானித்துக் கொண்டார்கள். அப்பால் அந்தப் பிணத்லை டாக்டர் பரிசோதனை செய்து பார்த்து "மனோ விபாகூலத்தினால் உயிர் துறக்க நிச்சயித்து இருப்புப்பாதையின் குறுக்கே வண்டி வருஞ் சமயத்தில் படுத்துக்கொண்டு உயிர் நீத்தான்" என்று ஜெனரல் டயரி புஸ்தகத்தில் எழுதிவிட்டுப் பிணத்தைப் புதைத்துவிடும்படி உத்தரவளித்து விட்டார். மந்திரி இன்ஸ்பெக்டரைப்பார்த்து "நான்போய் எம்மரசனுக்கிது சங்கதி சொல்ல வேண்டியதா யிருப்பதால் எனக்குப் போக விடைகொடுங்கள். நீர் பிணத்தின் ஜேபியில் கண்டுபிடித்த கடிதத்தை என்னிடம் கொடும். நானதை யென்னரசனுக்குக் காண்பிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு அக்கடிதத்தைப் பெற்றுக்கொண்டு சாயபு இடமும் இன்ஸ்பெக்டரிடமும் உத்தரவு பெற்றுப்போய் விட்டான். இன்ஸ்பெக்டர் அந்த பத்து ரூபாயை கவர்ன்மெண்டு பணத்தில் சேர்த்துவிட்டார். சற்று

நேரம் பொறுத்து கூட்டமெல்லாங் கலைந்தன. எல்லா ஜனங்களும் தங்கள் தங்க ளிருப்பிடம் போகிறார்கள். அப்போது,

வீரன்:—அடே கோபாலா என்ன அபிபாயசாவு, அவனுக்கு யென்னு மனவருத்தமோ பாவம். சன்னியாசியாக வந்தும் அவனைப் பிடித்த சனி ஒழியவில்லை பார்த்தாயா. அப்பவும் அவனுக்கு வியாகூலத்தைக் கொடுத்ததினாலல்லவா அவன் ரயில் வரும்போது குறுக்கே படுத்தான்.

கோபாலன்:—சரி சரி இவ்வளோ தானா நீ, இன்ஸ்பெக்டரு, ஒரு சாயபு, குதிரைமேலே யேறி வந்தாரே அவுரு, இவங்கெல்லாம் செத்தானே அவஞ் ஜோபியிலிருந்து ஒரு கடுதாசி யெடுத்துப் படிச்சாங்களே அது என்னு தெரியுமா, அப்போ நான் அவுங்கே கிட்டயிருந்து நல்லா கேட்டுக்குனு இருந்தேன் நீ கேக்கலியா?

வீரன்:—இல்லப்பா என்னை சேவகர்கள் துரத்தினார்கள். நான் தூரவந்து நின்றுக் கொண்டிருந்தேன்.

சுப்பன்:—என்னெக்கூட தான் சேகவன் தெரித்தினான் நான்கூட தூரயிருந்தேன்.

கோபாலன்:—ஓ ஓ! அப்ப உனக்குக்கூட அந்த கடதாசி படித்தது கேட்டிருக்காது. அது யென்னுன்னு, மின்னே மாளவதேசத்து ராஜா கிரீடம் தாராவாந்து போச்சீண்ணு தண்டாரா போட்டாங்களே சங்கதி தெரியுமா?

வீரன்:—ஆம்! ஆம்!!

கோபாலன்:—அந்த கிரீடத்தே யிந்த சாமியார்தாந் திருடிக்கிறானாம். தெரிஞ்சிபூட்டா யிவனை கொண்ணூடுவாங்கோண்ணு சாமியார் வேஷம்போட்டுக்குனானாம், அப்பாலே கிரிடித்தெ யெங்கியோ தாரவாத்து விட்டானாம். அதனாலே பயந்து எண்ணிக் கிருந்தாலும் சாவதானே ஒணுண்ணு, ரயில்லே வுழுந்து செத்து பூட்டானாம்.

வீரன்:—அப்படியா இவந்தாந் திருடனாண்ணு எப்டி தெரியும் வேறெ யாரானா அந்தக் கட்தாசியை யெழுதி யிவஞ்ஜோப்பிலே போட்டிருக்கக் கூடாதா.

கோபாலன்:—அதில்லாதே மந்திரி பக்கத்லே நிண்ணுகுனிருந்தாரே ஒரு சாயபு அவர்கூட சொன்னாரே.

வீரன்:—என்னாண்ணு சொன்னாரு?

கோபாலன்:—இவனை கடைத் தெருவிலே ஒருநாளு காத்தாலே பாத்தாராம். இவன் சொன்னானாம் 'நான் ஒரு தகாதகாரியஞ் செஞ்சூட்டு பயந்துகுனு இந்த கோலத்தோடே யிருக்கேன். எப்டினா செத்துபூட்ளாமூண்ணுபாக்றேன் அண்ணானாம். சாயபு அவனை திட்டி சீ, அப்டி செய்யாதே இந்தா பத்துரூபாண்ணு கொடுத்தாராமே.

வீரன்:—எங்கே அந்த பத்துரூபா?

கோபாலன்.—அவஞ் ஜோப்பிலிருந்தே யெடுத்தாங்களே.

வீரன்:—உண்மையெ யார் கண்டவர்கள் என்னமோ அவன் உயிர் எப்பவோ பூட்டுது, அது இப்பே

யெங்கே யென்னமா யிருக்குதோ யார் பாத்தாங்கோ.

சுப்பன்:—எல்லா உண்மையும் மனண்டே இத்தினி நாழி ஒப்புகூட்டிருப்பான்.

வீரன்:—ஆமாம், அது யாருக்கு தெரியாது. என்று இவ்வாறு எல்லா ஜனங்களும் தங்கள் தங்கள் வாயில் வந்தவற்றைப் பிதற்றிக்கொண்டு போய் விட்டார்கள்.

## ஐந்தாவது அத்தியாயம்.

### இலட்சம் ரூபாய் இனாம் என்று நோடீஸ் பிரசுரமானது.

மாளவதேயத்தில் காலை எட்டுமணி யிருக்கும். இராஜசபை வழக்கம் போல் கூடிற்று. அப்போது மிருத்திக மகாராஜன் சபையிலுள்ளோரைப் பார்த்து "இதென்ன வாச்சர்யம்; அருளானந்தர் மடத்திற்குச் சென்ற மந்திரி சிவசன்மன் இன்னும் வரவில்லையே, கிரீடம் கிடைத்ததோ யில்லையோ மந்திரி யெங்கெங்கு அலைந்து திரிகின்றானோ. யாதொரு சங்கதியும் தெரியவில்லையே. ஒருக்கால் மந்திரி அலைந்து திரிந்த அலுப்பினால் தேக அசௌக்கிய மடைந்து வீட்டிலிருக்கின்றானோ அடா காவலர்களே! நீங்கள் உடனே சிவசன்மன் வீட்டிற்குச் சென்று அவன் வந்ததும், வாராததும், எங்கிருப்பதுந் தெரிந்து கொண்டு வாருங்கள்" என்றான். உடனே காவலர்கள் மந்திரி வீட்டிற்குப் போ

கப்புறப்பட்டு அரண்மனையை விட்டு வெளியே வந்தார்
கள். அப்போது அதிக தூரத்தில் குதிரையின்
மீதொருவ னேறிக்கொண் டதி வேகமாக வருவதாகப்
புலப்பட, சற்று நிதானித்துப் பார்க்கையில் மந்திரி சிவ
சன்மாவெனத் தீர்மானித்துக்கொண் டரசனிடம்
சென்றுபணிந்து நின்று, ' எம் தலைவரே. மந்திரி, இப்
போது தான் அதோ வருகின்றார். அவர் எங்கிருந்து
வருகின்றாரோ யெங்களுக்குத் தெரியாது. அதிவேக
மாகத்தான் குதிரையை யோட்டிக்கொண்டு வருகின்
றார்'' — — — —என்று சொல்லிக் கொண்டே யிருக்
கையில் மந்திரி அரண்மனையை யடைந்து குதிரையை
விட்டிறங்கிசபைக்கு வந்து அரசனைப் பணிந்து "அரசே
நான்ஜலந்தபுரிக்குப் போய் அருளானந்தர் மடத்
தில்செவிசாரித்தபோது அந்தசன்னியாசி யெங்கேயோ
ஓடிப்போய்விட்டா னென்றார்கள். உடனே நான் அவ
னைத்தேடிக்கொண்டு புறப்பட்டு நேமிநாட்டையடைந்து
அங்கு விசாரித்ததில் யாரோ ஒரு சன்னியாசி இருப்
புப்பாதையி லகப்பட்டிறந்து விட்டதாயும் அ த சவத்
தைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோ யிருப்ப
தாயுங் கேள்விப்பட்டு அங்கு சென்று போலீஸ் இன்ஸ்
பெக்டரைக்கண்டு அருளானந்தர் மடத்திலிருந்து வந்த
கடிதத்தை யவருக்குக் காண்பித்து இறந்து கிடந்த
சன்னியாசியி னுடையிலுள்ள ஜேப்பியைச் சோதிக்
கையில் இந்தக் கடிதமும் பத்து ரூபாயும் அகப்பட்
டது." என்று அக்கடிதத்தை யரசன்கையிற் கொடுத்
தான். அதை யரசன் வாசித்துப் பார்த்துவிட்டு "கிரீ
டத்தைத் திருடினவன் பயந்து தன்னுயிரை மாய்த்துக்
கொண்டான். கிரீடம் மாத்திரம் எங்கேபோ பத்திர

பாகத்தா னிருக்கும். அது யாரிட மிருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை. அதைக் கண்டுபிடிப்ப தெப்படி? இன்னும் எத்தனை நாளைக்கு யான் கிரீடமின்றி யரசாட்சி செய்வேன்? ஆகையால் மந்திரி நீ நாளையதினம் புறப்பட்டு எல்லா தேசங்கட்குஞ் சென்று அங்குள்ள பெரிய மனிதர்களையும் வாசித்த பிரபுக்களையும் கூட்டம் கூட்டி "ஜனங்களே மாளவதேயத் தரசனும் ஏகச்சக்கிரவர்த்தியு மாகிய மிருத்திக மகாராஜனுடைய கிரீடத்தைக் களவாடினவன் நேமிநாட்டில் இருப்புப்பாதையின் குறுக்கே படுத்துக்கொண்டு வண்டியேற உயிர் நீத்தானுதலால் கிரீடத்தைப்பற்றித் தாங்கள் தங்களால் கூடியமட்டில் பிரயாஸைப்பட்டு ஏதாவது உளவு தெரியுமானுல் அதை உடனே மாளவதேயத் தரசனுக்குத் தெரிவித்தால் அன்னவர்களுக்கு இலட்சம் ரூபாய் இனுமளிக்கப்படும். இது உண்மை. ஆகையால் ஜனங்களே! நீங்களெல்லாம் மேற்சொன்ன இனும் தொகையைப் பெற முயலுங்கள்" என்று பிரசுரஞ் செய்து விட்டுவா. அதுவுமன்றி, சிறிய ஊர்களில் இது விஷயத்தைப் பற்றி பறை சாற்றுவி. நீ எல்லா தேசங்கட்குஞ் சென்றும் உன் பிரயத்தனங்களெல்லாம் வீணுகி, கிரீடம் கிடைக்காமற் போகுமானுல் புதிதாகவே ஒன்று செய்து விடுவோம். என்னபணம் செலவுசெய்து புதிதாகச்செய்தபோதிலும் முன்னிருந்த கிரீடத்தைப்போல் அலங்காரமா யிராது. ஏனெனில் அது பழயவேலைப்பாடு என்று விசனப்பட்டு மந்திரீ! நாமென்ன செய்யலாம், இதுவும் கடவுளின் திருவுளச் சம்மதமாயிருக்கிறது. நீ நாளைய தினம் போய் மேற்படி பிரசுரஞ் செய்" என்று மந்திரியை

யனுப்பிவிட்டு காவலர்களைப் பார்த்து "அடா காவலர்களே! இப்போதே சென்று நீங்களெல்லோரு மிவ்வூர் முழுவதும் மேற்படி விடயத்தைப் பிரசித்தப்படுத்தி விட்டு வாருங்கள்" என்றதும் காவலர்களெல்லா மவ்வாறே செய்து முடித்தார்கள். மந்திரி சிவசன்மனும் மறுநாட் காலை வேண்டிய சாமான்களுடனே தன் மனைவி மைந்தர்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு புறப்பட்டு ஒவ்வொரு தேசங்களாகச் சென்று கிரீடத்தைக் கொண்டு வருபவர்களுக்கு இலட்சம் ரூபாய் இனுமளிப்பதைப் பற்றிப் பிரசுரஞ் செய்து வந்தான்.

நண்பர்களே! நம்முடைய கதாநாயகனாகிய நஜீப் உசேன் சாயபுவைக் கவனிப்போம். மந்திரிவிடை பெற்றுக்கொண்டுபோய் விட்டபின் நஜீப்உசேன் ஓட்டலுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு சற்றுநேரம் நித்திரை செய்து பின்னர் சுமார் மாலை நாலுமணிக் கெழுந்துட்கார்ந்து கொண்டு தன் மைந்தனுக்கொரு கடிதமெழுதத் துணிந்து ஜேப்பியிலிருந்த பென்சலும் காகிதமு மெடுத்து அடியில்வருமாறு எழுதலானர்.

நேமிநாடு,

ஜெனரல் பப்ளிக் ஓட்டல்.

என்னருமைப் புதல்வனாகிய மீனவனுக்கு உலக இரட்சகனுடைய கிருபையால் எல்லாவித செல்வங்களும் மேன்மேலும் விருத்தியாகுக,

இப்பவும் நான் முன் அருளானந்தர் மடத்திலிருந் தெழுதிய கடிதத்திற்கு நீ பதில் எழுதிய கடிதம்

கிடைத்தது. ஒருவருக்குங் காட்டாமல் வாசித்துப் பார்த்து ஜேப்பியில் போட்டுக்கொண்டேன். அம் மடத்திலென்னுடனிருந்த அடியார்கள், கடித மெவ் விடத்திலிருந்து வந்ததென்றும் அதிலென்ன சங்கதி யெழுதியிருந்ததென்று மறிவதற் காவலுற்றவர்களாய் நான் அன்றிரவு நித்திரை செய்பவனைப்போலக் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருக்கையில் என் ஜேப்பியிலிருந்து அக்கடிதத்தை யெடுத்துக் கொண்டார்கள். நான் இனிமேலந்த மடத்திலிருந்தா லாபத்து வருமென்றெண்ணி அதிகாலையி லெல்லோருக்கு முன்னதாக வெழுந்திருந்து அதிக விரைவாக நடந்து, ஓர் அடர்ந்த காட்டை யடைந்து, அங்கே இளைப்பாற விரும்பிச் சற்றே உட்கார்ந்தேன். அப்போது ஓர் சிறுவன், முன்பு நான் களவாடிய கிரீடத்தைப் பெட்டியுடன் கையில் வைத்துக் கொண்டு பயந்தழுதான். நானவனிடஞ் சென்று அவனைத் தேற்றி அவனுக்கு நூறு ரூபாய் கொடுத்துப் பயமுறுத்தி யனுப்பிவிட்டு அந்த கிரீடத்தை யான் பெற்றுக் கொண்டு ஓர் புதரில் அதைப் பத்திரம் செய்துவைத்துப்பின் காட்டை விட்டு வெளி வந்து, சற்று நேரம் நடந்து நேமிநாட்டை யடைந்து மகமதிய உடையைத் தரித்துக்கொண்டு மகமதியனைப்போல வேடம் பூண்டு அவ்வூர் சமுத்திரக் கரைக்குச் சென்று சற்று நேரம் உலாவிப் பின்னர் ஊருக்குத் திரும்பி வரும்போது யாரோ ஒருவன் தற் செயலாக முன்னுளின் விதிப்படியே இருப்புப்பாதையில் வண்டிவரும்போது அகப்பட்டிறந்தான். நான், நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு என்பதுபோல அவன் தான் கிரீடத்தைக் களவாடினவனென்று பலரும் நம்

படி அவனுக்கு யான் முன்பு அணிந்திருந்த சன்னியாசி உடையை சாத்திவிட்டு அவன் ஜேப்பில் ஒரு கடிதமெழுதி வைத்து விட்டேன். அருளானந்தர் மடத்திலிருந்து மடாதிபதி யெழுதிய கடிதத்தை யெடுத்துக்கொண்டு மந்திரி சிவசன்மா என்னைத் தேடி இவ்வூருக்கு வந்தான். யானுமவனும் போலீஸ் இன்ஸ்பெக்டரும் கலந்துபேசிக் கிரீடத்தைத் திருடினவன் செத்துக்கிடந்தவனே யென்று தீர்மானித்துவிட்டோம். பிறகு மந்திரி போய்விட்டான். நான் இங்கே சுகமாகவே யிருக்கின்றேன். என்னைப்பற்றி விசனப்படாமலிருக்கும்படி உன் தாய்க்கு சமாதானம் சொல். அவ்விடம் அரண்மனையி லென்ன விசேடம் நடக்கிறதோ அதைத் தவறாமல் தெரிவி.

இப்படிக்கு,

உன் அன்புள்ள தந்தை

நன்மைக்காக வேடம்பூண்ட நஜீப்உசேன்சாயபு.

இந்தக் கடிதத்தை யெழுதி முடிந்தபின் சாயபு தபாலில் போட்டுவிட்டார். மறுநாட் காலை சுமார் எட்டுமணிக்கு மீனவனுக்கு இக்கடிதம் கிடைத்தது. இதை யவன் வாசித்துப் பார்த்துவிட்டு தன் தாயாருக்கும் படித்துக்காட்டித் தன் தாயாருத்தரவு பெற்றுக்கொண்டு பதிலெழுதலானான்.

மாளவதேசம்.

எனதன்பார்ந்த தந்தையே,

இவ்விடம் யானுமென் தாயாரும் சுகமாகவே யிருக்கின்றோம். நீர் எழுதிய கடிதம் கிடைத்து எல்லா சங்கதியும் தெரியலானோம். எல்லாம் வல்ல

பெருமான், எப்போது உமக்குற்ற துன்பத்தை நீக்கி இரட்சிப்பாரோ தெரியவில்லை? இப்போது எங்களுக்குக் கைச்செலவுக்குப் பணமில்லாமலதிக கஷ்டப் படுகிறோம். அம்மாளுடைய நகைகளை யடகு வைத்து ஜீவனஞ்செய்யவேண்டியதாயிருக்கிறது. நீர் எப்போது மறுபடியும் வீடு வருவீரோ, நாங்கள் எப்போது பார்ப்போமோ தெரியவில்லை. இவ்விடம் நான் என் தாயாரைப் பத்திரமாகப் பாதுகாத்து வருகிறேன்.

இப்படிக்கு,

---

இந்தக் கடிதத்தை யெழுதித் தபாலில் போட்டுவிட்டான். மறுநாள் சாபபுவிடம் அக்கடிதத்தை தபாற்காரன் [illegible]வில் கொடுத்தான். அதைப் பிரித்து வாசித்துப்பார்த்து அவன் அதிக துக்கம் மேலிட்டு "ஐயோ யானிருந்தபோது என் மனைவி மைந்தனுக்கு யாதொரு மனவருத்தமு மில்லாம லிருந்ததே. இப்போது யான் என் பூர்வவினைப்பகுதிக்கேற்றவாறு இப்படி ஊர்ஊராக அலைந்து திரிவதால் என்மனைவிமைந்தர்களுக்குச் செலவுக்குப் பணமில்லாமல் அதிக கஷ்டம் நேரிட்டிருக்கிறதே, இதற்கென்ன செய்யலாம். என்னிட மதிக பணமுமில்லையே" என்று இவ்வாறு வருந்தப்பட்டுக் கொண்டே ஓட்டலைவிட்டுப் புறப்பட்டு அவ்வூருக்கு சுமார் ஒருமைல் தூரத்திலுள்ள பார்வைத் தோட்டத்திற்குச் சென்று, ஒரு பெஞ்சியின்மீ துட்கார்ந்து, தன் மகன் எழுதிய கடிதத்தைப் படித்துப் படித்து அதிக துக்க மடையலானான்.

அந்தப்பார்வைத் தோட்டத்தில் பலவித புஷ்பச் செடிக ளிருந்தன. அந்தத் தோட்டத்தின் நடுவில் ஒரு

ஊற்றிலிருந்து ஜலம் வருவதைப்போல (Fountain) வைத்து அதைச்சுற்றி வட்டமாக ஒரு கிணற்றைப் போல மூன்றடி உயரத்திற்கு சுவர்கட்டி நடுவில் நிறைந்துள்ள ஜலத்தில் பலவித மச்சங்களையுந் தாமரைகளையும் வளர்த்து வந்தார்கள். அப்பார்வைத் தோட்டத்தினொரு மூலையில் விற்பனைக்காகத் தொட்டிகளில் புஷ்பச் செடிகள் முதலியன வளர்த்து வந்தார்கள். மற்றொருபுறத்தில் பாக்குமாவற்றைங்களையும் டிவ்டிவ் செடிகளையும் மற்றுமுள்ள பலன் தரத்தக்க மரங்களையும் வைத்திருந்தார்கள். மற்றொருவிடத்தில் குரோடன்ஸ் முதலிய செடிகளை வைத்திருந்தார்கள். இவற்றை விவாக முதலிய விசேடங்களில் வீட்டை யலங்காரம் செய்வதற்காகவிலைகொடுத்து அவ்வூரிலுள்ள [illegible]க்கள் வாங்கிக்கொண்டு போவார்கள். இந்த தோட்டத்தி லுள்ள செடிகளெல்லாம் உலர்ந்து போகாமற்படிக்குக் காப்பாற்ற ஜலம் வார்ப்பதற்கும், களை பிடுங்குவதற்கும், தோட்டத்தை சுத்தமாக வைத்திருப்பதற்கும், களவு போகாமல் பாதுகாப்பதற்கும் அங்கு இளைப்பு நீங்கும் பொருட்டுத் தங்குபவர்கள், செடிகளை யழிக்காமற்படி பார்ப்பதற்கும் அநேக கூலியாட்களை நியமித்திருந்தார்கள். இந்த தோட்டத்திற்குள் வந்த சாயபு தனக்கு வந்த கடிதத்தைத் திருப்பித்திருப்பி வாசிப்பதனாலுண்டாகிய மனோ துக்கத்தினால் அங்கிருந்த பெஞ்சியின் மீது படுத்துக்கொண்டு காற்று அதிக இனிமையாக வீசியதால் தன் துக்கங்களை யெல்லாம் மறந்து அயர்ந்து நித்திரை போய்விட்டான்.

பிறகு சாயங்காலம் சுமார் 4 மணிக்கு யெழுந்து பார்க்கையில் அந்த நந்தன வனத்தில் அநேக ஜனக்

கள் பந்து மித்திரர்களுடன் வந்து அங்கிருந்த பெஞ்சுகளின் மீதும், மரத்தின் நிழலின் கீழும் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சாபபு உடனே எழுந்து கைகால் முகம் சுத்திசெய்துகொண்டு அந்த தோட்டத்தைச் சுற்றிப்பார்த்துக்கொண்டே வருகையில், ஒரு பெரிய மரத்தின் நிழலில் அதிக ஆனந்தமாக இளந்தென்றல் வீசினபடியால் அதன் கீழுட்கார்ந்தார். அப்பால் சற்றுநேரம் பொறுத்து, ஒரே மாதிரியான உடைகளையும் தலைப்பாகைகளையுந் தரித்துள்ள சுமார் நாற்பது பேர் தங்கள் தங்கள்வாத்தியங்களுடன் இந்தத் தோட்டத்திற்குள் நுழைந்தார்கள். இவர்களுக்குத் தலைவன் போற்றோன்றிய ஒருவர், இவர்களுக்கு முன் ஒரு பிரம்பைக் கையிலெடுத்துக்கொண்டு போனார். எல்லோரும் உள்ளே சென்றதும் தலைவனுத்திரவு செய்தபடியே தங்கள் தங்கள் கௌரவத்திற் கேற்றவாறு நின்றார்கள். இவர்கள்தான் டாண்டு வாத்தியம் வாசிப்பவர்கள். பிரதிதினமும் சாயங்கால வேளைகளில் இவர்களெல்லோரு மிந்த நந்தவனத்திற்கு வந்து ஒரு மணி நேரம் வரையில் வாசித்துவிட்டு, தங்களுடைய தலைவன் கற்றுக் கொடுக்கும்படியானபுதிய பாடல்களையும் இசைகளையும் கற்றுக்கொண்டு போவது வழக்கம்.

பிறகு இவர்களுடைய தலைவன் தன்கையிலுள்ள பிரம்பை மேலுக்குத் தூக்கியபோது எல்லோரும் தங்கள் தங்கள் வாத்தியங்களைத் தங்களுக்கு நேரே பிடித்துக்கொண்டார்கள். அப்பால் தலைவன்கற்றுக் கொடுத்த இராகங்களை யெல்லாம் வாசித்தார்கள். *சண்டைக்குப் போகும்போது பாடும் பாடல்களையும், சண்டையில் ஜெயம்பற்று வரும்போது பாடும் பாடல்களையும் நன்

ருகக் கற்று வைத்திருந்தபடியால் அந்தப் பாட்டுகளைப் பாடினபோது, அங்கிருந்தவர்களெல்லாம் மிக ஆனந்தங்கொண்டாடி இவற்றை யெல்லாம் வரிசைக் கிரமமாக நன்கு போதித்தத் தலைவனை ஆசீர் வசித்தார்கள். அப்பால் சற்றுநேரம் எல்லோரும் இளைப்பாறி பின் வாசிக்க ஆரம்பித்தார்கள். அங்கு விஜயஞ் செய்திருந்த ஜனங்களெல்லோரும் அதிக ஆனந்தமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். அப்போது ஒருவர் குதிரையின் மீதேறிக்கொண் டவ்விடத்திற்கு வந்து, உட்கார பெஞ்சியி விடமில்லாமையால் கீழே யிறங்கி குதிரையின் பக்கத்தில் நின்றார். உடனே பாண்டுத்தலைவனங்கிருந்தவர்களைப் பார்த்து "ஐயா பிரபுக்களே இவர் யாரோ ஒரு பெரிய உத்தியோகஸ்தராகக் காணப்படுகின்றமையால் இவர் நின்றுகொண்டு வேடிக்கை பார்ப்பது தகுதியன்று, இவ்ருக்கும் பெஞ்சியிலுட்கார சற்று இடமேற்பாடு செய்யுங்கள்" என்ற உடனே ஓர் பெஞ்சியிலிருந்து இரண்டு பேரெழுந்த பின்னரவ ரந்தவிடத்தி லுட்கார்ந்துகொண்டு பாண்டுத் தலைவனைப்பார்த்து "ஐயா நானிங்கு ஓர் அவசர விஷயமாக வந்திருக்கின்றேனாகையால் நீரிங்குள்ள ஜனங்களை யெல்லாம் பாண்டுவாசித்து முடிந்ததும் வழக்கம்போல் வீட்டிற்குப் போய்விடாமற்படிக்கு இங்கேயே சற்றுநேர மிருக்கச் சொல்லவேண்டும். ஏனெனில் நானிவர்களுக்கு ஒரு சிறிய பிரசங்கஞ் செய்யப் போகின்றேன்" என்றதும் பாண்டுத்தலைவ னங்கிருந்தவர்களைப்பார்த்து "ஐயா மகாப்பிரபுக்களே தாங்களெல்லோரும் பாண்டுவாசித்து முடிந்தவுடனே வழக்கம்போலத் தங்கள் தங்களிருப்பிடத்தை நோக்கிச்

சென்றுவிடாதீர்கள். ஏனெனி லிப்போது குதிரையின் மீது வந்தவர் ஏதோ சில விஷயங்களை உங்களுக்குச் சொல்வதாக உத்தேசித் திருக்கிறாராம். ஆதலால் சற்றுநேரமிருந்து இவர் சொல்லப்போகும் விஷயத்தைக் கவனித்துப் போகும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்'' என்றான். அப்போது எல்லோரும் ஒரே குரலாய் அப்படியே செய்கிறோமப்படியே செய்கிறோம் என்றார்கள். அப்பால் பாண்டுத்தலைவன் தனக்குள்ளே யாலோசிக்கலாயினான். "இஃதென்ன ஆச்சரியம் இதுவரையில் நாமெத்தனையோ வருட.காலமாக இவ்விடத்தில் பாண்டுவாத்தியம் வாசித்து வருகிறோம். எத்தனையோ கனதனவான்கள், நாலு குதிரை வண்டிகளிலும் இரண்டு குதிரை வண்டிகளிலும் இதர வாகனங்களிலும் வந்து நம்முடைய பாவின் இராகங்களைக் கேட்டு, எல்லா ஜனங்களும் போய்விட்டபின் நம்மைப் பார்த்து "ஐயா நீ உன்னுடைய சீடர்களுடனே நாளை யதினம் விசேஷ காலமாகையால் என் வீட்டில் பாண்டு வாசிக்கவேண்டும். அதற்குரிய சார்ஜ் நான் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொல்லித் தங்களுடைய விலாசங்களை பெழுதிக் கொடுத்துவிட்டுப் போனபின், யான் என் சீடர்களுடனே சென்று அவர்கள் வீட்டில் பாண்டு வாசித்து அவர்களை சந்தோஷப்படுத்தி எனக்குச் சேரவேண்டிய தொகையைப் பெற்றுக்கொள்வேன். அதுவுமன்றி சரிகைவேஷ்டிகள் பட்டுப் பீதாம்பரங்கள் பொன் நகைகள் முதலிய இனாம்களும் சிலரிடம் பெற்றுக் கொள்வேன். இது வழக்கமாயிருக்க, இன்றையதினம் இந்த குதிரையின்மீது வந்த தனவான் ஜனங்களையெல்லா மிருக்கும்படி சொல்வ

தென்ன காரணமோ தெரியவில்லை. அவர் இங்கு வந்ததும் அவருக்கு உட்கார இடங்கொடுக்காமலி ருந்தேனே அதைப்பற்றி யேதாவது பேசப்போகின் றாரோ என்னமோ தெரியவில்லை. "யாராத்தாள் சாவதுவும் பொழுது விடிந்தால் தெரிந்துவிடும்" என் பதுபோல இதைப்பற்றி என் யோசிக்கவேண்டும். எல்லா உண்மையுமின்னுங் கொஞ்சநேரத்தில் தெரிந்து விடப்போகிறது. நடக்கிறது நடக்கட்டும் பார்ப் போம்" என்று தன் சீடர்களைப்பார்த்து "பத்திரம், பயபக்தியோடு மிக நன்றாக வாசியுங்கள்" என்று கண்சாடை காட்டவே எல்லோருமன்றையதினம் மிக விநோதமாகப்பாடினார்கள். அப்பால் சுமார் 6—மணிக்கு பாண்டுவாத்தியம் வாசித்து முடிந்ததும் பாண்டுத் தலைவன் அருகே பெஞ்சியின் மீதுட்கார்ந்து கொண் டிருந்தவரைப்பார்த்து "ஐயா பிரபுவே, பாண்டுவாத்தி யம் முடிந்துவிட்டது. தங்களுத்தரவின் படியே யெல் லோரும் போகாம லிருக்கின்றார்கள். தாங்கள் முன் சொன்னபடியே பிரசங்கஞ் செய்யலாம்" என்றான். உடனே அவர் தன்னுடைய இடத்தை விட்டெழுந்து சபையோர்களுக்கெதிரில் வந்து நின்று நான்கு திக்கிலு முற்றுநோக்கி "இங்குள்ள நண்பர்களே! உங்களுக் கெல்லா மொருவிஷயத்தைச் சொல்ல யானின்றிவ்விடம் வந்தேன். இப்போததிக நேரமாய்விட்டபடியால், நாளை யதினம் சொல்லலாமென்றால் யான் அநேகதேசங்களுக் குப் போகவேண்டியிருக்கிறது. ஆகையாலிப்போதே சொல்லிவிடுகிறேன். சற்று சாவதானமாகக் கேளுங் கள். அஃதென்னவென்றால் சுமார் ஒரு மாதத்திற்கு முன் ஏகச்சக்ராதிபதியும் மாளவதேசத்தரசனுமாகிய

மிருத்திகமகாராஜனுடையநவரத்ன சகிதமான கிரீடம் களவுபோய்விட்ட விஷயம் நீங்களெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்களென்று நம்புகிறேன். அந்த கிரீடத்தைத் திருடியவன் இராஜதண்டனைக்குப் பயந்து இத்தேயத்திலே இருப்புப்பாதையின் குறுக்கே வீழ்ந்திறந்துவிட்ட சங்கதி உங்களுக்கெல்லாம் தெரியுமல்லவா? இது விஷயம் தெரியாதவர்கள் என்னருகே நிற்கின்ற போலீஸ் இன்ஸ்பெக்டரையும், சாயபுவையும், டாக்டரையும் விசாரித்துத் தெரிந்துகொள்ளலாம். அதுவுமன்றி இந்த சாயபு அந்த சன்னியாசிக்குப் பத்து ரூபாய் கொடுத்ததாகச் சொன்னார். பரிசோதிக்கையிலவன் ஜேப்பியில் அந்த ரூபாயுமிருந்தது இது நிற்க இப்போது மாளவதேசத்திலொரு புதிய சட்டம் ஏற்படுத்தியிருக்கிறது. அஃதென்னவெனில் கிரீடத்தைத் திருடினவன் பயமேலிட்டு தற்கொலை புரிந்து கொண்டான். இனிமேல் அவனைத் தேடமுடியாது. அவன் திருடிய கிரீடத்தை யெங்கே வைத்தானோ யாரிடங் கொடுத்தானோ அது யாதொருசங்கதியும் தெரியவில்லை. ஆகையால் யாராவது அந்தக் கிரீடத்தைக் கொண்டு வந்து கொடுத்தாலும் இருப்பிடத்தைச் சொன்னாலும் அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இனாமளிக்கப்படும். இது சத்தியவாக்கு. பிரபுக்களே எல்லோரும் அந்தக் கிரீடத்தைப் பற்றி விசாரியுங்கள். இன்னும் யான் அநேக தேசங்கட்குச் சென்று இம்மாதிரி ஜனங்களுக்கெல்லா மிது விஷயம் தெரிவிக்க வேண்டியபடியாலெனக்குப் போக விடைகொடுங்கள்" என்று சொல்லிவிட்டு மந்திரி தன் குதிரைமீதேறிக்கொண்டு பிரயாணப்படுகையில் நம் கதாநாயகனாகிய சாயபு அவனுக்

கெதிரே சென்று தன் வலது கையை பாதத்திலிருந்து நெற்றிவரையி லுயர்த்தி "சலாம் அஜாத், கிரீடம் போனாலும் போச்சி உம்மைப் பிடிச்சா போலிருக்கு சனி. நீர் வீட்டைவிட்டு வெளிதேசங்ளுக்குப் போய்த் திரிகின்றீர்களா?"

மந்திரி:—இல்லையில்லை நான் முன்பு உம்மைக்கண்டு பேசிவிட்டு நேராக மாளவதேசத்திற்குப் போய் இறந்துபோன சன்னியாசி ஜேப்பில் கிடைத்த கடிதத்தை யரசனிடம் காட்டிப் பின்னர் கிரீடத்தைக் கொண்டுவருபவர்களுக்கோர் இலட்சம் ரூபாய் இனாமளிப்பதைப் பற்றிப் பிரசித்தம் செய்துவிட்டுப் போக மறுபடியும் வந்தேன். இனிமேல் கிரீடம் கிடைத்தாலுங் கிடைக்கா விட்டாலும் இம்மாதிரி ஊர் ஊராகத் திரிவேன். ஏனெனில் எம்பரசன் வேறொரு புதிய கிரீடம் செய்யத் தீர்மானித்து விட்டார்.

சாயபு:—நீர் மாளவதேயம் சென்று கிரீடத்தைப்பற்றி யாதொரு தகவலும் தெரியவில்லை யென்று சொன்னாலன்றோ வேறொரு கிரீடம் செய்வார்கள்?

மந்திரி:—ஆம் ஆம் எனக்காக யெதிர் பார்த்துக்கொண்டிருப்பார்கள். நான் இன்னும் சில ஊர்களுக்குப் போய் சீக்கிரம் மாளவ தேசத்திற்குப் போக வேண்டும்.

சாயபு:—நீர் மறுபடியும் மாளவதேசம் போய்ச் சேர சுமார் ஒருமாதம் பிடிக்குமென்று நினைக்கிறேன்.

மந்திரி:—பிடிக்கும், இரண்டொருநா ளதிமாகவே பிடிக்கும்.

சாயபு:—இப்போது சுமார் ஏழுமணி யாகிறது. நிலவும் இன்னும் புறப்படவில்லை யாகையால் நீரென் வீட்டிற்கு வந்து இன்றிரவு தங்கி பொழுது விடிந்ததும் புறப்படலாம்.

மந்திரி:—ஆ, ஆ, முடியாத காரியம், இது விஷயத்திலென்னை மன்னிக்கும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். நானிப்போதே சென்று அதிக விரைவாகக் குதிரையைச் செலுத்தி அடுத்த தேசம் போய்விடுவேனுகையா லவ்வரசனில்லத்தில் போஜனம் செய்வேன். இது விஷயத்தில் நீர் கவலைப்படவேண்டாம் என்று சொல்லிவிட்டு குதிரை மீதேறிக்கொண்டு போய்விட்டான்.

## ஆறுவது அத்தியாயம்.

### திருடன் இனம் பெற்றுக்கொள்ள ஆசைப்பட்டு கிரீடத்தை யெடுத்துக்கொண்டு மாளவு தேசம் வந்தான். மனைவி மைந்தருடன் கொஞ்சிக் குலாவுகிறான்.

கதாநாயகனுகிய சாயப்பு மந்திரியிட முத்தரவு பெற்று ஒட்டலுக்கு வந்து இராப்போஜன முடித்து சற்றுநேரமுலாவித் தன் படுக்கையில் படுத்துக்கொண்டு யோசிக்கலானன் "இன்றையதினம் மந்திரி சொன்னபடி, யார் கிரீடத்தைக் கொண்டுவந்தாலும் இனம் இலட்சம் ரூபாய் கொடுத்து விடுவார்களா? அல்லது

தண்டிப்பார்களா? ஆ ஆ நம்மரசன் மகாயோக்யன்; சத்தியவான். சொன்ன சொல் தவறான். கட்டாயம் இனும் கொடுப்பான்' ஆகையால் நானிப்போதே கிரீடத்தை யெடுத்துக்கொண்டு போயரசனிடங் கொடுத்து இனும் பெற்று அந்த ரூபாயை யென் மனைவி மைந்தரிடம் கொடுத்துவிட்டு வருவேன். ஒருவேளை நான் கிரீடத்தைக் கொண்டுபோனால் "உனக்கு இது எப்படி கிடைத்தது. நீதான் திருடன்" என்று சொன்னாலென்ன செய்யலாம்? ஒருக்காலு மப்படி சொல்லான். ஏனெனில் நான் முன் சன்னியாசியின் ஜேப்பியிலெழுதிவைத்த கடிதத்தை வாசித்தபின் கிரீடத்தைத் திருடினவ னிறந்துவிட்டானென்று முழு நம்பிக்கை யுண்டாய்விட்டது. ஆகையாலிதைப்பற்றி யினிமேல் பயப்படவேண்டியதே யில்லை. நாளைதினம் அதிகாலையில் புறப்பட்டு, முன்பு கிரீடத்தைப் புதைத்துள்ள காட்டில் நுழைந்து கிரீடத்தைப் பத்திரமாக எடுத்துக்கொண்டு மாளவதேசத்திற்குப் போகவேண்டும். நான் இந்த மகம்மதிய கோலத்துடனே அரசனிடம் சென்றால் என்னை யறிந்துகொள்ளமாட்டான். ஒருவேளை மந்திரி சிவசன்மனவ்விட மிருந்தால் எனக்காபத்து வரும் என் நற்காலம் அவனுமவ்வூரிலில்லை. ஆகையால் அவன் திரும்பி அத்தேசத்திற்கு வந்து விடுவதற்குள்ளாகச் சென்று இனுமைப் பெற்றுக்கொண்டு வந்துவிடவேண்டும். இல்லையேல் எனக்காபத்து வருவது உண்மை. காலதாமதஞ் செய்யாமல் நாளைக்கே புறப்படவேண்டும்" என்று தீர்மானித்துக்கொண்டு நித்திரை போய்விட்டான். மறுநாள் அதிகாலையிலந்த ஓட்டல் வேலைக்காரர்களெல்லாம் பாத்திரங்களை சுத்தி

செய்துக்கொண்டும், ஜலம் எடுத்துக்கொண்டும் காய்கறி அறிந்துக் கொண்டும் இருக்கையில் சாயப்பு எழுந்து புறப்பட்டு அதிவிரைவாக நடந்து முன்பு கிரீடத்தை யொளித்து வைத்திருந்த காட்டிற்கு வந்து சுற்றிச்சுற்றி யெல்லாப்பக்கமும் பார்த்துவிட்டுத் தான் முன் கிரீடத்தைப் புதைத்துவைத்த புதாண்டை சென்று உட்கார்ந்து சற்றுநேர மிளைப்பாறி அங்கிருந்த பழவர்க்கங்களைத் தின்று ஓடையிலிருந்த நீரைப் பருகி பசிதவிர்ந்து அக்காட்டிலுள்ள இலை தழைகளில் கொஞ்சம் ஒடித்துக்கொண்டு கிரீடத்தைத் தோண்டியெடுத்துத் தழைகளின் மத்தியில் வைத்துக் கட்டித் தலை மீது வைத்துக்கொண்டு காட்டைவிட்டுப் புறப்பட்டு ஊருக்குள்ளே சென்று சில பண்டு பலகாராதிகளை வாங்கி மூட்டை கட்டி இரண்டுமாடு கட்டியுள்ள ஒரு வண்டியை வாடகைக்குப் பேசி அதில் தழைமூட்டையைப் போட்டுவிட்டுத் தானும் உட்கார்ந்துகொண்டான். பிறகு வண்டிக்காரன் வண்டியையோட்டிக்கொண்டு ரோட்டுவழியாகவே வந்து அன்றிரவு சுமார் 7 மணிக்கொரு தோட்டத்தில் தங்கி மாடுகளை வண்டியிலிருந் தவிழ்த்துக் குளிப்பாட்டித் தீனி போட்டு கட்டிவிட்டு இருவரும் போசன முடித்துக்கொண்டு சற்று இளைப்பாறினார்கள். அப்போது,

வண்டிக்காரன்:—ஐயா நீர் கட்டாகக் கட்டிக்கொண்டு வருகிற தழைகள் என்? எதற்காகக் கொண்டு போகிறீர்கள்?

சாயபு:—அப்பா யானே நாட்டு வைத்தியன். சில மருந்துகள் செய்வதிற்காக இந்த மூலிகைகளைக் கொண்டுபோகிறேன். இந்த மூலிகைளகப்பட

மல் நான் என்ன கஷ்டப்பட்டேன் தெரியுமா? தெய்வச்செயலால் எனக்கிவை அந்தக் காட்டில் கிடைத்தன. அப்பா! போதும்! போதும்! நானிதற்காகப் பட்ட கஷ்டம். இந்தத் தழை யைச் சம்பாதித்த பின், அதை யென்னுயிர்போ லப் பாவித்து அதிஜாக்கிரதையாக எடுத்துக் கொண்டு போகிறேன.

வ—ன்:—அப்படியா எனக்குத் தெரியாது என்றதும்,

சாயபு:—சற்றுநேரம் யோசித்து, இவன் நாளையதினம் காலை தான் மறுபடியும் வண்டி கட்டுவான்போ லிருக்கிறது. நாளாய்விடில் மந்திரி வந்துவிட்டா லென்ன செய்வது ஆகையாலுடனே புறப்பட வேண்டும் என்று தன் மனதிலெண்ணி வண்டிக் காரனைப் பார்த்து "அப்பா நான் சீக்கிரம் போய் இந்த மூலிகைகளின் சாற்றைப் பிழிந்து மருந்து கள் செய்யவேண்டும். நாள் சென்றால் இவ்விலை கள் வாடிப்போகும். அதிக சாறும் வாராதாகையா லிப்போதே வண்டி கட்டினால் சீக்கிரம் போய் விடலாம். இல்லையேல் நான் உனக்கு வாடகை புத்துரூபாய் கொடுத்துவந்தும் பயனில்லாமற் போய்விடும். — — —

வ—ன்:—ஐயா நீர் உங்களுடைய சௌகர்யத்திற்குச் சொல்லுகிறீர்கள் மாடுகள் ஓரேமட்டாய் நெடுந் தூரம் நடக்குமாகில் கால் நோகாதா? வாயில்லா ஜீவன்க ளாயிற்றே. நாம் நாளை காலை வண்டி கட்டிப் புறப்பட்டுவிடுவோம்.

சாயபு:—முடியாது முடியாது, நான் உனக்கு இன்னும் இரண்டு ரூபாய் வாடகை அதிகம் வேண்டுமானு லுந் தருகிறேன் இப்போதே வண்டியைக் கட்டு என்றான். வண்டிக்காரன் நிலவுச்காலமா யிருந்த தாலும் ரூபாய் அதிகம் வருவதாலுஞ் சம்மதித்து வண்டி கட்டிவிட்டான் மறுநாட் காலை சுமார் பத்துமணிக்கு வண்டி மாளவதேசத்துக் கடை வீதியைச் சேர்ந்ததும் சாயபு வண்டியைவிட்டுக் கீழே யிறங்கி வண்டிக்காரனுக்கு பன்னிரண்டு ரூபாய்°சத்தம் கொடுத்துவிட்டு தழைக்கட்டைத் தலைமேல் தூக்கிக்கொண்டு தன்னுடைய வீட்டை நோக்கிச் சென்று பார்க்கையில் கதவு மூடப்பட் டிருந்தபடியால் தன் கையினுல் தட்டினார். அப் போது அவர் மனைவி "யார் அங்கே" என்று சொல்லிக்கொண்டு கதவைத் திறந்தாள். சாயபு தன்னை இன்னுனென்றறிவிக்காமல் தான் கொண்டு வந்த தழைக்கட்டுடன் விட்டினுட்சென்று தழைக் கட்டை யொரு பக்கத்தில் வைத்து விட்டுத் தன் பெண்சாதியைப் பார்த்து "பெண்ணே யான் தெரியவில்லையா, யான்தா னுன்னுசை மணுள னுகிய மதிசூதனன் என்றதும் அவர் மனைவி அவனது குரலினு லின்னுனென் றறிந்துகொண்டு அவனைக் கட்டியழுது முத்தமிட்டுத் தன்மைந் தனையு மழைத்தாள். சாயப்பு தன் மைந்தனையும் மனைவியையும் பார்த்து "நீங்கள் ஏன் வருத்தப் படுகின்றீர்கள். விதி யாரைவிடும். விதியை யனுப வித்தே தீரவேண்டும். நம்மாலாகக் கூடிய காரிய மென்ன விருக்கிறது? ஒன்றுமில்லை. அவனன்றி

யோ ரணுவுமசையாது; முன் ஜன்மத்தில் நாம் செய்த கன்மத்திற் கேற்றவாறு இந்த ஜன்மத்தில் சுகதுக்கங்களை யனுபவிக்கிறோம். சுகத்தை யனுபவிக்குங்கால் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி யிருப்பதும், துக்கத்தை யனுபவிக்குங்கால் துக்க சாகரத்தில் மூழ்கியிருத்தலும் அறிவீனருடைய தொழிலே யாகும். நமக்குக் கஷ்டம் நேரிடுங் காலத்து "உன் கோயிலிடியாதா, நீயுமொரு தெய்வமா" என்று கடவுளைத் தூஷித்தல் பழி பாவத்திற் கேதுவே யன்றி நியாயமாகுமா? செய்தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா லெய்த வருமோ விருநிதியம். "நாம் முன் ஜன்மத்தில் கடவுளை வழிப்பட்டு, அநேகவித தானதர்மங்களைச் செய்திருப்போமாகி லிந்தப்பிறப்பில் சுகமாக வாழலாம். அப்படிக்கில்லாமல் பூர்வ ஜென்மத்தில் கல்விச் செருக்கினாலோ செல்வச் செருக்கினாலோ, துர்ச்சாவகாசத்தினாலோ, கடவுளே கிடையாதென்றும், கடவுளைப்பற்றிப் பேசும் சாஸ்திரங்களெல்லாம் வேலைபற்றவர்களெழுதி வைத்த கட்டுகதைகளென்றும், மனம் போன போக்கெல்லாஞ்சென்று.

*"பரமேது வினைசெயும் பயனேது பதியேது பசுவேது
பாசமேது பத்தியே தடைகின்ற முத்தியே தருளேது பாவ
புண்யங்களேது, வரமேது தவமேது விரதமே தொன்றுமில்லை,
மனம் விரும்புணவுண்டு நல்வத்திரமணிந்து மடமாதர்தமை
நாடிநறுமலர் சூடிவிளையாடி மேற்கரமேவவிட்டு.................
தொட்டுவாழ்ந்தவரொடு கலந்து மகிழ்கின்ற சுகமே,

* திருவருட்பா.

கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனுங் கய வரைப்போல் திரிந்தவர்களிந்த ஜென்மத்திலதிக ஏழை களாகப் பிறந்து பிணியே குடிகொண்டு பேரின்பத்தை மறந்து, சிற்றின்பத்தின்மேல் மையலாகி புன்மாதருக் குட்பட் டுழன்று தடுமாறிக்கரையேறிப் பிழைக்க வழி தெரியாமல பசிப்பிணி வாட்டமிகவும் சகிக்கொணுத துன்பத்தையடைந்து அவற்றினின்றும் நீங்க வழி தெரியாமல் தற்கொலை புரிந்துகொண்டு விடுவார்கள். பின்னராவது இவர்கள் சுகப்பட்டார்களா? இல்லை இல்லை, ஏனெனில் தற்கொலை புரிந்திறந்த பின் அலகை யாகப்பிறந்து மந்திர வாதிகையிலகப்பட்டு அவதிப் படுகின்றனர். ஆகையால், இப்போ திப்பிரபஞ்சத்தில் மானிடர்களனுபவிக்குஞ் சுகதுக்கங்களெல்லாம் பூர்வ ஜன்மத்தின் பலனே யாகும். அதைப்பற்றி நம்மைப் படைத்த நான்கு முகங்களையுடைய பிரமனை நிந்தித்தல் நீதியாகுமா?

மனைவி:—நாயகா! நீரித்தனை காலமாகக் கண்ட கண்ட விடமெல்லாந்திரிந்து வேளை போஜன மில்லா மலும் மனக்கவலையாலும் அதிகம் இளைத்துப் போயிருக்கின்றீர்.

சாயபு:—அதற்கென்ன செய்யலாம். சந்தோஷமதிக ரித்துள்ள போது பருமனுதலும் துக்கமுள்ள பொது வாடிப்போதலும் மானிடர்களுக்கு சக ஜந்தானே. நான் இந்த மகம்மதிய கோலத்து டன் இவ்வூர் முழுதும் எத்தனை முறை சுற்றினு லும் என்னைக் இன்னுனெனக் கண்டுக் கொள்ள மாட்டார்கள்.

மனைவி:—ஆம். ஆம். நீர் உம்பழையகோலத்துடன் சேனாதிபதியைப் பொற்றேன்றினால் ஆபத்து வரும், இப்போது மணியோ பகல் ஒன்றாய்விட்டது. பகற்போஜனவேளையானபடியால் நீர் எழுந்து குளித்துவிட்டுப் போஜனம் செய்யும், அப்பா மீனவா! இப்போதே நீ கடைக்குச் சென்று சில பண்டு பலகாராதிகள் வாங்கிக் கொண்டுவா என்றதும் மீனவன் கடைக்குப்போய் விட்டான். சாயவும் குளித்துவிட்டு நேம நிஷ்டை பூசைகள் முடித்துக்கொண்டான். மீனவனும் வந்துவிட்டான். மூவரும் உட்கார்ந்துகொண்டு இதுகாறுந்தங்களுக்குண்டாயிருந்த துன்பங்களெல்லாம் பானுவைக்கண்டபனி போல நீங்கி நித்தியானந்தம் பெற்றவர்கள்போல சாப்பிட்டுவிட்டு மஞ்சத்தின் மீதுட்கார்ந்துகொண்டு தாம்பூலந்தரித்துப்பேச வாரம்பித்தார்கள். அப்போது,

மீனவன்:—தந்தையே! நீரென்ன காரணத்திற்காக இவ்வளவு சீக்கிரம் ஒரு கடிதமும் போடாமல் திடீரென்று இங்கு வந்துவிட்டீர்?

சாயபு:—மைந்தா நீ யெழுதிய கடிதம் எனக்குக் கிடைத்ததும் அதை வாசித்துப்பார்க்க எனக்கு அதிக துக்கம் வந்தது.

மீனவன்:—துக்கமா, ஏன்?

சாயபு:—நீங்களிவ்விடத்தில் செலவுக்குப் பணமில்லாமல் நகையைக் குதவை வைத்து சாப்பிடுவதாக எழுதினையே அதினால்தான். — — — —

மீனவன்:—இது என்ன அற்புதம்? எப்படியாவது பட்டினியில்லாமல் சாப்பிட்டுவந்தோமே?

சாயபு:—அது சரிடா, உன் தாயாருக்கு யான் பிரியத்துடன் செய்துபோட்ட நகைகளை யெல்லாம் குதுவை வைத்துவிட்டால் உன் தாயாருக்கு மனம் வருந்தாதா? ஆதலால் உங்களுக்கு வேண்டிய பணம் செலவுக்கு எப்படி யேற்பாடு செய்யலாமென் றெண்ணிக் கொண்டே கேமிநாட்டிலொரு பூஞ்சோலையிற் படுத்துக் கொண்டிருக்கையில்சாயங்காலம் மந்திரி சிவசன்மனவ்விடத்திற்கு வந்து அங்கு பாண்டுவாத்தியம் கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களையும் என்னையும் பார்த்து கிரீடத்தைத் திருடின வனிறந்துவிட்ட படியாலதைக் கொண்டுவந்தாலும் அதனிருப்பிடத்தைச் சொன்னாலும் இலட்சம் ரூபாய் இனும் கொடுக்கப்படும் என்று சொல்லிவிட்டு மறுதேசத்திற்குப் போகப் புறப்படுகையில், யானவனிடஞ் சென்று வணங்கி நீர் மாளவதேசத்திற்கு எத்தனை நாட் சென்று போவீரென்று கேட்டதற்கு ஒருமாதஞ் செல்லுமென்றான். அதைக்கேட்டதும் நாள் மறுநாளதிகாலையில் புறப்பட்டு முன் புதைத்து வைத்திருந்த கிரீடத்தை யெடுத்துக்கொண்டு ஒரு வண்டியிலேறிக் கடைவீதியிலிறங்கி வீட்டிற்கு வந்தேன்.

மனைவி:—கிரீடம் எங்கே?

சாயபு:—இதோ அந்தத் தழைகளின் நடுவில் மறைவாக வைத்துக் கட்டியிருக்கிறேன். மீனவா! அந்தக் கட்டை யவிழ்த்து அதன் நடுவிலிருக்கும் பெட்டியைக்கொண்டுவாவென்ற உடனே மீனவனும்பெட்-

டியைக் கொண்டுவந்து தகப்பனிடங் கொடுத்தான். அதைச் சாயபு வாங்கித் திறந்துப் பார்த்து அதனுள் பட்டுத்துணியில் சுற்றியிருந்த கிரீடத்தைக் கையிலெடுத்தனன்.

மனைவி:—அடடா! இதிலெவ்வளவு விலையுயர்ந்த கற்கள் பதித்திருக்கின்றன? இவை என்ன விலை பெறுமோ? இது நம்மிட மிருக்கக்கூடாது. இது சக்கரவர்த்திகளுடையது. இதை யெப்படியாவது நம்மரசனிடத்தில் கொடுத்துவிடுதல் உத்தமம். — — — — — —

சாயபு:—நானே இந்தக் கோலத்துடன் அரசன்முன் போனால் என்னைக் கண்டுபிடித்துக் கொள்ளான். ஆகையால் நான் போயிதை அரசனிடம் கொடுத்து விட்டு அவனால் கொடுக்கப்படும் இலட்சம் ரூபாயைக் கொண்டுவந்து உங்களிடம் கொடுத்து, பின் நான் எங்கு சென்று திரிந்தாலும் உங்களுக்கு ஆயுள்பரியந்தம் பயமில்லை. நானிந்தக் கோலத்துடனே அரண்மனைக்குப் போனால் மந்திரி சிவசன்ம னவ்விடமிருந்தால் என்னை நேமி நாட்டிலி ரண்டுதரம் பார்த்ததாக அரசனிடம் சொல்லிவிடுவானாகையா லவன் திரும்பி வருவதற்குள்ளாக நான் சென்று இனும் பெற்றுக்கொண்டு வந்து விடவேண்டும். சிவசன்மன் அரண்மனையிலிருக்கின்றானோ வெளி தேசங்களிலேயேயிருக்கின்றானோ தெரியவில்லை யென்று சொல்லிக் கொண்டே யிருக்கையில்.

மீனவன்.—தந்தையே! நான்நேற்று காவலர்களை விசாரித்ததில் மந்திரிவா இன்னும் ஒரு மாதம் செல்

னும் என்றார்கள். சாயபு சரி சரி நிரம்பவும் செளக்கியம். இப்போது மாலைக் காலமாய்விட்டபடியால் அரண்மனைக்குப் போவது தகுதியன்று. நாளை காலை சபை கூடியதும் நான் போகிறேன். என்று தீர்மானித்துக்கொண்டு அன்றிரவு வீட்டிலேயே தங்கிவிட்டான்.

## ஏழாவது அத்தியாயம்.

### இனாம் பெறவந்து சிறைப்பட்டான்.

நாம் இப்போது மந்திரி சிவசன்மனைப் பற்றிக் கவனிப்போம். நேமிநாட்டை விட்டு இரவில் நிலவு வெளிச்சத்திலேயே புறப்பட்டு விதள தேசத்தை யடைந்து அவ்வூரரசன் வீட்டிலன்றிரவு போசனஞ் செய்து படுத்துறங்கிப் பொழுது விடிந்ததும், காலைக் கடன்களை முடித்துக்கொண்டு போஜன காரியங்களானதும், அரசனிடம் சொல்லி அவ்வூரிலுள்ள மூத்தினர்களை யெல்லாம் வரவழைத்து, ஓர் பெரிய கூட்டமானதும் மந்திரி சிவசன்மன் கிரீடத்தைப்பற்றி பிரசுரஞ் செய்து அதைக் கொண்டு வருபவர்களுக்கு இனாம் கொடுக்கும் தொகையையும் தெரிவித்து விட்டு அவ்வரசனிடமுத்தரவு பெற்றுக்கொண்டு சுமார் அறுபது மைல் தூரத்திலுள்ள துளுவநாட்டை நோக்கிச் சென்றான். இந்நாட்டிற்குப் போகும்படியான வழியோ மிகவும் கரடுமுரடாயிருந்தது. முட்களெல்லாம் வழியில் சிதறிக்கிடந்தன. வரவர வெய்யலு மதிகரித்துவிட்டது. வழியில் கிணறு குட்டை ஆறு முதலிய

யாதொரு ஜலசாதனமுங் கிடையாது. தாகமோ அதி கரித்து விட்டது. வனாந்திரமான இவ்வழியிற் செல்கின்ற மந்திரிக்குப் பசியுமதிகரித்தது. என் செய்வானந்தோ, பாவம்.

"மானங் குலங்கல்வி வண்மையறி வுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியற்மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்துபோம்"

என்றபடி ஒரு காரியமும் செய்ய முடியவில்லை. குதிரையின் மீது பிரயாணஞ் செய்வதுங் கஷ்டமாயிருந்தது. என்ன கஷ்டம் வந்தபோதிலு மனுபவித்துத் தானே தீரவேண்டு மென்று தைரியங் கொண்டு, சிவசன்மா துளுவநாட்டை நோக்கியே சென்றான். அப்போது திடீரென்று அண்டாண்டபுவன சராசரங்களையு மழிக்கத்தோன்றிய ஆலகால விடத்தைப்போல ஒரு கொடிய புயற்காற்று வீசத் தொடங்கிற்று. அப்போது மந்திரியென்செய்வான் பாவம். புயற்காற்றைக் கண்டதும் குதிரை பயந்து முன்னோக்கிச் செல்லாமல் நின்று விட்டது. அந்தப் புயற்காற்றா லடித்துவரப்பட்ட சிறிய மண் தூசிகள் கூர்மையான அம்புகளை யெய்ந்ததைப் போல உடம்பை காயப்படுத்தின. கண்கள் நிறையத் தூசிகள் விழுந்ததினால் கண் திறக்கமுடியவில்லை. உடனே சிவசன்மா குதிரையைவிட்டுக்கீழேயிறங்கி அங்கோரடர்ந்த மரத்தினிழலில் குதிரையைக் கட்டிவிட்டு "அந்தோ தெய்வமே யானிப்போ தென்செய்வேன். வீடுவாசலை விட்டுப் பெண்டு பிள்ளைகளைப் பிரிந்து தனியாக இக் கொடிய காட்டிலலைந்திப் படுகின்ற என்னை யார் காப்பாற்றுவர்.

அன்ன ஆகாரமின்றி அவதிப்பட நேர்ந்ததே. இது பிரமன் எனக்கு விதித்த விதியோ. என் குதிரையு மென்னைப்போலத் தவிக்கின்றதே. இதுவும் அதனுடைய கன்மமோ. இக்கொடிய காட்டில் யார் எனக் கொப்பற்ற துணையாகத் தோன்றி யென் பசி நோயையும் தாகவிடாயையும் தீர்க்கப் போகின்றார்கள். என் வீட்டிலுள்ள பொருள்களெல்லாம் என்னை இவ்வமயங் காப்பாற்றுமா? என்ன துன்பம் நேரிட்டாலு மிவ்விடத்தில் யானு மென் குதிரையும் தானனுபவிக்க வேண்டும். இச்சமயத்திலென்னை அடியார்க் கெளியோனாகிய ஜெகதீசன்தான் காப்பாற்றவேண்டும். யானிப்போது இங்கனுபவிக்குந் துன்பம் பரமதயாநிதியாகிய அவருக்குந் திருப்தியாயிருக்கு மாகில் என் பழியை யவர் மீதே சுமத்தி உயிர் துறக்கச் சித்தமாயிருக்கிறேன். ஆ, சர்வலோக நாயகனே, புண்ணியப் பொருளாய் நின்றவனே, மெய்யன்பர்கள் வேண்டிய வற்றை இல்லையென்னாமல் கொடுத்தருளும் கற்பகமே, அநாதி நின்மலனே, ஆபத்பாந்தவனே, ஏ! பத்மனாபா, கஜேந்திரனுக்குற்ற வாபத்தை நீக்கி இரட்சித்த அச்சுதனே! அடியேனை இச்சமயம் காப்பாற்றல் வேண்டும். பார்ப்பதி பாகனே, கால காலனே காமனை யெரித்தோனே.

"அன்னையினும் பெரிதினிய கருணையூட்டு
மாரமுதே யென்னுறவே யரசேயிந்த
மன்னுலகிலடியேனை யென்னே துன்ப
வலையிலகப்படவியற்றி மறைந்தா யந்தோ
பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கேசூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தாலாற்றே
னென்னையுளங் கொள்ளுதியோ கொள்கிலாயோ
வென் செய்கேனென் செய்கேனென் செய்கேனே"

என்று பெருமானது திறத்தைப் பலவாருகப் பாடி யன்பு செலுத்திப் பின்னர் தனக்குற்ற பசிதாகத்தைத் தீர்த்துக்கொள்ள யாதொரு கனிவர்க்கங்களும் ஓடைகளுங் காணுமையால் துன்பமெய்தி யவ்விடத்திலேயே இளைப்பினல் சற்றே படுத்துறங்கினுன்.

அப்போதவன் கனவில் யாரோ ஒரு பெரியவர் ஆடையாபரணமின்றித் தோன்றி "அப்பா! சிவசன்மா! நீ ஏனிவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டு தனியாக இமயலோகத்திற்குச் செல்லும் பாதைக்கு நிகரான இக்கொடியக் கானகவழியாகப் போகின்ருய்? நீ சுத்தபத்தியக்காரன். உன் அரசனுடைய கிரீடமிப்போது மாளவதேசத்தில்தா னிருக்கிறது. நீ இனி மேலதைக் தேட முயல வேண்டியதில்லை. அது, தானே வந்துசேரும். நீ ஏன் வீண் எண்ணங்கொண்டு மெய் வாடுகிருய். உடனே யெழுந்து மாளவதேசத்திற்குப் போனல் அக்கிரீடத்தைக் காண்பாய். சீக்கிரம் எழுந்து பிரயாணப்படு" என்று அதட்டி யெழுப்பினது போலத் தோன்றவே, திடுக்கிட்டெழுந்து பார்க்கையில், தன்னுடன்பேசிக்கொண்டிருந்த பெரியவரைக் காணுமையால் "ஆ! ஆ! நம்முடைய மனே வியாகூலமே நமக்குக் கனவுகண்டது போலத் தோன்றிற்று. நாம் கண்ட கனவை யுண்மையென்று நம்பி மாளவதேயம் நோக்கிச் சென்றபின் அவ்விடம் அரசனுடைய கிரீடம் கிடைக்காம லிருந்தால், நாம் அரசனுக்கென்ன விடைபகர்வது? நாம்கண்ட கனவைச் சொன்னல் நம்புவனு? ஆகையால் என்னல் கூடிய பிரயத்தனம் செய்ய வேண்டியது தான். இப்போது புயற்காற்றும் கடவுள் கிருபையால் நின்றுவிட்டது வெய்யலுங் குறைந்து

விட்டது. நாம் குதிரைமீதேறிக்கொண்டு துளுவநாட்டுக்குச் சென்று நமக்குற்ற பசிதாகத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்" என்றெண்ணிக் குதிரையின் மீதேறிக் கொண்டு அதிவேகமாக ஓட்டிச் சென்றான். சுமார் பத்துமைல் தூரஞ்சென்றதும் அங்கு ஓர் தோட்டத்தையும் அதனுள்ளோரு சிறிய குடிசையையுங் கண்டு, குதிரையை நடத்தி, அங்கே யருகிலிருந்த தாமரைத் தடாகத்தைக் கண்டதும், குதிரையை விட்டிறங்கி பிறவிக் குருடனுக்கிரண்டு கண்களும் கிடைத்ததைவிட அதிக ஆனந்தங்கொண் டங்குசென்று, தானும் குதிரையும் தாகவிடாய் தவிர்ந்து சற்றுகளைதெளிந்த பின் அந்த குடிசையுள் நுழைந்து பார்க்கையில் அதனுள்ளொரு மூதவசி கண்களை மூடிக்கொண்டு தவஞ்செய்து கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் சிவசன்மன் நமஸ்காரம்செய்து, அங்கிருந்த மலர்களாலவரைப் பூசித்து இருகைகூப்பியெதிரே யொருபுறம் நிற்கையில் அந்த மகான் கண்திறந்து பார்த்து "அப்பா நீயார், யாது காரணம்பற்றி இக்கொடிய கானகத்திற்கு வந்தனை ?

மந்திரி:—பைரவணிந்த பரமனைப்போன்ற எம்பெருமானே! யானோ மாளவதேயத் தாசனுடைய முதல்மந்திரி; அடியேன் நாமதேயம் சிவசன்மன்; சில நாட்களுக்கு முன் எம்மாசனுடைய கிரீடம் களவு போயிற்று; அதைத்தேடித்திரிகின்றேன் என்றான்.

அப்போது அவர் சற்று நேரம் யோசித்து, சிரித்த முகத்துடன் "என்னகாரியம் செய்தாயப்பா, கிரீடமிப்

போதுன்னரசனுடைய தேசத்தில்தானிருக்கிறது. அது இன்னும் கூடிய சீக்கிரத்தி லரசனிடம் வந்துசேரும். ஆகையால் நீ நேராக மாளவதேசத்திற்குப் போனல் கிரீடத்தைக் காணலாம். இனிமேல் பற்பல யோசனைகள் செய்து மனம்போன போக்கெல்லாம் போய் வீணிலே யலைந்து திரியவேண்டாம். உடனே புறப்பட்டு மாளவதேயம் போ" என்முர். இதைக்கேட்டதும் சிவசன்ம னதிக ஆனந்தமுடையவனுப், தான் கண்ட கனவிற்கும் மகரிஷியினுடைய வாக்கிற்குமுள்ள ஒற்றுமையை நோக்கி, மாளவதேசத்திற்குச்செல்லத்தீர் மானித்து, மகரிஷியிட முத்திரவு பெற்று அங்கிருந்த கனி வர்க்கங்களையும் வேண்டியமட்டும் எடுத்துக் கொண்டு, தன் பரிமீதேறி வாயுவேகத்தைவிட அதிக துரிதமாக மாளவதேயத்தை நாடிவந்தான். நிற்க, நம் கதாநாயகனுகிய சாயபுவை சற்றே கவனிப்போம்

மறுநாள் பொழுது விடிந்ததும் சாயபு நித்திரை, விட்டெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு. போஜனஞ் செய்துவிட்டு தன் மனைவி மைந்தனிடமுத் திரவு பெற்று கிரீடத்தை யெடுத்துக்கொண்டு சாயபு வேஷத்துடனே அரண்மனைக்குச் சென்று அரசனுடைய சிம்மாதனத்திற்கெதிரே நின்று அவனை வணங்கினன்.

அரசன்:—நீ யார், உனக்குற்ற வாபத்தென்ன? நீ யேன் இவ்வளவு காலையிலிங்கு வந்தாய்?

சாயபு:—நான் துருக்கிதேசத்து வியாபாரி. வியாபாரஞ் செய்யும் பொருட்டாக வெளித்தேசங்கட்குச் சென்று ஓர் காட்டில் நுழைந்து போகையில்

ஆங்கோர் புதரிலிந்தப் பெட்டியைக் கண்டு திறந்து பார்க்கையில் — — — — — என்று சொல்லிக்கொண்டே பெட்டியைக் காண்பித்தான். மிருத்திக மகாராஜனதைக் கண்டதும், தன் கிரீடம் வைத்திருந்த பெட்டி யெனத் தெரிந்து கொண்டு சிம்மாதனத்தை விட்டுக் கீழே யிறங்கி வந்து, அதிக ஆவலுடனந்தப் பெட்டியைத் தன்னிருகையாலும் வாங்கித் திறந்து பார்க்கையில் அதனுள்ளிருந்த கிரீடத்தைக்கண்டு அதிகசந்தோஷித்து, பேச நாவெழாமல் அதிக ஆசையுற்றவனுய், தன்னை மறந்து, அதைக் திருப்பித் திருப்பிப் பல்காலும் பார்த்தபடியே "ஹா ஹா இதென்ன வாச்சர்யம்! போங்காலம் வந்தபோது தானே போய்விட்டது, வருங்காலம் வந்த போது தானே வந்துவிட்டது; இது என்னுடைய கிரீடமே யென்பதற்குச் சற்றேனு மையமில்லை. அந்தோ! இந்த கிரீடத்தைத் தேடிச்சென்ற மந்திரி யெங்கெங் கலைந்து திரிகின்றுனே அவன் கதி யென்னவாயிற்றோ, அவன் பெண்டு பிள்ளைகளெல்லா மிங்கு துக்கப்படுகின்றார்களே" என்று சொல்லிக்கொண்டே யிருக்கையில் — — —

சாயபு:—என்ன மகாராஜனே, ஒரு வாலிபன் ஓரழகிய பெண்ணை விவாகஞ் செய்துகொண்ட பிறகு தன்னைப் பத்துமாதகாலஞ் சுமந்து அதிக வருத்தப்பட்டுப் பெற்றுக் காப்பாற்றிவந்த அருமைத் தாயையும், தனக்குக் கல்வி கற்பிக்கவும் ஆடையாபரணங்கட்கும் வேண்டிய திரவியமுந் தந்து இரட்சித்த பிதாவையும் மறந்து விடுகின்றுனே,

அம்மாதிரியாயிற்றே உம் சங்கதி! தங்களுடைய கிரீடத்தைக் கொண்டு வந்த யெனக்கு வேண்டிய உபசாரங்கள் செய்து என்னை விசாரியாமல் நீரே அதிக ஆனந்தப் படுகின்றீரே, இது நல்ல வேடிக்கை — — — — —

அரசன்:—ஆம் ஆம். உம்மை உபசரியாமல் விட்டது என் பிசகுதான். நீர் இன்னும் பத்து தினம் என்னரண்மனையி லிருந்து, விருந்து போஜனம் புசித்துவிட்டு யான் கொடுக்கும் இனாமைப் பெற்றுக்கொண்டு போகலாம். உம்மை யென்னாயுளுள்ள வரையில் மறவேனென்பது சத்தியம் என்றான்.

சாயபு:—சற்று யோசித்து சிவசன்மன் வந்துவிட்டால் நமக்கோராபத்தாய் முடியும். அதுவன்றி யான் பத்துநாளிவ்விட மிருந்தால், நான் சேனாதிபதி யென்று கண்டுக்கொண்டா லென்ன செய்கிறது? என்றெண்ணி அரசனைநோக்கி மகாராஜாவே, என்னால் ஒரு நிமிஷம் கூட இவ்விட மிருக்க முடியாது. நான் வியாபார விஷயமாக உடனே போகவேண்டும். என்னுடன் வந்தவர்களெல்லா மென்னை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பார்களாகையாலெனக்குக் கொடுக்கவேண்டிய இலட்சம் ரூபாய் இனும் கொடுத்துவிட்டால் நானிப்போதே போய்விடுவேன்.

அரசன்:—சரி இதோ தருகிறேன். வாங்கிக்கொள்ளும் என்று தன் பொக்கிஷத்தைத் திறந்து நோட்டுகளும் சவரன்களுமாக வெண்ணிக்கொடுத்

துக்கொண்டிருக்கையில், குதிரையின் காலடிசப்தம் கேட்டது. சற்று நேரத்திற் கெல்லாம் மந்திரி சிவசன்மன், அரசனெதிரே வந்து வணங்கி, அருகே நின்றிருந்த சாயபுவைக் கண்டு "ஐயா சாயபு அவர்களே! ஏது இவ்வளவு தூரம்" என்றான் இதைக்கேட்டதும் சாயபு திகிலடைந்து, யாதொரு பதிலும் சொல்லாமல், அரசன் கொடுக்கும்பணத்தையெண்ணிபார்க்காமலேயேஎடுத்துப் பையில் போட்டுக்கொண்டான். இதைக்கண்டதும் சிவசன்மன், அரசனைப்பார்த்து "அரசே! நீவிர் எந்த அரசனுக்குப் பகுதிப் பணம் கொடுக்கிறீர். ஏன் இந்த சாயபு பணத்தை வாங்குகிறார்?

அரசன்:—மந்திரீ இந்த சாயபு யாரோ வென்றெண்ணிக் கொள்ளாதே. இவர்தான் நம் கிரீடத்தைக் கொணர்ந்தவர். இதோ பார்த்தனையா வென் கிரீடம்! இவர்தானிப்போது கொண்டுவந்து கொடுத்தார். அதற்கு இனும் கொடுப்பதாகப் பிரசுரப்படுத்திய தொகையைக் கொடுக்கிறேன், என்றான். உடனே மந்திரி கிரீடத்தை வாங்கிப்பார்த்து "அரசே, இந்த சாயபு யெனக்குத் தெரியும். இவரை யிரண்டுதரம் நான் நேமி நாட்டில் பார்த்தேன். முன்பு நம் கிரீடத்தைத் திருடி இராஜ தண்டனைக்கு பயந்து தற்கொலைப் புரிந்து கொண்ட சன்னியாசிக்குப் பத்துரூபாய் கொடுத்தவரும் இவரே.

அரசன்:—ஓ, ஓ, அப்படியா. சரிசரி, கிரீடத்தைத் திருடிய பின் அந்தச் சன்னியாசி பயந்து இவரிடம் கொடுத்துவிட்டுப் பத்து ரூபாய் பெற்றுக்

கொண்டான் போலும். இவரும் இந்த கிரீடத்தை யபகரித்துக் கொள்ளலாமென்றெண்ணி நமக்குப் பயந்து ஒளித்து வைத்திருக்கலாம். இப்போது கிரீடத்தைக் கொண்டு வருபவனுக்கு இலட்சம் ரூபாய் இனுமளிக்கப் படுமென்றதைக் கேள்விப் பட்டதும் இதைக் கொண்டுவந்து கொடுத்திருக் கலாம். இவர் இந்த இனும் ரூபாயை யெடுத்துக் கொள்ளட்டும். இவரை வீட்டிற்குப் போக விடாமல் ரௌரவ சிறைச்சாலையி லடைத்து வையுங்கள். நாளைய தினம் விசாரணை செய்து இவர் மீது குற்ற மில்லாவிடில் விடுதலை செய்து விடலாம்" என்றதும், காவலர்கள் சாயபுவை யழைத்துக் கொண்டுபோய் ரௌரவ சிறையி லடைத்து விட்டார்கள். பிறகு,

அரசன்:—மந்திரீ நீ செய்த நன்றிக்கு யானென்றும் உன்னை மறவாமலிருப்பேன். இந்த கிரீடத்தைப் பற்றி நீயதிகப் பிரயாசை யெடுத்துக்கொண்டு அநேக நாளாக வீட்டில் தங்காமல் வெளி தேசங் களிலேயே கால போஜன மின்றித் திரிந்தலைந்து மெய்யும் வாடி யிளைத்தாய். ஆகையால் நீ உன் னில்லம் ஏகி, உன் மனைவி மைந்தர்களுக்கும் மற்றுமுள்ள உறவினர்களுக்கு முன்னைப் பிரிந் திருந்ததால் நேரிட்டதுன் பத்தை யாற்றுதி என்றதும், மந்திரி அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

சிறைச்சாலையி லடைக்கப்பட்ட சாயபு அதிக துக்க சாகரத்தில் மூழ்கினவராய் 'ஐயோ, என் தலை விதி. நான் தலைமறைவாக முன் திரிந்த படியே பிரா

மற்படிக்கு, பணத்திற் காசைப்பட்டு இங்கு வந்து இந்த கதியடைந்தேன். என் மனைவியு மைந்தனும் என்னை யெதிர்பார்த்தபடியே யிருப்பார்களே, ஹா! ஹா? இதுவும் என் கன்மமா? இத்தேசத்தில் முன்பு சேனாதிபதியா யிருந்தபோது எத்தனை யரசர்களை இச் சிறையிலடைத்தேன்! குற்றமற்ற அரசர்களையும் வலி வற்ற சேனைகளையும் சிறையிலடைத்த அக்கொடிய பாவங்களெல்லா மொன்று சேர்ந்து என்னைப்பற்றிக் கொண்டனவோ, எனக்கிப்போ திருக்குந் துக்கத்திற் கெல்லை யேது, என்று நினைத்து துக்கித்துக்கொண்டே சிறைச்சாலையுள் சுற்றிப்பார்த்து வருகையில், அங்கே யெல்லாவித புஷ்பச் செடிகளு மிருந்தன. ஒரு பெரிய அடர்ந்த தூரமுமிருந்து. தன்னை யடைத்து வைத் திருந்த சிறைச்சாலை நான்கு பக்கமும் ஜலத்தால்சூழப் பட்டிருந்ததால் ஒரு தீவு போலிருந்தது. அந்த ஜலபாகத்தின் அகலம் சுமார் ஒரு மைலிருக்கும். அதற் கப்பால் ஒரு பெரிய சாலை தெரிந்தது—அந்த சாலை மார்க்கமாகப் போகின்ற வண்டிகளும் ஜனங்களும் அதிக சிறிய உருவமாகத் தோன்றின. இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு சேவகன் சாயபு விடம் வந்து "ஐயா உமக்குச் சாப்பாடு வந் திருக்கிறது. போய்ச் சாப்பிடும். இதோ நான்போய் குளித்துவிட்டு வருகிறேன்" என்று சேவகன் தன்னு டைய உடைகளைக் கழற்றிக் கரையோரத்தில் வைத்து விட்டு அங்குள்ள ஜலத்தில் குளிக்கப் போனான். சாயபு உடனே அந்தசேவகனது உடையைத்தரித்திக்கொண்டு அரண்மனையுட் பிரவேசித்து அரசனை வணங்கினான். அப்போது,

அரசன்:—அடே சேவகா என்ன சமாச்சாரம்?

சேவகன்:—ஐயா இப்போது கௌரவ சிறைச்சாலையி லடைத்து வைத்திருக்கிற சாயபு விடம், மந்திரி சிவ சன்மர் இத்தனைநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு, இப்போது தான் போய்விட்டார்.

அரசன்:—என்ன சமாச்சாரம் பேசிக்கொண்டிருந்தான்?

சேவகன்:—சாயபு மந்திரியைப் பார்த்ததும் தன்னை விடுதலை செய்யும்படிக்குக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். அதற்கு மந்திரி இன்றையதினம் இரவு எப்படி யாகிலும் விடுதலை செய்து விடுவ தாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். அதற்கு இனமாக சாயபுவும் மந்திரிக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் கொடுப்பதாக வாக்களித்தார். இது சங் கதி உங்களுக்குத் தெரிவிக்க வந்தேன். நீங்கள் தயவுசெய்து என்னுடன் காவலிருக்க இன்னும் கொஞ்சம் சேவகர்களை யனுப்பினால், நாங்களந்த சாயபுவைத் தப்பித்துக்கொண் டோடிப் போக முடியாமல் பார்க்கிறோம்.

அரசன்:—சரி நீபோ, இதோ அனுப்புகிறேன் என்று சொல்லி அவனை யனுப்பிவிட்டு, தன்சேவகர்களைப் பார்த்து "அடே இன்றையதினம் இராத்திரி நீங் கள் பத்துபேர் சென்று கௌரவ சிறைச்சாலை யண்டை யதிக ஜாக்கிரதை யாகக் காவல் புரிய வேண்டும்" என்றான். அரசனிட மிருந்து விடை பெற்றுச் சென்ற சாயபு சேவகனுடைய உடை றைக் கழற்றி, அவன் குளித்துவிட்டு வருவதற் குள்ளாக முன்னிருந்தபடியே வைத்து தன்னு

டையைத் தரித்துக்கொண்டு போசனஞ் செய்து விட்டுப்பின்னராங்கோர் மரத்தினீழலில் நித்திரை செய்தார். அப்பால் சாயங்காலம் 5 மணிக் கெழுந்து பார்க்கையில் இவனிருக்கும் சிறைச் சாலையைக் காக்க அநேக சேவகர்களிருப்பதைக் கண்டு "ஐயோ, இத்தனை சேவகர்களுக்குந் தெரியாமல் நானெப்படித் தப்பித்துக்கொண்டு போக முடியும். "நுணலுந்தன் வாயாற் கெடும்" என்பது போல நானே அரசனிடஞ் சென்று பேசி எனக் கிடரைத் தேடிக்கொண்டேனே. இவர்களெல்லாமின்றிரவு நித்திரை செய்யாமல் வாயற்படியண்டை ஆயுதங்களுடன் காவல் புரிந்த படியேயிருந்தால் நானெப்படி ஓடிப்போக முடியும். "சும்மாவிருந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி" என்பது போல ஒரு சேவகன் காவலிலிருந்தநாம்,நம் செய்கையினாலே இத்தனை பேருக்கும்பயந்து இருக்கநேரிட்டதே. எள்ளுகொடுத்து வந்ததற்குப் பதிலாக எண்ணெய் கொடுப்பதாக வாக்களித்து வந்த பேயின் கதையைப் போலாயிற்றேயென் கதி நான் எப்படியாவது இன்றிரவே சிறைச்சாலையை விட்டுத் தப்பித்துக்கொண்டோடிப்போய்விடவேண்டும். ஏனெனில் நாளை பொழுதுவிடிந்ததும் என்னையரசன் முன்னிருத்தி விசாரணை செய்து என் மீது குற்றஞ் சாட்டி, யெனக்கு இனமாகக் கொடுத்த ரூபாயையும் பிடுங்கிக் கொண்டு என்னையும் தண்டித்து விடுவார்கள். அனியாயமாக நானவதிப்படுவதுமன்றி, யான் அதிக பிரயாசை யுடனிங்கு வந்தும்

இனுமைப் பெற்றுக்கொண்டுபோய் என் மனைவி யிடம் கொடுக்காமலிருந்தால், அவர்கள் ஜீவனத் திற் கென்ன செய்வார்கள். இனிமே லெப்படி யாவது தப்பித்துக்கொண்டோடிப் போகும் படி யான மார்க்கத்தைத் தேட வேண்டியதுதான்" என்றெண்ணி ஜலக்கரையினோரமாக நடந்து போகையில், வெள்ளத்தினல் கொண்டுவந்து கரை யில் மோதப்பட் டிருந்த சில மாத் துண்டுகளைக் கண்டு, அவற்றை யெல்லாம் ஒன்ருய்ச் சேர்த்து வைத்துவிட்டு, இன்னம்கொஞ்சதூரம் போகையில் அங்கே ஒரு பெரிய கயிறு உருண்டையாகச் சுற்றிவைத்திருந்தது அதை யெடுத்துக்கொண்டு மாத்துண்டுகளிருந்த விடத்தில் போட்டு விட்டு சிறைச்சாலையில் தன்னிருப்பிடஞ் சென்று உட் கார்ந்திருந்தான். அப்போது இரவு ஏழு மணி யிருக்கும் நம் கதாநாயகனுடைய மனோ வேதனை யெல்லாம் நீங்கி விட்டதுபோலப் பூரணசந்திரனு முதயமானுன். ஒரு கிழவி சாப்பாடு கொண்டு வந்தாள். அதை சாயபு புசித்துவிட்டு நிலவின் வெளிச்சத்தில் படுத்துக்கொண்டான். வாயற் படியண்டை சேவகர்களெல்லோரும் அதிஜாக்கிர தையாகக் காவல் புரிகின்றனர். சுமார் இரவு 11 மணியானதும், சாயபு சந்தடி செய்யாம லெழு ந்து, முன் தான் மரத்துண்டுகளை சேகரித்து வைத்திருந்த விடத்திற்குச் சென்று, அந்த மரத் துண்டுகளை யெல்லாம் ஒன்றன் பின் னென்ருக வைத்து, மிக வலிவாகக் கயற்றினுற் கட்டி, ஒரு பெரிய தோணியைப்போலச் செய்து அங்கிருந் த

ஒரு பெரிய கொம்பை யெடுத்துக்கொண்டு, அந்த தோணியின் மீதேறி அதைக் கொம்பினுல் தள்ளிக்கொண்டே ஒரு மணி நேரம்பொறுத்து மறு கரைக்கு வந்துசேர்ந்தான். சேர்ந்ததும் அதிக ஆனந்த மடைந்து தன் வீட்டை நோக்கிச் சென்று கதவைத் தட்டினன் அப்போது சாயபு வரவை யெதிர்பார்த்திருந்த மனைவியும் திடுக்கிட்டுக் கதவைத் திறந்தாள். உடனே சாயபு உள்ளே சென்று தனக்கு நேர்ந்த ஆபத்துக்களை யெல்லாந் தன் மனைவி மைந்தனுக்குரைத்து "இனிமேல் நானிங்கிருப்பேனுகில் எனக்காபத்து வரும். இப்பொழுதே இந்த நிலவு வெளிச்சத்தில் நடந்து வெளிதேயஞ் சென்று இந்தக் கோலத்தை சீக்கிரம் மாற்றிவிடவேண்டும். உங்களுக்கு கை செலவுக்கு இதோ இலட்சம் ரூபாய் என்றுபணத்தைக் கொடுத்துத் தானுங் கொஞ்சம் பணமெடுத்துக்கொண்டு, தன் மனைவியிடம் விடை பெற்று வீட்டை விட்டுப் புறப்பட்டு மேற்குத் திசையை நோக்கி யதிக விரைவாக நடக்கலுற்றான்.

அதிகாலை சுமார் ஐந்து மணிக்கு ஒரு தோட்டத்தை யடைந்து அதைச்சுற்றிப் பார்த்துக்கொண்டே வருகையில் அத்தோட்டத்தில் இரவு தங்கியிருந்த சில வியாபாரிகள் தங்கள் தங்கள் குதிரைகளின் மீதும் எருதுகளின் மீதும் ஒட்டைகளின் மீதும் அநேக சாமான்களைப் போட்டுக்கொண்டுத் தங்களூருக்குப் போகப் புறப்பட்டார்கள். சாயபு அவர்களைக் கண்டதும் வந்தனை செய்து அவர்களுடன் வியாபாரியைப் போலக் கலந்து பேசிக்கொண்டு புறப்பட்டான். எல்

லோரும் சுமார் பகல் ஒரு மணிக்கு நாற்பது மைல் தூரம் வந்தார்கள். பிறகு சற்று இளைப்பாறி அவரவர்கள் கொண்டுவந்த கட்டமுதை யுண்டு நித்திரை செய்தார்கள். சாயபுவும் அவர்கள் கொடுத்த உணவை யுண்டு நித்திரை செய்யலுற்றார். அப்பால் சாயங் காலம் மூன்று மணிக்குப் புறப்பட்டு நெடுந்தூரம் சென்று நான்கு வீதிகள் கூடும்படியான ஓரிடத்தில் வந்ததும், எல்லோரும் வெவ்வேறாகப் பிரிந்து சென்றார்கள். சாயபுவும் அவர்களிடம் விடைபெற்று கொண்டு, தன் வீட்டை நோக்கிச் செல்வதாகச் சொல்லி யொரு வீதிவழியே நடந்து சென்றான்.

## எட்டாவது அத்தியாயம்.

### திருடன் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டான். மந்திரிக்கு ஆபத்து நேர்ந்தது. மந்திரி சாமியாராகி ஓர் முழுமூடனை சீடனாகப் பெற்றான்.

அப்பால் இரவு எழுமணிக்கு, மணிநகர் என்னும் ஊரையடைந்து ஆங்கோர் ஓட்டலில்சாப்பிட்டு அன்றிரவு நித்திரை செய்து, மறுநாள திகாலையி லெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, சில பலகாரங்கள் சாப்பிட்டு விட்டு அந்த ஓட்டலில் வாசிப்பு அறை Reading Room) உட்பிரவேசித்துச் சமாச்சாரப்பத்திரிகைகளை (News papers) யெடுத்து வாசித்துத் தன் தலை

விதியைப்பற்றி விசனப்பட்டுக்கொண்டிருந்து "ஐயோ
நானிந்த கோலத்துடனே யிருந்தாலென்னைக் கண்டு
கொள்வார்களே. நான் இப்போதே மாறுவேடந்
தரித்துக் கொள்ளவேண்டிய தவசியமா யிருக்கிற
தென்றெண்ணி அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு
மிகவும் அழகிய ஓர் நந்தவனத்தின் வழியாகப் போகிற
போதுபொழுது சாய்ந்தபடியால், அன்றிரவு அவ்விடம்
நித்திரை செய்துவிட்டு பொழுது விடிந்ததும் அங்
கிருந்த ஓர் தாமரைத்தடாகத்தில் கைகால் முகச்சுத்தி
செய்துகொண்டு அதிக விரைவாக நடந்து வழியி
லிருந்த கடைகளில் சில பண்டு பலகாராதிகள் வாங்கிப்
புசித்துவிட்டு, சாயங்காலம் நாலு மணிக்கு நிரணநாட்
டை யடைந்து, அவ்வூர் நாவிதவீதியினுட்பிரவேசித்து
ஒரு நாவிதனை யழைத்து அவனிடம் க்ஷவரஞ் செய்து
கொண்டு, தான் முன்பு வைத்திருந்த தாடி மீசைகளை
யெல்லாம் யெடுத்துவிட்டு தலையி லுச்சியிற்கொஞ்சம்
குடுமி வைத்துக்கொண்டு, குளித்துவிட்டுக் கடைவீதி
யுள் நுழைந்து பூணூல் வாங்கித் தரித்துக்கொண்டு
இரண்டு அங்கவஸ்திரங்கள்வாங்கி ஒன்றையிடுப்பிலணி
ந்து, இன்னொன்றை மடித்துமாலைபாகக்கழுத்திற்போட்
டுக்கொண்டு பிராமணனைப்போலத் துலங்கினன். நம்
கதாநாயகனுக்கு இப்போது பெயர் ராமய்யர் ஆகையால்
நண்பர்களே! இனிமேல் சாயபுவைப்பற்றிமறந்துவிடு
ங்கள். அப்பால் ஐயர் ஓர் ஓட்டலுக்குட்சென்று போ
சன முடித்துக்கொண்டும் சாயங்காலவேளையி லவ்வூரை
சுற்றிப்பார்த்துக் கொண்டும்காலத்தைக் கழித்துவந்தார்.

இது நிற்க மாளவதேசத்தில் மறுநாட் காலை
சேவகர்களெல்லாம் எழுந்து சௌரவ சிரைச்சாலையுட்

சென்று பார்க்கையில் சாயபுவைக் காணாமையால், மிக வும் திகிலடைந்து, அரசனுக்கென்ன பதில் சொல்லலா மென்று தோன்றாமல் விசனமேவிட்டு, எல்லோரு மொன்று கூடி அரசனிடஞ் சென்றுவணங்கி—"அநு தியாயுள்ள யெங்களைப் பாதுகாத்து வரும் பிரபுவே! நேற்றையதினம் கௌரவ சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சாயபு எப்படியோ தப்பித்துக் கொண்டு ஓடிப்போய்விட்டார். நேற்றையதினம் இர வெல்லாம் நித்திரை செய்யாமற்படிக்கு நாங்களெல் லோரும் அதி ஜாக்கிரதையாகவே, வாயற்படியண்டைக் காவற் புரிந்துகொண் டிருந்தோம். அப்படி யிருந் தும் எப்படியோ தப்பித்துக்கொண் டோடிப்போய் விட்டார். நாங்களென்ன செய்வோம். எங்களை மன் னிக்கவேண்டும். — — — —

அரசன்:—நேற்றையதினமே யெனக்கவன் மீது சந்தே கம் தான். அதற்காகவே யான் உங்களை யெல் லாமந்த சிறைச்சாலையண்டைக் காவல் புரியும் படி சொன்னேன் இவையெல்லாம் நம் மந்திரி சிவசன்மன் செய்த தந்திரமாகும். அடே சேவகா! நீ உடனேபோய் மந்திரி சிவசன்மனை யழைத் துவா சீக்கிரம், என்றதும் சேவகன் மந்திரி வீட் டை நோக்கிச் சென்று மந்திரியை யழைத்துக் கொண்டு வந்தான். மந்திரி அரசனை வணங்கி "அரசேஎன்ன காரணம் பற்றி யென்னை யழைத் தீர்களோ"?

அரசன்:—நேற்றையதினம் கிரீடத்தைக் கொண்டுவந்த வனை இன்றைக்கு விசாரணை செய்யும் பொருட் டாகக் கௌரவ சிறைச்சாலையிற் போட்டோமே

அவனெப்படியோ தப்பித்துக்கொண்டு போய் விட்டானும். — — — —

மந்திரி:--ஆ! ஆ! அவனென்ன சமர்த்தன் - எப்படி தப்பித்துக் கொண்டு போயிருப்பான் - இது மிகவு மாச்சர்யம்!

அரசன்:—இதென்ன வாச்சர்யம் - அவன் தருவதாக உனக்கு வாக்களித்த ஐம்பதினுயிரம் ரூபாயைப் பெற்றுக்கொண்டு நீயே யவனுக்குதவி செய்திருந் தால் அவன் தப்பித்துக்கொண் டோடிப்போய் விடுவது கஷ்டமா? வேலியே பயிரை மேய்ந்தால் அதற்கென்ன செய்யலாம்.

மந்திரி:--அரசே, நீர் என்ன என்மீது சந்தேகப்படு கிறீரோ விருக்கின்றதே-நேற்றையதின மவனைச் சிறையிலடைத்து விட்ட பிறகு அவனை யான் பார்க் கவேயில்லை. அவனு யெனக்கு ஐம்பதினுயிரம் ரூபாய் கொடுத்தான்? அதெல்லாம் சுத்தப்பொய், நீரதை நம்பவே வேண்டாம்.

அரசன்.—நீ நேற்றையதினம் பகல் 12 மணிக்கு அவ னுடன் பேசினபோது அவன் உனக்கு ஐம்பதி னுயிரம் ரூபாய் கொடுத்தா லவனை திருட்டுத்தன மாக விடுதலை செய்வதாக நீ யொத்துக்கொள்ள வில்லையா?

மந்திரி:—ஹா ஹா இதென்ன மோசம். மாபாவம் அரசே உண்ணும் வீட்டில் துரோகம் செய்தால் ரௌரவாதி நரகம் கிடைக்குமல்லவா, அப்படிப் பட்ட காரியம் யான் செய்யவேயில்லை. அவன் எப்படி ஓடிப்போய் விட்டானே எனக்குத் தெரியாது. — — —

அரசன்—ஏன் வீண்வார்த்தை யாடுகிறாய்? எனக்கு உன் சங்கதி தெரியும். நீ இப்போதே சென்று தேசமுழுதுஞ் சுற்றி நம் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்ட சாயபுவைப் பிடித்துக்கொண்டு வந்தால் உயிர் பிழைக்கலாம்; இல்லையேல் கட்டாயம் உன்னுயிரை வாங்கி விடுவேன், இது உண்மை. ஆகையால், இன்னம் கொஞ்ச காலமிப் பூவுலகில் உயிருடன் வாழ விரும்புவாயானால் இப்போதே சென்று அந்த சாயபுவையைக் கையும்பிடியுமாக அழைத்துக் கொண்டுவா. இனிமேல் மறு வார்த்தை பேசாதே, என்னெதிரில் அரைக்கணமும் நில்லாதே, 'சீக்கிரம்போ' என்று கோப முகத்துடனே சொன்னான். இதைக் கேட்டதும் மந்திரி திகிலடைந்து மனநடுங்கி "ஆ தெய்வமே! யானினி யவனை யெங்குகண்டு தேடுவேன். அவன் எப்படி விடுதலையாகி யோடிப்போய் விட்டானோ தெரியவில்லையே. அரசன் என் மீது சந்தேகப்பட்டிருக்கின்றானே, இதற்கென் செய்வேன். இனி மேலிவ்வூரில் நானிருப்பதால் பயனில்லை. நான் இப்பொழுதே ஓர் வேகமான குதிரையின் மீதேறிக் கொண்டு என்னால் கூடியவரையில் அநேக தேசங்கட்குச் சென்று தேடிப்பார்க்கிறேன். அப்பால் கிடைக்காமற்போனா லென்ன செய்கிறது. இவ்வூருக்குள் ளிருந்தால் அரசன் சிரச்சேதஞ் செய்து விடுவானாகையா லென் மனைவிமைந்தர்களையும் இதா பந்துமித்திரர்களையும் பிரிந்து எங்கேயாவது நம்மரசன் கண்களுக்கு மறைவாக உயிர்

வாழவேண்டியது தான். எனக் கிப்படிப்பட்ட ஆபத்தும் நேரிட்டதே, நானென்ன செய்வேன். கிரீடம் களவுபோனது முதல் என் வீட்டைவிட்டு வெளிதேசங்களுக்குச் சென்று மிகவும் அல்லல் பட்டேன், இப்போது கிரீடம் அகப்பட்டும் இன்னும் என்விதி யொழியவில்லையே, நான் முன்போலலைந்து திரியவேண்டியதுதான், எனக்குற்ற துணை யார்! நான் தேடிச்செல்பவனைக் கூட்டி வைப்பவர் யார்?

*‘‘அருட்சோதித் தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வ
மம்பலத்தே யாடுகின்ற வானந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி யீந்தருளுந் தெய்வ
மெண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந் தெய்வந்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்’’

என்று பற்பலவாறாகப் பெருமானைத் தியானித்து தன் மனைவிமைந்தர்களிடம் தனக்குநேர்ந்த வாபத்தைச் சொல்லித் துக்கித்து இனியிருந்தாலுயிர்ச்சேதம் வருமென்றஞ்சி, உடனே ஒரு புரவியின்மீதேறிப் புறப்பட்டு வடதிசை நோக்கி சென்று, வழியிலெதிர்ப்பட்ட காடு மலை வனம் வனாந்தரங்களை யெல்லாம் கடந்து, மணிநகர் என்னும் இராஜ்ஜியத்தை யடைந்து இராக்காலமாய் விட்டபடியால் அங்கு ஓர் சத்திரத்தில் தங்கி, தன் குதிரையை ஓர் மரத்திற்கட்டி, பின்னர் சிவசன்

* திருவருட்பா

மன்தனக்குநேரிட்டிருக்கிற துன்பத்தையெண்ணி யெண்ணி "எம்பெருமானே யானெங்கே சென்று சாயபுவைத் தேடுவேன். அவன் விடுவாசனு மெனக்குத் தெரியாது. அவன் அரசதண்டனைக்குப் பயந்துத் தன்னுயிரை மாய்த்துக்கொண்டிருந்தால் யானவனை யெவ்வூரில் கண்டுபிடிப்பேன். அவனைத் தேடிக் கொண்டு போய் என்னரசனெதிரே விடாமற்போனால் என்னை உயிர்ச்சேதஞ் செய்து விடுவானே, என்மீதுற்ற சந்தேகமும் நிவர்த்தியாகாதே, இதற்கு யானென் செய்வேன் கடவுளே,

* பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தா
லாவிக் குறுதுணை யாரையா பராபரமே!!

எனக்குற்ற இத்தகைய துன்பங்களெல்லா மெப்போது நீங்குமோ யானறியேன். ஐயனே! என் ஆயுள் முழுதும் கானகவாசியைப் போல வீட்டைவிட்டுத் திரிந்து வாழ்வதன் திருவுளச் சம்மதமோ? இனியானென் செய்வேன் என்று பரிதபித்து நித்திரை போய் விட்டான்.

மறுநாட்காலை நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, பசியதிகரிக்கவே, தான் வரும்போது அதிக மனவருத்தத்தினால் கைச்செலவுக்குப் பணமொன்றுங் கொண்டுவராமையால் இன்ன செய்வதென்று தோன்றாமல் "நானிந்த ஜன்மத்திலந்த சாயபுவைக் காணப்போகிறதே கிடையாது. அவனெந்த வூரிலிருக்கின்றானோ. யானெங்கு தேடுவேன் அவனை யினி யெப்படி கண்டுபிடிப்பது. அவனைக்

* தாயுமானவர் பாடல்.

கண்டு பிடிக்காமல் என் ஊருக்குப் போகமுடியாது. ஆகையால் நானேன் வீண் கஷ்டப்பட்டுத் துக்கத்திற் காளாக வேண்டும். இந்தக் குதிரையை யாருக்காவது விற்றுவிட்டு அந்தப்பணத்தை வைத்துக்கொண்டு காலத்தைக் கழிக்கலாம். இப்பொழுது அதிக பசியாயிருக்கிறது" என்று சொல்லிக் குதிரையைப் பிடித்துக்கொண்டு அவ்வூர் கடைவீதியுட் சென்று, குதிரை தீனியில்லாமையினாலும் மதிக உழைப்பினாலு மிளைத்துப் போயிருந்தபடியா லந்தக்குதிரையை யோர் வர்த்தகனுக்குக் குறைந்த விலைக்கே விற்று சில பண்டு பலகாராதிகள் வாங்கிப் புசித்துவிட்டு, பசிதவிர்ந்து மீதிப் பணத்தைப்பத்திரமாக வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகத் தினம் செலவழித்துப் பணமெல்லா மாய்விட்டபின் இன்னது செய்வதென்று தோன்றாமையால் காவியுடுத்து சன்னியாசி வேடம்பூண்டு ஊர்களில் சென்று பிச்சையேற்றுக் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கையிலோர் நாள், ஓர் சோலை மார்க்கமாகச் செல்லுங்கால் சன்னியாசிவேடம் பூண்ட சுமார் இருபது வயதுள்ள ஒரு வாலிபன் ஓடிவந்து அவரைக்கண்டு வணங்கிநின்று "சுவாமி! அடியேனைக் காப்பாற்றும் படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றதும் சதானந்தர் (சிவசன்மாவின் போலிப்பெயர்) அவனை யாசீர்வதித்து "அப்பா என்னடா உனக்குத் தேவை. உடனே சொல்" என்றார்;

சிறுவன்.—சாமி! எனக்கொன்றும் வேண்டாம். எனக்கு சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஆகையால் யான் உம்முடன் கூடவே நீர் செல்லுமிடமெல்லாம் வருகிறேன். நீர் என்னை

சீடனுகக்கொண்டு சாப்பாடுமாத்திரம் குறைவில்
லாமற் போடவேண்டும். அதுதானும்மை யான்
விரும்பிக் கேட்டுக் கொள்ளுவது என்றான். சதா
னந்தசாமியார் சற்றுநேரம் குலுங்கக் குலுங்க
நகைத்து "அடடா பிரேதமே, இப்படிப்பட்ட
முழு மூடனைக்கூடக் கடவுள் சிருஷ்டித்திருக்கின்
றரா, இந்தவயதி லிவனுக்குச் சாப்பாட்டுக்குக்
கஷ்டமா யிருக்கிறதென்று சன்னியாசி வேடம்
பூண்டு உணவுக்குப்பேயாய்ப் பறக்கிறானே. இருக்
கட்டும். சரணமென் றடைந்தவனைக் கைவிடுதல்
நீதியல்லவாகையா லிவனைக்கூடவே யழைத்துக்
கொண்டு போவோம்" என்று யோசித்து சிறு
வனைப் பார்த்து "அப்பா பயப்படாதே, நீ என்னு
டன்கூடவா; நான் சொல்கிறபடியேசெய் உனக்கு
யாதொரு குறைவும் வாராது.

சிறுவன்.—சாமி யென்னாலே கஷ்டமானவேலே செய்ய
முடியாது; ஆமாம் இப்பவே சொல்லிபூட்டேன்,
அப்புறம் என் பிராணனே வாங்காதீங்கோ என்
னமோ வேடிக்கைக்கி சொன்னேனண் ணிருக்கா
தீங்கோ, நீங்க சாப்பாடு யெனக்கு வவுத்து
நெரையபோடத்தான் ஒணும். — — —

சதானந்தசாமி.—அடடே இதென்ன பெரிய தொல்லை
யாய் விட்டது. இவனுக்குப் படிப்புத் தெரியு
மென்று நான் நினைத்தேன். இவன் பேசுவதைப்
பார்த்தாலிவன் முழு மூடனைப்போல் தோன்று
கிறதே, ஈபவர்தம் மனத்தினை சீர்திருத்தலெளிதி
லாகுமோ, அப்பா! உனக்குவாசிப்புத் தெரியுமா?

சிறுவன்.—எங்கட்பா யென்னை சின்னப்போ தெரு

பள்ளிகூடத்லே போட்டாங்கோ, நான் பள்ளி கூடம் செரியா போறதில்லே, பாடமும் படிக்கிறதில்லே. அதனுலே யென்னே ஒரு நாளு வாத்தியாரு பெரம்பாலே அடிச்சாரு அப்போ யெனக்கு ரொம்ப கோவம் வந்து என் பலகியே யெடுத்து வாத்தியார் தலமேலே யடிச் சூட்டு ஓடிப்பூட்டேன். அதிலிருந்து அந்த வாத்தியாருக்கு என்னே பாத்தா ரொம்ப காப்ரா தான்.

சதா-ர்.—சரி சரி ரொம்பவும் யோக்கியமான பிள்ளை என்னையுமப்படித்தான் செய்வாயோ ?

சிறுவன்:—சீச்சீ அப்படிச் செய்வேனு?

சதா-ர்:—என்னடா சீச்சீ யென்கிறுய் இப்போதே —

சிறுவன்:—இல்லேசாமி பேச்சி மொறமெக்கி சொன்னேன் நீங்கள் கொறைச்சலில்லாதே யென் வவுத்துக்கு சோறு போட்டாஉங்களெ யென் கொலெ தெய்வமாதிரி நெனைக்கமாட்டேனு என்றுன். இதைக் கேட்டதும் சதாநந்த சாமியார் இவன் அஞ்ஞான சாகரத்தில் மூழ்கி யிருக்கின்றுன், இவனைக் கரைதேற்றிவிட்டால் நல்லது, இவனுக்குண்மையான சாஸ்திரங்களைப் போதித்து நன் மார்க்கத்தை யனுசரித்துக் கடவுளைத் திரிகாலமும் வணங்கும்படி செய்யவேண்டும் என்று மனதில் தீர்மானித்துக் கொண்டுச் சிறுவனைப் பார்த்து "அப்பா அஃதிருக்கட்டும். நீ சன்னியாசி வேடம் பூண்டிருக்கிறுயே, உனக்கு சாஸ்திர விஷயங்களேதாவது விசாரணை யுண்டா? என்றதும் சிறுவன் கோபித்துக்கொண்டு" அடீட யென்னப்பா

சும்மா தொந்திரவு பண்றே, எனக்கு ஒரு எழவுந் தெரியாது போய்யா, இப்போ யெனக்குப் பசியெடுக்குது. — — — —

சதா-ர்:—என்னடா இழவு என்கிறுய் ?

சிறுவர்:—பின்ன யென்னுப்யா, பெரிய பேரெழவா போச்சி,பசியெடுக்குதுண்ணு சோத்தேகாணும்-

சதா-ர்:—ஏன் இந்த சன்னியாசி வேடம் பூண்டாய் ?

சிறுவன்:—எனக்கு சோருப்புட்ளே, ரொம்ப பசியாயிருக்குதுண்ணு,உன்னெப்போல ஒரு வேலமரக்கெட்டவனண்டே சொன்ன, சன்னியாசி வேஷம் போட்டுக்கோண்ணு சொல்லி,அவந்தானிந்த காவித்துணியே கொடுத்தான். இத்தே போட்டுக்குனு பிச்சை யெடுக்கப்போனகூட ஒரு ஓர்த்தன் "ஏண்டா தடிபம்மாதிரி யிருக்கிறயே எங்கணு போயி வண்டி யிழுக்கிறதுதானே யன்றுங்களே கண்டி சோத்தே போட்சதில்லே. அதனலேதானே இங்கே உங்களே பாத்தூட்டு ஓடியாந்தே.

சதா-ர்:—சரி நீ வா நாம் போகலாம் ?

சிறுவன்:—எங்கே யெனக்குப் பசி யெடுக்குதுண்ணு நீ யென்னுப்யா வீண்கதெ பேசரே.

சதா-ர்:—அப்பா நீவா, நாம் ஊருக்குள்ளே சென்று பிக்ஷையெடுத்து இருவரும் புசிப்போம்.

சிறுவன்:—ஆ ஆ ரொப்ப சந்தோஷம். ஜோக்,ஜோக்கு ஜோக்கு, ஜோக்கு, பல் ஜோக்கு — — —

சதா-ர்:—என்னடா, சோம்பேறிகள் பாடும்படியான பாட்டைப் பாடுகிறுய். உன்னுடன் வந்தா லென் பேர் கெட்டுவிடும் போலிருக்கிறதே ?

சிறுவன்:—இல்லேசாமி சந்தோஷத்திஞலே என்னே மறந்து பாட்ணே.

சதா-ர்:—சாப்பாடு என்ரு லுனக் கவ்வளவு சந்தோஷமா ?

சிறுவன்:—ஐயோ! என் சொல்றீங்கோ அந்த ஜிம் தடாக்கே

சதா-ர்:—அடே அப்பா எப்போதும் நல்லவார்த்தைகளே பேசு. அவனே அவனே யென்பதை விட சிவனே சிவனே யென்பது நலம்.

சிறுவன்:—அதெல்லாம் சர்தான் வாங்கோ, சீக்கிரம் போயி பிச்சை யெடுக்கலாம் வாங்கோ.

சதா-ர்:—சரி வா என்று பேசிக்கொண்டு இருவரும் புறப்பட்டு ஊருக்குட் பிரவேசித்து வீடுகள் தோறும் பிச்சையேற்றுப் புசித்துவிட்டுச் சற்று நேரம் இளைப்பாறி பின்னர் பிரயாணப்பட்டு நிரண நாட்டையடைந்து அன்றிரவு அவ்வூரில் பிச்சை யெடுத்துப் புசித்துவிட்டு ஒரு தோட்டத்தில் தங்கி நித்திரை செய்தார்கள்.

# ஒன்பதாவது அத்தியாயம்.

## திருடன் பிராமணனாய்விட்டான். மறுபடியும் நகைமூட்டையைத் திருடி ஓர் தாசியிடம் கொடுத்துவிட்டான். திருடன் சற்குரு உபதேசம் பெற்று ஆலயத்துக்குப் போகிறான்.

---

இது நிற்க, நிரண நாட்டில் சாயபு வேடத்தைக் கலைத்து விட்டுப் பிராமண வேடம் பூண்டுள்ள ராமய்யர் (மதிசூதனன் போலிப்பெயர்) அவ்வூரைச்சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையிலோர் நாள் அவ்வூரரசனுடைய அரண்மனையில் மங்கல கோஷங் கேட்டதும் அவ்வரண்மனையினுள்ளே பிரவேசிக்கையில், காவலரெல்லாரும் யாரோ ஒரு வைதீக பிராமணர் போகின்றார். இவர் புரோகிதரைச் சேர்ந்தவராக விருக்கலாமென்றெண்ணி யுள்ளே போகவிட்டனர். உள்ளே சென்ற இராமய்யர் அந்த பிராமணர் கூடியிருந்த விடத்தி லுட்கார்ந்துகொண்டுசுற்றிப் பார்க்கையிலாங்கோர் மூலையில் ஒரு சேவகனுடைய உடுப்பு சுற்றி வைத்திருந்தது. அதை யாருக்குந் தெரியாமலெடுத்துக் கொண்டு தன் உடையின்மீது தரித்துச் சேவகனைப் போல் அரசர்களெல்லாங் கூடி யிருந்த விடத்தில் போய் நின்றார். அப்போது அரசன் இவரும் தன்னரண்

மனைச் சேவகனென் றெண்ணி அவரைப் பார்த்துத் தன் கஜானா சாவியைக் கொடுத்து "அடே சேவகா! இந்த சாவியை மந்திரியிடம் கொடுத்து கஜானா வைத்திறந்து ஆயிரம் ரூபாய் கொண்டு வரும்படி சொல்" என்றான். ராமய்யர் அந்த சாவியைப் பெற்றுக்கொண்டு கஜானாவைத் தானே சென்று திறந்து அதிலிருந்து சுமார் ஐயாயிரம் ரூபாய் பெறுமான நகை மூட்டையை யெடுத்து ஜேப்பியில் போட்டுக்கொண்டு ஆயிரம் ரூபாயு மெடுத்துக்கொண்டு போய் ரூபாயையும் சாவியையும் அரசனிடம் கொடுத்து பின் அரண்மனையைவிட்டு வெளிப் போந்து மேலண்டை ராஜவீதிக்குச் சென்று அங்குள்ள தாசி மாணிக்க வல்லி வீட்டைக்கண்டு உள்ளே நுழைந்தார்.

இவரைக் கண்டதும் மாணிக்கவல்லி இவருக்குச் சகல மரியாதைகளுஞ் செய்து "ஐயா நீர் அடியாளை நாடிவந்த காரணமென்ன, தயவுசெய்து சொல்வீராக" என்றாள்.

சேவகன்:—நான் உன்னை நாடி இங்கு வந்தேன். இதோ இந்த நகை மூட்டையைப் பத்திரமாக வைத்துக்கொள் என்று கொடுத்து விட்டு, அவள் வீட்டிலேயே சற்றுநேரம் இருந்து, பிறகு இரவு சுமார் ஒன்பது மணியானதும் 'பெண்ணே மாணிக்க வல்லி! யானிப்போதே அடுத்த தேசஞ் சென்று உனக்கு விலையுயர்ந்த ஆடைகள் வாங்கிவர உத்தேசித்திருப்பதால் நீ இந்த நகைகளைப்பத்திரமாக வைத்துக்கொண்டுஎன்னிடம்ஐநூறுரூபாய்கொடு' என்று சொல்லிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு நேராக ஓர் காட்டிற்குச் சென்று அங்கு தான்

உடுத்திருந்த சேவகனுடையைக் கழற்றி ஒரு அடர்ந்த புதரில்போட்டு விட்டுப்பழையபடி பிராமண கோலத்துடன் அங்கோர் சத்திரத்திண்ணையில் அன்றிரவு நித்திரை செய்து விட்டு பொழுது விடிந்தது மெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு சில பலகாரங்கள் புசித்துவிட்டு அவ்வூரில் அதிக கீர்த்தி பெற்றிருந்த கல்விக்களஞ்சியமும் சாஸ்திர சாகரமுமாகிய சிவானந்த தேசிகரைக்காண விரும்பி அவ்வூர் ஞானதேசிகர் மடத்துள் சென்று, அங்கிருந்த அடியார்களை யெல்லாம் வணங்கி, அம்மடாதிபதியாகிப் சிவானந்த தேசிகரைக், கண்டதும் சிரமேற் கைகூப்பி அஞ்சலி செய்து அவருத்தரவு பெற்றுக்கொண் டெதிரே யுட்கார்ந்தார். இந்த மடாதிபதியாகிய சிவானந்த தேசிகர் முன்னிருந்த ஞான தேசிகருடைய பரம்பரையைச் சார்ந்தவர். இவருக்கு இப்போது சுமார் 25 வயதிருக்கும். இவர் குருவினிடத்தில் அதிக பக்தி வைத்து சகல நூல்களையும் சந்தேகமறக் கற்றவர். ஞானமார்க்கத்தைப் போதிப்பதில் கைதேர்ந்தவர். இவருடைய பெருமை அவ்வூரிலுள்ளோர்களுக் கெல்லாம் தெரியும். இவர் வெளியே புறப்பட்டால் அநேகர் இவரடியிற்பணிந்து தங்க ளன்பார்ந்த பக்தியைச் செலுத்துவார்கள். இவருக்குப் பொருந்தியுள்ள இலட்சணங்க ளெல்லாவற்றோடு இவர் யௌவன பருவத்தையு மடக்கியாண்டார். இவரைப்போல் மகா யோக்கியரும், யாவர்க்கும் இதஞ் செய்வாரும் கிடைப்பது அருமையினுமரு

மையாகும். இது நிற்க ராமய்யர் சிவானந்த தேசிகர் எதிரே உட்கார்ந்ததும் அவர் "ஐயா நீவிர் யார் ஏன் இங்குவந்தீர்?" என்றார்.

ராமய்யர்.—சுவாமிகளே அடியேனுக்கு இப்போது வயது சுமார் நாற்பது ஆகிறது. இப்பிரபஞ்சத்தி லனுபவிக்க வேண்டிய இன்பதுன்பங்களை யெல்லா மனுபவித்தாய் விட்டது. இனிமேல் பரலோக சுகத்தை நாடி அதற்குரிய சாதனங்களைக் கற்றுக்கொடுக்கும் திறமை வாய்ந்த ஒரு சற்குருவைக்காண ஊரெல்லாம் தேடித்திரிந்து கடைசியாக இவ்வூரில் உம் திவ்ய திருநாமத்தையும் நன்னடக்கையையும் கீர்த்தியையும் கேட்டு மிகவும் வியந்து இங்குவந்தேன். அடியேன்மீது கிருபா கடாக்ஷம் வைத்து இரட்சித்து நன்மார்க்கத்தைப் போதிக்கும்படியாக மிகவும் பக்தி வினயத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவா-ர்—ஹா ஹா மிகவும் சந்தோஷம். நீ கரையேறும்படியான காலம் வந்துவிட்ட படியால் தான் உனக்கிந்த நற்குணம் தோன்றிற்று. இப் பிரபஞ்சத்தில் மனிதர்களாய்ப் பிறந்த எல்லோரும் துன்பத்தை யனுபவிக்கின்றார்களே யொழிய சுகத்தை யனுபவிக்கிறார்களில்லை.

* "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினு மரிதரிது காணிப்பிறவி தப்பினு
லெப்பிறவி வாய்க்குமோ யேதுவருமோ அறிகிலேன்...

என்று சான்றோர் கூறியுள்ளாராகையால் பெறுதற் கரியதாகிய மானிடப் பிறவிபெடுத்து

* தாயுமானவர் பாடல்.

மெய் வாய் கண் மூக்கு செவி என்கிற பஞ்சேந்திரியங்க ளாலும் மனோவாக்குக் காயங்களாலும் பிறருக்கு யாதொருகெடுதியுஞ் செய்யாமற்படிக்கு இப்பிரபஞ்சத்தை யெல்லாம் படைத்த கடவுள் ஒருவருண்டென்றும் அவர், பிறவிகள் செய்யும் பாவபுண்ணியங்களுக் கேற்றவாறு சுக துக்கங்களைத்தருவரென்றும்யோசித்து, மறுபடியுமோர் தாயின் கருப்பாசத்தில் பத்துமாதகாலம் கட்டுப்பட்டிருந்து ஜலம் பூரித்தல், உதிராக்கினியினால் மோதப்படுதல், பிரசூதவாயுவினால் முறித்துத் தள்ளப்படுதல், சிறிய வழியாக நெருக்குண்டு தலை கீழாக வருதல் முதலிய கர்ப்பாவஸ்தைகளை யெல்லா மனுபவித்துப் பிறந்தபின் மாயாவிலாசமாகிய இப்பிரபஞ்சத்தில் துன்பத்துக் கேதுவாயுள்ள சிற்றின்பங்களை யெல்லாம் பேரின்பமெனக் கருதி அவற்றில் மூழ்கிப் பின்னர் கடைத்தேற வழி தெரியாமல் அந்தோ! அநேகர் வீணாக் காலங்கழித்துத் தாங்களனுபவிக்கும் வாழ்வெல்லாம் நிஜமென்றும் அவை நீடித்திருக்குமென்றும் நம்பியிருக்கும் மானிடர்களுக்கு ஆயுள்முடிவான பின் நமன் பாசக்கயிற்றால் கட்டி யிழுத்துக் கொண்டு போகிறபோது

* கோடிபொன் னளிப்பனின்றே கொடின் ஓர் மாத்திரைக் [குள்
ஊடிய கிளைக்கோர் வார்த்தையுரைத் தடைகுவ னென்றாலுந்
தேடிய காலதூதர் சிமிழ்த்தல்விட் டொழிவரோ......... .....

அஃதன்றி வாழ்வுஞ் செல்வமும் மனைவிமக்களும்

* குசேலோ பாக்கியானம்.

உதவிசெய்வார்களோ. கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில் வேகக்கண்டும் அதன் மூலமாக வாவது நம் வாழ்வெல்லாம் சுத்தப் பொய் வாழ்க்கை யென்று தெரிந்துக் கொள்ளாமல் எக் காலத்திலும் ஸ்திரமாகவே நம்முடைய காயம் இருக்குமென்றெண்ணி வேண்டிய லௌகிக சாரி யங்களைச் செய்துகொண்டு கடவுளைவணங்கிப் பூசி யாத உலுத்தர்களுக்கு என்ன சொல்லலாம். வண் டிச்சக்கரத்தைப்போல் இப்பிறவிசுழன்றுக்கொண் டே வருமென்பதை யுணர்ந்து மறுபடியுமோரன் னையின் கருப்பக்குழியில் விழாமற்படி காக்கும் மூவாமருந்தாகிய எல்லாம் வல்ல பெருமானது திருவடித்தாமரைகளைத் தேட முயல்வாரில்லையே.

ராம-ர்.—சுவாமிகளே! நீர் சொல்லி வந்த விஷயங்க ளெல்லாம் மாணிக்கத்தைப் போல விலையேறப் பெற்றவைகளே. இப்படி ஒருவனுக்குப் பிரபஞ்ச மெல்லாம் கானனீர், கிளிஞ்சல் வெள்ளி, மலடி சேய், முயலின்கோடு கனவைப்போல சுத்தப் பொய் யென்று உதாரணங்களுடனே யெடுத்துக் கூறினல் யார் தான் சம்சாரத துன்பத்தை விட்டு ஞான மார்க்கத்தைக் கைக்கொள்ள உம்மைப் போன்ற ஓர் சற்குருவைத் தேடமாட்டார்கள்? நீர் சொன்ன அருமையான விஷயங்களி னுண்மையை யறிந்து கடவுளின்மீது பக்தியாயிருந்து நல்ல வழியாகிய சன்மார்க்கத்தை யனுசரிக்கக்கூடாதா, இதைவிடஇன்னும் என்ன மாதிரி உபதேசஞ் செய்தால் இந்தப் பாமர ஜனங்களுக்கு உண்மை தெரியமோ?

சிவா-ர்.—ஐயா நீரப்படி யெண்ணவேண்டாம். இப் பிரபஞ்சத்தில் மானிடராய்ப் பிறந்த ஒவ்வொரு வரும் மாயை யென்னும் அஞ்ஞானத்தால் மூடப் பட்டு, கள்ளுண்ட வெறியர்களைப் போலச் செய்வ தின்ன தென்று தோன்றாமல் மனம்போன போக் கெல்லா மலைந்து துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக் கின்றனர். ஓராசிரியன் மூலமாக நற்போதனை கள் பெற்றுத் தங்களை மயக்கியிருக்கும் மாயை யென்னும் திரையை நீக்கிப் பார்க்கும்போது சுத் தப்பிரம்ம மின்னதென்றும், கடவுள் ஒருவரே யென்றும், அவன் குலமிலான், குணங்குறியிலான் குறைவிலான் கொடிதாம் புலமிலான், தனக் கென்ன ஓர் பற்றிலான், பொருந்தும் இல்லம் இலான், ஐமைந்தர் மனைவியில்லான், சஞ்சல மிலா னென்றும், முத்தி தருவதற் கேதுவானவ னென் றும் அறிவார்கள். அஃதன்றி, மாயாபாசத்தால் கட்டுப்பட்டிருக்கின்ற பேதையர்களுக்கு என்ன உண்மைபோதித்த போதிலும் அவர்கள் செவிக்கு இன்பம் தராது. அதை யேற்றுக்கொள்ள மாட் டார்கள். போதிப்பவனையும் வெறுப்பார்கள். உலகத்திலுள்ள மண், பெண் பொன்னாகிய மூவா சையும் விட்டு சுத்த ஞானத்தையே நம்பித்துற வறம் பூண்டு மேலான பதவி யடைந்த ஓர் ஞானி

"விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே உடலைச்
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்—பட்டதுபட்
டெங்நேமுஞ் சிவனை யேத்துங்கள் போற்றுங்கள்
சொன்னேனிதுவே சுகம்"

என்று சொல்லியிருந்தும் அதை வாசித்தவர்க

ளெல்லோரும் ஒரு நாளைக்கு ஒரு நிமிஷமாவது கடவுளின் மீதன்பு செலுத்துகிறார்களில்லை, அல்லது அரிய விஷயங்களை யெடுத்துச் சொல்லும் படியான புராண சாஸ்திரங்களை யாவது வாசிக்கின்றார்களில்லை. ஜாவளி தில்லாலே, டப்பா முதலிய பாடல்களைத் தினம் தினம் தவறாமல் வாசித்துக்கொண்டு பாராயணஞ் செய்கின்றார்களே, பகவானுடைய பெருமைகளை யெடுத்துப்பேசும் படியான திவ்விய பிரசங்கங்களுக்குப்போகிறார்களில்லை பணம் எவ்வளவு செல வழித்தாகிலும் நாடகத்திற்குப் போகின்றார்களல்லவா ? ஆலயங்களில் திவ்யதிருவிழாக் காலங்களில் சுவாமி வீதிவலம் வரும்போதாகிலும் சுவாமியைத் தரிசிக்கச் செல்பவர்கள் கடவுளின் மீது அன்பைச் செலுத்தி வணங்குகின்றார்களா ? இல்லையே. குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்டதுபோல, அங்கு தேவதாசிகள் போன்று தம்மை யலங்கரித்துக்கொண்டு தங்கள் மாயக் கண்வலையினால் பாலியர்களையும், பணக்காரர்களாகிய மதயானைகளையும் மயக்க வந்து நிற்கும் விலைமாதர் மீது கவனம் செலுத்திவிட்டுப் புண்யம் சம்பாதிக்கப்போய் பாவம் சம்பாதித்துக்கொண்டன்றோ மீள்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் அஞ்ஞானமும் அவரவர்கள் பூர்வத்தில் செய்த கன்மமுமே யாகும்.

ராமய்யர்.—சுவாமிகளே! நீங்கள் அடியேன் மீது கிருபை வைத்து அநேகமேலான விஷயங்களைப் போதித்தீர். இதற்கு யானென்ன உபகாரம் செய்யப்போகின்றேன், நீர் எனக்குச் செய்யாமற் உதவிக்கு என் உடல் பொருள் ஆவி மூன்செய்த றையு மின்றே யுமக்குத்தத்தஞ் செய்தவனாகி உம்மை யென்னுயுளுள்ள வரையில் மறவேன்.

எனக்குப் புராணங்களைப் படிக்க வேண்டுமென்று ஆசை யதிகமாயிருக்கிறது. ஆகையால் தாங்கள் தயவு செய்து என்ன புராணங்களை வாசிக்கலாமென்று அருள் புரிவீர்.

சிவா-ர்:—அதிக ஆனந்தமாக இவரை யழைத்துக் கொண்டு தன்னுடைய வித்தியா அறைக்குட் சென்று அங்கிருந்த பீரோக்களைத் திறந்து புஸ்தகங்களை யெல்லாம் எடுத்துக் காண்பித்துவிட்டு, பிறகு பீர்வைகளை யெல்லாம் சாத்தினர்.

ராமய்-ர்.—சுவாமிகளே! அடியேன் வந்து வெகு நேரமாகிறது, உமக்கு அதிக கஷ்டம் கொடுத்துவிட்டேன். அதற்காக அடியேனை மன்னிக்கும்படியாகப் பிரார்த்திக்கின்றேன். எனக்கு வீட்டிற்குப் போக உத்திரவளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என்றுசொல்லிவிட்டு பிரியாவிடை பெற்று மடத்தை விட்டு வெளியே வந்து ஓட்டலுக்குச் சென்று போஜனஞ் செய்து விட்டு சற்று நேரம் நித்திரை செய்தபின் சுமார் நாலு மணிக்கு எழுந்து சிவானந்த தேசிகர் போதித்த விஷயங்களை நினைத்து அவருடைய சாமர்த்தியத்தை வெகுவாக மெச்சிப் புகழ்ந்து அவ ருரைத்தபடியே கோயிலுக்குச் செல்லத் தீர்மானித்து கைகால் சுத்திசெய்துகொண்டு விபூதி யணிந்து அவ்வூரிலிருந்த ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் ஆலயத்துக்குச் சென்று அங்கு பிரதிஷ்டை செய்துள்ள கடவுளை வணங்கி, பின்னர் பலிபீடத்திற் கெதிரே யுட்கார்ந்து சற்று மனதை

ஒறுமைப்படுத்திக் கடவுளைத்தியானஞ் செய்ய வாரம்பித்தார்.

அப்போது கோவிலுக்குள் இரண்டு சன்னியாசிகள் வந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு வயது நாற்ப திருக்கும். இன்னொருவன் அவருடைய சீடன். அவனுக்கு வயது இருபது இருக்கும். இவ்விருவரும் பலிபீடத்தினெதிரே நின்றூர்கள். அப்போது,

சீடன்.—அடே அப்பா! இதென்ன பெரியமரமாட்டம் ஒரு தடியனைப்போல கம்பம் நிக்கிதே. இதுக்கு மேலே பொன்னுபூசனுப்லே மினுக்குதே — — —

குரு.—அடே சீடா! கத்தாதே, இதுதான் துவஜஸ்தம்

சீடன்.—ஏன்னுது இதோ நீட்டா நிக்குதே மானம் பாத்துக்குனு அதுதானு சாமி — — —

குரு.—சொல்வதைக் கவனி. இந்தக் கட்டடம் தேவாலயம். நீ என் கூடவா. நான் ஒவ்வொரு கடவுளாகக் காண்பித்து வருகிறேன்—என்றழைத்துக் கொண்டுபோய் விக்கிரகத்தினெதிரே நிறுத்தி வணங்கினர்.

சீடன்.—ஐயய்யோ! ஐயய்போ!! என்ன அணியாயம். இவன் யாரோ தெரியலியே! இவன் வவுத்தே பாத்திங்களா, நானு மெத்தினியோ பேரேபாத்தேன் இம்முத்துண்டு மனுஷனுக்கு இவ்ளோ பெரிய வவுரு யார்க்குமில்லெ. இவனலே நடக்க முடியலியாங் காட்டியும், அதனலே வவுத்தே போட்டுகினு, தவளக்கா வாட்டம் காலே பாப்பிக்கினு குந்திகினுக்கிருன். அடே அப்........

குரு:—சிஷா! அவசரப்படாதே, கத்தாதே, இது தான் முதற் கடவுள்

“ என்னரே யாயினும் யாவதொன்றெண்ணுதன்
முன்னரே யுனதுதாள் முடியுறப் பணிவரே
லன்னர் தஞ்சிந்தை கோலாக்குதி யல துனை
யுன்னலார் செய்கையை யூறு செய்திடுகீ ”

என்று பரமசிவமே இவருக்கு வரம் கொடுத்திருப்பதால் இந்தப் பூலோகத்திலும் தேவலோகத்திலும் யாராயிருந்தாலும் இவரை நினைத்து வணங்காமற்படிக்கு எந்த காரியம் செய்தாலும் அது முடிவுபெறாது. நீ இவரை அவமரியாதையாகப் பேசினாய், ஆகையாலந்தப்பாவம் நீங்க இவரெதிரில் நின்று காதைப்பிடித்துக்கொண்டு தோப்பக்கரணம் போடு என்றான். இதுகேட்டதும் சீடன் விக்கிரகத்திற் கெதிரே அதிகசமீபத்தில் போய் விட்டான். அப்போது

குரு.—அடே அப்பா எங்கேபோகிறாய்?

சீடன்.—சாமி கிட்ட

குரு.—ஏன்?

சீடன்.—அவர் காதேபுடுச்சிகுனு தோப்பணம்போட--

குரு.—நகைத்து அடே, சரி, ரொம்பசரி, சுத்த மடையன் நீ.

சீடன்.—நீங்கதானே சொன்னீங்கோ

குரு—அப்பா! உன் காதைப்பிடித்துக் கொண்டு சுவாமிக்கெதிரில் நின்று போடு.

சீடன்.—ஓ, ஓ அப்படியா இதோ போட்ரேன், எண்ணிக்கிங்கோ என்று சொல்லி ஒன்பதுதாம்

போட்டுவிட்டு, சிரசில் குட்டிக்கொண்டு, சாமி! இந்த சாமி பேரென்ன?

குரு.—இவர் பெயர் விக்கிந விநாயகர்.

சீடன்.—என்ன? வக்கிர நாயகரா?

குரு.—என்னடா அது, விக்கிநவிநாயகர் என்று சொல்.

சீடன்.—ஓ, ஓ இப்போதெரிஞ்சிகினேன், எங்கஊர்லே ஓர்த்தரு இருந்தாரு, அவுரு செத்துப் பூட்டாரு அவுர்பேரு விக்ரம நாக்கிரு அவுர்தான யிங்கே யிருக்காரு.

குரு.— இல்லையடா இவர்பேர் கணபதி

சீடன்.—ஓ, ஓ சர்தான் சர்தான் எங்கம்மாகூட புள்ளார்செவுத்தி கும்புடுவாங்கோ, அப்போ தொப்பக்கணபதி கும்புடுவாங்கோ

குரு.—ஆமாம், ஆமாம், அந்தகணபதிதான் இவர் வாவென்று சொல்லி சீடனை யழைத்துக் கொண்டு அருகிலிருந்த மற்றொரு விக்கிரகத்தினிடம் சென்று எதிரே நின்று கைகூப்பி வணங்கினார்.

சீடன்.—சாமி இது யார்?

குரு.—இவர்தான் சிவசுப்பிரமணியக் கடவுள். இவர் பக்கத்திலிருப்பவரிவருடைய மனைவிகள்.

சீடன்.—சற்று கடவுளை யுற்றுப் பார்த்து, அப்பாடா இதென்ன அக்கிரமம். இந்தக் கலியுகத்திலே அவனவன் ஒரு கலியாணம் பண்ணிக்கிரத்துக்கு துட்டாப்டாதே அவதிப்படரான். அப்படியா கடன் வாங்கி கல்யாணம் பண்ணிக்கின கூட பெண்டாட்டியே காப்பாத்த சோத்துக் கலையரான். இதென்னடாப்பா, இவனுக்கு ரெண்டு

பொண்டாட்டி? எப்டீ தாந்துட்டு ஆப்டுதோ? கல் கல்யாணத்துக்கு எப்பிடி பொழு. — — — —

குரு.—அடே, இவர்தான் என்னுடைய குருஸ்வாமி, இவர் தேவர்களைக்காப்பாற்றும் பொருட்டாகவே அவதாரம் செய்தவர். இவர் அவதரித்து, தேவர்களுக்கிடுக்கண் விளைவித்து வந்த அசுரர்களை நாசமாக்கினர்

சீடன்.—அது சேர்தாய்பா, இவுருக்கு பொண்ணை குடுத்தது யாரு?

குரு.—இவர் சூரர்களை யெல்லா மழித்தபின் தேவர்கள் மனமகிழ்ந்து, தேவேந்திரனுடைய பெண்ணாகிய தெய்வயானை அம்மையை அதிவிமரிசையாக விவாகம் செய்வித்தார்கள். மற்றொரு பெண் இவரை நோக்கித் தவஞ்செய்து விவாகஞ் செய்துக் கொண்டாள். இவர்தான் மயில்வாகனத்தை யுடைய கடவுள்.

சீடன்.—அப்படியா இப்போ யெனக் கொண்ணு காபகம் வந்துது; எண்ணாண்ணு யெங்க ஊர்லே மயிலேறு கும்புடுவாங்கோ.

குரு.—ஆமாம் அதுதான். விவாகமற்ற கன்னிகைகள் இவரை மனதில் தியானித்துக் கும்பிடுவது வழக்கம் அப்படிக்கும்பிட்டால் அவர்களுக்கு இவரைப் போன்ற அழகிய மணாளன் கிடைப்பானென்பது நிஜம்.

சீடன்.—அப்படியா ஜோக்கு, ஜோக்கு, பல்ஜோக்கு ஆகுட்டி. ... ... ... ...

குரு.—அடே இதென்ன பறச்சேரியா, கடைவீதியா இது தேவாலயமல்லவா, இங்கு இப்படிக்கத்துதல் நியாயமா?

சீடன்.—பின்னே யிங்கே யென்னுண்ணு பாடணும்?

குரு.—நாம் முன்னே பிச்சை யெடுத்தபோது பாடினோமே அரகர சிவவா, மகாதேவா, சங்கரா

சீடன்.—சரி இனிமேலே அப்படியே சொல்ரேன். இப்போ யெனக்குப் பசியெடுத்துகிச்சி, வாங்கோ சீக்ரம் போயி பிச்சை யெடுக்கலாம்.

குரு.—அவசரப்படாதே கோவிலுக்குப் போனல் பிரதட்சணம் செய்துவிட்டுத்தான் போகவேணும்.

சீடன்.—என்னுலே முடியாது எனக்கு ரொம்ப பசியாயிருக்குது அதுவு மில்லாதே யெனக்கந்த தொப்ப கணபதியே பாத்தா பயமாயிருக்குது.

குரு.—அடே ஒன்றும் பயப்படாதே அவர் மீது நாம் பக்தியுள்ளவர்களா யிருந்தால் அவர் நம்மைக் காப்பாற்றுவார். வா, பிரதட்சணம் செய்வோமென்று சீடனை யழைத்துக்கொண்டு போகையில் மணி சப்தங் கேட்டது.

சீடன்.—அதென்னு மணிசத்தங்கேக்குதே அதுள்ளோ ஆடுமாடு வந்திருக்குதா?

குரு—அடே இது என்ன இடைச்சேரியா புலைச்சேரியா, இது தேவாலய மென்று முன்னமே யுனக்குச் சொல்ல வில்லையா?

சீடன்.—ஆமாம் பின்னே மணி சப்தம் கேட்குதே

குரு.—கடவுளைப் பூசிக்கக் குருக்கள் வந்து சுவாமிக்கு அபிடேகம் செய்து புதிய ஆடை சாத்தி புஷ்ப

மணிவித்து பின்னர் நிவேத்தியம் காட்டி, மணியாட்டி, அன்பு கூட்டி, பாமாலே சூட்டி, வணங்குவார். அந்த மணி சப்தந்தான் கேட்கிறது.

சீடன்.—அப்டியா குருக்கள் கழுத்லே மணிகட்டி யிருக்குமா?

குரு.—அடே குருக்கள் என்ருல் அவரொரு பிராம்மணர் அவர் கழுத்திலே யாராவது மணியைக் கட்டிவைப்பார்களா?

சீடன்.—பின்னே அவுருக்கு மணியேது?

குரு—சுவாமிக் கெதிரில் மணி வைத்திருக்கும் அதை யெடுத்தாட்டுவார்.

சீடன்.—வாங்க ஆரு அங்கே போயிபாக்கலாம், என்று இருவரும் சுவாமிக்கெதிராக வந்து நின்ருர்கள்.

சீடன்.—குருவே! அதென்னமோ துணி மூடியிருக்குதே மின்னே நம்ப பாத்தசாமி காணமே——

குரு.—இப்போது சுவாமிக்கு நிவேத்தியங் காட்டுகிருர். அதனுல் தான் திரைபோட்டிருக்கிறது.

சீடன்.—அதுள்ளோ சாமியும் குருக்களும் சாப்புட்ராங்களா?

குரு—இல்லே, இல்லே,. பூசையெல்லாம் முடிந்தபின் குருக்கள் வீட்டிற்குப்போய்சாப்பிடுவார் என்று சொல்லிக் கொண்டே யிருக்கையில், சீஷன் அடக்க முடியாமல் சிரித்துக்கொண்டே, ஆ, ஆ, ஆ, யப்படா யப்பாடா, நெனிச்சிகிருகூட.. சிரிப்பு வருது நானென்ன பண்வேன் — — — — —

குரு.—என்னடா அது?

சீடன்.—இல்லேசாமி, மின்னே நம்ப பாத்தமே கண பதி சாமி அவுருவவுத்தே நெனிச்சிகினக் கூட சிரிப்பு வருது,.

குரு.—அடே உனக்கு புத்தியில்லே, இனிமே லப்படி சுவாமியை நிந்தியாதே.

சீடன்.—இனிமேலு என்னலே இங்கே யிருக்க முடியாது, எனக்கு பசி யெடுத்துக்குச்சி வாங்கோ சீக்ரம் போயி பிச்செ யெடுக்கலாம்.

குரு.—சரி புறப்படு என்று இருவரும் புறப்பட்டார்கள்.

இந்த வேடிக்கைகளை யெல்லாம் ஒன்றேனும்விடாமல் கவனித்துக் கொண்டிருந்த ராமய்யர் குருவான சன்னியாசைக் கண்டு வணங்கி சுவாமி நீர்யார், பரம சாதுவைப் போன்ற உமக்கு இந்த முழுமூடனை சீடனெப்படி கிடைத்தான்.

குரு.—என்பேர் * சதானந்த சாமியார். யான் யாத்திரை மார்க்கமாக வருகிறபோது இச்சிறுவனென்னை வெகு தூரத்திலேயே கண்டோடி வந்து, வேளைக்கு சாப்பாடகப் படுகிறதில்லை யென்றும் இவனை யிரட்சிக்கும் படியாகவு மென்னை கெஞ்சிக் கேட்டுக் கொண்டதின் பேரில் யானிவனை யழைத்துக்கொண்டு இவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நன்மார்க்கத்தைப் போதித்து வருகிறேன்.

ராமய்யர்.—ரொம்பவும் விசேடம், இப்போது நீரெங்கு போகிறீர்?

---

* மந்திரி சிவசன்மாவின் போலிப்பெயர்.

குரு—யான் ஊருக்குட் சென்று பிச்சை யேற்றுப் புசிக்கப்போகிறேன். இப்படியே ஒவ்வொரு தேசமாக யாத்திரை செய்யலா மென்று யோசித் திருக்கிறேன். இப்போதெனக்குத் திரேகம் அசௌக்கியமாயிருப்தா லிங்கேயே யின்னு மொருமாதகால மிருப்பேன்.

ராம-ர்.—ஆம்சாமி, நீர் சொல்வது வாஸ்தவமே சுவற்றை வைத்துக்கொண்டல்லவோ சித்திர மெழுத வேண்டும். முதலில் நம்தேக சவுக்கியத்தைப் பார்த்துக்கொண்டல்லவோ யாத்திரைக்கு முயல வேண்டும். எம்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திவ்விய க்ஷேத்திரங்களுக்கெல்லாம், கால் மெலிய தேகம் வாடச் சென்று தரிசனஞ் செய்வது சிரேஷ்டம் தான். உண்மையான சுத்தப் பிரமத்தை நேரில் தரிசிக்கிற காலம் வந்து ஞானம் மேலிடுகிற பரியந்தம் யாத்திரைகள் செய்தும் புண்ணிய தீர்த்தக்களில் மூழ்கியும், அடியார்களையே பந்துக்களாக வெண்ணியும் ஆயுட் கால முழுவதும் எம் பெருமானையே ஒப்பற்ற துணை யென நம்பி காலம் கழித்து வருதல் உத்தமம். ஞான நிலை கை கூடி விட்ட பிறகன்றோ

* "வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காசிவரை போய்த் திரிந்து காலலலுத் தேன்பூரணமே"

என்றபடி கடவுளைத் தேடிச் செல்லாமலோரிடத்திலேயே தங்கி. யோர் பக்கத்திலிருந்து காலங் கழிக்க

* பட்டணத்துப் பிள்ளையார் புலம்பல்.

லாம் — — — — — என்று பேசிக்கொண் டிருக்கையில்.

சீடன்.—சாமி ரொம்ப நேரமாச்சி பசி யெடுக்குது சாதம் மிஞ்சி பூடும் சீக்கிரம்போய் பிச்சையெடுக்கலாம்.

ராமய்யர்.—குருவை வணங்கி, சுவாமிகளே! இன்று யான் விழித்தது யார் முகமோ, அறியேன். உம்மைப்போன்ற சாதுக்கள் தரிசனமின்று எனக்குக் கிடைத்தது. நீங்கள் இனிமேல் காப்பாட்டுக்கு வழி தேடவேண்டுமாகையால் சீக்கிரம் போங்கள்.

குரு.—சாப்பாட்டுக்கென்ன ஜெகதீசன் கொடுப்பான் —

சீடன்.—என்ஞசாமி நாழியாய்ப் போச்சி. ஊர்லே ஊட்டு கதவுங்களே மூடிக்கினுக்கா சோத்துக்கென்ன பண்றது. எல்லாம் அப்பாலே பேசலாம், பசியெடுக்குது சீக்கிரம் வாங்கொ என்ருன். அப்போது ராமய்யருட னுத்தரவு பெற்றுக்கொண்டு குருவும் சீடனும் போய் வீடுகளில் பிச்சையேற்றுப் புசித்துக் காலங்கழித்து வந்தார்கள்.

நண்பர்களே! மேற்சொன்ன குருவும் சீடனும் யார் என்பதை யறிவீர்களா? குருவாயுள்வர்தான் மந்திரி சிவசன்மன், சீடனுயுள்ளவன்தான் முன்பு காட்டில் கிரீடத்தை மதிசூதனிடம் கொடுத்துவிட்டு நூறு ரூபாய் பெற்றுக்கொண்டு போய் விட்டவன். இவன் அந்த ரூபாயை விருத்திசெய்யாமற் புடிக்கு மனம் போன வழியெல்லாம் செலவழித்து விட்டு, சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டு சன்னியாசி கோலம் பூண்டான்.

## பத்தாவது அத்தியாயம்.

### திருடன் தாசியை அவமானம் செய்தான், தாசியின் அவமானத்தைப் பார்க்க அவ்வூர் பஜாரிகள் வருகிறுர்கள் தாசிக்கு தெய்வம் துணையாய் நின்று காப்பாற்றிற்று.

குருவினிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு பிரிந்துபோன ராமய்யர் ஒட்டலுக்குச் சென்று போஜன முடித்துவிட்டு ஆங்கோர் சமாச்சாரப் பத்திரிகையை யெடுத்து வாசித்து வருகையில் அடியிற்கண்ட விளம் பரத்தைக் கண்டார்.

## விளம்பரம்.

நிரணநாட்டைப் பரிபாலித்துவரும் நிவேதின மகா ராஜன் அரண்மனைக் கஜானுவிலிருந்து சுமார் ஐயாயிரம் ரூபாய் பெறுமான நகைகள் களவுபோயிருக்கிறது. அது விஷயமாக யாருக்கென்ன சங்கதி தெரிந்தபோதி லும் அடியிற்கண்ட விலாசதாருக்கு உடனே தெரிவிக்க வேண்டியது.

இப்படிக்கு,

ஜனகேசன்.

நிரண நாட்டின் முதல் மந்திரி.

இதைவாசித்ததும ஐயர் தனக்குள்ளே யோசிக்க

லானர். "நேற்றையதினம் நாம் இவ்வூரிலுள்ள தாசி மாணிக்க வல்லிக்கிந்த நகைகளைப்பற்றித்தான் இந்தப் பிரசுரம் வெளியாயிற்று. ஆகையால் நானிக்கணமே நகைக ளிருப்பிடத்தை அரசனுக்குத் தெரிவித்து விட்டு, பின்னர் தாசி மாணிக்கவல்லிக்கும் யாதொரு தீங்கும் வராமல் காப்பாற்றுவேன்" என்று ஒரு கடிதத்தை யெழுதித் தபாலில் போட்டு விட்டார். மறுநாட்காலை யரசன் சிங்காதனத்தி லுட்கார்ந்து மந்திரீ நாம் நமதரண்மனையில் களவுபோன நகைகளைப்பற்றி விளம்பரஞ் செய்தோமே அதற்குபதில் ஏதாவது கடிதங்கள் வந்திருக்கின்றனவா?

மந்திரி:—இதுவரையி லதுவிஷபமாக யாதொரு கடிதமும் வரவில்லை. நகைகளிருப்பிடமும் தெரியவில்லை.

இராஜன்:—மந்திரீ! யார்தா னந்த நகைகளைத் திருடிக்கொண்டுபோ யிருப்பார்கள். இத்தனை காலமாக நமதரண்மனையி லிப்படிப்பட்ட காரியம் நடந்ததுண்டோ, இதுயென்ன காரணம் தெரியவில்லையே நம்மிடமிருக்கும் வேலைக்காரர்களில் யாராவது களவாடி யிருப்பார்களா?

மந்திரி.—அரசே, அப்படிப்பட்ட துர்நடத்தையுள்ளவர்கள் நம்மரண்மனையிற் கிடையாது. அப்படி யிருந்தா லிதற்குமுன் எவ்வளவோ திருடியிருக்கலாமே. இந்த ஐயாயிரம் ரூபாய் நகை தானு — — — — — என்று பேசிக்கொண்டே யிருக்கையில் ஒரு சேவகன் இரண்டு கடிதங்களைக் கொண்டு வந்து மந்திரியிடங் கொடுத்தான். மந்திரி அக்

கடிதங்களை வாங்கி அரசனெதிர் நின்று வாசிக்கலானன்.

மாளவதேசம்.

எல்லாம் வல்ல பெருமானது திருவருளால் ஏகச்சக்கிராதிபதியாயும் மாளவதேயத் தரசனுகியும் மனுநீதி தவறுமல் செங்கோல் செலுத்திவரும் மிருத்திக மகாராஜன தாணைப்படி நாளையதினம் காலை சுமார் பத்து மணிக்கு இந்த மாளவதேயத்தின் கிராம தேவதையாகப் பாவித்துவரும் காளியம்மனுக்கு வழக்கப்படியே வருடோற்சவம் கொண்டாடி அதிக ஆடம்பரமாக பூதானம், கோதானம், சொர்னதான முதலியவற்றுடனே திவ்யமாக அபிஷேகஞ்செய்து காளியம்மனை யலங்கரித்து வீதி உற்சவங்கொண்டாடி, ஓர் பெரிய யாகம் செய்ய மூதறிஞர்களாகிய வேதத்தை யுணர்ந்த பிராமணர்களால் நாள் நிச்சயித்திருப்பதால் அன்றையதினம் இவ்வூரிலுள்ள எல்லோரும், மற்ற எல்லா தேயத்தரசர்களும் தவறுமல் தங்களுடைய பரிவாரங்களுடன் விஜயஞ்செய்யவேண்டும். இல்லையேல் கொடிய தண்டனைக் காளாவார்களென்பது திண்ணம்.

இப்படிக்கு,
மாளவதேயத்தரசன் உத்திரவுப்படி
இரண்டாவது மந்திரி
அனந்தசேனன்.

இதைப் படித்து முடிந்ததும்,

அரசன்.—மந்திரி இப்போதிதற்கென்ன செய்யலாம் நம்முடைய அரண்மனையில் களவபோன நகை

களைப்பற்றி நாம் கவனிப்பதா, காளியம்மன் பூஜையைப் பார்க்க மாளவ தேயம் போவதா ?

மந்திரி.—அரசே! காளியம்மன் பூஜை யின்னம் இரண்டு நாள்தா னிருக்கிறது. இன்றைக்கே புறப்பட்டால் போய்ச் சேரச் சரியாயிருக்கும்.

அரசன்.—நான் போய்விட்டால் களவு போன நகையைப் பற்றி யார் கவனிப்பது?

மந்திரி.—நான் களவுபோன நகைகளைப் பற்றி யென்னுல் கூடிய வரையில் பிரயத்தனப்பட்டுத் தேடிப் பார்க்கிறேன். அதற்குள் தாங்களும் மாளவ தேசஞ் சென்று வந்துவிடலாம்.

அரசன்.—சரி அப்படியே செய், இன்னொரு கடிதம் வந்ததே அதென்ன வாசி, பார்ப்போம்.

நிரணநாட்டின் முதல் மந்திரியார் அவர்கட்கு
ஐயா,

இப்பவும் நாங்கள் நேற்றையதினம் பிரசுரமான பத்திரிகைகளை வாசித்த போது தங்களுடைய அரசாது நகைகள் களவுபோனதைப்பற்றி ஒவ்வொரு பத்திரிகையிலும் பார்த்தோம்.

மேற்படி நகைகள் தற்காலம் இந்நாட்டில் மேலண்டை ராஜவீதியில் குடியிருக்கும் மெத்தைவீட்டு மனமோகன மாணிக்க வல்லியிடமிருக்கிறது. உங்களால் கூடுமான ஏற்பாடுகளைச் செய்தால் நகைகள் உடனே கிடைக்கும்.

இப்படிக்கு
உண்மையுரைப்போர்

என்று மந்திரி இந்தக் கடிதத்தை வாசித்ததும் அரசன் ஆச்சரியப்பட்டு "மந்திரீ! இதென்ன விந்தை யினும் விந்தையா யிருக்கிறதே! தாசி மாணிக்கவல்லி நம் மாண்மனைக்கு வருகிற வழக்கமே கிடையாதே. நம் மாண்மனையில் விவாகமான அன்றும் அவள் வர வில்லையே. நகைகளெப்படி அவளிடம் போயிருக்கும்.

மந்திரி:—இது மெய்யோ பொய்யோ யாருக்குத்தெரியும், யாராவது வேடிக்கை யார்த்தமாகப் போட்டிருக்கலாம். அல்லது அவள்மீது பொறாமையாலும் அவளை யவமானம் செய்யவேண்டுமென்றவெண்ணத்தாலும் எழுதியிருக்கலாம். இக்கடிதம் உண்மையாயிருந்தால் இதை யெழுதியவன் விலாசமும் பேரும் எழுதவில்லையே.

அரசன்:—பின் எப்படி உண்மையைக் கண்டறிவது? ஒருவேளையவளிடம் யாராவது திருடிக்கொடுத்திருக்கலாம். இந்தக் கடிதத்தையே ஓர் ஆதாரமாகக் கொண்டு நீ உடனே சில காவலர்களுடன் அவள் வீட்டிற்குச்சென்று சோதனைசெய்து நம்முடைய நகைகளிருந்தால் அவளை விலங்கோ டிவ் விட மழைத்துக் கொண்டுவா.

மந்திரி:—அவள்வீட்டில் நகை இல்லாவிடில் என்னசெய்வது?

அரசன்:—அவள் தாசிதானே, அதைப்பின்னால் யோசிக்கலாம். நீ இப்போதே சென்று என்னுத்தரவு படிசெய், என்றதும், மந்திரி சில சேவகர்களை யழைத்துக்கொண்டு தாசி மாணிக்கவல்லி வீட்டிற்குப் போய் மெத்தை யேறி அவளது பள்ளி

யறைக்குட் சென்றான். மந்திரியைக் கண்டவுடனே மாணிக்கவல்லி யெழுந்து வணங்கி ஓர் புறம் நின்றாள். அப்போது

மந்திரி.--மாணிக்கவல்லியே! உன் மீது சில சந்தேகங் கொண்டு உன்னில்லம் சோதனை செய்யவேண்டி யிங்கு வந்தோம்.

மாணி-லி.—மந்திரி யவர்களே! அந்தோ, என்ன காரியம், என் மீது தங்களுக்கு சந்தேகம் என்ன?

மந்திரி.—எங்களரண்மனையில் களவு போன நகைகளுன்னிட மிருப்பதாகச் சந்தேகம் — — —

[நண்பர்களே முன்பு ராமய்யர் கொடுத்துவிட்டுப்போன நகைகள் அரண்மனையைச் சார்ந்தவை யென்று மாணிக்க வல்லிக்குத் தெரியாது].

மாணி-லி.—ஓ ஓ அப்படியா, என்னிடம் அரண்மனையைச் சேர்ந்த நகைகளெப்படி வரும். நீங்கள் என் வீட்டை யாதொரு தடையுமின்றி சோதனை செய்துகொள்ளலாம் என்று பீரோ முதலிய சாவிகளை யெல்லாம் மந்திரியிடம் கொடுத்து விட்டாள். மந்திரி ஒவ்வொரு பீரோவாகச் சோதனை செய்து விட்டு நகைகள் வைத்திருந்த பெட்டியைத்திறந்து பார்க்கையி லதனுள்ளிருந்த ஓர் சிறிய அறையுள் மாணிக்கவல்லியின் சொந்த நகைகளும் அரண்மனையில் களவு போன நகை மூட்டையு மிருக்கக்கண்டு அதிக சந்தோஷமடைந்து "ஏ மாணிக்கவல்லி, இந்த மூட்டையி லுள்ள நகைகளுனக்கேது எப்படி கிடைத்தது? இது உன்னிடம் எத்தனை வருட காலமாக விருக்கிறது உண்மையைச் சொல்,

மாணி-லி:—திடுக்கிட்டு கைகால் நடுங்கி முகம் வெளுத்து பேச நாவெழாமல் ஐயா இந்த நகைகளை இரண்டு நாட்களுக்குமுன் ஒருசேவகனென்னிடம் கொடுத்துவிட்டு ஐநூறு ரூபாய் செலவுக்காக வாங்கிக்கொண்டு நாளையதினம் வருவதாகச் சொல்லிப்போனவன் இன்னும் வரவில்லை. ஆகையால் இந்த நகைகளென்னிட மிருக்கின்றன. இது இன்னாருடைய நகை யென்றெனக்குத் தெரியாது.

மந்திரி:—இவைதா னெங்களரண்மனையில் களவு போன நகைகளாகையால் எங்களரசன் ஏவற்படி உன்னை இப்போது கைவிலங்கிட்டு விசாரணைக்காக எங்களரசனிடம் அழைத்துக்கொண்டு போகப் போகிறோம் என்றான். இதைக் கேட்டதும் மாணிக்க வல்லிக்கு விசனம் மேலிட்டு கோவெனக் கதறி யழுதாள். அப்போது மந்திரி யவளைப்பார்த்து "பயப்படாதே நீ யெங்களரசனிடம் வந்து எங்களிடம் சொன்னமாதிரி யுனக்குத் தெரிந்த உண்மையைச் சொல்லிவிடு. நீ விசனப்படாதே. உனக்கு யாதொரு ஆபத்தும் வாரமல் நான்காப்பாற்றுகிறேன் புறப்படு" என்று சொல்லிஅவளுடைய இருகாங்கட்கும் விலங்கிட்டு பாதசாரியாக அரண்மனைக் கழைத்துக்கொண்டு வருகையில், இந்த சங்கதி ஊர் முழுவதும் காற்றைப்போல நொடிப் பொழுதில் பரவிவிட்டது.

நண்பர்களே! இந்த நிரண நாட்டில் ஒரு விசேடத்தை யான் முன்னமே உங்களுக்குத் தெரிவிக்க

மறந்து விட்டதைப்பற்றி மன்னிக்கும்படியாய் மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன். அஃதென்ன வென்றால் இங்கிரண நாட்டின் வடவண்டை ராஜவீதிக் கடுத்த குப்பாச்சாரி சந்தில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, இந்த நம்பருள்ள வீடுகளில் முறையே முதல் வீட்டு மூத்தம்மாள், இரண் டாம் வீட்டு ரத்தினம்மாள், மூன்றும்வீட்டு தான்றியம் மாள், நாலாம்வீட்டு பாலம்மாள், ஐந்தாம்வீட்டுப் பேந்தி யம்மாள், ஆறும் வீட்டு இராதம்மாள், ஏழாம் வீட்டு அழகம்மாள், எட்டாம் வீட்டு குட்டியம்மாள் என்று அஷ்டதரித்திரங்களைப் போல எட்டு ஸ்திரீகளிருந் தார்கள்.

நண்பர்களே! இவர்களில் அநேகர் மிகவும் அழ காகவேயிருப்பார்கள் என்பதைக் கவனியுங்கள். ஆனால் இவர்களோ கணவனை பெரிய பொருட்டாக மதியாமற் படிக்கு தங்களிஷ்டம் போலத் திரிவார்கள். குடும்ப விஷயத்தைப் பற்றிக் கவனிக்கவே மாட்டார்கள். இதைப்பற்றி அவர்களுடைய கணவர்கள் ஏதாவது கண்டித்தால் அன்று துடைப்பக்கட்டையும் முறமும் பஞ்சாய்ப் பறக்கும். மறு நாளுபயோகத்திற்கு வேறே வாங்க வேண்டியதுதான். அதுவுமல்லாமல் சாப்பாடு கூட அவர்களுக்கு அன்றைய தினம் திண்டாட்டந் தான். இந்த ஊரில் எந்த சங்கதி நடந்தாலும் இந்த அஷ்ட தரித்திரங்களுக்குத் தெரியாமலிராது. ஒவ் வொரு ஜனக் கூட்டமான விடத்திலும் இவர்கள் எல் லோரையும் பார்க்கலாம். இவர்கள் இந்த ஊருக்கு தர்ம தபால் போலக் கூலியில்லாமலே எல்லா சங்கதி யையு மறிந்து எல்லோருக்கும் சொல்வது வழக்கம்.

இந்த எட்டுப்பேர்களில் யாராவது ஒருத்தி ஜலங் கொண்டுவரப் போனாலும், மலபாதைக்குப் போனாலும், ஊர்ச் சண்டைக்குப் போனாலும், வீண் சண்டையை விலைக்குவாங்கப்போனாலும், வாய்ப்பேச்சைப் பிடுங்கிக் கொண்டு வயிற்றெரிச்சலைக்கொட்டிக்கொள்ளப் போனாலும், கலகஞ் செய்யக் கோள் சொல்லப் போனாலும்; எல்லோரும் ஒன்றாகவேதான் போவார்கள். அதனாலவ்வூரிலுள்ளவர்களெல்லாம் இவர்களைக் கண்டால் பயந்து ஒரு புறம் ஒதுங்கிப் போவார்கள். இவர்களில் சிலர் சாராயம், கள் முதலியன குடிப்பார்கள். புகையிலை, பீடி, சிகரெட், சுருட்டு இவற்றை யெல்லோருமுபயோகிப்பார்கள். யாராவது இவர்களி லொருத்தியிடம் சண்டை செய்துவிட்டாலும், திட்டினாலும், எல்லோரு மொன்றாய்க்கூடி அவளைக் குடுமியைப்பிடித்திழுத்துக் கீழேதள்ளி நையப்புடைத்து இடுப்பிலுள்ள வஸ்திரத்தை யவிழ்த்துக் கிழித்து, அவமானம் செய்துவிடுவார்கள். இவர்களுக்குப் பயந்து இவர்களுடைய நடத்தையையும் குணத்தையும், அரசனுக்கு யாரும் தெரிவிக்க மாட்டார்கள். இவர்களின்மீது பிரியாது போனாலும் யாரும் சாட்சி சொல்லத் துணியமாட்டார்கள். அப்படிக்கின்றி யாராவது ஒருவர் துணிந்து அரசனிடம் இவர்களைப்பற்றி பிரியாது செய்துவிட்டாலும், கையொப்பமில்லாத கடிதங்களை யெழுதினாலும் அரசதண்டனைக்கு இவர்கள் எட்டுபேருந் தப்பித்துக் கொள்வார்கள். எப்படியென்றால் இவர்களில் அநேகர் மிக அழகுடையவர்களென்று முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா, ஆகையால் அரண்மனையிலுள்ள உத்தியோகஸ்தர்களி லநேகர் இவர்கள் கைவசந்தான்

இந்த எட்டுபேர்களுக்குள்ளே சண்டைவருவதுமுண்டு. அப்போது மண்டையுடைய சண்டை போட்டுக் கொண்டு கல்லாலும் கட்டியாலு மடித்துக் கொள்வார்கள். வரியாலும் சில சமயங்களில் கடித்துவிடு வார்கள்.

நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்!

என்றபடி பின்னர், மறு நிமிஷமே போட்டசண்டையை மறந்து, பழையபடி அக்கா, அப்தா, தங்கச்சி, என்று உறவாடிக்கொள்வார்கள். இவர்களில் சிலபேருக்கு தில்லாலே டப்பாமுதலிய நாடகப்பாடல்களுந் தெரியும்.

நண்பர்களே! இவர்களுடைய குணங்களையும் நடத்தைகளையும் பற்றி யின்னுமதிகமாக விவரித்தெழுதின் விரியுமாகையாலும் படிக்க அருசையாக இருக்குமாகையாலும் அதைவிட்டு மேலே எழுதலாயினேன்.

மெத்தைவீட்டு தாசி மாணிக்கவல்லியை கைவிலங்கிட்டு களவுசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, விசாரணைக்காக அரண்மனைக் கழைத்துக்கொண்டு போகிற சங்கதி அவ்வூர் முழுதும் பரவிவிட்டதென்றால் அவ்வூரை யாள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட கவுன்சில் மெம்பர்களைப் போல (Council Members) விளங்குமிந்த அஷ்டதரித்திரங்களுக்குத் தெரியுமா தெரியாதா வென்பதை நண்பர்களே கவனித்துக் கொள்ளுவீராக.

இது சங்கதி கேள்விப்பட்ட குப்பாச்சாரி வீதியிலுள்ள முதல்வீட்டு முத்தம்மாள் இரண்டாவது

வீட்டு ரத்தினம்மாளிடம் இந்த சங்கதி சொல்ல அவள் வீட்டிற்குச் சென்றாள். இவளைக் கண்டதும் ரத்தினம்மாள் "வா அக்கா, உக்காரு என்று யிப்டிவந்தே உன் வேலையெல்லா மாச்சா?

முத்-ள்:—இல்லடி எங்கூட்டுகாருக்கு எண்ணேதேச்சி மணைமேலே உக்காரவெச்சூட்டு சீக்கா அரச்சிகினு யிருந்தேன். அப்போ எங்கூட்டு மாட்டுக்காரப் பையன் வந்து "அம்மா மாட்டே அவுத்து ஓட்டுங்கோண்ணு, நானு மாட்டே அவுத்து ஓட்னேன், அப்போ அவன் "அம்மா அம்மா ஒரு சங்கதி தெரியுமா, மெத்தஊட்டு மாணிக்கம்மா யிருக்காங்களே, அவங்கோ ராஜாஊட்டு நகெ திருடுனுங்களாம்; அதுக்கோசரம் அந்தம்மாளெ கைவெலங்கு போட்டு இட்டுக்குனு ராஜா ஊட்டுக்கு போராங்கோ. வழியெல்லா ரொம்பஜனம் வேடிக்கை பாக்குதுமா, என்று சொன்னு. அதெ கேட்டுட்டு எங்கூட்டுகாரண்டே போய் "நானு ஒரு வேடிக்கே பாக்கபோகிறேன். இந்த சீக்காயே அரச்சி சுடத்தண்ணியெ காச்சி ஊத்திக்கோ" இல்லாபோனு பஸ்தண்ணியானு ஊத்திக்கோ அண்ணு சொல்லிவிட்டு உன்னெயிட்டுக்கனு போலாண்ணு வந்தேன்.

ரத்னம்மாள்:—செரி செரி வாக்கா, சீக்கிரம் போயி நம் பக்கூமாரே யெல்லாமிட்டுக்குனுபோவலாமென்று ரத்னம்மாள் தான் செய்திருந்த சமையல் வேலைகளை யெல்லாமப்படியே போட்டுவிட்டு அடுப்பில் தண்ணீரை வார்த்துப் புறப்பட்டு மூன்றும் வீட்டுத் தான்றி யம்மாளிடஞ் சென்று "என்னடி தான்றி,

நம்பூர்லே மெத்தவூட்டு மாணிக்கவல்லி யிருக்காளே, தேவடியா, அவளே பாக்கபோறோம். நீ யென்னமோ சோறுங்கறியு மாக்கிறயே, இப்போ வரப்போறையா, நாங்கபோறோம் ஆனு" என்ருர்கள்.

தான்றியம்மாள்:—"அக்கா என்னு நீங்கப்படி சொல்றீங்களே. நீங்க கூப்ட்டு நானெப்பனு வாராதேபூட்ணு என்னுவேலையிந்தாலு மப்படியே போட்டேட்டு வரலியா, நானிதுக்குமின்னே, இப்போ யென்னு வந்தாக்கினு போச்சி அதுக்குள்ளோ எங்கூட்டுக்காருவந்தா அவுருக்கு பசியாயிருந்தா அவரே ஆக்கிபுடுவாரு அதுக்கென்னு வாங்க போலாம்" என்று மூவரும் புறப்பட்டு நாலாம் வீட்டு பாலாம்மாளிடம் சென்று "ஏண்டி பாலா! என்னு சாணி தட்ரே. இப்போ எங்களோடோகூட வாமாட்டே போலிருக்கிறது — — —

பாலா:—எனக்கா எங்கே போறீங்கே?

முத்த-ள்:—மாணிக்கவல்லி வேடிக்கே பாக்கப்போறோம்.

பாலா:—ஓ, ஓ, மெய்தானு அது எனக்கு கூடசந்தூட்டு சுப்பம்மாள் சொன்னுங்கோ நீங்கல்லாம் போவலீயேண்ணு சும்மா இந்துட்டேன் வாங்க போகலாம்.

தான்றி-ள்:—என்னுடி சாணிகையெ கழுவீட்டு வாடி.

பாலா:—"நாழியாவுது, போரவழியிலே கொழாவுலே கழுவிகினு போவுது. என்று எல்லோரும் ஐந்தாம் வீட்டுப் பெந்தியம்மாளைக் கண்டு — — —

முத்த-ள்:—எண்டியக்கா. மெத்தவூட்டு மாணிக்க வல்லியே பாக்கவல்லியா உங்கூட்டுகாருக்கு ஒடம்பு எப்படி யிருக்குது.

பெந்தி-ள்:—அக்கா ஒடம்பு ஒரு மாதிரியாயில்லே வர வர கேவலமாதா னிருக்கிறது. தேர்வது இந்த வாட்டி கஸ்டந்தான், அவருக்குதாங் கஞ்சிகாச்சி ஆத்திகினு இருக்கேன். வாங்கோ போலாம்,— என்று தன் கணவனுடைய பணிவிடைகளையுங் கவனியாமல். கூடவே புறப்பட்டுவிட்டாள். உடனே எல்லோரும் ஆறும்வீட்டு ராதம்மாளைக் கண்டு "என்னடி ராதி! உங்கூட்டு காரெங்கே காணமே.'

ராத-ள்.—"அவுரு சவரம்பண்ணிகினு தண்ணி காய வெக்கசொன்னாரு அதுதானடுப்புலே யிருக்குது.

முத்-த்ள்:—சரி, அப்போ நீ எங்களோடகூட மாணிக்க வல்லியே பாக்கவரமாட்டே— — — —

ராத-ள்:—இதோ வர்ரேன், அவருகூடத்தண்ணி காய்ஞ் சபொர ஊத்திகிட்டுமே இல்லாபோனா கொளத்லே குளிச்சூட்டு வரட்டுமே" என்று இவர்கள் யெல்லோரும் சென்று ஏழாம் வீட்டு அழகம்மாளைப் பார்த்து,

தான்றி-ள்:—எண்டி அழகி! என்னா ஒருமாதிரியா யிருக்கே எப்படி யிருக்குது ஒடம்பு?

அழக-ள்:—போதும் போதும் போங்கடி, இப்ப வந்தூட்டாளுங்கோ எல்லா ஒண்ணா, நேத்தேபுடிச்சி யெனக்கு வாந்தியும் பேதியும் ஒயாதே ஆவுது, வவுறு நோவுது அப்பவந்து யாரும் பாக்கலே —

பால-ள்:—அடி செர்தாண்டி, உனக்கெப்பவும் ரோகந் தானே இப்ப மாணிக்கவல்லியே பாக்கவர்ரியா இல்லியா?

அழக-ள்:—வர்ரேன் அதுக்கில்லாடி, உங்க யோக்கிய தைக்கு சொல்ரேன்.

முத்-ள்:—செரி வாங்க சிக்கிரம் போலாம்—என்று சொல்லி எல்லோரும் எட்டாம்வீட்டுக் குட்டியம்மாள் வீட்டிற்குட் சென்று "அடீ குட்டீ, அடீ, எங்கடீ காணமே" என்று சொல்லி அவ்வீடு முழுவதும் தேடியுங் காணாமையால், தோட்டத்திலுஞ் சென்று தேடினார்கள்.

ராத-ள்:—என்னடி, ரொம்ப நாழியாவுதே, அவயெங்க போனாளே, அவளுக்குத்தான் ஊர்பெர்தனம் தாஸ்தியாச்சே வாங்க நம்ப போலாம் என்று எல்லோரும் புறப்பட்டார்கள்.

தான்றி-ள்:—நேத்து நம்ப தண்ணிக்கி போயி ரொம்ப நாழி காயிதம் வள்ளாடிக்கினு யிருந்தூட்டு வந்தமே, அதுக்கு எங்க ஊட்காரு "என்னடி அவளோநாழி, நீ வூட்டு சம்சாரத்தே கவனிக்கிரவளா யிருந்தாதானே, அப்டீயிப்டீண்ணு திட்னரு, கொலச்சிம்போவுது நாயிண்ணு சும்மா யிருந்தூட்டேன் — — — —

முத்-ள்:—அப்படிதா யெங்கூட்காரு யென்னே ஒரு நாளு தபாச்சாரு, சீ! நிறுத்து, அந்த வாலெல்லா நம்பகிட்ட ஆட்டாதேண்ணேன், அப்போ கம்முண்ணு இருந்தூட்டாரு.

ரத்-ம்:---ஒருநாளு என்னைத்துக் கோதான் எங்கூட்

காரு யென்னே அடிச்சாரு, மூணு நாளு சோறு ஆக்கி நாமாத்திரந் துண்ணூட்டு அவரே மட்டந் தட்டிபூட்டேன். அவர்பாடு காஞ்சிபோவவே அல்லாமடங்கிப் போச்சி.

அழ-ள்:—அதெல்லா இல்லாடி அவங்கோ, அப்டிதா மொரட்ரது. அப்போ நம்ப சட்டேபண்ணுதே நம்பபோரதும் வாரதுமா யிருந்தூட்டா அவங்கோயேம் பேசராங்கோ?

தான்றி-ள்:—அவளோ தாமொத்தத்திலே அங்கிருக்கிற ஔவு.

பேந்தி-ள்:—அடி, அடீ, அதோ ஒரு மூட்டே தூக்கி வர்ராளே அவயாரு குட்டியா பாரு?

முத்-ள்:—ஆமாண்டி அவதான் ஐயோபாவம் என்மோ பெரிய மூட்டெ தூக்கினுவர்ரா அவ தலெவிதி, நம்பளாட்டம் ஜோராயிருக்க குடுத்து வெக்கலே என்று பேசிக்கொண்டே போகையில் குட்டியம்மாள் இவர்களைப் பார்த்ததும் 'என்னம்மா யெல்லா மெங்கே போறீங்கோ, நான் வரக்கூடாதா"?

முத்-ள்:—இல்லாடி யம்மா, உங்க வூட்லே போயிதேடி பார்ததுட்டுதா வர்றோம்.

குட்டி-ள்:—எங்கே போறீங்கோ யிந்த வெய்யல்லே?

ராத-ள்:—மாணிக்க வல்லியே பாக்க

குட்டி-ள்:—வாங்க ஆனு நான் கூட வாரேன்

ராத-ள்:—ஊட்டுக்கு போயி மூட்டெயெ வெச்சூட்டு வாயேன்

குட்டி-ள்:—என்னுத்துக்கு, நானு தூக்கிகினு வர்ரேன் வாங்க போலாம்

தான்றி-ள்:—அது என்னு மூட்டடி குட்டி?

குட்டி-ள்:—வண்ணு வூட்டுக்கு போயி துணி வாங்கிகினு வர்ரேன்

பேந்தி-ள்:—இனிமேலே வூட்டுக்கு போயி மூட்டயே வெச்சூட்டு வர்ரதுன்ணு நாழியாயி பூடும், வாங்க போவலாம்.—என்று எல்லோரும் பேசிக்கொண்டு மேலண்டை ராஜ வீதிக்கு வந்து அங்கோர் வீட்டின் பெரிய திண்ணையின் மீதேறிக் கொண்டார்கள். இவர்க ளிங்கு வந்ததைக் கண்டதும் அத்திண்ணையி லிருந்தவர்க ளிவர்களுக்குப் பயந்து வேறிடத்திற்குப் போய் விட்டார்கள். இவர்க ளெல்லோரும் ஆனந்த மாக விருந்தனர். அப்போது,

கோபாலன்:—அடே ராமா! வர்லே வர்லேண்ணு வெசனப்பட்டு கும்பல்லே யல்லாம் போயி தேடனியே, இதோபாரு.

இராமன்:—என்னுதுடா, எங்கடா?

கோ-ன்:—அதோ எதிர் வூட்டு திண்ணமேலே பார்ரா.

இ-ன்:—ஓ, ஓ, இந்த மூதேவிங்களா இதுங்கோவாதே இந்த ஊர்லே என்னு விசேஷம் நடக்கும் என்று பேசிக்கொண்டிருக்கையில் மாணிக்க வல்லியை கை விலங்கிட்டழைத்துக கொண்டு வருவதைக் கண்டார்கள். அப்போது ஐயோ பாவம்! இவளெப்படி திருடி யிருப்பாள். யாாவது இவள் வீட்டிலந்த நகைகளை வைத்துவிட்டு இவள்

மீது குற்றஞ் சாட்டி யிருப்பார்கள்! அதை யரச னறியாமற்படிக்கும், பெண்ணென்று கிஞ் சிற்றேனு மிரங்காமற்படிக்கு மிவ்வாறு அவ மானஞ் செய்கின்றானே. இது தருமா? தெய்வ சம்மதமாகுமா, இந்த ஊரிலிவள் வம்சத்தில் பிறந்த எல்லா தாசிகளும் நாம் பார்த்த வரையில் அதிக கௌரவத்துடன் வாழ்ந்தவர்களல்லவா? இந்த மாணிக்கவல்லியும் அதிக யோக்கியமான வள் தான். பூர்வ கன்மப் பலனுக இவளுக்கு இப்படிப்பட்ட அவமானம் நேரிட்டது. ஆகிலும் எல்லாம் வல்ல பெருமானுகிய சர்வ ஜீவதயாபரன் இவள் பக்கம் ஒப்பற்ற துணையாயிருந்து இவ ளுக்கு யாதொரு அரச தண்டனையும் வாராமற் படிக்கு காப்பாற்றுவாராக: அந்தோ பாவம்! கண்ணீர் விட்டழுது கொண்டு வருகின்றனளே, இவளை இப்படியும் அவனமானம் செய்யலாமா? என்று பலர் பல விதமாகத் துக்கித்து அரசனை நிந்தித்தனர்.

இப்படி யிருக்கையில் மாணிக்க வல்லியை யாண் மனைக்குள ளழைத்துக் கொண்டுபோய் அரசனெதிரே நிற்க வைத்து அவள் வீட்டில் கிடைத்த நகைகளையும் சிம்மாதனத்திற் கெதிரே வைத்தார்கள். அரசன் அந்த நகைகளைப் பார்த்து அதிக சந்தோஷங்கொண்டு "மந்திரீ இவை நம்முடைய நகைகளே யென்பதற் கையமில்லை. இவை யெங்கே கிடைத்தன?

மந்திரி:—அரசே, இந்த நகைகளெல்லாம் இதோ உம் எதிரே நிற்கின்ற மாணிக்கவல்லியின் வீட்டில் கிடைத்தது. அதைநாமெடுத்துக்கொண்டு உங்கள்

உத்திரவுபடி மாணிக்க வல்லியையும் கை விலங்கிட்டழைத்து இங்கு வந்தேன்.

அரசன்—ஏ! மாணிக்கவல்லி, என்ன சமாச்சாரம்?

மாணிக்கவல்லி:—அழுதுக் கொண்டே ஈன சுரத்துடன், யானொன்று மறியேன் — — — — —

அரசன்:—பயப்படாதே, உன்னை யொன்றும் செய்ய மாட்டோமாகையால் தைரியமாக உண்மையைப் பேசு. இந்த நகைகளை யுன் வீட்டின் பீரோவிருந்து மந்திரி எடுத்தாரா?

மாணி-லி:—மகாராஜாவே, வாஸ்தவந்தான்.

அரசன்:—உன்னிட மிந்த நகைகளேது, யார் கொடுத்தது?

மாணி-லி:—ஐயனே! இரண்டு நாளைக்கு முன் என்னை நாடி உங்களுடைய அரண்மனைச் சேவகரொருவர் வந்து, இந்த நகைகளை யோர் மூட்டையாகக் கட்டி யென்னிடம் கொடுத்துவிட்டு ஐந்நூறு ரூபாய்ப் பெற்றுக்கொண்டு, சில சாமான்கள் வாங்கிக்கொண்டு சீக்கிரமாக வருவதாகப் போய் நாளது வரையில் வரவில்லை. அதனால் இந்த நகைக ளென்னிட மிருந்தன.

அரசன்:—அப்படியாகி லிந்த அரண்மனையிலுள்ள சேவகர்களை யெல்லாம் உன்னெதிரே நிற்கவைத்தால் உன்னிடம் நகை கொடுத்தவன் இன்னானென நீ காட்டுவையா?

மாணி-லி:—அப்படியே செய்கிறேன் என்றதும், அரசன் மந்திரியிடம் சொல்லி அவ்வரண்மனையிலுள்ள எல்லா சேவர்களையும் மாணிக்க வல்லியி

னெதிரே வரிசையாக நிற்க வைக்கும்படி சொன்ஞன். உடனே மந்திரியின் ஏவலைப் பெற்ற சேவகர்களெல்லாம் அரசனை வணங்கி மாணிக்கவல்லியி னெதிரே நின்ருர்கள். அப்போது,

அரசன்:—மாணிக்கவல்லி, இதோ உன்னெதிரே நிற்கிற சேவகர்களில் யாருன்னிடம் இந்த நகைகளைக் கொடுத்தது, காண்பி? என்ருன். அப்போது மாணிக்கவல்லி அங்கு நின்ற சேவகர்களை யெல்லாம் சற்று நேரம் நன்ருப் உற்றுப்பார்த்துத் தன்னிடம்நகைகளைக் கொடுத்தவன் அங்கில்லாமையால் அவனைக் கண்டு பிடிக்க முடியாமல் அரசனைப் பார்த்து. மகா பிரபுவே! இன்னுனென்று எனக்குத் தெரியவில்லை, யானென் செய்வேன்!

அரசன்:—சரி நீ பயப்படாதே, உன்னிடம் வந்த சேவகனெப்படி யிருந்தான்?

மாணி-லி:—அவர் மீசை யடித்துக்கொண் டிருந்தார்.

அரசன்:—அதோ நிற்கின்ருனே சேவகன் அவனுக்கு மீசையில்லையே, அவனு பார்?

மாணி-லி:—சற்று நேரம்பார்த்து ஐயா அவரல்ல, இவர் கறுப்பாகவும் அதிக குள்ளமாகவு மிருக்கிருர். என்னிடம் நகையைக் கொடுத்தவர் சிவப்பாகவும் சற்று பருமனுகவும் உயரமாயுமிருந்தார் என்ருள் இதைக்கேட்டதும் அரசன் மந்திரியைப்பார்த்து மந்திரி நம்முடைய சேவகர்களில் மாணிக்கவல்லி சொல்கிற அடையாளத்தையுடைய சேவகன் எவனுவது இருக்கிருனே சிக்கிரம் சொல்.

மந்திரி:—யாருமில்லையே — —

அரசன்:—பின்னர் வேறு யாராவது நகைகளைத் திருடியபின் சேவகனைப்போல வேடம்பூண்டு இந்த மாணிக்கவல்லியிடம் இந்த நகைகளைக் கொடுத்துவிட்டு ஐநூறு ரூபாய் வாங்கிக்கொண்டு போயிருப்பானா?

மந்திரி:—என்னமோ, யாரறிவார்கள் என்றுசொல்லிக் கொண்டே யிருக்கையில் எதிரே நின்றிருந்த சேவகர்களிலொருவன் அரசனைப்பார்த்து "தயாநிதியே! தங்களரண்மனையில் விவாகமானதினம் யான் என்னுடைய புதிய உடையைக்கழற்றி ஓர் மூலையில் வைத்துவிட்டுப் பின்னர்போய்ப் பார்க்கையிலதைக் காணேனாகையால் தான், பழைய உடைகளைத் தரித்துக்கொண்டிருக்கிறேன்" என்றான். இதுகேட்டதும்

அரசன்:—சரிசரி, உண்மை வெளியாய்விட்டது நகையைத் திருடியவனே உடையையும் திருடிக்கொண்டு சேவகனைப்போல இம்மாணிக்கவல்லியிடம் கொடுத்துவிட்டு ஏமாற்றிப் போய்விட்டான், மந்திரி! உன்னுடைய யோசனையென்ன?

மந்திரி;—அரசே, எல்லாம் தெரிந்த உங்களுக்கு யானென்ன சொல்லப்போகிறேன். நீங்கள் சொல்வதுபோல் எவனோ ஒருவன் சேவகனைப்போல வேடம்பூண்டு மாணிக்கவல்லியிடம் திருடிய நகைகளைக் கொடுத்துவிட்டு ஐநூறு ரூபாய் பெற்றுக்கொண்டு மறுநாள் வருவதாகப் பொய்சொல்லிப்போயிருப்பான்.

"நுண்ணறி வுடையனாகி நூலொடு பழகினாலும்
பெண்ணறி வென்பதெல்லாம் பேதைமை— ..."

என்றதுபோல இம்மாணிக்கவல்லி சிறிது கல்வி கற்றிருந்தபோதிலும் தனக்கு நேரிடப்போகிற துன்பத்தைப்பற்றி நினையாமல் இப்படிப்பட்ட விலையுயர்ந்த நகைகளோர் சேவகனுக்கெப்படி கிடைத்ததென்று யோசியாமல் "பேதைமை யென்பது மாதர்க்கணிகலம்" என்ற வாக்கிற் கிலக்காகி இப்படிப்பட்ட துன்பமும் அவமானமு மடைய வேண்டிய தாயிற்று ஆகையால் அரசே! இவள் மீது குற்றமில்லை யென்பது உண்மையாகும்.

அரசன்:—நீ சொல்கிற படியேதான் எனக்குந்தோன்றுகிறது. ஆகையால் மாணிக்கவல்லியை இப்போதே விடுதலை செய்துவிட வேண்டியது தான் என்று சொல்லி மாணிக்க வல்லியைப் பார்த்து "ஏ மாணிக்கவல்லி! இந்த நகைகளை யுன்னிடம் கொடுத்த சேவகன் மறு தடவை யுன் மனைக்கு வருவானாகில் அன்னவனைப்பற்றி யெங்களுக்கு உடனே தெரிவி, நாங்களும் எங்களாலான காரியங்களை யெல்லாம் செய்து அந்தப் போலிச் சேவகனைப் பிடிக்க முயலுவோம். நீ இனிமேல் உன் வீட்டிற்குப்போ" என்றான்.

மாணி-லி:—அரசே நான் பூர்வ ஜென்மத்தில் செய்த கன்மத்தின் பலனாக இப்படிப்பட்ட துக்கங்களையும் அவமானத்தையு மடைய நேர்ந்தது, யான் போகின்றேன் என்று சொல்லிக் கொண்டேயிருக்கையில் அரசன் மந்திரியைப்பார்த்து "மந்திரி! ஒரு பல்லக்கில் இந்த குற்றமற்ற மாணிக்க வல்லியை யேற்றிக் கொண்டுபோய்அவளுடைய வீட்டில் விட்டு விடும்படி காவலர்களுக்குத் தரவு

செய்'' என்றதும், மந்திரி சகல ஏற்பாடுகளையும் செய்து மாணிக்கவல்லியைப் பல்லக்கிலேற்றி வீட்டிற் கனுப்பிவிட்டார். அப்பால் அங்கு சூழ்ந்திருந்த கோடிக் கணக்கான ஜனங்களும் சந்தோஷப்பட்டுத் தங்கள் தங்கள் வீட்டுக்குச் சென்றார்கள்.

## பதினோராவது அத்தியாயம்.

### முன்பு வேடிக்கை பார்க்கச்சென்ற பஜாரிகளின் கொழுநர் விசனப்படுதல். எல்லா பஜாரிகளும் சேர்ந்து ஒருத்தியின் கணவனை யடித்தல் அக்கணவன் சற்குரு உபதேசம் பெற்று சன்னியாசியாய் விடுதல்.

இது நிற்க முன்பு சொல்லி வந்த அஷ்ட சரித்திரங்களைப் பற்றி சற்று கவனிப்போம். மேற்சொன்ன எட்டு ஸ்திரீகளும் தங்கள் தங்கள் கை வேலைகளை யெல்லா மப்படியே போட்டுவிட்டு மாணிக்க வல்லியைப் பார்க்கப் புறப்பட்டுப்போய் விட்டதும், அவர்களுடைய கணவர்களெல்லாம், அவர்கள் போன விடந் தெரியாமற்படிக்கு அநேக நேரம் பார்த்தும் வராமையால், அதிக கோபங்கொண்டு வீட்டைவிட்டு வெளியே வந்து "ஐயா சபாபதி முதலியாரே உங்கள் சம்சாரம் வீட்ளே யிருக்காங்களா?

சபா-யார்:—அத்த யெழவை யேங்கேக்கிறீங்கோ, எனக்கு எண்ணெதேச்சூட்டு, சீக்கா அரச்சிகினு

இருந்தா அப்புறமெங்கேயோபோய் வர்ரேண்ணு பூட்டாயின்னுங் காணோம்.

வீராசாமிசெட்டி:—ஐயா நானு கொஞ்சம் வேலியா போவணுண்ணு சீக்கிரம் சவரம் பண்ணிக்குனு சுடத்தண்ணி வைடீண்ணு யெங்கியோ சொல்லா தேயே பூட்டா, நானு சிவனேண்ணு பஸ் தண்ணி ஊத்திகினேன்.

எத்திராஜலு நாயுடு:—ஐயா நானு ஆபீசுக்கு போயி ருந்து இப்பதாவந்தேன், ஊட்ளே போயிபாத்தா யெங் கூட்டு மூதேவியே காணோம், சோறு கூட ஆக்கலே பதார்த்த மரிஞ்சி வெச்சி யிருக்குது, எனக்கு ரொம்ப பசியாயிருந்துது, என்ன செய் ரது—, நானே சோத்தே பெல்லா மாக்கி சாப் டேன். பாவம் அந்த பீமராஜா இருக்காரே அவுரு சுமார் ஒரு மாசமாகாயலா, அவுருக்கு பசியாயிரு க்கு துண்ணு அவுர் பொண்டாட்டியே கொஞ்சங் கஞ்சி காச்சி குடுக்க சொன்னாம். அத்தே காச்சி ஆத்திகினே யிருக்க சொல்லோ நம்ள வங்கோ யில்லிய கூட்டாளிங்கோ வந்துகூப்டவே அப்டியே போட்டேட்டு அவுர் பொண்டாட்டியும் பூட்டா. அவுருக்கு பசி தாகம் நாக்கு ஒணர்ந்து போச்சி, எழுந்து அந்த கஞ்சியெ யெடுத்து குடிக்க சக்தி யில்லே, யென்ன செய்வாரு பாவம், அப்டியே படுத்து குனிந்தாரு, இப்ப நான், போனேன், என்னண்டே சங்கதியெல்லாஞ் சொன்னாரு! நானு அவுருக்கு அந்த ஆறிபோன கஞ்சே கொஞ்சங் காச்சி குடுத்தேங் குடிச்சுட்டு படுத்துகுனாரு.

எல்லோரும்:—அடடா இதென்ன அனியாயமய்யா, இந்தப்பாவி முண்டங்கிளுக்கு ஊர்லேவர்ர சாவு கூட வர்லியேய்யா, இவங்ளேபார்த்தா அந்தபாழுயமன் கூட பயந்து பூட்ரானே என்மோ தெரியலியே. அந்த ஊர்லேவர்ர வாந்திபேதி இவுங்குளுக்கு யெல்லாற்குவந்து ஒரே நாள்ளே யெல்லாரையும் வாரிம்பூட்டா ஒழிஞ்சுது சனி யிண்ணு நிம்மதியானுயிருக்கலாமே, ஐயா நம்ப தெருவிலே முப்ப தாராம்நம்பர் வீட்ளே யிருக்காரே, அப்பாயிநாய்க்கர் அவுரு பெண்டாட்டி ஆ ஆ லட்சுமிண்ணு அந்தம்மாளுக்குத் தரும் என்ன அடக்கம் என்ன ஒடுக்கம், என்ன மறியாதே மனுஷாளெ கண்டா யென்ன வணக்கம் ஆம்பிடியானுக்கு அந்தம்மாளேபோலே உபசாரஞ்செய்ரவங்களே கிடையாது. பாழாபோன யமன் பொறுக்காத பூட்டான். அந்தம்மாளே அனியாயமா கொண்டும்பூட்டான். அந்தம்மாளே தேடிவந்த சாவு இந்த பாவி முண்டைங்கிளுக்கு வறக்கூடாதா, இவுங்ளே இப்படி இவங்க இஷ்டம் போல ஊர் திரிய உட்டேட்டா நம்ப கெதி யென்ன, நம்ப ஊட்டு வேலே ஆவரது எப்டி, நம்ப கொண்டாங் குடுத்தா யென்ன மதிப்பாங்கோ, அவங்ளே, நெல்லா ஒதெ ஒதெண்ணு ஒச்சி வழிக்குகொண்டாந்தாதாங் குறிபடுவாங்கோ இல்லாபோனு பேசாதே இதெவிட தல மேலே துணியெ போட்டுக்குணு கோவிந்தாண்ணு பூட்டா உத்தமம், இதென்ன ஒருநாளே போல எங்கெங்கியோ திரியபூட்டா நம்பகெதிதா யென்ன, இதுயென்ன குடுக்கிரத்தே குடுத்து குஷ்

டரோகிகால்லெ ஊழ்ந்தாப்போலெ, நம்ப கைபண த்தேசெலவிழுசி ஒரு கல்யாணம் பண்ணிகினு நம்ப அடுப்பு வேலயேயும் வூட்டு வேலயேயும் கூடபாத்துகுணோண்ணு இதென்னு பாவம், ஐயா வாங்கய்யா எல்லாம் ஊட்ளே போயி வக்காந் திருக்கலாம், அவங்க் இஷ்டம்போல் யெப்ப வர் ராங்களோ வரட்டும், இண்ணைக்கி குடுக்கிர ஒதே சாவாமுட்டுங் காபமிருக்குணும்" என்று பேசிக் கொண்டு அஷ்ட தரித்திரங்களைப்போல் விளங் கும் ஸ்திரீகளின் கணவர்கள் தங்கள் தங்கள் வீட்டிற்குள் போய்விட்டார்கள்.

இது நிற்க மாணிக்கவல்லியைப் பார்க்கச் சென்ற மேற்சொல்லிய ஸ்திரீகள் மாணிக்கவல்லியின் விசா ரணை முடிகிறவரையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந் துக்கொண் டிருக்கிறார்கள். அப்போது,

முத்-ள்:—அதில்லா ஒரு சங்கதி,மாணிக்கவல்லியண்டே நகெயிருந்ததுண்ணு எப்டி ராஜாவுக்கு தெரிஞ் சுது ?

ரத்-ள்:—ஆ ஆம் அதென் மாவே எனக்கு கூட தெரி யலே.

குட்-ள்:—இதுக்கென்னு ஒளவுமேலே புடிச்சிகிறுங்கோ இப்போ எவ்ளோகேசு ஒளவுமேலே புடிச்சி யிருக்குது, அந்த மாதிரிதான் இதுகூட.

பெந்தி-ள்:—அதுகூட யில்லாவே, இந்த மாணிக்க வல் லிக்கும் அரண்மனிலே ஒரு சேகுவனுக்கும் விரோதம் இருக்கும், அதுனாலே அவளே அவு மானஞ் செய்யணோண்ணு கரம்வெங்சிகினு அந்த

நகியே யெடுத்தும்போயி அவ்வூட்ளே தெரியாதே போட்டேட்டிருப்பான் — — — —

ராத-ள்:—சி, சி சொல்ரது தப்பு யாரோ சேகுவங் கொண்டாந்து மாணிக்கவல்லி க்கைலே குடுத்தூட்டு ஐநூறு ரூபா வாங்கிகினு இதோ வர்ரேண்ணு ஏமாத்தூட்டு பூட்டானும்.

அழ-ள்:—ஓ, ஓ சர்தான், ராஜாவண்டே யிருக்கிரவந்தா யாரே திருடிபூட்டான், அப்புரமத்தே யென்ன பண்ரதுண்ணு தெரியாதே மாணிக்கவல்லி பாவத்தே கொட்டிகினன். பாவம் மாணிக்க வல்லிக்கி ரொம்ப அவமானம்.

ரத்-ள்:—அது செர்தான் இப்போ நகெ யாரெண்டே யிருக்குது மாணிக்கவல்லிக்கி குடுத்தூட்டாங் களா ?

முத்-ள்:—இல்லேயில்லே ராஜா நகையே வாங்கிகினரு அனுலேதா ன்ன மாணிக்கவல்லியே விடுதலெ செஞ் சூட்டாங்கோ என்று இவ்வாறு பேசிக்கொண்டு சில்லோரும் தங்கள் தங்கள் வீட்டிற்குட் பிரவே சித்தனர்.

இவர்களைக்கண்டதும் இவர்களுடைய நாயகர்கள் "அடீ முண்டைங்கிளா எங்கே ஊர்திரிய போனிங்கோ இருக்கிர வேலெயெல்லா மப்படியே போட்டேட்டு எல் லாரும் பூட்டிங்களே இந்த தெர்லே சனியனெ போல வரிசியாக வந்து சேர்ந்திங்களே இது என்ன எங்க பாவமா, ஒண்ணு யோக்கியமா யிருக்கக் கூடாதா, பாவிங்களே, நீங்க நாசமா பூடோ" என்று பற்பல வாறு தங்களால் கூடியவரையில் திட்டினர்கள்.

ஆனல் சபாபதி முதலியாருக்கோ அதிக கோபம் வந்துவிட்டது. அவர் மனைவி வீட்டிற்குள் நுழைந்ததும், தலைமயிரைப் பிடித்துக்கொண்டு "என்னடீ, எனக்கு எண்ணே தேச்சி சாக்கட்லே வக்காரவெச்சுட்டு சிக்கா அரச்சிகிணேயிருந்து பூட்டியே யெங்கதியென்னுவாது. இதுகுதானு உன்னே கல்யாணம் பண்ணது என்று சொல்லி ஒருபெரிய தடியையெடுத்து நையப்புடைத்தார். அப்போது முத்தம்மாள் வழி நடந்துவந்த இளைப்பினுலும் பசியின்கொடுமையாலும் தன்னுடைய சிநேகிதர்க ளருகிலில்லாததாலும் அடிகளையெல்லாம் வாங்கிக்கொண்டுத் தேம்பித் தேம்பி யழுதபடியே தன்னுடைய சிநேகர்களின் வீட்டிற்குப் போயவர்களுடன் சங்கதியைச்சொல்லி அவர்களை யழைத்துக்கொண்டுத் தன் வீட்டிற்கு வந்தாள். அப்போது இவர்கள் எட்டு ஸ்திரீகளும் தங்களாலியன்ற வரையில் சபாபதி முதலியாரை நன்ருக சாயம்பட்டு இரத்தம்வழியும்படி அடித்தனர். அடியுண்ட சபாபதி முதலியார் இன்னசெய்வதென்று தோன்ருமல் "இதுவும் நமது கன்மமே, இதற்கு நம்மாலாவதென்ன விருக்கிறது, அனுபவித்துத்தானே தீரவேண்டும்.

"பத்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானுலா
லெத்தாலும் வாழ்ந்துண்டிருக்கலாஞ்—சற்று
ஏறுமாருக இருப்பாளே யாமாயின்
கூருமற் சன்னியாசங் கொள்"

என்று மூதாட்டியரும் கூறியிருக்கின்றன ரலலவா, அவர்களுக்கு இவற்றின் அனுபவம் தெரியாமலா உரைத்திருப்பார்கள். இனிமேல் இப்படிப்பட்ட கொடிய ாதகியுடன் கூடி வாழ எனக்குப் பிரியமில்லை. இவள்

நம்மை யொருவேளை கொன்றுவிட்டாலும் விடுவாள். நாம் சொல்லாமலிவ்வீட்டைவிட்டுப் போய்விடுவதே உத்தமமென்று தீர்மானித்துக்கொண்டு, அவ்வூரில். ஞான மார்க்கத்தைப் போதிப்பதில் வல்லவராயும், அநேகரால் நன்கு மதிக்கப்பட்டவராயும் சன்மார்க்க நெறியையே அனுட்டிப்பவராகியும் விளங்காநின்ற, ஞான தேசிகர் மடத்திலுள்ள சிவாநந்த தேசிகரிருப்பிடஞ் சென்று, கைகூப்பி வணங்கி, அடியற்ற மரம்போல் அவரெதிரே பணிந்து, எழுந்து கைகட்டி, வாய் பொத்தி, யொருபுறம் நின்றார். அப்போது

சிவாநந்தர்:—ஐயா நீர்யார் ஏனிங்குவந்தீர்?

சப-ர்:—சுவாமி, அடியேன் மீது கிருபாகடாட்சம் வைத்து இரட்சித்தல்வேண்டும். நானிவ்வூரிலேயே சுமார் முப்பத்திரண்டு வருடமாக வசிக்கின்றேன். இப்போது எனக்கு இல்லற வெறுப்புத்தோன்றி துறவறத்தில் விருப்புற்றமையால் அதற்குரிய சற்குருவை யானெங்கெங்கு தேடியும் கிடைக்காமல் இப்போது உங்களுடைய மேலான நடக்கையையும் பக்திமார்க்கத்தையும், கல்வியையும் கேள்விப்பட்டு, ஆனந்த சாகரத்தில் மூழ்கி, உங்களைக்கண்டு சில உண்மை நூல்களைக் கற்றுக்கொண்டு துறவியைப்போ லிவ்விடத்திலேயேயிருந்து, யென் காலத்தைக்கழிக்க யோசித்து இங்குற்றேன். நான் இப்போதே சன்னியாசி வேடம்பூண்டு உங்கள் மடத்திலிருக்கும் அடியார்களுடன் கலந்திருக்கப் பிரியப்படுகிறேனென்றார்.

சிவாநந்தர்:—மிகவும் சந்தோஷம் நீர் நன்மார்க்கத்தை நாடிவந்திருக்கின்றமையால் உமக்கு உண்மை

யானசாஸ்திர நூல்களைப்போதிக்காமல் கைவிட்டு விடுதல் நீதியல்லவாகையால் யானுமக்கு இப்போது சொல்லப்புகும் விஷயங்களைக் கவனமாய் கேட்பீராக அஃதென்னவென்றால் கடவுள் ஒருவர் உண்டென்பது யாவருமறிந்த விஷயமே. அத்தகைய கடவுள் எங்குஞ் நிறைந்தபொருள், சர்வ வியாபகர், சர்வ பரிபூரணர் என்றும் அவரைக் கூறுவதுண்டு. அவரில்லாதவிடமே கிடையாது, அவர் வியாபித்தில்லாத வஸ்து கிடையாது, அவரருளை யெதிர்பார்த்து தான் யெல்லா ஜீவராசிகளும் வாழவேண்டும். இப்பிரபஞ்சத்திலுள்ள எழுவகைப் பிறவிகளுள் சிரேஷ்டமாகிய மானிடப்பிறவியை நாமெடுத்தும் அதற்குரிய ஆன்ம லாபத்தை இப்பிறவியிலேயே அடைய முயலாவிடில் அப்பாவம் நம்மைச் சார்ந்ததாகும். அதற்காகக் கடவுளின் மீது குற்றஞ் சொல்லுதல் கூடாது. நமக்கு, எல்லாப் பிறவிகளிலும் மேலான மானிடப் பிறவியிலும், யாதொரு அங்கவீனமுமின்றி காப்பாற்றிவரும் எல்லாம் வல்லபெருமானுக்கு, என்ன பிரதி யுபகாரஞ் செய்யப்போகிறோம். ஆகிலும் ஒரு பிரதியுபகாரம் செய்யலாமல்லவா? அஃதென்னவென்றால் அவருடைய தாமரை போன்ற அழகிய திருவடியை யென்றும் மறவாமலும், பாபகாரியங்களைச் செய்யாமலும் அவருடைய திவ்ய திருப்புகழைப் பாடிக்கொண்டும், பேசிக்கொண்டும், காலத்தைக் கழித்தலும், எம்பெருமான் திருக்கோபில் கொண்டெழுந்தருளி யுள்ள திவ்ய ஸ்த

லங்களுக்குத் தேடிச்சென்று வணங்குதலும் அவருடைய மெய்யன்பர்களுக் குற்ற ஆபத்துக் களை நீக்கி அவர்களுக் கிதஞ்செய்தலுமாகிய இத் தகைய நற்காரியங்களையே நம்மை சிருஷ்டித்த பெருமானுக்கு ஒப்பற்ற பிரதி யுபகாரமாகச் செய் தல் கூடாதா? மனிதர்களாகப் பிறந்தால் சகல துன்பங்களுக்கு மாளாக வேண்டுமல்லவா.

* "காலையுபாதி மலஞ்சலமாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமா முற்சஞ்சிதமா
மாலையுபாதி துயில் காமமாமிவை —"

என்றபடி ஒவ்வொருநாளும் காலை தொடங்கி மாலை வரையில் மனிதர்கள் துன்பங்களனுபவிக்க வருகிறதே யொழிய சுகமில்லை. அத்தகைய துன்பங்களில் முக் கியமான துன்பம் வயிறு வளர்க்க நேரிடுகிறதே யொழிய வேறில்லை. இப்பாழ்வயிற்றை வளர்த்தலின் நிமித்தமாக அநேகர் 'கள் விற்றல், புலால் விற்றல், பொய் சொல்லுதல், வஞ்சித்தல், திருடுதல் முதலிய அநேக பாபகாரியங்களைச் செய்ய நேரிடுகின்றது. அது வுமன்றி எத்தனையோ ஜனங்கள் உணவின்றி வீதிகளி லெல்லா மலைந்து திரிந்து எச்சிலைப் புசித்தும் காலங் கழித்து வருகின்றனரல்லவா, ஒருவனிடம் போய் கை கட்டி சேவகம் செய்வதும் உழுது பயிரிடுதலும் வயிற் றின் நிமித்தமல்லவா.

* "பூணும்பணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதனைக்
காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்சாட்சிக்கல்ல
சேணுங்கடந்த சிவனடிக்கல்ல வென்சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்கவடியேன் படுந்துயர் சற்றல்லவோ."

* பட்டிணத்தார் பாடல்

என்று சகச ஞானியுங் கூறியிருக்கின்றன ரல்லவோ இப்படிக்கெல்லாம் ஒருவன் கஷ்டப்பட்டுக் கூலிவாங்கி தன்வயிற்றை அன்னபானாதிகளால் ஒரு முறை நிரப்பி விட்டால் மறுபடியும் பசியெடுக்காம விருக்கிறதா, இல்லையே, இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் பசிப் பிணி வாட்டுகிறதே. ஒருவன் தனக்கு ஆயுள்வரை யில் உணவாதிகட்கு வேண்டிய செல்வங்களை வைத் திருந்தாலும் அவன் துன்பமில்லாமல் வாழ்கின்றானா, இல்லையே, புற்றிலிருந்து ஈசல்கள் புறப்படுவது போல ஒவ்வொரு துன்பங்களாக வெளிவருகின்றன வல்லவா? ஒருவன் தன் தேகத்தைக் காப்பாற்ற அநேகவித பல காரங்களோடும் நாலுவித உண்டி அறுசுவை பதார்த் தங்களை உண்டுகளித்து வருகிறான்.

அவ்வளவு அன்புவைத்துக் காப்பாற்றிய அத் தகைய தேகத்தா லவனுக்கேதாவது பயனுண்டா? அவனுடைய உடலைவிட்டு உயிரானது போய்விட்டால் அத்தேகம் பயனற்று மண்ணுக்கிரையாகி விடுகின்ற தல்லவா? அஃதன்றி நாம் இந்த நிமிடத்தில் இறப்போ மென்று நமக்குத் தெரியுமா, ஒருவன் அநேக் கோடி ரூபாய்செலவுசெய்துஒருபெரிய பங்களா கட்டி அதிலே யே இறக்க வேண்டுமென்று யோசிக்கிறான். ஒருவனை யவனிஷ்டப்படி நேர்ந்தாலும் நேரும். அல்லது எந்தக் காட்டிலோ, செடியிலோ, மலையிலோ, ஏரியிலோ, திண் ணையிலோ, வீதியிலோ, சாக்கடையிலோ, ஊர்பிரயா ணம் போம் போது நடுவழியிலோ பிராணன்போய்விட் டாலும் விடுமல்லவா? இறந்தபின் யாராவது தாங் களதிக கஷ்டப் பட்டுத் தேடிய வீடுவாசல் களையும் ஏனைய செல்வங்களையும் கூடவே யெடுத்துக்கொண்டு

போனார்களா, அல்லது அவனுடைய மனைவிமைந்தர்கள் இயமனை யெதிர்த்து வென்று இறந்தவனை உயிருடன் மீட்டு வந்தனரா, இல்லையே, தங்கள் தங்கள் காரியங் களிலேயே கண்ணாக வருந்து இறந்தவன் வைத்து விட்டுப் போன செல்வங்களை யனுபவித்து வருகின்றார் களல்லவா, இறந்தவனையெழுப்புவதற்கு என்னமுயற்சி செய்தாலும் எம்பெருமானுடைய திருவருளின்றி அத் தகைய அரிய சித்தி கைகூடுமா? ஐயோ நீரோ கொடிய பெண்டுபிள்ளைகளைச் சதமென நம்பி வாணாளை வீணா ளாகக் கழித்து இயமன் பாசக் கயிற்றிற் கட்டுப்பட்டு அவதிப்படாமல் உங்கள் பூர்வ புண்யத்தினால் உண் மையை விசாரிக்க வெண்ணி யிவ்விடத்திற்கு வந்தீர். யானும் அந்தகைய விருப்ப முள்ளவர்கட்கு உண்மை யைப் போதிக்க அதிக ஆவலுள்ள வனாயிருக்கின் றேன். ஆகையால் நீர் இன்றே சன்னியாசி வேடம் பூண்டு இம்மடத்திலுள்ள அடியாருடன் கலந்துகொள் வீராகில் யான் இன்றுமுதல் அடியார்களுக்குப் பக்தி மார்க்கத்தைப் போதிக்கும் போது உமக்கும் போதிப் பேன். இது உண்மை யென்று சொல்லி அவருக்குத் தன்னிடமிருந்தகாவிவேட்டி, விபூதிப்பை, உருத்திராக் கம் முதலியன வற்றைக் கொடுத்தார். அன்று முதல் சபாபதி முதலியார் சபாபதி சுவாமிகளென அம்மடத் திலேயே தங்கி காலங் கழித்து வந்தார்.

நண்பர்களே! மாணிக்கவல்லியை அரண்மனைக்கு அழைத்து வந்து விசாரித்து அவள் மீது குற்ற மில்லை யெனத் தீர்மானித்து, அவளைப் பல்லக்கிலேற்றி யனுப்புகிற வரையில் ராமய்யர் அரண்மனையிலிருந்து நன்றாகக் கவனித்துக்கொண்டிருந்து, அப்பால் அவ்

விடத்தை விட்டுப் புறப்பட்டு ஒட்டலுக்குச் சென்று போசன முடித்துக்கொண்டார்.

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

### திருடனுக்கு இப்போது மாதசம்பளம் ரூபாய் நூறு. மாளவ தேயத்தில் ஊர்க்காளி பூஜை நடத்தப்பட்டது.

சேர்மேன்:—அடே ராமா! நம்முடை சங்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் தினம் வருகிறார்களா?

ராமன்:—ஐயா நேற்றையதினம் நான்கு பேர் வரவில்லை. கையெழுத்துப் புஸ்தகத்தைக்கொண்டு வருகேறன் இதோ பாருங்கள்.

சே-ன்:—கையொப்பப் புஸ்தகத்தைப் பார்த்துவிட்டு, அடேநேற்றையதினம் நம்முடையசங்கத்தில் ஒரு சண்டை நடந்ததாமே, அது என்ன காரணம்?

ராமன்:—ஆம் ஐயா நேற்றை யதினம் சாயங்காலம் சங்கத்தில் காகிதம் (Playing cards) ஆடிக்கொண்டிருக்கையில் நாராயண செட்டியாரும் தம்பி முதலியாரும் சண்டை செய்தார்கள். பிறகு அவர்களுக்குள் அதிக மன வருத்தம் வந்து காகிதங்களை யெல்லாம் கிழித்துப்போட்டு விட்டார்கள்

சே-ன்:—சரி சரி இந்த ஆனந்த விருத்தி சங்கத்தில் பெரிய உத்தியோகஸ்தர்களும் தனவான்களும், அறிவுள்ளவர்களும் சந்தாதார்களாக விருக்கிறார்கள். இன்னும் இச்சங்கத்தில் சேர்ந்தால் நன்னடக்கை விருத்தியாகுமென்று இவ்வூரிலுள்ளோர் எண்ணியிருக்கிறார்கள். இப்படி இவர்கள் சண்டை போடுவது ஊரிலுள்ளவர்களுக்குத் தெரிந்தால் இது குடியர், வெறியர், அயோக்கியர் இருக்கும் சங்கமென்றல்லவோ எண்ணப்படும்

ரா-மன்;—ஆம் ஐயா நேற்று இங்கு நடந்த சண்டையைப் பற்றி என்னை அநேகர் விசாரித்தார்கள். அவர்களுக்கு நான் சரியான பதில் சொல்லவில்லை.

சே-ன்:—சரி, நிரம்ப அழகு, இந்த யோக்கியதை ஊரிலுள்ளவர்கட்குக் கூடத் தெரிந்து விட்டதா?

இச்சங்கத்திற்கோரபகீர்த்தியும் வரும். இதை மூடிவிட்டால் மிகவும் நலம். அல்லது அவர்களிருவரையு மிச்சங்கத்தை விட்டு நீக்கிவிடுதல் உத்தமம், ஏண்டா ராமா! காயிதம் ஆடுவதில் அவ்வளவு பிரமாத சண்டையா அவர்களுக்குள் வேறு ஏதாவது விரோதமுண்டா?

ராமன்:—ஆம் ஐயா மாணிக்கவல்லியின் விஷயத்தைப் பற்றி நேற்றையதினம் சாகிதம் ஆடிக்கொண்டிருந்தபோது பிரஸ்தாபம் நடந்தது. அப்போது தம்பி முதலியார் மாணிக்கவல்லி மாதிருடி, அவள் அநேகம் பேரை மோசஞ்செய்தவள், இந்ததரம் அரசன் அவளைத் தண்டித்திருந்தால் மிக நலமாயிருக்கும் என்றார். உடனே நாராயண செட்டி

யாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் தம்பி முதலியாரைப் பார்தது "என்ன யோசனையில்லாமல் பேசுசிறீர் ஒரு ஸ்திரீ ஒரு அரண்மனையில் விவாக காலத்தில் சென்று ஒருவருமறியாமற் படிக்கு எப்படி நகைகளைக் களவாடியிருப்பாள்" என்றார். அப்போது தம்பி முதலியார் "அடே உனக்கென்ன தெரியும் அவள் சங்கதி அவள் அதைவிட பப்ளிக்கான (Public) விடத்திலும் திருடுவாள்" என்றார். அப்போது நாராயண செட்டியாருக்கு அதிககோபம் வந்து மிகவும் உரத்த குரலுடன் பேசி சண்டையைப் பிரமாதஞ் செய்துவிட்டார். உடனே சுப்பண்ணு எழுந்து அவர்களைப்பார்த்து "என்ன ஐயா ஊர் சங்கதியைப்பற்றி நீரேன் சண்டைபோடுகிறீர், அவளென்ன உங்களுக்குப் பாத்தியமா, ஒன்றுமில்லையே, யார் பணம் கொடுத்தாலும் உறவாடத் தயாராகவிருக்கிறாள். அத்தகைய பொதுமகள் விஷயத்தைப்பற்றி நீங்களேன் வீண்வாது செய்து உங்கள் நேசத்தை யிழக்கிறீர்" என்றுசொல்லி சமாதானஞ்செய்தார்.

சே-ன்:—அடே மாணிக்கவல்லியைப்பற்றி இகழ்ச்சியாகச் சொன்னால் நாராயண செட்டியாருக்கு ஏன் அவ்வளவு கோபம் பிறந்தது?

ராமன்:—அப்பா, அந்தப்பேச்சை ஏன் கேழ்க்கிறீர். நாராயண செட்டியார் வீடுவாசலிழந்து பாப்பர் (Pauper) ஆனதற்கு மாணிக்கவல்லியின் சிநேகம் தான் காரணம்.

சேன்:—சரி ஒழியட்டும், நமக்கு அதைப்பற்றி இப்போது என்ன ஆகப்போகிறது, மணி இப்போது என்ன ஆகிறது பார்.

ராமன்:—ஐயா இப்போது பகல் 12 மணியாகிறது.

சே-ன்:—போஜன வேளையாகிறது. நீ வீட்டிற்குப் போய் சாப்பிட்டுவிட்டு வரும்போது கீழண்டை ராஜவீதியில் 25-வது நம்பர் வீட்டிலுள்ள சுந்தரய்யர் ஒட்டலுக்கு வந்து எனக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு வரும்படி சொல்லிவிட்டுவா என்றதும் இராமன் வீட்டைநோக்கிச் சென்றான்.

நேயர்களே! இந்த சேர்மென் இன்னாரென்றுமக்குத்தெரிந்தும் தெரியாமலுமிருக்கலாம். இவர் தாம் நம கதாநாயகனாகிய ராமய்யர். தாசி மாணிக்கவல்லியின் விசாரணை முடிந்தபின் இவர் ஒட்டலுக்குச்சென்று போசனஞ் செய்துவிட்டுப் பின்னர் இந்த சங்கத்தின் தெருத்திண்ணையின்மீது தென்றற்காற் றினிமையாக வீசியதால் நித்திரைசெய்ய ஆங்குவந்து அக்கட்டடத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையில், அந்தக் கட்டடத்தின் வடக்குமூலையில் பிரசுரப்பலகை (Notice Board) யில் அடியில் வருமாறு எழுதியிருந்தது.

## விளம்பரம்.

### ஆனந்த விருத்தி சங்கம், நிரணநாடு.

இந்த சங்கத்தின் சேர்மென் இறந்துவிட்ட படியால் வேறொருவர் தேவை. மாதம் ஒன்றுக்கு சம்பளம்

நூறு ரூபாய் மற்றவிபரங்களை இச்சங்கத்தின் மானேஜ ரிடம் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

இப்படிக்கு:

எ. ஆர். மாது,

மானேஜர்.

இதைப் படித்த பின் ராமப்பர் நித்திரை செய்து விட்டு மறுநாட் காலையிலெழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கடைவீதிக்குப்போய் மாணிக்க வல்லியிடமிருந்து பெற்றுக்கொண்டு வந்த ரூபாயில் ஐம்பது ரூபாய் கொடுத்து விலையுயர்ந்த ஆடைகள் வாங்கித் தரித்து மேற்படி சங்கத்தின் மானேஜரைக் கண்டு வணங்கி 'ஐயா இச்சங்கத்திற் கொரு சேர்மென் தேவையென விளம்பரப்படுத்தியிருக்கிறதே. அதற்கு என்னை நியமிக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மானேஜர்:—இவரை அநேக கேள்விகள் கேட்டுப் பின்னர், நீ இங்கே சற்றுநேரம் இரும். எங்கள் சங்கத்தின் டாக்டர் (Doctor) வந்ததும் உம்மைப் பரிசோதனை செய்தபின் உமக்கிந்த உத்தியோகம் கிடைக்கும் என்றார். ராமய்யரும் அவ்விடத்தில் ஒரு நாற்காலியின் மீது சற்றுநேரம் உட்கார்ந் தார். அப்பால் டாக்டர் வந்தபின் மானேஜர் உத்தரவுப்படி ராமப்பரைப் பரிசோதனை செய்து "இவர் மிகவும் வலிமையுடையவர், உடம்பில் யாதொரு நோயுமில்லை" என்று தீர்மானித்தபின் மானேஜரும் ராமப்பருக்கு சேர்மேன் உத்தி யோகம் கொடுத்து விட்டார், அதுமுதல் ராமப்பர் சேர்மேனாக இருக்கின்றார்.

ராமன்:—ஐயா! சோமு ஐயர் தங்களுக்கு சாப்பாடு கொண்டு வந்திருக்கிறார் என்றான். அப்போது ராமய்யரு மெழுந்து கைகால் சுத்திசெய்து கொண்டு சாப்பிட்டுவிட்டுத் தன்னுடைய நாற்காலியின்மீது உட்கார்ந்து கவனித்துக்கொண் டிருந்தார்.

மாளவதேசத்தில் கிராம தேவதையாகிய ஊர்க் காளியம்மனுக்கு வருமோற்சவங் கொண்டாட சகல ஏற்பாடுகளுஞ் செய்தார்கள். வீதிகளிலெல்லாம் தோரணம் கட்டிவிட்டு, எங்குபார்த்தாலும் மங்கல ஓசை முழங்கிற்று. காளியம்மன் கோவிலை மிகவும் விமரிசையாகச் சிங்காரஞ் செய்துவிட்டார்கள். அதுவுமன்றி காளியம்மனை ஊர்வலஞ் செய்வதற்காக தேவேந்திர விமானத்தைப்போல மிகவும் அழகாகிய அதிக வாசனையுள்ள புஷ்பங்களால் சிங்காரஞ்செய்து, உட்புறமெல்லாம் மிருதுவான பட்டுத்துணியைத் தைத்து வெளிப்புறமெல்லாம் அதிக விசித்திரமான படங்களை மாட்டி ரசக்குண்டுகளைத் தொங்கவிட்டு காளியம்மனை வைக்குமிடத்திற்கு நேராக ஒரு பெரிய நிலக்கண்ணாடியும் மாட்டினார்கள். அரசனுடைய அரண்மனையும் தேவமாளிகையைப்போலப் பிரகாசிக்கும்படி அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. அவ்வூரிலுள்ளவர்களெல்லாம் தங்கள் தங்கள் வீடுகளைச் சுத்தம்செய்து மெழுகிக் கோலமிட்டு வாழைமரம், கமுகு, தென்னை ஓலை முதலியவற்றால் அலங்கரித்தும் பஜனைகள், பிரசங்கங்கள் முதலிய பக்திமார்க்கத்தைக் கொண்டாடியும், புதிய உடைகளைத் தரித்துக்கொண்டு காளியம்மன் வீதி புறப்பாடாகி வரும்போது தீபாராதனைக்கு வேண்டிய

பழம், தேங்காய், கற்பூரம், புஷ்பமாலை முதலியனவற்றை ஒரு தட்டில் வைத்துவிட்டு, மற்றொரு தட்டில் சில தேங்காய்கள், பழங்கள் முதலியனவற்றை யெடுத்துக்கொண்டு காளிகோவிலுக்குப் போகப் புறப்பட்டார்கள். இக்காளியம்மனுக்கு வருடோற்சவங் கொண்டாடுவதால் அவ்வூருக்குள் யாதொரு தொத்து வியாதியும் வராதென்பது அவ்வூராருடைய கொள்கையாகையால், அநேகர், தங்கள் தங்கள் வீடுகளில் பலவித பலகாரங்கள் செய்து காளியம்மன் அவ்விடம் வரும்போது அப்பலகாரங்களை காளியம்மனுக் கெதிரே கொட்டி தீபாராதனை காண்பித்துவிட்ட பிறகு அங்குள்ள ஏழை ஜனங்களுக்கு அவற்றைக்கொடுத்து விடுவார்கள். அவ்வூரில் யாருக்காவது அதிகநோய் வந்து துன்பம் தந்தால் இக்காளியம்மனுக்கு பிரார்த்தனைசெய்து கொள்வது வழக்கம். அப்படி பிரார்த்தனை செய்துகொண்டவர்களெல்லாம் அதிகாலையிலெழுந்து ஸ்நாநஞ்செய்துவிட்டு, காளிகோவிலுக்குச்சென்று பொங்கலிட்டு ஆடு, கோழி முதலிய வாயற்ற ஜீவன்களை "அந்தோ" பலிகொடுத்து பிரதட்சணம் செய்துவிட்டு வருவார்கள். இப்படி பலிகொடுக்கப்பட்ட ஜீவன்களின் இரத்தம் ஓர் பெரிய ஆறுகப்பாய்ந்து ஓடிற்று. காலை 8 மணிக்கெல்லாம் மிருத்திக மகா ராஜனும், மந்திரி முதலானவர்களும் வெளி தேயத்துச் சிற்றரசர்களும், தங்கள் தங்கள் பரிவாரங்களோடு காளிகோவிலண்டை வந்து சேர்ந்தார்கள். அவ்வூரிலுள்ள ஜனங்களெல்லாம் காளியம்மனைத் தரிசிக்க ஆசைகொண்டு, தாங்கள் செய்யவேண்டிய தொழில்களையெல்லாம் விட்டும், வியாபாரிகள் தங்கள் தங்கள் கடை

களை மூடிவிட்டும் வந்து சேர்ந்தார்கள். அன்றைய தினம் பிரசித்தமான விடு முறை நாள் (Public Holiday) என்று அரசன் உத்தரவு செய்துவிட்ட படியால், எல்லா உத்தியோகஸ்தர்களும் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும் வந்து அங்கு சேர்ந்தார்கள். அப்பால் காளியம்மனைப் பூசை செய்யும் இருவாட்சி பண்டாரம் அரசனுடைய உத்தரவு பெற்றுக்கொண்டு காளியம்மனுக்கு அபிடேகஞ் செய்ய வாரம்பித்தார். முதலில் பெரிய பெரிய பித்தளைப் பாத்திரங்களில் மொண்டு வைத்திருந்த ஜலத்தில் வாசனைத் திரவியங்கள் கலந்து அம்மனுக்கு அபிடேகஞ் செய்துவிட்டுப் பின்னர் மலையைப்போலக் குவித்துவைத்துள்ள பழ வர்க்கங்களை முறையே யெடுத்து அபிடேகஞ் செய்து, பின்னர் பால் தயிர் நெய் முதலியன வற்றாலும் இளநீராலும் அபிடேகித்து, கடைசியாக எல்லா ஜலங்களையும் விட்டு அப்பால் நன்றாகத் துடைத்தனர். பிறகு அம்மனுக்கெதிரே ஓர் திரையைப் போட்டுவிட்டு அம்மனுக்கு விலை யுயர்ந்த புதிய ஆடைகளைச் சாத்தி, நவரத்னங்களிழைத்த நகைகளால் அலங்கரித்து அநேக விதமான அழகிய பூமாலைகளைச் சூட்டி எல்லாவித பலகாரங்கள், பழவர்க்கங்கள், நீர்மோர், பானகம் முதலிய இன்னும் அநேகவற்றை யெதிரே வைத்து நிவேதித்து திரையை யெடுத்துவிட்டு அங்குள்ள ஜனங்களெல்லாம் நன்கு காணும்படி தூபதீபங்கள் காட்டினர். அன்றே தங்களுடைய ஊழ்வினைப் பயனும் பிறவித் துன்பமும் ஒழிந்துவிட்ட தென்றெண்ணினர் சிலர். இப்படியிருக்கக் காளியம்மனுக்குத் தீபாராதனை செய்யத் தேங்காய் பூபழம் முதலியனவற்றைக் கொண்டுவந்தவர்கள் அவை

களை இருவாட்சி பண்டாரம் வசம் கொடுத்து அம்மனுக்கு நிவேதித்து ஆனந்தங்கொண்டனர். அநேகர் அக்கோவிலுக்கு வந்திருந்த ஏழைகளுக்குத் தர்மம் செய்தார்கள். அதுவுமன்றி அரசனேவற்படி கோதானம், வஸ்திரதானம், அன்னதானம், சொர்னதானம முதலியனவெல்லாம் பக்குவப்பட்டவர்களுக்கு நடந்து வந்தன.

இவை யெல்லாம் முடிந்ததும் அம்மனுக் கெதிரில் நவகலசங்களை நிறுத்தி அவற்றிற்குச் செய்ய வேண்டிய கிரியைகளெல்லாஞ்செய்து ஓமம் வளர்த்தி பிராம்மணர்களுக்கெல்லா மநேகவிதமான மறியாதைகள் நடத்தப்பட்டன. அப்பால் காளியம்மனை முன்பு அலங்கரித்து வைத்திருந்த விமானத்திலேற்றி மிக வீட்டம்பரமாக வீதிவலம் வந்தார்கள். திரளான ஜனக்கூட்டம் காளியம்மனுக்குப் பின்னுல் சென்றன. வீதி பிரதட்சணம் முடிந்தபின் அம்மனை கோவிலுக்குக் கொண்டு வந்து மறுபடியும் நைவேத்தியம் செய்வித்து தூப தீபாராதனைக ளெல்லாங் காட்டினுர்கள். காளியம்மன் மீது தரித்திருந்தமாலைகளில் பெரியமாலையை யெடுத்து இருவாட்சிபண்டாரம் மாளவதேயத்தரசன் கழுத்தில் போட்டு ஆசீர்வாதஞ் செய்தார். அப்பால் அங்கு வந்திருந்த சிற்றரசர்களுக் கெல்லாம் முறையே மாலை போட்டு மரியாதை செய்தார். சுமார் சாயங்காலம் 3 மணிக்கு அம்மனை விமானத்தினின்று இறக்கி கோயிலுக்குள் வைத்துவிட்டு கோவிலைப் பூட்டிக்கொண்டபின் எல்லோரும் உங்கள் தங்கள் இல்லம் ஏகினுர்கள். மாளவதேயத்தரசனும் சிற்றரசர்களை யெல்லா மழைத்துக்கொண்டு, தனது அரண்மனைக்குச் சென்று எல்

லோருக்கும் திவ்யமான போஜனம், பண்டுபலகார தினுசுகளுடனளித்துத் தாம்பூலங்கொடுத்து அவர்களுடன் கிரீடம் களவுபோனதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, பின்னர் கிரீடத்தை அவர்களுக் கெல்லாம் காண்பித்து, இந்தக் கிரீடம் களவுபோய் அநேகநாள் பொறுத்துக் கொண்டுவந்து கொடுத்த மகம்மதியனைத் தேடிக்கொண்டு மந்திரி சிவசன்மன் போயிருப்பதையுங் கூறித் தன்னுடைய மூதாதையர்கள் அனுபவித்துவந்த இரத்தினங்களிழைத்த கிரீடம் மீண்டும் கிடைத்ததைப் பற்றி அதிக ஆனந்தங்கொண்டாடினான். சற்றுநேரம் பொறுத்து அங்கிருந்த சிற்றரசர்களெல்லாம் தங்கள் தங்கள் தேசங்களுக்குப் போக அரசனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்கள். அன்றிரவு அவ்வூரில் அதிக ஆனந்தமாகவே கழிக்கப்பட்டது. அவ்வூரிலுள்ளோரெல்லாம் காளியம்மனுக்குண்டான உற்சவத்தைப் பற்றி மிகவும் வியந்து பேசிக்கொண்டார்கள்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் வழக்கப்படி மிருத்திகமகாராஜன் தன்னுடைய சிம்மாதனத்திலுட்கார்ந்து "ஏ மந்திரீ, அனந்தசேனா! நேற்றையதினம் காளி கோவில் பூசைக்கு எல்லாதேசத்து சிற்றரசர்களும் வந்தார்களா? யோசித்துச் சொல்"

மந்திரி:—அரசே! நிரணநாட்டைப் பரிபாலித்து வரும் நிவேதனமகாராஜன் மாத்திரம் வரவில்லை. ஏனைய எல்லோரும் வந்தார்கள் என்றான் உடனே அரசனுக்கு அதிக கோபம் பொங்கி "அப்படியா என் அவன்மாத்திரம் வரவில்லை, நீ அவனுக்கு ஒரு நிருபம் எழுது" என்றதும் மந்திரி அடியில் வருமாறு எழுதலானான்.

மாளவதேசம்.

நிரணநாட்டைப் பரிபாலித்துவரும் நிவேதனமகாராஜனுக்கு ஏகச்சக்கரவர்த்தியும் மாளவதேசத்தரசனுமாகிய மிருத்திகமகாராஜன் தெரிவிப்பதுயாதெனில்—, நேற்றையதினம் என் இராஜ்ஜியத்தில் அதிவிமரிசையாக நடந்தேறப்பெற்ற காளியம்மன் வருடோற்சவத்திற்கு நீர்வாத்தவறியதால் எங்கள் இராஜாங்கத்தின் ஏற்பாட்டுப்பிரகாரம் பத்தாயிரம் ரூபாய் அபராதம் உமக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒருமாதத் தவணைக்குள் மேற்கண்ட அபராதத்தைச் செலுத்தி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு போகாவிடில் உம்முடைய அரசாட்சிக்குட்பட்ட தேசங்களை யெல்லா மபகரித்துக் கொள்ளப்படும். இதை அறியவும்.

இப்படிக்கு

மிருத்திகமகாராஜன் உத்தரவுபடி

இரண்டாவது மந்திரி

அனந்தசேனன்.

இந்தக் கடிதத்தை யெழுதி அரசனுக்குப் படித்துக் காண்பித்துவிட்டு நிரணநாட்டரசனுக் கனுப்பிவிட்டான்.

மறுநாட்காலை சுமார் பத்துமணிக்கு இக்கடிதம் நிரணநாட்டரசனுக்குக் கிடைத்தது. இதை வாசித்த பின் ஒன்றும் தோன்றாதவனாய் மந்திரியைப் பார்த்து "ஜனகேசா இதற்கு என்ன பதிலெழுதலாம். சீக்கிரம் யோசித்துச் சொல்" என்று அக்கடிதத்தை யவனிடம் கொடுத்தான். அதை யவன் வாசித்துப் பார்த்துவிட்டு "அரசே! ஒரு சக்கரவர்த்திக்கு இவ்

வளவு அதிகாரம் கொடுத்திருப்பது எப்போதும் சிற்றரசர்களுக்கு ஆபத்தையே தரும். அதுவுமன்றி நம்முடைய அரண்மனையில் நகைகள் களவுபோனதைப் பற்றி நாம் மாணிக்க வல்லியின் மீது சந்தேகப்பட்டு அந்தக் காரியத்திலேயே நம் ஊக்கத்தை யெல்லாம் செலுத்தி யிருக்கும்போது நாமெப்படி காளிகோவில் பூசைக்குப் போக முடியும். இது அசாத்தியமான காரியம். அப்படி வராமற் போனதற்காகப் பத்தாயிரம் ரூபாய் அபராதமென்பது நியாயமாகுமா? நாம் அதிக வலிவுள்ள சேனைகளைச் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குச் சித்தமாயிருப்பதுதான் சிலாக்கியம்.

அரசன்:—சரி, நீ சொல்வது நியாயமே; ஆகையாலிப் போதே அதிக வலிவும், அனுபோகமுமுள்ள சேனைகளையும் சேனாதிபதிகளையும் நம்மரண்மனையில் சித்தம் செய்ய முயற்சி செய்.

மந்திரி:—அரசே! நம்மிடம் வேண்டிய சேனைகளிருக்கின்றன. அவர்களி லநேகருக்குத் துப்பாக்கி யுபயோகிக்கத் தெரியாதாகையால், துப்பாக்கி சுடுவதில் கைதேர்ந்த ஒருவனைத் தேடி நம் அரண்மனையில் சேர்க்க முயலவேண்டும்.

அரசன்:—சரி அப்படியே செய், என்றான். மந்திரி ஜனகேசனும் அன்று முதல் சேனைகளை விருத்தி செய்து வந்தான்.

இது நிற்க, இந்த நிரண நாட்டில் ஆனந்தவிருத்தி சங்கத்தின் சேர்மேன் இராமப்பரைப் பற்றி கவனிப்போம். இவர் போஜனஞ் செய்தபின் தன் மனைவி மைந்தனை நினைத்து “ஆ, ஆ நான் என் மனைவி மைந்

தனைப் பிரிந்து நெடுநாளாயிற்றே, என்னிருப்பிடத்தை யவர்களுக்குத் தெரிவியாம லிருக்கின்றேனே, நான் வீட்டைவிட்டு வரும்போதும் அவர்களிடம் அன்றிர வில் நன்றாய்ப் பேசாமல் ரூபாயை மாத்திரங்கொடுத்து விட்டல்லவோ வந்தேன். இப்போதே ஒரு கடிதம் எழுதி அவர்களுடைய க்ஷேமத்தையும் என்னைப்பற்றி அரண்மனையில் நடக்கு மேற்பாடுகளையும் தெரிந்து கொள்வேன்" என்று நினைத்து அடியிற் கண்ட கடித மெழுத வராம்பித்தார்.

நிரணநாடு,

ஆனந்தவிருத்தி சங்கம்,

என்னருமைத் திருக்குமாரனுகிய மீனவனுக்கு சர்வ ஜீவ தயாபரனுடைய கிருபையால் நன்னடக்கை மேன்மேலும் விருத்தியாகவும். இப்போது நான் நிரண நாட்டில் ஆனந்த விருத்தி சங்கத்தின் சேர்மே னுக விருக்கிறேன். எனக்கு சம்பளம் மாதம் ஒன் றுக்கு ரூபாய் நூறு. இவ்விடம் நான் சுந்தரய்பர்ஓட்ட லில் அதிக திவ்யமான போசனம் சாப்பிட்டு வரு கிறேன். அவ்விடம் உன் தாயாரும் நீயும் என்னைப் பற்றிக் கவலைப்படவேண்டாம், உன் தாயாருக்கு சதா காலமும் கூடுமான தைரியம் சொல்லிக்கொண்டுவா.

அரண்மனையில் என்னைப்பற்றி, யான் ஓடி வந்த பின்பு என்ன எற்பாடு செய்தார்கள். இன்னும் என் னைத் தேடிக்கொண்டிருக்கின்றார்களா, அல்லதுமறந்து விட்டார்களா? இது விஷயம் உடனேபதில் எழுதவும்.

இப்படிக்கு

உன் அன்புள்ள தகப்பனார்.

இராத்திரியில் ஓடிவந்துவிட்ட இராமய்யர்.

என்ற இந்தக் கடிதத்தை யெழுதித் தபாலில் போட்டுவிட்டார்.

## பதின்மூன்ருவது அத்தியாயம்.

### திருடனுக்குப் பதில் கடிதம் பிள்ளை யெழுதினுன். மாளவ தேயத்தரசனை யேமாற்றி துப்பாக்கி உத்தரவு பெற்றுக் கொள்கிருன்.

இந்தக் கடிதம் மீனவனுக்கு மறுநாள் கிடைத்தது. இதை வாசித்து சந்தோஷ மடைந்து தன் தாயிடஞ்சென்று "அம்மா! அப்பாவிடமிருந்து கடிதம் வந்தது. அவரிப்போது நிரணநாட்டில் பிராமண வேடம் பூண்டு நூறு ரூபாய் மாதச் சம்பளம் பெற்று உத்தியோகம் செய்கிருர், நீ வருத்தப்படாதேயென்று கடிதத்தை வாசித்துக் காண்பித்தான். பிறகு இருவரும் அதிக சந்தோஷமடைந்தார்கள். மீனவன் தன் தகப்பனருக்கு மறுநாள் அடியிற்கண்ட கடிதம் பதிலெழுதலானுன்.

மாளவதேசம்.

என்னருமைத் தந்தையே.

நீர் எழுதிய கடிதம் கிடைத்து என் தாயாருக்கும் வாசித்துக் காண்பித்தேன். தாங்கள் சமயத்துக்கேற்ற வேடம்பூண்டு தங்களை யின்னுரென்று பிறாறியாமல் வாழ்வது கடவுளின் திருவருள் தான்.

இதுநிற்க, நீர் இவ்விடமிருந்து ஓடிப்போய்விட்ட பிறகு, மந்திரி சிவசன்மன், உப்மை விடுதலைசெய்தா

னென்று அவன்மீது சந்தேகங்கொண்டு அரசன் அவனைக்கோபித்து, எப்படியாவது உங்களைப் பிடித்து வரும்படி அவனை யனுப்பியிருக்கிறான். இன்னும் மந்திரி திரும்பிவரவில்லை. இவ்வூரில் கிராமதேவதையாகிய காளியம்மனுக்கு வருடோற்சவம் மிக விமரிசையாய் அதிக திரவியச் செல்வுடன் நடந்தேறிற்று. அன்றையதினம் நிரண நாட்டரசர் இவ்விடம் காளிகோவில் பூசைக்கு வரத்தவறினபடியால், அன்னவருக்குப் பத்தாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை யொருமாதத்திற்குள் செலுத்தத் தவறினால் நாட்டைக் கைக்கொள்ளப்படுமென்றும் நம்மரசன் தெரிவித்திருக்கிறானம்.

இப்படிக்கு

---

இந்தக்கடிதத்தை யெழுதிய பின்னர் தன் தாயாருக்குப் படித்துக்காண்பித்து தபாலில் போட்டுவிட்டான். இக்கடிதம் ராமய்யருக்கு மறுநாள் கிடைத்ததும் வாசித்துப் பார்த்துவிட்டுத் தன் ஜேப்பியில் போட்டுக்கொண்டார். அப்பால் சுமார் மாலை நாலு மணிக்கு சங்கத்தைவிட்டு அரண்மனைக்குச்சென்று நிவேதன மகாராஜனைக் கண்டு வணங்கி "மகாராஜப் பிரபுவே! தங்களுக்குச் சேனாதிபதி தேவையென்று மந்திரி ஊர்முழுதும் பிரசுரஞ்செய்தார், அதைக்கேள்விப்பட்டுயானிங்குற்றேன். நான்இதற்குமுன்நிடதநாட்டில் சேனைத்தலைவனாக விருந்தேன். எங்களரசர் இறந்த பின் அவருடைய மூத்தபிள்ளை பட்டத்துக்குவந்தார். அவருக்கும் எனக்கும் சில மனவருத்தம் நேரிட்டு யானவ்வூரை விட்டு இங்கு வந்தேன்.

அரசன்:—நீரிப்போ தெங்கிருக்கிறீர், உம்பெயரென்ன?

ராம—ர்:—அரசே! நானிப்போது இவ்வூரில் "ஆனந்த விருத்தி சங்கத்தின்" சேர்மேனாக விருக்கிறேன். எனக்கு சம்பளம்மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய். என்பெயர் ராமய்யர்.

அரசன்:—இப்போதீ என்னிடம் அநேக சேனாதிபதிகளிருக்கின்றார்கள். ஆனால் துப்பாக்கிப் பயிற்சியில் தேர்ந்தவர்கள் கிடையாது, துப்பாக்கிகளும் கிடையாது.

ராம—ர்:—மகாராஜாவே! நான் துப்பாக்கி உபயோகிப் பதில்கைதேர்ந்தவன். எனக்குத் துப்பாக்கிவிற்கிற ஊரில் ஒரு பெரிய வியாபாரி தெரியும். அவருக் கொரு கடிதம் எழுதி இலட்சக்கணக்கான துப் பாக்கிகள் வரவழைத்துவிடுவேன்.

அரசன்:—ஐயா ராமய்யரே! இங்கு தற்காலமிருக்கும் படியான சந்தர்ப்ப முமக்குத் தெரியாது. எனக்கும் ஏகச்சக்ரவர்த்தியுமாகிய மாளவதேயத் தரச னுக்கும் கொஞ்சம் பகை நேரிட்டு அவன் மீது சண்டை செய்யயான் சேனைகள் சேர்க்கின்றேன். துப்பாக்கிகள் வரவழைப்பதற்கு எனக்கு தற் காலம் மாளவதேயத்தரசன் உத்தரவு (Licence) கொடுக்கமாட்டான். வியாபாரிகள் வரவழைப்பதா யிருந்தாலும் ஒரே தடவையில் ஐயாயிரம் துப் பாக்கிகளுக்கு மேல் வரவழைத்துக் கொள்ள வும் உத்தரவு கொடுக்கமாட்டானையா விதற் கென்ன செய்யலாம்?

ராம-ர்:—மகாராஜாவே! நீர் சொல்வது உண்மையே யாயினும், யான் என்னுடைய சாமர்த்தியத்தால்

ஒரே தடவையில் ஒரே கப்பலில் பதினைந்தாயிரம் துப்பாக்கிகள் வரவழைப்பதற்கு உத்தரவு மாளவ தேயத்தரசனிடம் பெற்றுக் கொள்கிறேன் ஆனால் நீர் எனக்கு வேண்டிய திரவியசகாயம் செய்யவேண்டும்.

அரசன்:—ஆ அதற்கென்ன சந்தேகம், எவ்வளவு திரவியம் வேண்டுமானாலும் யான் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன். எனக்கு தற்காலம் பதினைந்தாயிரம் துப்பாக்கிகளிருந்தால் போதுமாகையால் உடனே தகுந்த ஏற்பாடு செய்து துப்பாக்கிகளை வரவழைக்க உத்தரவு பெற்றுக்கொள்ளுங்கள் என்றதும், ராமய்யர் மிகவும் சந்தோஷமடைந்து தான் பார்த்துவந்த சேர்மென் உத்தியோகத்தை ராஜினாமா (Resignation) கொடுத்துவிட்டு அரசனிடம் சேனாதிபதியாக அமர்ந்து மாளவதேயத்தரசனுக்குப் பின்வருமாறு மறுநாள் ஒரு கடிதமெழுதலானார்.

நிரணநாடு

இராஜாதி இராஜனும் ஏகச்சக்கரவர்த்தியும் மாளவதேயத்தரசனுமாகிய மிருத்திக மகாராஜனுக்கு அடியேன் ராமய்யர் தெரிவிப்பது யாதெனில் யானும் என்னுடன்பிறந்த தமையன் மார்கள் இருவரும் இத்தேசத்தில் துப்பாக்கி, வெடிமருந்து, இரும்பு சாமான்கள் வியாபாரம் வெவ்வேறாகச் செய்ய உத்தேசித்திருப்பதால் தாங்கள் எங்கள் மீது கிருபைகூர்ந்து மேற்படி சாமான்களை வெளியூர்களிலிருந்து வரவழை

த்து வியாபாரம் செய்ய உத்தாவளிக்கும் படியாய்க் கோருகிரும்.

இப்படிக்கு,

தங்கள் ஊழியர்கள்

| | |
|---|---|
| விலாசம்<br>சுந்தா ஐயர் ஓட்டல்<br>கீழண்டை ராஜவீதி | 1 ராமய்யர்<br>2 குப்பய்யர்<br>3 மணி ஐயர் |

இந்தக் கடிதத்தை நிவேதன மகாராஜனுக்கு ராமய்யர் படித்துக் காண்பித்ததும், அரசன் அதிக சந்தோஷமடைந்து ராமய்யரின் தந்திரத்தை வெகுவாக மெச்சினன். ராமய்யரும் அக்கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டார். மறுநாள் இக்கடிதம் மாளவதேபத் தாசனிடம் சேர்ந்ததும் அதை வாசித்துவிட்டு அவ் வரசன் அடியில் வருமாறு பதில் எழுதினன்.

மாளவதேசம்

ம-ா-ா-ஸ்ரீ ராமய்யர், குப்பய்யர், மணி ஐயர் ஆகிய மூவர்களுக்கும் தெறிவிப்பது யாதெனில் நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. என் இராஜாங்கத்தில் வழங்கிவரும் ஏற்பாட்டின் பிரகாரம் ஒவ்வொரு வியா பாரிகளும் ஐயாயிரம் துப்பாக்கிகளுக்கு மேல் வைத் துக்கொள்ளக் கூடாதாகையால் உங்கள் மூவர்களுக்கும் பதினைந்தாயிரம் துப்பாக்கிகளும் அவற்றிற்கு வேண் டிய வெடிமருந்துகளும் ஏனைய இரும்புசாமான்களும் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யும்படி உத்தா வளித்திருக்கிறேன், இதைப் பெற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு

மிருத்திக மகாராஜன்

என்று இக்கடிதத்தையெழுதி அதனுள் மூன்று உத்தரவு காகிதம் (Licence) வைத்தனுப்பி விட்டான்.

இக்கடிதம் மறுநாளையதினம் ராமய்யருக்குக் கிடைத்தது. அதை அவர் அரசனுக்கு வாசித்துக் காண்பித்துவிட்டு அதனுள் வைத்திருந்த உத்தரவு காகிதத்தையும் வாசித்துக் காண்பித்தார். அதில் அடியில் வருமாறு எழுதியிருந்தது.

துப்பாக்கி வெடிமருந்து உத்தரவு

இதனால் நிரணநாட்டிலுள்ள ம-ள-ள-ஸ்ரீ இராமய்யர் ஐயாயிரம் துப்பாக்கிகளும் அவற்றிற்கு வேண்டிய வெடிமருந்துகளும் வைத்து வியாபாரம் செய்யலாம் என்று உத்தரவளிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு
மிருத்திக மகாராஜன்,

முக்கிய குறிப்பு:— எங்களுடைய இராஜ்ஜியத்திலிருந்து இன்ஸ்பெக்டர்கள் (Inspectors) வந்து சோதனை செய்யும்போது ஐயாயிரம் துப்பாக்கிகளுக்கு மேலிருக்குமேயானால் 108-வது ஆக்ட் 25-வது செக்ஷன் 14-வது உட்பிறிவுபடி ஆறுமாத கடுங்காவலடைவார்கள் என்று எழுதியிருந்தது.

இம்மாதிரியான மூன்று உத்தரவுகளையும் நிவேதன மகாராஜன் பெற்றுக்கொண்டு, ராமய்யருக்கு வேண்டிய பணம் கொடுத்து துப்பாக்கி வெடிமருந்து, மற்றைய இரும்பு ஆயுதங்கள் முதலியனவற்றை உடனே வரவழைக்கும்படி சொன்னான். ராமய்யரும் பணத்தை டர்மிங்காம் நகரத்திலுள்ள ஓர் பெரிய வியாபாரிக்கனுப்பிவிட்டு ஒரு கடிதம் எழுதி இருபது தினத்திற்

குள்ளாக ஒரு கப்பலில் பதினைந்தாயிரம் துப்பாக்கிகள் வெடி மருந்துகள், ஈட்டிகள், கத்திகள் முதலியனவற்றையெல்லாம் வரவழைத்து, அரசனுடைய சேனைகளுக்கெல்லாம் சண்டையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படியான வித்தைகளையெல்லாம் அதிக சாமர்த்தியமாகக் கற்றுக்கொடுத்து வந்தார்.

இப்படியிருக்கையில் நிரண நாட்டரசனுக்கு மாளவதேயத்தரசன் அபராதம் விதித்த பதினையிரம் ரூபாயை ஒருமாத தவணை கடந்தும் செலுத்தாததினால் மிருத்திக மகாராஜன் அதிக கோபங்கொண்டு, அடியில் வருமாறு இன்னொரு கடிதம் எழுதலானான்.

மாளவதேசம்.

நிரண நாட்டரசனுகிய நிவேதன மகாராஜனுக்கு ஏகச்சக்கரவர்த்தியான மாளவ மன்னன் தெறிவிப்பது நீ என் இராஜ்யத்தில் நடந்த காளியம்மன் வருஷோற்சவத்திற்கு வரத்தவறிவிட்ட குற்றத்திற்காக உனக்குப் பதினையிரம் ரூபாய் அபராதம் விதித்து அத்தொகையைச் செலுத்த ஒருமாதத் தவணைகொடுத்தும் இன்னும் அபராதத்தைச் செலுத்தவில்லை. யாதொரு மன்னிப்பும் எழுதிக் கேட்டுக்கொள்ளவில்லை. ஆகையால் நாளை காலை உன்னை யெதிர்த்து சண்டைசெய்து இராஜ்ஜியத்தைக் கைக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். இது சங்கதி யறியவும்:

இப்படிக்கு

மிருத்திக மகாராஜன்.

இக்கடிதம் மறுநாள் நிரண நாட்டரசனுக்குச் சேர்ந்ததும் அதையவன் வாசித்துப்பார்த்துத் தன்

மந்திரி முதலானவர்கட்கும் ராமய்யருக்கும் இது சங்கதி சொன்னான். அப்போது,

ராமய்யர்:— அரசே! நீர் பயப்படவேண்டாம் இப்போது நம்முடைய சேனைகளெல்லாம் துப்பாக்கி பிரயோகிப்பதிலதிக சமர்த்தராகி விட்டமையால் சண்டைசெய்யத் தீர்மானித்து இக்கடிதத்திற்கு யாதொருபதிலு மெழுதாமல் அதி ஜாக்கிரதையாகவே யிருந்தால் சமயம் நேரிட்டபோது சண்டைக்குப் போகலாம்.

மந்திரி:— ஆம் அரசே! ராமய்யர் சொல்வதும் உண்மையேயாகையால் நீரிக்கடிதத்திற்குப் பதிலெழுதாமலிருந்துவிட்டால், அவர்கள் சண்டைசெய்ய நம்மிராஜ்ஜியத்திற்கு வந்தபின் நாமும் நம் சேனைகளுடன்சென்று எதிர்ப்போம் என்றான். இதைக் கேட்ட நிவேதன மகாராஜனும் சம்மதித்து பதிலெழுதாமல் சண்டைக்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துகொண்டிருந்தான்.

## பதிநாலாவது அத்தியாயம்.

### திருடன் சேனாதிபதியானான். மாளவதேயத்தரசனுடைய சேனைகளை யழித்தான். அவ்வரசனிடமிருந்து உடன்படிக்கை யெழுதி வாங்கினான்.

ஒரு நாள் காலை சுமார் ஒன்பதுமணி யிருக்கலாம். நிரணநாட்டில் அரசன் சிம்மாதனத்தின் மீதுட்கார்ந்து மந்திரியுடன் இராஜாங்க விஷயத்தைப்பற்றிப் பேசிக்

கொண்டிருந்தான். இராமப்பர் சேனைகளுக்குத் துப்பாக்கி கத்தி முதலிய ஆயுதங்களை சண்டைகளில் உபயோகிக்கும்படியான முறைகளைக் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது சில மேளசப்தமும், ஊதுகோலின் சப்தமும், நகாராக்களின் சப்தமும், கீர்த்திசங்குகளின் நாதமும் கேட்டது. உடனே நிவேதன மகாராஜன் திடுக்கிட்டு "மந்திரி, நம் இராஜ்ஜியத்தில் யாரோ வேற்றரசனுடைய வாத்தியகோஷங்கள் கேட்கின்றனவே, யார் நம்மீது படையெடுத்து வந்தவன், மாளவதேயத் தரசனாகத்தா னிருக்கலாம், ராமப்பரெங்கே சென்றார், அவரை யுடனே யழைத்து வா" என்றதும் ராமய்யரும் அங்கு வந்து சேர்ந்தார். இவர்கள் மூவரும் பேசிக்கொண்டே அரண்மனையை விட்டு வெளியே வந்தார்கள். அப்போது சுமார் பத்து போர்வீரர்கள் குதிரைமீதேறிக்கொண்டு நிவேதனமகாராஜனைக் கண்டுவணங்கி அவனிடம் ஒருகடிதம் கொடுத்தார்கள். அதில் அடியில்வருமாறு எழுதியிருந்தது.

நிரணநாடு

ஏகச்சக்கரவர்த்தியும் மாளவதேசத்தரசனுமாகிய மிருத்திக மகாராஜன், நிரண நாட்டைப் பரிபாலித்து வரும் நிவேதன மகாராஜனுக்கு எழுதியதுயாதெனில், நீ செலுத்தவேண்டிய அபராதம் பதினாயிரம் ரூபாயையும் நாளதுவரையில் செலுத்தாமற் போனபடியால் உன் இராஜ்ஜியத்தைக் கைக்கொள்ள உத்தேசித்து யானிப்போது என் சேனைகளுடன், உன் நாட்டிற்கு வந்திருக்கிறேன். ஆகையால் இக்கடிதம் கொண்டு வருபவர்கள் வசம் நீ செலுத்தவேண்டிய அபராதத்தைக் கொடுத்தனுப்பி எனக்கு ஒரு மன்னிப்பு கடிதமு

மெழுதி யனுப்பினல் யான் என் இராஜ்யத்திற்குத் திரும்பிப் போய்விடுகிறேன். இல்லேயேல் நீ உன் சேனைகளுடன் சண்டை செய்ய நான் தங்கியிருக்கு மிடத்திற்கு இன்றைய தினம் காலே 7-30 மணிக்குள் ளாக வந்து சேரவேண்டியது.

இப்படிக்கு
மிருத்திகமகாராஜன்.

இந்தக் கடிதத்தைப் படித்தபின் நிவேதன மகா ராஜனும், மந்திரியும், ராமய்யரும் சற்று யோசித்து கடிதம் கொண்டுவந்தவர்களேப் பார்த்து, "அடே நீங் கள்சென்று உங்களரசனேக்கண்டு நிவேதன மகாராஜன் சண்டை செய்யச் சித்தமாயிருக்கிறுன். நாளேய தினம் காலே எட்டுமணிக்கு அவரைப் போர்க்களத்தில் காண லாம்" என்று சொல்லிவிடுங்கள் என்றதும், அவர்களு மவ்வாறே சென்று மாளவதேயத் தரசனுக்குத் தெரி வித்துவிட்டனர். இது கேட்டதும் மிருத்திக மகா ராஜன் அதிக கோபமடைந்து "அடடா கேவலம் சிற் றரசன், இவனு என் பெரிய சேனைகளுடன் சண்டை செய்யப் போகிறுன், இவனுக்கென்ன இறுமாப்பு, நாளேயதினமதைக் கண்டறிவோம். மந்திரீ, நீ இந்த நாட்டின் போர்க்களத்திற்குச்சென்று நம் சேனைகட்கு சண்டைக்கு வேண்டியவற்றை யெல்லாம் தயார்செய்து விடு என்றுன்.

நிற்க, நிவேதன மகாராஜன் ராமய்யருடைய உத் திரவு பிரகாரம் ஒவ்வொரு போர் வீரனுக்கும், ஒரு புதிய துப்பாக்கி, கத்தி, ஈட்டி, வெடிமருந்துகள் முதலி யன வேண்டியவரையில் கொடுத்தான்.

மறுநாள் பொழுதுவிடிந்ததும் நிவேதன மகா ராஜன் கடவுளே வணங்கி,

* "படமாட்டேன் றுயர்சிறிதும் படமாட்டேனினிநான்
பயப்படவுமாட்டே னுன்பதத்துணையே பிடித்தேன்
விடமாட்டே னேமாந்து விடமாட்டேன் கண்டீர்
மெய்ம்மையிது நும்மாணை விளம்பின னும்மடியேன்
கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவுமாட்டேன்
கிளரொளி யம்பலத்தாடல் வளரொளி நும்மல்லால்
நடமாட்டே னெல்லுளத்தே நான் சாகமாட்டே
நல்லதிருவருளாலே நான்றுனேனே"

என்ற அற்புதப் பாடலைப்பாடி, போஜன முடித்து யுத்தத்திற்குவேண்டிய உடைகளைத் தரித்துக்கொண்டு ஆயுதபாணியாய் தன் சேனைகளும், தலைமை சேனுதிபதியாகிய இராமய்யரும் மற்றுமுள்ள மந்திரி பிரதானியர்களும் புடைசூழ பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு யுத்தகளத்திற்குச் சென்றுன்.

யுத்தகளத்தில் சுமார் எட்டு மணிக்கெல்லாம் இரண்டு சேனைகளும் எதிர் எதிராக நின்றன. அரசனுகிய நிவேதன மகாராஜன் அலங்கரித்த ஓர் யானையின் மீதேறித் தன்னைச்சுற்றிலும் ஆயிரக்கணக்கான சேனைகள் புடைசூழ மேளம், நகரா, வாத்யம் முதலியன இடி முழக்கம்போல் சப்திக்கத் தன் சேனைகளுக்கு நடுவே நின்றுன். ராமய்யர் சேனைகட்கெல்லாம் முன்னே நின்று சண்டைக்குத் தயாராகவிருந்தார். சுமார் 9-மணிக்கு சண்டை ஆரம்பஞ்செய்ய உத்தரவு கொடுக்க ஒரு வெடிகுண்டு போடப்பட்டது. உடனே இரண்டு சேனைகளும், இரண்டு மலைகள் ஒன்று சேர்ந்தாற்போலக் கலந்து சண்டைசெய்ய வாரம்பித்தன. சண்டையில் ராமய்யர் தன்னுடைய சேனைகளை, அதிஜாக்கிரதையாகச் செலுத்திக்கொண்டு, முன்நோக்கிப் போய்

* திருவருட்பா.

அநேக குதிரைகளையும் யானைகளையும் போர்வீரர்களையும் கொன்று எதிரியின் சேனைகளையெல்லாம் தூரும்பென மதித்துவந்தார். துப்பாக்கிகளும் புதியவையாகையால், அநேக நாள் பட்டினி கிடந்தவன் அன்னம் கிடைத்தபோது எவ்வளவு ஆவலாகப் புசிப்பானே அதே மாதிரியாக ஆயிரக்கணக்கான ஜனங்களை இரையாக்கிக்கொன்றன. ராமய்யர் மிருத்திக மகாராஜனை நோக்கி அவனுள்ளவிடத்திற்குத் தன்சேனைகளை யழைத்துச்சென்று எதிரே வழியில் எதிர்த்தவர்களை விண்ணுலகிற்கனுப்பி அவ்வரச னெதிரேபோய் நிற்கையில், இடி முழக்கம்போல சுமார் பத்தாயிரம் மாளவதேசத்துச் சேனைகள் தங்களரசனைக் காப்பாற்ற வெண்ணியவ்விடத்திற்கு வந்து ராமய்யரை எதிர்த்தன. ராமய்யரும் தன் முழுவல்லமையை யன்று காட்டி அதிக சாமர்த்தியமாகவே தன்மீது யாதொரு காயமும் படாமற்படிக்கும் தன்னுடைய சேனைகளிலனேகர் சாகாமற்படிக்கும் அதிஜாக்கிரதையாகவே இருந்தார். மாளவதேசத்துச் சேனைகள் சிங்கங்களைப்போலக் கர்ச்சித்து பிரசண்டமாருதம்போலத் தங்களாயுதங்களை யெதிரிகளின்மீது பிரயோகித்து வீழ்த்தித் தள்ளின. பிறகு மாளவதேசத்துச் சேனைகளிலநேகர் ஒன்றுகூடி மிகக் கோரமாகத் தங்களாயுதங்களை யெல்லா முபயோகித்து, நிவேதன மகாராஜனிருப்பிடம் வந்து, அவனைச் சுற்றியிருந்த சேனைகளையெல்லா மடித்துத் துரத்தியும், காயப்படுத்தியும் கொன்றும், நிவேதன மகாராஜனுக்கதிக சமீபித்து வந்தார்கள். அப்போது நிவேதனமகாராஜன் தன்னுடையயானையையதிவேகமாகச்செலுத்தி அநேகம்போர் வீரர்களைக்கொன்று எதிர்நோக்கி அதிக கம்பீரமாய்

நிற்கையில், மாளவதேயத்துப் போர்வீரர்களிலொருவன், தன்னுடைய ஈட்டியால் நிவேதன மகாராஜனையிடது கையிற்குத்திக்காயஞ்செய்தான். இரத்தம் பெரிய வெள்ளம்போல் ஓடிற்று. அப்போது, நிவேதன மகாராஜனுக் கதிககோபம் மூண்டுத் தன்னைக் குத்திக் காயமாக்கினவனைக் கொன்று வழியிலிருந்த சேனைகளிலனேகரைக் கொன்று வருகையில் தன் கையிற் பட்ட காயம் அதிக வருத்தவே. தான் வைத்திருந்த "வீர ஊதுகோலை" எடுத்து ஊதினான்.

இந்த சப்தம் ராமய்யருக்குக் கேட்டதும் "ஆ ஆ நம்மரசனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்தது போலும், சேனைகளே! சீக்கிரம் வாருங்க ளென்றழைத்துக் கொண்டு அரசனை நோக்கிச் சென்று எதிர்ப் பட்ட மாளவதேசத்து வீரர்களை யெல்லாம் கொன்று அரசனிடம் சென்று அவனுடம்பிற் பட்டிருந்த காயத்தைப் பார்த்து, அவனுக்கு வேண்டிய தைரியம் சொல்லி அவனைச் சுற்றியிருந்த மாளவ தேயத்து வீரர்களைப் பொடி செய்து, அரசனைச் சுற்றிப் பாது காப்புக்காக ஆயிரக் கணக்கான சேனைகளை வைத்து எதிரி சேனைகளைக் காண ஓடி வழியிலுள்ள சேனைகளைத் தன்னாயுதத்திற் கிரையாக்கி மாளவதேயத் தரசனிருப்பிடந் தேடிச் சென்று, அவனைச் சுற்றியிருந்த சேனைகளைக் காயப்படுத்தித் தான் நெடுநாளாகப் பிரிந்திருந்த மிருத்திக மகாராஜனுடைய முகத்தைக் கண்ணாரக் கண்டதும், அதிக ஆனந்தங்கொண்டு, அவனுக்கு யாதொரு தீங்கும் நேரிடாமற்படிக்குப் பாதுகாத்து, பின்னர் தன்னைச் சுற்றியிருந்த போர் வீரர்களி னுதவியால் மாளவதேசச் சேனைகளை நாசஞ்செய்தார்.

அட்பால் ராமய்யர் போர்க்களத்தைச் சுற்றிப் பார்க்கையில் மாளவதேசத்து வீரர்கள், அதிகக் குறைவடைந்திருப்பதைக் கண்டு, இனி யிவர்களுக்கு யாதொரு தீங்கும் செய்யக்கூடாதென்று மனதிலெண்ணினவனுப் மந்திரியை யழைத்து 'மந்திரி ஜனகேசா! நீ யிப்போதே சென்று நம்மாசனைச் சுற்றியிருக்கும் சேனைகளுக்குத் தலைவனுயிருந்து நம்மாசனுக்கு யாதொருகெடுதியும் வராமற் பாதுகாத்துக்கொண்டிரு. யானிப்போதே சென்று மாளவ தேயத்தரசனைச் சுற்றியிருக்கும் சேனைகளைத் தோற்கடித்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, அநேக சேனைகளை யழைத்து மாளவதேசத்தரசனை நோக்கிச் சென்ருர். மாளவ தேயத்தரசன் போர்க்களத்தைச் சுற்றிப் பார்க்கையில் தன்னுடைய சேனைகளதிகக் குறைவுபட்டிருப்பதையும் எதிரி சேனைக் கூட்டம் தன்னை யெதிர்க்க வருவதையுங் கண்டு மனந்திடுக்கிட்டு "ஆ, ஆ, இனிமேல் நாம் கெலிப்பது அசாத்தியம், நாம் இன்றே அழிந்தோம், நம்முடைய சக்கிரவர்த்தி பட்டம் இன்றோடே ஒழிந்தது, நம்முடைய் சேனைகளை யிழந்தபின் நாமிந்த போர்களத்திலிருப்போ மாறைல் இறப்பது நிச்சயம். ஆகையா லுயிர் பிழைக்க ஓடிப்போக வேண்டும்" என்று தீர்மானித்துத் தன் வீரர்களுடன் புறங்காட்டி ஓடினுன். அதிக தூரம் ஓடிய பின் மாளவதேயத்தரசன் தன் குதிரையைவிட்டுக் கீழிறங்கி ஒரு புதருக்குள் ஒளித்துக்கொண்டான். இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டே ராமய்யர் அவனை துரத்திச் சென்று, அரசனெளித்திருந்த புதரண்டை தன் குதிரையை விட்டிறங்கி அரசனது கையைப்பிடித்து "ஐயா மகாராஜாவே, நீர் பயப்படவேண்டாம், நான்

உம்மை யொன்றும் செய்யவில்லை. என்னைப் படைத்த கடவுளின்மீது ஆணைப்படி உம்மைக் காப்பாற்றி, பழையபடி உமக்கே சக்கிரவர்த்தி பட்டம் வாங்கித் தருகிறேன் என்னுடனே வாரும்" என்று மரியாதை யாக அழைத்துக்கொண்டு குதிரையின் மீதுட்கார வைத்து போர்க்களத்தை நாடிச் சென்று நிவேதன மகாராஜனைக் கண்டு வணங்கி, "அரசே, மாளவதேயத் தாசர் தோல்வியடைந்து விட்டார். இனிமேல் இவரை யழைத்துக்கொண்டு நம்மரண்மனைக்குப் போவோம்" என்றார்.

உடனே எல்லோரும் வெற்றிக்கொடி பிடித்துக் கொண்டு, ஜெயம் நாட்டி, சகலவித மேளவாத்தியங்கள் கோஷிக்க, அரண்மனையுட் பிரவேசித்த பின், நிவேதன மகாராஜன் தன் சிம்மாதனத்திலுட்கார்ந்து மாளவ தேசத்தரசனைத் தன் பக்கத்திலோராசனமிட் டுட் காரவைத்து, மந்திரியுடனும் ராமப்பருடனும்யோசித்து அடியில் வருமாறு ஒரு சமாதான தீர்ப்பு உடன் படிக்கை யெழுதி மிருத்திக மகாராஜனுக்குக் காட்டி கையொப்பம் வாங்கினார்கள்.

நிரணநாடு.

நிரணநாட்டைப் பரிபாலித்து வரும் நிவேதன மகாராஜனுக்கு மாளவதேயத் தரசனுகியும் ஏகச் சக் கிரவர்த்தியுமாகி யிருந்த மிருத்திக மகாராஜன் எழு திக்கொடுக்கும் சமாதான உடன்படிக்கை யாதெனில், இன்று உமக்கும் எனக்கும் யுத்தகளத்தில் சேனை களுடன் நேர்ந்த யுத்தத்தில், என்னுடைய சேனைகளி லனேகர் இறந்து போய்விட்டமையால் யான் சண்டை செய்து ஜெயம் பெற வலியற்றவனுய் விட்டேனுகை

யால், யானுமக்குத் தோற்றுவிட்டேனென்பது திண்ணம். ஆகையால் யான் இதுவரையில் பூண்டுவந்த சக்கிரவர்த்தி யென்னும் பட்டத்தை இன்றுமுதலுமக்கே யளித்துவிட்டு, யானும் ஓர்சிற்றரசனைப்போலப் பகுதிசெலுத்தி இருப்பேன். இந்தப்படிக்கு என்மனோ ராஜியில்யான் பலரறிய சம்மதித்து எழுதிக்கொடுத்த உடன் படிக்கை,

இப்படிக்கு,
மிருத்திக மகாராஜன்.

இந்த உடன்படிக்கையை யெழுதியபின் மிருத்திக மகாராஜன் ஆற்றொணு துக்கசாகரத்தில் மூழ்கி தன் விதியை வெகுவாக நொந்து மனத்துயரடைந்தான்.

நிவேதன மகாராஜன் மந்திரியைப் பார்த்து "மந்திரி இது விஷயம் மற்றுமுள்ள சிற்றரசர்களுக்கெல்லாம் தெரிவிக்கவேண்டிய தவசியமாகையால், இப்போதே நீ அவர்களுக் கெல்லாம் தெரிவித்து நாளைய தினம் சாயங்காலம் மூன்று மணிக்கு எல்லா சிற்றரசர்களும் நம்முடைய அரண்மனைக்கு வந்து சேரும்படி செய்" என்றதும் மந்திரி அநேக காவலர்களை யனுப்பி எல்லா தேசத்துச் சிற்றரசர்களுக்கும் தெரிவித்துவிட்டான். பிறகு கூட்டம் கலைந்து எல்லோரும் போசனம் முடித்துக்கொண்டார்கள்.

## CONCLUSION முடிவு.

திருடன் எல்லா அரசர்கள் முன் தன் உண்மையான சரித்திரத்தைச் சொல்லுகிறுன். திருடனைத் தேடிச்சென்ற மந்திரியும் அங்கு வந்து சேர்ந்தான். பிறகு இருவரும் ஒன்று சேர்ந்து மாளவதேயத்தரசனுக்கு பழைய கௌரவம் கொடுத்தார்கள்

நிரண நாட்டிலிருந்து காவலர்கள் சென்று தெரிவித்ததும், எல்லாசிற்றரசர்களும்ஆச்சரியமடைந்து ஆ! ஆ! மாளவதேயத்தரசனையா ஜெயித்துவிட்டார்கள், நிவேதன மகாராஜனுக்கு அவ்வளவு பலமான சேனையிருக்கிறதா, என்னே பாவம், மாளவதேயத்தரசனை னனவருத்தப்படுகிறுனே, அவனை சிறையிலடைத்து வைத்திருக்கிறுர்களோ என்னமோ தெரியவில்லையே. இனிமேல் நிவேதன மகாராஜன்ஏகச்சக்கிரவர்த்தியாய் விடுவானே" என்று எல்லோரும் தங்கள் தங்கள் தேசம்விட்டுப் புறப்பட்டு அன்றிரவெல்லாம் கடந்து மறுநாள் பகல் 12 மணிக்கெல்லாம் நிரணநாட்டரண்மனையை யடைந்து துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும் மிருத்திக மகாராஜனைக் கண்டு பரிதபித்து நிவேதன மகாராஜனைக் கண்டு வணங்கினுர்கள்.

மாலை மூன்று மணியானதும் நிவேதன மகாராஜன் தன்னுடைய ஆசனத்தி லுட்கார்ந்தான். மற்

றைய சிற்றரசர்களெல்லாம் தங்கள் தங்கள் கௌரவத்திற்கேற்றவாறு குறிக்கப்பட்டிருந்த ஆசனங்களிலமர்ந்தார்கள். மாளவதேயத்தரசன் நிவேதன மகாராஜனுக் கருகிலுட்கார்ந்தான். ராமய்யரும் அரசனருகி லுட்காந்தார். அவ்வூரிலுள்ளவர்க ளெல்லோரும் அரண்மனையைச் சுற்றியிருந்தார்கள். அதுவுமன்றி வெளிதேயத்து ஜனங்களெல்லாம் திரளாகக் கூடியிருந்தார்கள். நிவேதன மகாராஜன் ஆசனத்தை விட்டெழுந்து நின்று "அரசர்களே மற்றும் விஜயஞ் செய்துள்ள கனதனவான்களே! நேற்றையதினம் எனக்கும் மாளவதேயத்தரசனுக்கும் நேர்ந்த யுத்தத்தில் மாளவதேபத்தரசர் தோல்வியடைந்து விட்டார். பின்னர் அவரிடமிருந்து ஒரு சமாதான உடன்படிக்கையெழுதி வாங்கிக்கொண்டேன் (என்று உடன்படிக்கையை வாசித்துக் காண்பித்தான்.) ஆகையால் அரசர்களே! உடன்படிக்கையின் பிரகாரம் இன்று முதல் யானே உங்களுக்கெல்லாம் ஏகச்சக்கிரவர்த்தியானேனுகையா லினி நீங்களெல்லோரும் எனக்கு தீர்வை செலுத்தி வரவேண்டியது. இது விஷயம் எல்லோரும் கவனியுங்கள். அதுவுமன்றி எனக்கு யுத்தத்தி லதிக உதவிசெய்தவரும், மாளவமன்னரிடமிருந்து துப்பாக்கி லைசன்சு பெற்று சண்டையில் என்னைக் காப்பாற்றி என் புகழை நிலைநாட்டி வைத்தவருமாகிய ராமய்யருக்கு இன்று முதல் என்னுடைய நாட்டின் தலைமை மந்திரி உத்தியோகம் கொடுத்தேன்" என்றான்.

உடனே ராமய்யர் எழுந்து, அங்கு விஜயஞ் செய்துள்ளவர்களைப் பார்த்து "ஐயன்மீர்! அரசர்களே! அடியேன் சில விஷயங்களை யெடுத்துப்பேசி சில அந்த

ரங்கங்களை வெளிப்படுத்தப்பிரியப்படுகிறேனாகையால்; நீங்களெல்லோரும் தயவுசெய்து யான் சொல்வதை யொன்றேனும் விடாமல் கவனித்துக் கேட்கும்படியாக வேண்டிக்கொள்ளுகின்றேன். அஃதென்னவென்றால்,

என் பெயர் ராமப்பரல்ல; நான். இதோ உங்களுக் கெதிரில் தோல்வியடைந் துட்கார்ந்திருக்கிற மாளவதேய மன்னராகிய மிருத்திகமகாராஜனுடைய தலைமை சேனாபதி என் பெயர் மதிசூதனன். யான் எங்களரசனுடைய கிரீடத்தைக்களவுசெய்துவிட்டபடியால்பயந்து என் மனைவி மைந்தனை விட்டு ஓடிவந்தேன். என்னைத் தேடிப்பிடித்து வரும்பொருட்டாக எமதரசனுடைய முதல் மந்திரி சிவசன்மர் புறப்பட்டு ஜலந்தபுரி அருளானந்தர் மடத்தில் பிரசங்கம் செய்தார். நானப்போது ஓர் சன்னியாசி வேடம்பூண்டு கணபதிசாமியென்ற பெயரை வைத்து மந்திரியுடன் பேசினேன். ஆனாலும் மந்திரி பென்னைக் கண்டுகொள்ளவில்லை. பின்னர் அம்மடத்தைவிட்டுப்புறப்பட்டு நேமிநாட்டிற்கு வந்து, அங்கு தற்செயலாய் இருப்புப்பாதையி லகப்பட்டிறந்த ஒருவனுடைய ஜேப்பியில், பத்துரூபாயும் ஒரு கடிதமு மெழுதிவைத்துவிட்டு, என் உடையை யவனுக்குத் தரித்து யான் சாயபுவேடம் பூண்டு, மந்திரி சிவசன்மாவை போலீஸ் ஸ்டேஷனிலும், பாண்டு வாத்தியம் வாசிக்கும் நந்தவனத்திலும் கண்டு பேசினேன். அப்போதும் மந்திரி சிவசன்மர் என்னை தெரிந்துகொள்ளவில்லை. யான் பின்னர் கிரீடத்தை யெடுத்துக்கொண்டு மாளவதேயஞ் சென்று என் மனைவி மைந்தர்களைக் கண்டு மனமகிழ்ந்து மறுநாளரண்மனைக்குச் சென்று கிரீடத்தை யிவ்வரசனிடம் (மாளவ

தேயத்தரசனை சுட்டிக்காட்டி) கொடுத்து இனும் இலட்சம் ரூபாய்ப் பெற்றுக்கொண்டிருக்கையில், மந்திரி சிவசன்மரவ்விடம் வந்து, என்னை முன்பு நேமிநாட்டில் கண்டதாக அரசனிடம் சொல்லி, என்னை விசாரணைக்காக சிறைப்படுத்தி யிருக்கையில், யானங்கிருந்த ஒரு சேவக னுடையைத் தரித்துக்கொண்டு அரசனிடம் சென்று, மந்திரி சிவசன்மர் மீது கொஞ்சம் குற்றம் சாட்டி, அன்றிரவே அச்சிறைச்சாலையை விட்டு ஓர் தெப்பத்தைக் கட்டி யதன்மீதேறிக்கொண்டு, அக்கரை சேர்ந்து என் வீட்டிற்குச் சென்று என் மனைவி மைந்தனையுங் கண்டு, என் கையி லினுமாகப்பெற்று வைத்திருந்த இலட்சம் ரூபாயைக்கொடுத்துவிட்டுப் பின்னர் இத்தேசம் வந்து பிராமண வேடம் பூண்டு இங்கு ஆனந்தவிருத்திசங்கத்தின் சேர்மேனுக மாதம் நூறுரூபாய் உத்தியோகத்திலிருந்து மாளவதேயத்தரசருக்கும் இத்தேசத்தரசருக்கும் யுத்தம் நேரிடப் போகிறதைக் கேள்வியுற்று, மாளவதேயத்தரசனுக்கு யானொரு வியாபாரியைப் போலக் கடிதமெழுதி துப்பாக்கி உத்தரவு (Licence) பெற்று வெளிதேசத்திலிருந்து துப்பாக்கிகளை வரவழைத்து அவற்றைப் பிரயோகிக்கும் படியான வித்தைகளை இவ்வூர் சேனைகளுக்குக் கற்றுக் கொடுத்து, யானே சேனதிபதியாக விருந்து, யுத்தத்தில் என் முழு வல்லமையும் காட்டி, நிரணநாட்டரசருக்கு ஜெயத்தை சம்பாதித்துத் தந்தேன்" என்று தன் முழு சரித்திரத்தையும் சொல்லி முடித்தான். மாளவமன்னன் தன்னுடைய சேனுதிபதியின் சாமர்த்தியத்தை நினைத்து நினைத்து, ஆனந்த சாகரத்தில் மூழ்கினுன். மற்றுமுள்ள சிற்றரசர்களெல்லாம் ஆச்சரியப்பட்டார்கள். மாளவ மன்னனும் ராமய்

யர் முகத்தை நன்றாகப்பார்த்து "ஆ ஆ, இவனே மதிசூதனனென்று நாமறிந்து கொள்ளாமற் போனேமே; இது என்ன ஆச்சரியம்" என்று எண்ணினன்.

ராமப்பர் அங்கிருந்தவர்களைப் பார்த்து "அரசர்களே, இன்னுமொரு சங்கதியுண்டு. அஃதென்னவென்றால் யான் பிராமண கோலத்துடனேர் நாளிவ்வூரைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகையிலிவ்வூரரசருடைய அரண்மனையில் விவாகம் நடந்துகொண்டிருந்தது. யானும் உள்ளேசென்று அங்கிருந்த ஓர் சேவகனுடைய உடையைத்தரித்து அரசர்கள் கூடியிருந்த விடத்திற்குப்போனேன். இவ்வரசர் (நிவேதன மகாராஜன்) என்னைக்கண்டதும் "அடே சேவகா! இந்த சாவியை யெடுத்துக்கொண்டுபோய் மந்திரியிடம் கொடுத்து பொக்கிஷத்தைத் திறக்கச்சொல்லி ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டுவா" என்று சாவியை யென்னிடம் கொடுத்தார். யானதை யெடுத்துக்கொண்டு போய் பொக்கிஷத்தைத்திறந்து ஆயிரம் ரூபாயும் ஒரு நகை மூட்டையுமெடுத்துக்கொண்டு பின்னர், ரூபாயை அரசரிடம் கொடுத்துவிட்டு நகை மூட்டையை இவ்வூர் தாசி மாணிக்கவல்லியிடம் கொடுத்து ஐநூறு ரூபாய் பெற்றுக்கொண்டு, பின்னர் பிரசுரப் பத்திரிகையில், நகைகள் மாணிக்கவல்லியினிட மிருப்பதாக அரசனுக்குத் தெரிவித்துவிட்டதின்பேரில், அந்தோ பாவம் மாணிக்கவல்லி அவமானமடைந்து விடுதலை பெற்றுப் போய்விட்டாள்" என்றார். அப்போது நிவேதன மகாராஜன் "ஆ, ஆ. இது என்ன வேடிக்கை, அனியாயமாக நாம் மாணிக்கவல்லியின்மீது குற்றம் சாட்டினேமே, அந்தோ! அவள் கன்மம் அவ்வாறெல்லாம்

அவள் கௌரவத்தைப் போக்கியது" என்று நினைத்தான். மாளவதேயத்தரசன் தான் நெடுநாளாகப் பிரிந்திருந்த மதிசூதனனைக்கண்டதும், கையாரத் தழுவிக்கொண்டு தனக்கு நேர்ந்த அவமானத்தை நினைத்துக் கண்ணீர் தாரை தாரையாகவிட்டழுதான்.

அப்போது அங்கு விஜயஞ்செய்துள்ள ஜனக்கூட்டத்திலிருந்து ஒரு சாமியார் தன் சீடனுடனே அரசர்களெதிரே வந்து வணங்கி நின்று "மஹாராஜாக்களே! அடியேன் உங்களுக்கெல்லாம் ஒரு சிறிய சரித்திரம் சொல்லப்போகின்றேனுகையா லென்மீது கிருபை வைத்து செவிசாய்த்துக் கேட்கும்படியாகப் பிரார்த்திக்கின்றேன்.

இப்போது மாளவதேபத்தரசர், தான் தோல்வியடைந்ததைப்பற்றி விசனப்பட்டாலும், தன்னுடைய சேனாதிபதியாகிய மதிசூதனனைக் கண்டதும் ஆனந்தமெய்தினாரல்லவா? இந்த சேனாதிபதி கிரீடத்தைத் திருடிவிட்டு வெவ்வேறு தேசங்கள் சென்று, வெவ்வேறு வேடம்பூண்டு, வெவ்வேறு பெயர்கள் வைத்துக்கொண்டு திரிந்தால் இவரைப் பிடித்துக்கொண்டு வரும்படியாகச்சென்ற மந்திரி சிவசன்மன் எப்படி இன்னாரென்று தெரிந்துகொள்வான்? அருளானந்தர் மடத்தில் சாமியார் வேடம் பூண்டிருந்தபோதும், நேமிநாட்டில் சாயபு வேடம் பூண்டிருந்தபோதும், இந்த நிரணநாட்டில் பிராமண வேடம் பூண்டிருந்தபோதும், மந்திரி சிவசன்மன் இச்சேனாதிபதியைக் கண்டு அநேகமுறை பேசினனேயொழிய இன்னாரென்று அறிந்துகொள்ளவில்லை—"

மாளவதேயத்தரசன்:— ஆ சுவாமிகளே, இப்போது

மந்திரி சிவசன்மனெங்கிருக்கிறன், யானவனைப் பார்க்கவேணும், யான் தோல்விபடைந்து பரிதவிப்பதை யவன் கண்ணாரக்கண்டால் என்னவிதமாய் துக்கிப்பானே, இப்போது எங்கே இருக்கிறன்? சீக்கிரம் சொல்வீர் என்றன்.

சாமியார்:—நீர் பயப்பட வேண்டாம். நான் இதோ சிவசன்மனை யழைத்து வருகின்றேன் என்று சொல்லிவிட்டு, அங்கிருந்தவர்களைப் பார்த்து "ஐயன் மீர்! அப்பால் இச்சேனதிபதி துலுக்க வேடத்துடன் மாளவதேயம் வந்து கிரீடத்தைக் கொடுத்துவிட்டு இலட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டு போகுஞ் சமயத்தில், மந்திரி சிவசன்மனவ்விடம் வந்து அவரை நேமி நாட்டில் கண்டதாக இவ்வரசருக்குச் சொன்னபோது அவர் மீது சந்தேகப்பட்டு சிறையிலடைத்து வைத்தபின் அன்றைய தினமே எப்படியோ ஓடிப்போய் விட்டார். அதற்காக இம்மாளவதேயத் தரசன், மந்திரி சிவசன்மன்மீது சந்தேகங் கொண்டு "நீ இப்போதே சென்று கிரீடத்தைக் கொண்டு வந்து கொடுத்த சாயபுவைத் தேடி யழைத்துக் கொண்டு வராமற் போனல் உன்னைத் தண்டிப்பேன்" என்று சொன்னதும் மந்திரி திடுக்கிட்டு, தன் விதியை நொந்து மனைவி மைந்தர்களைப் பிரிந்து குதிரை மீதேறிக்கொண்டு எங்கெங்கு தேடியும் (சாயபு பிராமணராய் விட்டபடியால்) அகப்படாமையால் மாளவதேயம் போகப்பயந்து சன்னியாசியாகித் திரிகின்றார்"

மாளவமன்னன்:—சாமிகளே! அந்த மந்திரியெங்கே,

யானவரைப் பார்க்க ஆவல் கொண்டிருக்கிறேன் என்றான். உடனே சாமியார் தான் அணிந்திருந்த சன்னியாசி உடையைக்கழற்றிவிட்டு முன்புபோல் மந்திரியுடையுடன் தோன்றினார். இவரைக்கண்டதும் எல்லா அரசர்களும் ஆச்சரியப்பட்டார்கள். மாளவ மன்னன் அவரைச் சேர்த்துத் தழுவி அப்பா சிவ சன்மா! நீயில்லாமற்போய் விட்டதா லல்லவா யானிக்கதி யடைய வேண்டியதாயிற்று என்று பரிதபித்தான்.

அப்பால் அரசர்களெல்லாரும் அதிக சந்தோஷப் பட்டார்கள். மாளவதேயத் தாசன் மதி சூதனனை யும், சிவசன்மாவையும் கண்டு களிகூர்ந்து "அந்தோ, என்னருமை மந்திரியும் சேனாதிபதியும் என்னைவிட்டுப் பிரிந்திருந்ததா லல்லவோ எனக்கு இத்தனைய துன்பம் நேர்ந்தது, விதிவழியே யென்மதியுஞ் சென்று யான லைந்தேன்" என்றான்.

மதிசூதனன்:—அங்கு விஜயஞ் செய்துள்ள சிற்ற ரசர்களையும் மற்று முண்டானவர்களையும் நிவேதன மகாராஜனையும் பார்த்து, "ஐயன் மீர்! ஒரு விண்ணப் பம். இப்பவும் நேற்றையதினம் எங்கள் மாளவ தேயத்தாசருக்கும் நிவேதன மகாராஜருக்கும் நேர்ந்த யுத்தத்தில், நிவேதன மகாராஜன் ஜெயம் பெற்றதற் குக் காரணம், என்னுடைய வலிமையும் தந்திரமும் தான். யான் மாளவதேயத் தாசருடைய ஊழியக் காரனாக இத்தனை வருஷகால மிருந்து, இப்போது அவர் மீது ஜெயங்கொண்டு திரிவது தர்மசாஸ் திரத்திற்கு விரோதமல்லவா? ஆகையாலரசர்களே! நீங்களெல்லோரும் யோசித்து மாளவதேசத் தாச

ராகிய மிருத்திக மன்னரை பழையபடியே உங்களுக்கெல்லாம், ஏகச் சக்கிரவர்த்தியாயிருக்க ஏற்பாடு செய்து, தீர்வை செலுத்திக் கொண்டு வாருங்கள்'' என்றான். அப்போது எல்லா சிற்றரசர்களும் அங்கு விஜயஞ் செய்துள்ளவர்களும் ஆனந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய், மதிசூதனனுடைய அன்புரிமைக்கும் இராஜபக்திக்கும் மெச்சினார்கள். நிவேதன மகாராஜன் மாத்திரம் அதற்குச் சம்மதப்படவில்லை. அப்போது சிவசன்மனும் மதிசூனனும் அவனைப்பார்த்து ''நீர் உம்முடைய வலிமையினால் எம்மரசனை ஜெயிக்கவில்லை. ஆகையால் நீர் இதற்குச் சம்மதித்துக் கொள்ளும். நீர் இன்றுமுதல் உம் ஆயுளுள்ளவரையில் யாதொரு தீர்வையும் செலுத்தவேண்டாம். இதற்குச் சம்மதியாமற் போனால் இப்போதே எம்முடன் சண்டைக்குத் தயார் செய்வீராக, இத்தனை தேசத்தரசர்களுக்கு முன்பாக யாங்கள் உம்மைத் தோற்கடித்து உம்முடைய இராஜ்ஜியத்தைக் கைக்கொள்ளச் சித்தமாயிருக்கிறோம்'' என்றார்கள். அப்போது நிவேதன மகாராஜன் பயந்து, அதிக விசனமாய் மெதுவான குரலுடன் ''அரசர்களே! நீங்களெல்லாரும் ஒப்புக்கொண்டபடியே யானும் மாளவ மன்னரையே எனக்கும் சக்கிரவர்த்தியாக ஒப்புக்கொள்ளுகிறேன்'' என்றான் அப்போது மாளவதேசத் தரசனுக்குண்டான சந்தோஷத்திற் களவே கிடையாது.

எல்லாதேசத்தரசர்களும் மற்று முள்ளவர்களும் நிவேதன மகாராஜனிடமும் ஏகச்சக்கிரவர்த்தியுமான மாளவதேய மன்னரிடமும் உத்திரவு பெற்றுக் கொண்டு தங்கள் தங்கள் தேசத்திற்குப் போய்விட்டார்கள். மாளவதேப மன்னனும், மதிசூதனனும்,

மந்திரி சிவசன்மாவும் அவனுடன் சேடனைப்போல் திரிந்துவந்த பையனும் (நண்பர்களே இச்சிறுவன் தான் முன்பு மதிசூதனனிடம் கிரீடத்தைக் கொடுத்து விட்டு நூறு ரூபாய் பெற்றுக்கொண்டு போய்விட்டவன்) மற்றுமுள்ளவர்களும் புறப்பட்டு தங்களுடைய சரித்திரங்களை நினைத்து நினைத்து சந்தோஷப்பட்டுத் தங்கள் தேசம் வந்து சேர்ந்தார்கள்.

அப்பால் மதிசூதனனும் மந்திரியும் தங்கள் தங்கள் வீட்டிற்குச் சென்று மனைவி மக்களைக் கண்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கினார்கள்.

அரசன் தன் மனைவியிடம் தன்னுடைய சரித்திரத்தையும், சிவசன்மன், மதிசூதனன் ஆகிய இவர்களைக் கண்டுபிடித்து வந்த விருத்தாந்தங்களையும் சொல்லி ஆனந்த பரவசமடைந்தான். மந்திரியுடன் வந்த சிறுவனுக்கு அரண்மனையில் ஒரு பெரிய உத்தியோகம் கொடுத்தார்கள். அவனும் அன்று முதல் சன்னியாசி வேடத்தை விட்டு சுகமாகவே இருந்தான்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முருகன் துணை.

முற்றிற்று.

சென்னை சுதேசமித்திரன் பவர் பிரஸில் அச்சிடப்பட்டது.

## ம-௱-௱-ஶ்ரீ ஆரணி அ[illegible]பாதுரை பிள்ளை அவர்கள் [illegible]றிய

### பதினைந்து சீர்க்கழிநெடி[illegible]ாசிரி[illegible] விருத்தம்.

---

திதிபரவும் தீருவெவ்வ ளூ[illegible]க்ஷேத்தி[illegible]ரத்தினல்ல
தோர்பதியாம் அகரந் தகது[illegible]
சொல்லரிய கலைவலோன் புச[illegible]ராஜ[illegible]முதலியென்[illegible]ர்
தூயதவப் புத்ர ரத்[illegible]
மதிபரவும் சான்றோர்க வி[illegible]கும்ரு மன்புறமெண்
மணதுக் கிசையந்த [illegible]பன்
மாநிலத்திள்ளமாந் தர்க்கி[illegible]யக்க
மகேந்தவராய முதலி[illegible]
நிதிபரவும் *மரிநத[illegible]ன்
[illegible]
செகீராணம் மய[illegible]ும் கற்புடைய
நேயமார் *கனக[illegible]
பதிபரவும் *ஜெகதல[illegible]ஜாதி யெனுமரிய
பாக்குசேர் நாவ[illegible]
பன்னுவித்தா னிந்த [illegible]சவய தூள்ளபால்யன்
பல்லாண்டு வாழ்க்கத்[illegible]

---

* இப்புத்தகங்கள் வேண்டியவ[illegible]கள் அடியிற்கண்ட வில[illegible]சத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]லக்ஷ்மி அண்டு கம்பெனி,
ஜோர்ஜ்டவுன் [illegible]போட்டை,
மதராஸ்